24

சுவடிப்பதிப்பு நெறிமுறைகள்

பதிப்பாசிரியர்
த.கோ.பரமசிவம்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

சுவடிப்பதிப்பு நெறிமுறைகள்

(கருத்தரங்கக் கட்டுரைகள்)

பதிப்பாசிரியர்

முனைவர் த. கோ. பரமசிவம்

தலைவர், ஓலைச்சுவடித்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

ISBN - 81 - 7090 - 128 - 6

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 108

திருவள்ளுவர் ஆண்டு 2020 பங்குனி–மார்ச்சு 1989

நூல் : சுவடிப்பதிப்பு நெறிமுறைகள்

பதிப்பாசிரியர் : முனைவர் த. கோ. பரமசிவம்

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : உரூ. 38

அச்சு : சர்மாஸ் சானடோரியம் (கம்ப்யூடர் பிரிவு) அச்சகம், புதுக்கோட்டை-622 001.

பொருளடக்கம்

பதிப்புரை க

1. தமிழ்ச்சுவடிகளின் பயிற்சியும் பதிப்பும் 1
திரு. மு. கோ. இராமன்

2. எழுத்து வரிவடிவும் திரிபுகளும் 23
பேரா. ச. பாலசுந்தரம்

3. பாடவேறுபாடும் பாடத்தெரிவும் 29
முனைவர் த. கோ. பரமசிவம்

4. சுவடிப்பதிப்பில் யாப்பின் இன்றியமையாமை 48
புலவர் ப. வெ. நாகராசன்

5. பதிப்பாசிரியர்களும் அவர்தம் கடமைகளும் 71
முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி

6. நூலாக்கத்தில் தாள்சுவடிகளும் ஓலைச்சுவடிகளும் 87
முனைவர் ம. இராசேந்திரன்

7. செப்பேடுகளும் ஓலைச்சுவடிகளும் 98
புலவர் செ. இராசு

8. பழந்தமிழ்ப் பதிப்புகள் 103
முனைவர் இ. சுந்தரமூர்த்தி

9. மறைந்த நூல்களைப் பதிப்பித்தல் 114
புலவர் இரா. இளங்குமரன்

10. சங்க இலக்கியப் பதிப்புகள் 125
செல்வி ந. விசாலாட்சி

11. ஆறுமுகநாவலரின் பதிப்புமுறைகள் 150
திரு. சி. இலட்சுமணன்

12. பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் பதிப்பு முறைகள் 169
பேரா. மு. சண்முகம்பிள்ளை

13. சரசுவதிமகா[illegible] பதிப்புகள் 183
புலவர் வி. சொக்கலிங்கம்

14. இலக்கணச்சுவடிகளின் ஆய்வுப்பதிப்பு 194
திரு. தி. வே. கோபாலய்யர்

15. கலை இலக்கணப் பதிப்புமுறைகள் 211
முனைவர் அ. நா. பெருமாள்

16. மருத்துவச்சுவடிகள் பதிப்பு நெறிமுறைகள் 218
முனைவர் வே. இரா. மாதவன்

17. சோதிடச்சுவடிகளின் பதிப்புகள் 239
முனைவர் சி. மூக்கரெட்டி

18. ஓலைச்சுவடியாய்வில் கணிப்பொறியின் பயன்பாடுகள் 249
பேரா. கா. செ. செல்லமுத்து

19. பல்கலைக்கழகப் பாடநூல்களும் பதிப்புமுறைகளும் 262
முனைவர் க. ப. அறவாணன்

20. Publication of Historical Palm-leaf Records 267
Dr. P. Cinnian

21. A Descriptive Catalogue of the Tamil Manuscripts 292
Dr. V. Murugan

அமர்வுச் சிந்தனைகள் 305
முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி

சொல்லடைவு 320

பதிப்புரை

சுவடிப்பதிப்பு என்பது ஓலைச்சுவடிகள் மற்றும் தாள் சுவடிகளிலுள்ள செய்திகளை இன்றைய அச்சுவடிவில் வெளிப் படுத்துவதைக் குறிப்பதாகும். நெறிமுறைகள் என்பது அவ்வாறு பதிப்பித்து வெளியிடும்போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளைச் சுட்டுவதாம். ஓலையிலுள்ளவற்றை எவ்வெவ் வாறு படித்துணர்வது; வெளிப்படுத்துவது; எவ்வாறு வெளிப்படுத்தினால் அது சிறப்புடையதாக இருக்கும்; அறமாகக் கருதப்பெறும்; நம்பிக்கைக்குரியதாக உணரப்பெறும் என்ப வற்றையெல்லாம் வகுத்தும் தொகுத்தும் விளக்குவதே சுவடிப்பதிப்பு நெறிமுறைகள். இதுவே இந்நூலின் கருப்பொருள் ஆகும்.

ஓலைச்சுவடிகளிலுள்ள செய்திகள் இலக்கியமாயினும், இலக்கணமாயினும் அல்லது மருத்துவம், சோதிடம், ஆவணம் போன்ற பிற பொருள்களாயினும வடிவில் ஒன்றுபோலவே எழுதப்பட்ட அமைப்பைக் காட்டுவன. செய்யுள் நூல் என்பதால் யாப்புவடிவுடன் அச்சுவடி காணப்படுவதில்லை. அல்லது ஆவணம் என்பதால் முறையான பத்தி வடிவைக் காட்டுவதுமில்லை. பாட்டாயினும், உரையாயினும் அல்லநு குறிப்பாயினும் எல்லாம் ஒன்று போலவே தொடர்ந்து எழுதப்பட்டிருக்கும். இவற்றைப் பதிப்பித்து வெளியிடும்போது - சுவடிகளில் காணுமாறே அச்சிட்டால் அவை அழகாக இருக்குமா? கருத்தை உரிய வகையில் உரிய உணர்வுடன் ஊட்டுமா? என்பது ஐயத்திற்குரியதே. எனவே இலக்கணமரபு, மொழிமரபு, பொருளுணர்வு இவற்றை நுணுகிப் பார்த்த நம் முன்னோர், செய்யுளாயின் யாப்பு வடிவம் கெடாதவாறு பதிப்பித்து வெளிப்படுத்த வேண்டும்; உரை நடையாயின் இவ்வாறு பதிப்பிக்க வேண்டும்; மருத்துவ நூலாயின் இந்த அமைப்புடன் விளங்கவேண்டும்;

ஆவணமாயின் இப்படித்தான் இருக்கவேண்டும் - இப்படி இப்படி இருந்தால்தான் அது சிறந்திருக்கும் என்று பதிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறு வடிவம் பற்றிய சிந்தனைகளில் மூழ்கியிருந்தமைபோலவே நூலின் மொழி, உட்கிடக்கை போன்ற செய்திகளிலும் அவர்கள் அக்கறை காட்டியவர்களாக இருந்தனர். சுவடிகளை வெளிப்படுத்திய அப்பதிப்பாசிரியர்களிடம் காணப்பட்ட மரபு போற்றுதற்குரியதாகவும் பயின்று பின்பற்றுவதற்குரியதாகவும் அமைந்திருந்தது. ஒரு காலத்தில் தோன்றிய சுவடிகளை - நூல்களை வேறொரு காலத்தில் வெளியிடுவதாகவே சூழல் அமைந்திருக்கும். எனவே முற்பதிப்பாசிரியர்களே நூல் தோன்றிய காலத்திலிருந்து வெகு தொலைவில் இருந்தமையை நாம் உணரமுடியும். அப்படியெனில் முற்பதிப்பாசிரியர்க்குக் காலத்தால் பிற்பட்ட நாமும்-நம் சந்ததியினரும் இன்னும் தொலைவில்தான் இருப்போம். நூல்தோற்றத்துக்கும் வெளிப்பாட்டுக்குமுரிய காலவிடையீடு நாளுக்கு நாள் விரிந்துகொண்டுதான் போகும். இந்நிலையில் சுவடியை-சுவடியில் உள்ள செய்திகளை உணர்வதிலும் நாளுக்கு நாள் நம்மிடையே தெளிவின்மை மிகுந்துவருதல் இயல்பு.

இவ்வாறு மிகுந்துவரும் இடைவெளியின் வெறுமையை மாற்றி ஓரளவுக்காவது தொடர்புண்டாக்க முயல்வதே இந்நூலின் நோக்கமாகும். இவ்வரிய நோக்கத்தின்-தொடக்கவுணர்வின் வெளிப்பாடுதான் இன்று ஒரு நூலாக மலர்ந்துள்ளது. அழிந்துவரும் சுவடியியலை நிலைநிறுத்த முனைந்துவரும் அறிஞர் பலரின் அரிய கருத்துகளைக் கட்டுரை வடிவில் தாங்கியுள்ளது இந்நூல். 1988ஆம் ஆண்டு மார்ச்சு 22, 23, 24 ஆகிய மூன்று நாள்களில் நடைபெற்ற 'சுவடிப் பதிப்பு நெறிமுறைகள்' என்னும் கருத்தரங்கில் வழங்கப்பட்ட ஆய்வுரைகளே இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அன்று உருளச்சிட்டு வழங்கப்பெற்ற கட்டுரைகள் கலந்துரையாடிய அமர்வுச் சிந்தனைகளுடன் முழுமைபெற்று இன்று அச்சு வடிவில் வெளிவருகின்றது.

தமிழ்ப் பல்கலைக்கழகம்-ஓலைச்சுவடித்துறை

பழமையைப் போற்றிப் பாதுகாக்கவேண்டும் என்னும் உயரிய நோக்கில் சுவடிப்புலத்தை உருவாக்கிய தமிழ்ப் பல்கலைக்கழகம் ஓலைச் சுவடிகளின் இன்றியமையாமையை உணர்ந்து, ஓலைச் சுவடிகளுக்கென ஒரு துறையைத் தனியே நிறுவி இயக்கி வருகிறது. உலகெங்கிலுமுள்ள தமிழ்ச் சுவடிகளைத் தேடித் தொகுத்து அறிவியல்முறைப்படி பாதுகாப்பதும், அவற்றை நன்கு பதிப்பித்து வெளியிடுவதுமே இத்துறையின் நோக்கமாகும். இந்த அடிப்படையில் அமைக்கப்பெற்ற ஓலைச்சுவடித்துறை இன்றுவரை 3500 ஓலைச் சுவடிகளைத் தொகுத்திருக்கிறது. அவற்றுள் பெரும்பாலன, மடங்கள், கோயில்கள் மற்றும் தனியாரிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டனவாகத் திகழ்தல் குறிப்பிடத்தக்கதாம். அன்பளிப்புக்காகக் காத்திருந்தால் சுவடி திரட்டுதல் சிறக்காது என்பதையுணர்ந்த தமிழ்ப் பல்கலைக்கழகம் அழிந்துவரும் சுவடிகளை எவ்வாறேனும் தொகுத்துப் பாதுகாக்க வேண்டும் என்னும் உயரிய நோக்கில் விலைமதிப்பிட்டு வாங்கிப் பாதுகாக்கவும் திட்டமிட்டது. சுவடியின் இருப்பிடம் கூறவும் தயங்கியவர்களுக்கும், சுவடி உரிமையாளர்களுக்கும் இது ஓர் ஊக்கத்தைக் கொடுத்துள்ளது என்றால் அது மிகையாகாது. இந்த வகையிலும் இன்று பல சுவடிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

சுவடியை நேரே பெறமுடியாத சூழல்களில் அவற்றை மைப்படிகளாகவும், நுண்படச் சுருள்களாகவும் பெற்று வந்து பாதுகாக்க வேண்டும் என்பதிலும் இத்துறை ஈடுபட்டுள்ளது. பிற நூலகங்களில், நிறுவனங்களில் உள்ள சுவடிகளை இந்த வகையில் தொகுத்து வருகிறது. வெளிநாடுகளிலும் நம் தமிழ்ச் சுவடிகள் காணப்படுகின்றன. அவற்றையும் இந்த வகையிலேயே பெற்றுப் பாதுகாக்க முனைந்துள்ளது இத்துறை. இந்த வகைகளிலெல்லாம் பெற முடியாத சுவடிகளை அவற்றில் என்ன இருக்கிறது என்பதையாவது தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் வேட்கையில், அவை பற்றிய பெயர்ப் பட்டியலையாவது தொகுத்துப் பாதுகாக்கவும் முனைந்துள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இம்முயற்சிக்குத் தமிழர் அனைவரும் துணை நிற்பார்களாக!

சுவடிப் பதிப்பு

இவ்வாறெல்லாம் சுவடிகளைத் தொகுத்துக் காப்பதன் நோக்கம், அவற்றை எல்லோர்க்கும் வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான். எல்லோர்க்கும் பயன்படும் வண்ணம் எவ்வாறு வெளிப்படுத்துவது? எவ்வாறு வெளிப்படுத்தினால் இவ்வுயரிய நோக்கம் முழு வெற்றி பெறும் என்பதையெல்லாம் நுணுகி ஆய்ந்து வெளிப்படுத்துவதுதான் சிறந்தமுறையாகும். அந்த வகையில் ஓலைச் சுவடித்துறை இதுவரை செழியதரையன் பிரபந்தங்கள், சிவேந்திரர் சரிதம், ஆத்திசூடியுரை ஆகிய சுவடிப் பதிப்புகளை முதன்முதலாக வெளியிட்டுள்ளது. அவற்றுடன் ஏற்கெனவே வெளிவந்த தொல்காப்பியம், குறுந்தொகை போன்ற நூல்களையும் மீண்டும் சுவடி ஆய்வு செய்து புதிய அகராதிகளுடன் செம்பதிப்பாக வெளியிட்டுள்ளது. இம் முயற்சிகளைத் தொடர்ந்து நற்றிணை, இலக்கண சூடாமணி, அகத்தியர் வைத்திய காவியம்-1500, சாந்தாதி அசுவமகம் போன்ற நூல்கள் விரைவில் வெளிவரவிருக்கின்றன. இம் முயற்சிகளினூடே சுவடிப் பதிப்பு நெறிமுறைகளை மீண்டும் மீள்பார்வை செய்யும் நோக்கிலே நடத்தப்பெற்றதுதான் 'சுவடிப் பதிப்பு நெறிமுறைகள்' என்னும் கருத்தரங்கம்.

சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடுவதென்பது எளிதான செயலன்று. மொழியறிவு பெற்ற எல்லோராலும் செய்யமுடிந்த பணியுமன்று. தமிழறிஞர் பெருமக்களில் கூட விரல்விட்டுச் சொல்லத்தக்க மிகச் சில அறிஞர்களே இம் முயற்சியில் ஈடுபட்டு முழுவெற்றி பெற்றனர். அவர்களுள் சீலத்திரு ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், இ. அனந்தராமையர், டாக்டர் உ.வே. சாமிநாதையர், பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை ஆகியோர் குறிப்பிட்டுச் சொல்லும் சிறப்புடையர் ஆவர்.

சுவடிகளைத் தேடியலைந்து, தொகுத்து, அவற்றை அச்சுக்குக் கொண்டுவந்த அவர்களின் அரிய பெரிய பணி, உழைப்பு பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்குமுரியதாம். அப்பெரியார்களின் தொண்டு இல்லையேல் இன்று நம்மிடையே உலவிக் கொண்டிருக்கும் பல நல்ல நூல்களும் கூட மறைந்த நூல்களின் வரிசையில் இடம்பெற்றிருக்கும்நிலை ஏற்பட்டிருக்கும் என்றால் அது மிகையாகாது.

அப் பெருமக்கள், சுவடிகளை இவ்வாறு படிக்கவேண்டும், இவ்வாறு படி எடுக்க வேண்டும், இவ்வாறு பதிப்பிக்கவேண்டும், இவ்வாறு ஒப்புநோக்க வேண்டும், இவ்வாறு பதிப்பிப்பதுதான் அறமாகும், இவ்வாறு வெளிப்படுத்தினால்தான் சிறப்புடையதாகத் தோன்றும் என்றெல்லாம் வெளிப்படையாகக் கூறவில்லை. நம் போன்ற வருங்கால இளைஞர்களுக்குத் தெரிவிக்கும் வண்ணம் அம்மரபுகளை தனிப்பட்ட நூலாக எழுதி வெளிப்படுத்தவும் இல்லை. ஆயின், அவர்கள் பதிப்பித்து வெளியிட்ட நூல்களில் தம் பட்டறிவை ஆங்காங்கு நூல்களின் முன்னுரை, பதிப்புரைகளிலும், பிற கட்டுரைகளிலும் சுட்டியுள்ளனர். இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறிக் கிடக்கும் அப்பட்டறிவு மாணிக்கங்கள் சிறந்த ஒளிவீசி நமக்கு வழிகாட்டுவனவாக உள்ளன. குறிப்பிட்ட நெறிமுறை ஏதும் வரையறுக்கப்படாத நிலையில் அவர்தம் இவ்வகைக் குறிப்புகளே நமக்குப் பாடமாக விளங்குகின்றன என்றால் அது மிகையாகாது.

தமக்கு முன் வாழ்ந்த நூலாசிரியரின் கருத்தை உள்ளவாறே உணர்த்துவதற்கு உரையாசிரியர்கள் மேற்கொண்ட முயற்சி போன்றதே சுவடிகளை இன்று நாம் வெளிப்படுத்துவதும். நூலில் காணப்படும் பாட்டு, பாடங்கள், நூற்பொதிசெய்தி, நூலாசிரியரின் ஒட்டுமொத்தப் பார்வை இவற்றையெல்லாம் நீடுநினைந்த உரையாசிரியர்கள் 'இது நூலாசிரியர் கருத்தன்று, இது பொருந்தாமை உணரப்படும். இது நூலாசிரியர் கொள்கைக்கு முரண்பட்டது, இது பாடமன்மை தெளியப்படும்' என்று பாடம் ஓதுவாரும் உளர், என்பார் பிறரும், இதனால் அவர் கருத்து பிழைபட்டமை தெளியப்படும்' என்றெல்லாம் தம் உரைகளினூடே எழுதியுள்ள விளக்கங்களை உற்று நோக்கும் போது நூலை-நூற்பொருளை வெளிப்படுத்துவதில் அவர்கள் எத்துணை விழிப்பாக இருந்திருக்கின்றனர் என்பதை நாம் உணரலாம். எனவே பதிப்பு நெறிமுறைகள் உரையாசிரியர் காலத்திலேயே நன்கு உணரப்பட்டமை வெளிப்படையாம்.

நூலை வெளிப்படுத்த நினைக்கும் எவர்க்கும் உரையாசிரியர்களின் பயிற்சியும் தேர்ச்சியும் ஒப்பீடும் இன்றியமையாது தேவைப்படுவதாக இன்று உணரமுடிகிறது. எழுத்து முறையின் கால இடையீடும், சொற்பொருள்மாற்ற இடையீடும், வழக்கு, மொழிமரபு ஆகியவற்றின் மாற்றமும் உள்ளதை உள்ளவாறு படித்து உணர்வதும் நமக்கு

அரியசெயலாக்கிவிட்டன. இந்நிலையில் நாம் மேலும் ஆழ்ந்து பயிற்சி பெற வேண்டியுள்ளது என்றால் அது மிகையாகாது.

மேலை நாடுகளிலும் சுவடிப்பதிப்பு நெறிமுறைகள் பற்றிய விவாதங்கள் சில நூற்றாண்டுகளாகவே தொடர்ந்து வந்திருக்கின்றன. பைபிள், மில்டன் கவிதைகள், ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் மற்றும் கிரேக்க, உரோமானிய நூல்கள் போன்றவற்றை எவ்வாறு வெளிப்படுத்துவது, எவ்வாறு வெளிப்படுத்தினால் அது நூலாசிரியர் கருத்துக்கு மாறுபடாத வகையில் அமையும் என்றெல்லாம் சிந்தித்தனர். இந்திய நாட்டின் பிறபகுதிகளிலும் ஒருவர் கருத்தை மற்றவர் தடை விடைகளால் விவாதித்து எழுதியுள்ள விளக்கங்களைக் காணும் போது சுவடிப்பதிப்பு நெறிமுறைகளைப் பற்றிய சிந்தனை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்பது புலனாகிறது. ஒருவகையில் இம்முயற்சிகள் பேருவகை தருவதாக அமைந்துள்ளன.

இவற்றை நன்கு சிந்தித்த ஓலைச்சுவடித்துறை பல்வேறு அறிஞர் பெருமக்களை - சுவடிப்பதிப்பில் ஈடுபாடும் பட்டறிவும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற பதிப்பாசிரியர்களை வரவழைத்து அவர்களின் பட்டறிவை விளங்கிக் கொள்ளத் திட்டமிட்டது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மாண்புநிறை முனைவர். ச. அகத்தியலிங்கம் அவர்களின் ஐந்தாண்டுத் திட்டக் கருத்தரங்கக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு இந் நிலையைப் பயன்படுத்திக் கொள்வதென்று முனைந்து, சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடுவது இத்துறையின் நோக்கங்களுள் ஒன்றாகும். அதனால், 'சுவடிப்பதிப்பு நெறிமுறைகள்' என்னும் பொதுத் தலைப்பிலேயே இத்துறையின் முதல் கருத்தரங்கைத் தொடங்குவது என முடிவு செய்யப்பெற்றது.

சுவடிப்பதிப்பு நெறிமுறைகள் என்பது மிக மிக விரிந்த ஒன்று. அதனை ஒரே ஒரு கருத்தரங்கில் சில தலைப்புகளில் மட்டுமே முடிக்க முடியுமா? என்று ஐயுற்றபோது, இது முதல்முயற்சியாதலின் ஒவ்வொரு வகையிலும் சில சில தலைப்புகளை மட்டும் இப்போது ஆய்வு செய்யலாம். பின்னாளில் பிறவற்றையும் தொடரலாம் என்னும் கருத்து ஏற்கப்பட்டு, அவ்வகையிலேயே செயலில் இறங்குவதானோம். சுவடியியலில் ஈடுபாடுகொண்ட அறிஞர் பலர் எங்கள் முயற்சியை வரவேற்று

வூக்கப்படுத்தினர். எனினும் சிலர் கலந்து கொள்ள இயலா நிலையையும் சுட்டினர். எனவே, இக்கருத்தரங்கில் நாங்கள் உருவாக்கிய தலைப்புகளில் பல விடுபட வேண்டிய சூழல் ஏற்பட்டது என இங்கே சுட்ட விரும்புகிறேன்.

காசிமடத்துப் பதிப்புகளும் பதிப்புமுறைகளும், சைவ ஆதினப்பதிப்புகள், சைவ சமாஜப்பதிப்புகள், பழம்பெரும் பதிப்பகங்கள் கையாண்ட முறைகள், அகராதிகளும் சுவடிப் பதிப்புகளும், தமிழ் வளர்ச்சியில் சுவடிப்பதிப்புகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், கீழ்த்திசைச் சுவடி நூலக வெளியீடுகள், டாக்டர் உ. வே. சா. நூலக வெளியீடுகள், தத்துவம், காப்பியம், சிற்றிலக்கிய வெளியீடுகள், உரை நூல்களின் பதிப்புகள் போன்ற பல தலைப்புகள் இவ்விடுபாட்டில் குறிக்கத்தக்கன.

இவை காலம், சூழல், பொருளாதாரம் கருதி விடப்பட்டன என்பதையும் பின்னாளில் இப்பொருள்கள் பற்றிய கருத்தரங்குகளும் ஆய்வரங்குகளும் நடத்தப்பெற்று இப்பொருள் நிறைவேற்றப்படும். எனவே, இப்பெருந்தலைப்பின் சில துறைகளை மட்டும் ஒருபானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பது போல இந்நூலில் காணலாம்.

எள்ளினின்று எண்ணெய் எடுபடுவது போல இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் மரபு என்னும் கொள்கையே இந்நூலிலும் சுடர்விடுதல் காணலாம். முந்தைய பதிப்புகளை வைத்தே அவற்றின் பதிப்புமுறை யாது என்பதை இக்கட்டுரைகள் அறிய முற்பட்டிருக்கின்றன இச்சிறு அறிமுகத்துடன் இவ்வாய்வுரைகளில் கூறப்படும் செய்திகளுக்குச் செல்வோம்.

ஆய்வுரைகள் அறிமுகம்

இத்தொகுப்பில் 21 ஆய்வுக்கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. சுவடியியலைச் சார்ந்த அடிப்படைக் கருத்துகளைப் பல கோணங்களில் இக்கட்டுரைகள் விளக்கி நிற்கின்றன. இவை ஓரளவு வகைப்படுத்தி நிரல்படுத்தப்பெற்றுள்ளன. சுவடியியலை அறிமுகப்படுத்தும் பொதுச் செய்திகள், ஏட்டுச் செய்தியின் வரிவடிவம், பாடவேறுபாடு, யாப்பு நிலை இவற்றையெல்லாம் உணர வேண்டிய பதிப்பாசிரியர் கடமை ஆகிய பொருள்களைத் தாங்கிய கட்டுரைகள் முதலாவதாக இடம் பெற்றுள்ளன.

இரண்டாவதாக ஓலைச் சுவடியோடு நெருங்கிய தொடர்புடைய தாள் சுவடிகள், செப்பேடுகள் ஆகிவற்றைப் பற்றிய அடிப்படைச் செய்திகளைக் கூறும் கட்டுரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மூன்றாவதாக, பழந்தமிழ் தொடர்பான பதிப்புகளைப் பற்றிய செய்திகளைக் கூறும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

நான்காவது பிரிவில், பதிப்பாசிரியர், பதிப்பு நிறுவனங்கள் ஆகியோரின் நெறிமுறைகளை இனம் காண முயலும் கட்டுரைகள் காட்சியளிக்கின்றன.

ஐந்தாவ்து பிரிவு, பொருளடிப்படையில் இலக்கணம், கலை, மருத்துவம், சோதிடம், போன்ற பொருள்களைப் பற்றிய பதிப்புமுறைகளைக் காட்டும் கட்டுரைகளைத் தாங்கியுள்ளது.

ஆறாம் பிரிவு, கணிப்பொறியுகத்தில் வாழும் நாம் சுவடிப் பதிப்புக்குக் கணிப்பொறியை எவ்வாறெல்லாம் பயன் படுத்தமுடியும் என விளக்கும் ஒரு கட்டுரையைக் கொண்டிருக்கிறது.

ஏழாம் பிரிவு, இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள இரண்டு ஆங்கிலக் கட்டுரையைத் தாங்கி நிறைவு பெற்றுள்ளது.

இவ் வைப்புமுறை, சுவடியியலைப் படிப்படியாக அறிமுகம் செய்ய வேண்டும் என்னும் நோக்கைக் கொண்டதாகும். இனி இக்கட்டுரைகளின் சுருக்கத்தை முறையே காண்போம்.

1.. தமிழ்ச்சுவடிகளின் பயிற்சியும் பதிப்பும் -

திரு. மு.கோ. இராமன்

இக்கட்டுரை மொழி, எழுத்து ஆகியவற்றின் தோற்றத்தைச் சுட்டிக்காட்டி ஓலைச்சுவடிகள், அவை பெருகிய விதம் முதலியவற்றைக் கூறுகிறது. பிறகு சுவடிகளில் நேரும் பிழைகளைப் பற்றி விரிவாகப் பேசுகிறது. சென்ற நூற்றாண்டில் தொடங்கிய சுவடிகளின் பதிப்பு முயற்சிகளையும் கூறுகிறது. இப்போது ஓலைச்சுவடிகள் தொகுக்கப்பெற்றுள்ள இடங்கள், பொருள் வாரியாக அவற்றின் உத்தேச அளவு, ஆகியன அடுத்து இடம் பெற்றுள்ளன. சில பதிப்புப் பிழைகள் எடுத்துக்

காட்டப்பெற்றுத் திருத்தமும் சுட்டப்பெற்றுள்ளது. ஓலைச் சுவடியைப் பதிப்பிக்கும்போது எவ்வாறு செயல் படவேண்டும் என்ற அறிவுரையுடன் நிறைவு பெறுகிறது. இவ்வாறாகச் சுவடியியலில் தோய்ந்த அனுபவம் பெற்ற ஆசிரியரால் எழுதப்பட்ட இக்கட்டுரை சுவடியியலுக்கு ஒரு நல்ல அறிமுகமாக அமைந்துள்ளது.

2. எழுத்து வரிவடிவும் திரிபுகளும் - பேரா. ச. பாலசுந்தரம்

மொழி, எழுத்து ஆகியவற்றின் தோற்றம், வரிவடிங்களில் காலந்தோறும் ஏற்படும் மாற்றம், எழுதுபவர்களின் கையெழுத்து வேறுபாடுகள், எழுதப்படும் கருவிகளுக்கேற்ப எழுத்துமுறை மாறுபடுதல் ஆகியன இக்கட்டுரையில் விளக்கப்பெறுகின்றன. புணர்ச்சி விகாரங்கள் எவ்வாறு சில நேரங்களில் தவறாகப் பிரிக்கப்படுகின்றன என்பதும், மொழியறிவற்றவர்களால் ஏற்படும் பிழைகள் இத்தகையன என்பதும் எடுத்துக் காட்டப்படுகின்றன. இவ்வாறாக இக்கட்டுரை சுவடியியலின் சில கூறுகளை நன்கு விளக்கிச் செல்கிறது

3. பாடவேறுபாடும் பாடத்தெரிவும்

- முனைவர் த.கோ. பரமசிவம்

சுவடிகளில் பாடவேறுபாடுகள் தோன்றும் விதம், அவற்றின் வகைகள் ஆகியவற்றை வகைப்படுத்திக் கூறும் இக்கட்டுரை ஒரே நூல் இடத்திற்கு இடம் எப்படி வேறுபா டடைகிறது என்பதையும் எடுத்துக்காட்டுடன் தெளிவாக்குகிறது. பாட வேறுபாட்டிற்கும் சுவடி வேறுப்பாட்டிற்கும் உள்ள மாறு பாட்டை விளக்கியபிறகு மூலபாடத்தைத் தேர்ந்தெடுப்பதில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. சரியான பாடம் கிடைக்காதபோது பதிப்பாசிரியர் பழைய நூலிலுள்ள ஒரு சொல் அல்லது தொடரைத் திருத்தலாமா என்னும் கேள்விக்கும் இதில் விடை காணப்படுகிறது. பதிப் பாசிரியர் மேற்கொள்ளவேண்டிய அறத்தையும் வலியுறுத்திச் செல்லும் இக்கட்டுரை மூலபாட ஆய்வியலுக்கு ஒரு நல்ல முன்னுரையாக அமைந்துள்ளது.

4. சுவடிப்பதிப்பில் யாப்பின் இன்றியமையாமை

- புலவர் ப.வெ. நாகராசன்

தமிழ்ச்சுவடிகளுள் செய்யுள் நடையில் அமைந்த நூல்களே மிகுதியானவையாதலின் அதனைப் பதிப்பிக்க முனையும் பதிப்பாசிரியர் யாப்பிலக்கணத்தில் நல்ல புலமை உடையவராக இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறது இக்கட்டுரை. சுவடிப்பதிப்பில் ஏற்படும் தவறுகளில் சரிபாதிக்கு மேலானவற்றை யாப்பிலக்கண உணர்வுடன் பார்த்திருந்தால் எளிதில் திருத்தியிருக்கலாம் என்கிறது இது. சில சுவடிப் பதிப்புகளில் நேர்ந்துள்ள பிழைகளை எடுத்துக் காட்டி அவை எவ்வாறு திருத்தப்பெற வேண்டும் என்றும் கூறுகிறது. இப் பிழைதிருத்தத்தையும் யாப்பிலக்கண அடிப்படையிலேயே எழுத்து, அசை, சீர், அடி, தொடை என வகுத்துத்தரும் இதனுள் சில யாப்பிலக்கண நுட்பங்களும் இடம்பெற்றுள்ளன.

5. பதிப்பாசிரியர்களும் அவர்தம் கடமைகளும்

- முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி

பதிப்பித்தலாவது யாது என்ற வரையறையோடு தொடங்கும் இக்கட்டுரை பதிப்பு எனப் பொருள்படும் edit என்னும் ஆங்கிலச் சொல்லையும் ஆராய்கிறது. 'எடிடர்'கள் பலவகைப்படுவர் எனக்காட்டி அவர்களின் பணிகளை விளக்கிக் கூறுகிறது. இத்தகைய 'எடிடர்'களின் கடமைகளை ஒற்றுமை, வேற்றுமை நயங்களுடன் ஆராய்ந்து பின் சுவடிப்பதிப்பாசிரியரின் கடமைகளைத் தெளிவாக விளக்கிக் கூறுகிறது. சுவடி பெயர்த்து எழுதப்படுவதிலிருந்து அச்சு மெய்ப்புத் திருத்துதல் முடிய உள்ள பணிகள் இதில் இடம் பெற்றுள்ளன. ஒரு பதிப்பாசிரியர் பலதுறை அறிவும், பல்வகைத் திறனும் பெற்றவராக இருந்தால் அவருடைய பதிப்பு மிகச் செம்மையாக இருக்கும் என்பது இறுதியில் வலியுறுத்தப்படுகிறது.

6. நூலாக்கத்தில் தாள்சுவடிகளும் ஓலைச்சுவடிகளும் -

முனைவர் ம. இராசேந்திரன்

பண்டைக்காலத்தின் எழுதுபொருள்களின் அறிமுகத் துடன் தொடங்கும் இக்கட்டுரை தாளின் தோற்றம், தாள் ஆலை

வளர்ச்சி முதலியவற்றையும் சுட்டிக்காட்டுகிறது. தமிழில் இருக்கின்ற தாள் சுவடிகளைப் பற்றிய செய்திகளை விளக்கி அவற்றை வகைப்படுத்தியும் காட்டுகிறது. தாள் சுவடிகளின் எழுத்து முறையையும் கூறும் இக்கட்டுரை, அச்சுவடிகள் ஓலைச்சுவடிகளிலிருந்து எவ்வாறு மாறுபட்டுள்ளன என்பதையும் தெளிவாக்குகிறது. தாள்சுவடிப் பதிப்பாசிரியருக்கு இருக்க வேண்டிய தகுதிகளைச் சான்றுகளுடன் விளக்கி இதற்குக் களப்பணியும் மிக வேண்டப்படுகிறது என வலியுறுத்துகிறது. தாள் சுவடி நூலாக்கத்தில் கடைப்பிடிக்கவேண்டிய நெறி முறைகளைக் காட்டி இக்கட்டுரை நிறைவு பெறுகிறது.

7. செப்பேடுகளும் ஓலைச்சுவடிகளும் - புலவர் செ. இராசு

செப்பேடுகளுக்கும் ஓலைச்சுவடிகளுக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை இக்கட்டுரை குறித்துக் காட்டுகிறது. பழங்காலத்தில் ஓலை என்றாலேயே ஆணை எனப் பொருள்பட்டது என்றும், இவை முதலில் ஓலைகளில் எழுதப்பெற்று அடுத்துக் கல்லிலும் இறுதியாகத் தேவையானவை மட்டும் செம்பிலும் பொறிக்கப்பெற்றன என்றும் இது விளக்குகிறது. கல்வெட்டுகளின் செப்பேட்டுப்படிகளும், செப் பேடுகளின் ஓலைப்படிகளும் காணப்படும் நிலையும் சுட்டப்பெறுகிறது. இவ்வாறாக இக்கட்டுரை செப்பேடுகள் ஓலைச்சுவடிகள் ஆகிய இரண்டையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கிறது.

8. பழந்தமிழ்ப் பதிப்புகள் - முனைவர் இ. சுந்தரமூர்த்தி

தமிழ்ப் பதிப்புக்கலையின் முன்னோடிகளை அறிமுகப் படுத்திக் கொண்டு தொடங்கும் இக்கட்டுரை 1812 இல் வெளியிடப்பெற்ற திருக்குறள் பதிப்பைப் பற்றிய பல சுவையான செய்திகளைக் தருகிறது. அச்சான பின்னரும் சில திருத்தங்களுடன் இந்நூல் ஓலைச்சுவடியில் படியெடுத்து வைக்கப்பெற்றுள்ளதை எடுத்துக்காட்டி, 1881 இல் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் வெளியிடப்பெற்ற வீர சோழியப் பதிப்பின் சிறப்பையும் வெளியாக்குகிறது. சுவடியில் நேரும் பிழைகளையும் குறிப்பிட்டுச் செல்லும் இக்கட்டுரை முன்னையோரின் பதிப்புப் பட்டறிவு பின்னையோர் பணிக்கும் பயன்படத் தக்கதாகும் என நிறைவுறுகிறது.

9. மறைந்த நூல்களைப் பதிப்பித்தல்

- புலவர் இரா. இளங்குமரன்

பல பழைய நூல்களின் பெயரை மட்டும் கேள்விப்படுகின்றோம்; சில நூல்களின் சிற்சில பகுதிகள் மட்டும் வேறு நூல்களின் மேற்கோள்களாக அறியப்பெறுகின்றன. இவ்வாறு அமையும் பகுதிகளைத் தொகுத்து நூலாக்கும் முயற்சியை விவரிக்கிறது இக்கட்டுரை. காக்கைபாடினியம், களவியற்காரிகை ஆகிய இரண்டு நூல்களும் எவ்வாறு உருவாயின என்பது விளக்கப்படுகிறது. காக்கைபாடினியத்திற்கு உரை காணும்போது மேற்கொள்ளப்பட்ட நெறிமுறைகள் தெளிவாகக் காட்டப்படுகின்றன. உரையாசிரியர்கள் பாவன்மை மிக்கோராகவும் இருத்தல் சிறப்புடையதாம் என்று நிறுவப்படுகிறது. நூல் அச்சான பிறகு கிடைத்த சில தெளிவுகள் கூட முன்னுரையில் குறிக்கப்படலாம் எனக் காட்டிப் பதிப்பாசிரியர்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என அறிவுறுத்தி இக்கட்டுரை நிறைவேறுகிறது.

10. சங்க இலக்கியப் பதிப்புகள் - செல்வி ந. விசாலாட்சி

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் சங்க இலக்கியங்களின் முதல் பதிப்புகளைப்பற்றி இக்கட்டுரை பல செய்திகளைத் தருகிறது. தனித்தனியாகவும், ஒரே தொகுப்பாகவும் வெளியான பல பதிப்புகள் இதில் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. 1887 இல் தொடங்கிய சங்க இலக்கியப் பதிப்பு வரலாற்றை விரிவாக விளக்கும் இக்கட்டுரை தன் பின்னிணைப்பாக இதுவரை வெளிவந்துள்ள சங்க இலக்கியப் பதிப்புகள் அனைத்தையும் ஒரு பட்டியலாகப் பெற்று விளங்குவது சிறப்புடையதாம். இக்கட்டுரையைச் சங்க நூற்பதிப்பு வரலாற்றின் சுருக்கம் என்னலாம்.

11. ஆறுமுக நாவலரின் பதிப்பு முறைகள்

- திரு. சி. இலட்சுமணன்

19 ஆம் நூற்றாண்டின் தமிழ்ப் பதிப்பாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவராகிய ஆறுமுக நாவலர் அவர்களின் பதிப்பு நெறிமுறைகளை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது. நாவலர் அவர்களின் நோக்கம், அவர் நூல்களின் முறை, அவர் கையாண்ட

அச்சுப்பணி, அடிக்குறிப்புகள், அருஞ்சொற்பொருள், சொற்களுக்கு விளக்கம் தருதல், மேற்கோள் இலக்கணக் குறிப்பு ஆகியன தருதல் போன்றவை இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன. ஆறுமுக நாவலரின் தனிச்சிறப்புகள் யாவை என்பதும் சிந்திக்கப்பெறுகிறது. ஆறுமுக நாவலர் அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற 60 நூல்களின் பட்டியல் அகர வரிசையில் பின்னிணைப்பாக இணைந்து இக்கட்டுரையை எழிலாக்குதல் காணத்தகும்.

12. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் பதிப்பு முறைகள்- பேரா மு. சண்முகம்பிள்ளை

சென்ற நூற்றாண்டில் தமிழ் நூற்பதிப்பின் நிலை எவ்வாறு இருந்தது எனத் தொடங்கும் இக்கட்டுரை வையாபுரிப்பிள்ளையவர்களின் பதிப்புக்கலையறிவையும், அவர் வகுத்துக்கொண்ட நெறிமுறைகளையும் விளக்குகிறது. நிகண்டுகள், சிற்றிலக்கியம், இலக்கண நூல்கள் ஆகியவற்றின் பதிப்புகள் எவ்வாறு அமைந்துள்ளன எனக் கூறப்படுகிறது. ஒருமுறை வந்த நூலையும் மறுபதிப்பாக வெளியிடும்போது இவர் கையாண்ட முறைகளும் காட்டப்பட்டுள்ளன. ஆராய்ச்சிப்பதிப்பு பற்றிய திரு. பிள்ளை அவர்களின் கருத்து நன்றாக எடுத்துக் காட்டப்பெற்றுள்ளது. சுவடிப்பதிப்பாசிரியர்களின் கடமையை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தி இக்கட்டுரை நிறைவுறுகிறது.

13. சரசுவதிமகால் பதிப்புகள் - புலவர் வீ. சொக்கலிங்கம்

தஞ்சை சரசுவதிமகாலைப் பற்றிய அறிமுகத்துடன் தொடங்கும் இக்கட்டுரை அந்நிறுவனத்தால் வெளியிடப் பட்டுள்ள நூல்கள் அனைத்தையும் வரிசையாகக் கூறிச் செல்கிறது. சிறு சிறு நூல்களைப் பருவ இதழில் கொஞ்சம் கொஞ்சமாக வெளியிட்டு நூலாக்கம் செய்த செய்தியும் குறிக்கப்பட்டுள்ளது. நூற்பதிப்பாசிரியர்கள் தாமே சுவடி படிக்கத் தெரிந்தவராக இருந்தால்தான் அவர்களின் பதிப்பு செம்மையாக இருக்கும் என வலியுறுத்துகின்ற இக்கட்டுரை தஞ்சை சரசுவதிமகாலின் தமிழ்ப் பதிப்புகளைப் பற்றி அறிய விரும்புபவர்களுக்குத் துணை செய்கிறது.

14. இலக்கணச்சுவடிகளின் ஆய்வுப்பதிப்பு

- திரு. தி.வே. கோபாலையர்

இலக்கணச் சுவடிகளின் நிலைமை இத்தகையன எனத் தொடங்கும் இக் கட்டுரை ஆரம்ப காலத்தில் இலக்கண நூல்கள் எவ்வாறு பதிப்பிக்கப்பெற்றன எனக்காட்டுகிறது. இலக்கண நூற்பதிப்பிற்கு டாக்டர் உ.வே. சா. அவர்களின் நன்னூல் சங்கரநமச்சிவாயர் உரையின் இரண்டாம் பதிப்பு சிறந்த எடுத்துக்காட்டாகும் என்று விளக்குகிறது. பேரறிஞர் கணேசய்யர் அவர்களின் தொல்காப்பியம் பதிப்பிலேயே சில பிழைகள் நேர்ந்துள்ளன என்பது விரிவாக எடுத்துக்காட்டப் படுகிறது. இலக்கண நூற் பதிப்பாசிரியர்கள் இலக்கிய உரைகளையும் ஊன்றிப் பார்க்க வேண்டும் என்பது நன்கு வலியுறுத்தப்பெறுகிறது. தெளிவான நிறுத்தக் குறிகளின் பயன்பாட்டை விளக்கும் இக்கட்டுரை இறுதியில் வீரசோழிய நூற்பதிப்பைப் பற்றி பல அரிய செய்திகளைக் கூறிப் பதிப்பிற்கு இன்றியமையாது வேண்டப்படும் 10 அம்சங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

15. கலைஇலக்கணப் பதிப்புமுறைகள்

-முனைவர் அ.நா. பெருமாள்

இசை, ஓவியம், நாடகம் போன்ற கலைகளுக்குரிய இலக்கணத்தை விளக்கும் சுவடிகளை முறையாகப் பதிப்பிக்க முயலும்போது ஏற்படும் சிக்கல்களை இக்கட்டுரை சிந்திக்கிறது. வாத்திய மரபு என்னும் சுவடியைப் பற்றிய பல செய்திகளின்பின் இத்தகைய நூல்களின் பதிப்பில் மொழியறிவோடு குறிப்பிட்ட அந்தக் கலையிலும் பதிப்பாசிரியருக்குப் போதுமான அறிவு இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. தாள நூல்கள் தரும் கணக்கில் சில தாளங்களின் மாத்திரை அளவு மாற்றியுள்ளதைச் சுட்டிக்காட்டி இசைக் கலைஞர்கள் இதற்குத் தக்க முடிவு எடுக்க வேண்டும் என்கிறது. சுவடிப் பதிப்பில் நூல் மட்டுமேயன்றி அதன் முன்னும் பின்னும் அமைந்துள்ள குறிப்புகளும் நன்கு ஆராயப்படவேண்டும் என்ற கருத்துடன் இக்கட்டுரை நிறைவு பெறுகிறது.

16. மருத்துவச்சுவடிகள் பதிப்பு நெறிமுறைகள்
- முனைவர் வே.இரா. மாதவன்

தமிழில் கிடைக்கும் சுவடிகளுள் மருத்துவச் சுவடிகளே மிகுதி எனத் தொடங்கும் இக்கட்டுரை அவற்றைப் பதிப்பிப்பதில் எழும் சிக்கல்களை ஆராய்கிறது. சென்னையில் உள்ள அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் வெளியிட்டுள்ள ஒன்பது மருத்துவ நூல்களின் பதிப்புமுறைகளும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனப் பதிப்புகள் சிலவும் இங்கு ஆராயப்பெறுகின்றன. மருத்துவ நூற்பதிப்பில் எழுத்து, சொற்பிழைகள் களையப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. மருத்துவ நூல்களின் தலைப்பிலேயே காணப்பெறும் தடுமாற்றங்கள், பரிபாஷைகளால் ஏற்படும் சிக்கல்கள், யோகம், ஞானம், ரசவாதம் போன்ற மருத்துவமல்லாத பிற துறைச்செய்திகளின் கலப்பு போன்றவை சுட்டிக்காட்டப் பெறுகின்றன. எதிர் காலத்தில் மருத்துவ நூல்கள் எவ்வாறு பதிப்பிக்கப்படவேண்டும் என்பதைப்பற்றிய கருத்துக ளுடன் இக்கட்டுரை நிறைவு பெறுகிறது.

17. சோதிடச்சுவடிகளின் பதிப்புகள்
- முனைவர் சி. மூக்கரெட்டி

சுவடிப்பதிப்பின் இன்றியமையாமையைச் சுட்டித் தொடங்கும் இக்கட்டுரை சில சோதிடக்கலைச் சொற்களை விளக்க முயல்கிறது. சோதிட நூற்பதிப்பாசிரியருக்கு இருக்க வேண்டிய தகுதிகளைப் பட்டியலிட்ட பிறகு இக்கட்டுரை தஞ்சை சரசுவதிமகால், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம் ஆகிய நிறுவனங்களின் வெளியீடுகளைக் குறிப்பிட்டு நிறைவுபெறுகிறது.

18. ஓலைச்சுவடியாய்வில் கணிப்பொறியின் பயன்பாடுகள்-
பேரா. கா.செ. செல்லமுத்து

கணிப்பொறிகளின் பயன்பாட்டை விளக்கும் இக்கட்டுரை, நூல்களில் இடம் பெற்றுள்ள சொல், தொடர் முதலியவற்றைக் கணிப்பொறியின் வழி அட்டவணைப்படுத்தி நூலாசிரியர் மற்றும் அவர் காலம் பற்றி ஆய்வு செய்யலாம் என்றும், ஓலைச் சுவடிகளைப் பற்றிக் கிடைக்கின்ற செய்திகள் அனைத்தையும் கணிப்பொறி வழித் தொகுத்து அட்டவணைப் படுத்தலாம் என்றும், நூல்களுக்குச் சொல்லடைவு பொருளடைவுகள்

தயாரிக்கலாம் என்றும் விளக்குகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகம் உரோமன் எழுத்தில் தயாரித்துள்ள அனைத்துலகத் தமிழ்ச்சுவடிகளின் அட்டவணையின் அமைப்பை விளக்கி அதனைத் தமிழ் எழுத்தில் மாற்றிக் கொணரும் முயற்சியும் நிறைவேறும் தருவாயில் உள்ளது எனக் கூறுகிறது. கணிப்பொறி வழிச் செய்யப்பட்ட நூலடைவுப் பகுப்பாய்வில் அறியப்பட்ட செய்திகளில் சிலவற்றைச் சுட்டிக்காட்டி இக்கட்டுரை நிறைவு பெறுகிறது.

19. பல்கலைக்கழகப் பாடநூல்களும் பதிப்பு முறைகளும்

- முனைவர் க.ப. அறவாணன்

தமிழ் இலக்கியங்கள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடமாக வைக்கப்படும்போது அதற்குரிய மாணவர் பதிப்புகள் *(Student editions)* எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதனை இக்கட்டுரை விளக்குகிறது. ஆசிரியர்களுக்கும் மாணவர்கட்கும் பயன்தரத்தக்க நிலையில் அமைய வேண்டிய இப்பதிப்பில் அச்சுப் பிழைகளே இருக்கலாகாது என்பது அழுத்தமாக வலியுறுத்தப் பெறுகிறது.

20. Publication of Historical palm-leaf Records

- Dr. p. Cinnian

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இக்கட்டுரையில் முதலில் ஓலைச்சுவடிகளைப் பற்றிய பொதுவான செய்திகள் இடம்பெற்றுள்ளன. அடுத்து, சுவடிகளின் நம்பகத்தன்மை, காலம், நூலாசிரியரின் நேர்மை முதலில் உறுதிசெய்து கொள்ளப்பெற வேண்டும் என்பது வலியுறுத்தப் பெறுகிறது. வரலாற்றுச் சுவடிப்பதிப்பு உண்மைகளை மட்டுமே கூறுவதாக அமையவேண்டும் என்கிறது. உண்மையை உறுதிப்படுத்த நேர்முறை, எதிர்முறை நெறிகள் விளக்கப்படுகின்றன. சுவடியியல் பற்றிய ஒரு நல்ல நூலடைவையும், வரலாற்றுத் தொடர்புடைய ஓலைச்சுவடிகளின் அடிப்படைத் தகவல்களின் பட்டியலையும் பின் இணைப்பாகப் பெற்று இக்கட்டுரை வரலாற்றுச் சுவடி ஆய்வாளர்க்குப் பெரும்பயன் தருவதாக அமைந்துள்ளது.

21. A Descriptive catalogue of the Tamil manuscripts
- Dr. V. Murugan.

அறிஞர் மு.கோ. இராமன் அவர்களின் கட்டுரையைப் பெரும்பாலும் பின்பற்றி ஆங்கிலத்தில் எழுந்த இந்நூல் சுவடிகளின் தொகுப்பு முறையான பராமரிப்பு, விளக்க அட்டவணைகளின் இன்றியமையாமை ஆகியன வலியுறுத்தப் பெறுகின்றன. தமிழ்ச்சுவடி அட்டவணைகளாகிய சரசுவதிமகால் சுவடி விளக்க அட்டவணை, டாக்டர். உ. வே. சா நூலக அட்டவணை, அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலக அட்டவணை ஆகியவற்றின் நிறைகுறைகள் சுட்டிக்காட்டப்பெறுகின்றன. இறுதியாக, சென்னை ஆசியவியல் ஆய்வுக் கழகத்தின் சுவடிவிளக்க அட்டவணை எம்முறையில் தயாரிக்கப்படுகிறது என்பதும் விளக்கப் பெற்றுள்ளது.

ஆய்வாளர் அறிமுகம்

இக்கட்டுரை மலரை அணிசெய்த பெருமக்கள் இருபத்தொருவராவர். சுவடியியலில் ஆய்வும்தோய்வும் கொண்ட அவர்கள் சுவடிகளை வெளிப்படுத்தவேண்டும். என்னும் பெருவேட்கையில் பெரிதும் ஈடுபாடும் ஆர்வமும் கொண்டவர்களாகத் திகழ்கின்றனர். அவர்களில் பலர் சுவடிகளைப் பதிப்பித்து வெளிப்படுத்திய பட்டறிவில் சிறந்தவர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாம். கருத்தரங்கைத் திட்டமிட்டு நடத்திய ஓலைச்சுவடித்துறையினர் அனைவரும் ஒவ்வொரு கட்டுரையால் இம்மலரை அணி செய்துள்ளனர். சுவடியியலில் ஈடுபாடுகொண்ட பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பிறதுறைப் பேராசிரியர் மூவரும் பல்கலைக்கழகப் பதிவாளரும் மலரை அணி செய்வதில் இத்துறையினருடன் இணைந்துள்ளனர்.

பிறபல்கலைக்கழகங்கள், நிறுவனங்களைச் சார்ந்த பேராளர் சிலர் எங்கள் அழைப்பை ஏற்றுத் தங்களுடைய அரிய ஆய்வுரைகளால் இம்மலரின் அணியை நிறைவு செய்துள்ளனர். அவர்களையெல்லாம் சுவடியியலைச் சார்ந்த அறிஞர்கள் என்று

கூறுவதோடு நில்லாமல் சுருங்கிய அளவிலாவது அறிமுகம் செய்துவைப்பது என் கடமையாகும். கட்டுரைகளில் காணப்பெறும் கருத்துகள் செய்திகள் ஆகிய அனைத்துக்கும் கட்டுரையாசிரியர்களே பொறுப்பாவர். அவர்கள் பலரும் அறிந்த நிலையினரே என்றாலும் முறையாக அறிமுகப்படுத்துவது நிறைவு தருவதாக அமையும் என்று கருதி இவ்வறிமுகத்தைக் காலமும், எல்லையும் கருதிச் சுருங்கவுரைக்கின்றேன்.

1. திரு. மு. கோ. இராமன் (தமிழ்ச்சுவடிகளின் பயிற்சியும் பதிப்பும்)

இவர் தஞ்சைமாவட்டம் அரங்கநாதபுரத்தில் 15-11-1927 இல் பிறந்தவர். தம் தந்தையார் முத்துசாமி ஐயர், கலைமகள் ஆசிரியர் கி.வா. ஜெகந்நாதன் ஆகியோரிடம் தமிழ் பயின்றவர். டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் சுவடித்துறைகளில் சிறக்கப் பணியாற்றிவிட்டு, 1986 முதல் திருவான்மியூர் ஆசியவியல் ஆய்வுக்கழகத்தின் சுவடித்துறையில் பணியாற்றி வருகிறார். சமஸ்கிருதம், மலையாளம், ஆங்கிலம், ஆகிய மொழிகளிலும் பயிற்சியுடையவர். சுவடியியலில் நீண்ட காலமாகப் பட்டறிவுகொண்ட இவர் அத்துறையில் வெளியிட்ட நூல்களும் கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கனவாம்

2. பேராசிரியர் ச. பாலசுந்தரம் (எழுத்து வரிவடிவும் திரிபுகளும்)

இவர் தஞ்சாவூர் கரந்தையில் 1924 இல் பிறந்தவர். கரந்தைப் புலவர் கல்லூரியில் பயின்று வித்துவான் வகுப்பில் முதலாவதாகத் தேர்ந்து 1950 முதல் அக் கல்லூரியிலேயே பேராசிரியராகவும் துணை முதல்வராகவும் பணியாற்றி 1982இல் ஓய்வுபெற்றார். இப்பொழுது தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சங்க இலக்கிய அகராதித் திட்டத்தில் பணியாற்றி வருகிறார். தொல்காப்பியம் சங்க இலக்கியம் போன்ற பழந்தமிழ் நூல்களில் நிறைந்த பயிற்சியைக் கொண்டு விளங்கும் இவர் தாமே இசைப்பாடல்களை எழுதும் ஆற்றலும் பெற்றவராவர். மேற்கண்ட பொருள்களில் ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும்

வெளியிட்டு, இப்பொழுது தமிழியற் கோட்பாடுகளை அறிவியல் நோக்கில் ஆராய்ந்து வருகிறார்.

3. முனைவர் த.சோ. பரமசிவம் (பாடவேறுபாடும் பாடத்தெரிவும்)

இவர் வடார்க்காடு மாவட்டம் களம்பூரில் 11-10-1949இல் பிறந்தவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் முதுகலை பயின்று, தில்லிப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (பிஎச்டி) பட்டம் பெற்றவர். மற்றும் தொல்லியல், கல்வெட்டியல், இந்திமொழி, சுவடியியல் ஆகியவற்றில் சான்றிதழ்களும் பட்டயங்களும் பெற்றவர். புதுதில்லி சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்திலும், தில்லிப் பல்கலைக்கழகத்திலும் 8 ஆண்டுகள் பணியாற்றிவிட்டு 7.11.83 முதல் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஓலைச்சுவடித்துறையில் இணைப் பேராசிரியராகவும் 7.11.87 முதல் துறைத்தலைவராகவும் பணியாற்றி வருகிறார். சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், கல்வெட்டியல், தொல்பொருளியல், ஓலைச் சுவடியியல் ஆகியவற்றில் சிறப்பு ஈடுபாடும் ஆய்வும் கொண்டவர். மேற்கண்ட பொருள்களில் இவர் எழுதிய ஆய்வுக்கட்டுரைகள் குறிப்பிடத்தக்கனவாம்.

4. புலவர் ப.வெ. நாகராசன் (சுவடிப்பதிப்பில் யாப்பின் இன்றியமையாமை)

இவர் சிதம்பரத்தையடுத்த கடவாச்சேரியில் 25.5.1937இல் பிறந்தவர். மின்னணுவியல் துறையில் பட்டயக்கல்வியும் பயிற்சியும் பெற்று அத்துறையில் பணியாற்றிக்கொண்டிருந்தபோதே, தம் சொந்த முயற்சியால் தமிழ் கற்றுப் புலவர், பி.லிட் பட்டங்களைப்பெற்றவர் இந்தியில் விஷாரத் பட்டம் பெற்ற இவர் தெலுங்கு, கன்னடம், வடமொழி ஆகிய மொழிகளிலும் பயிற்சியுடையாராவர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஓலைச்சுவடித்துறை தொடங்கியது முதலாக இவர் அங்கே மூத்ததொழில் நுட்ப உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். 25 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்ச்சுவடிகளோடு தொடர்புடைய இவர் வெளியிட்ட நூல்களும் கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கனவாம். கவிதை இயற்றும் ஆற்றலையும் கைவரப்பெற்ற இவர் சிற்றிலக்கியம்,

மரபிலக்கணம், உரைநூல்கள், சித்திரக்கவிகள், சுவடியியல் ஆகியவற்றில் தோய்ந்த ஈடுபாடும் ஆய்வும் கொண்டவராகத் திகழ்கின்றார்.

5. முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி (பதிப்பாசிரியரும் அவர்தம் கடமைகளும்)

இவர் தென்னார்க்காடு மாவட்டம் வளையமாதேவியில் 16.7.1949இல் பிறந்தவர். விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரியில் தமிழ் இளங்கலை (பி.ஏ) பயின்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலை(எம்.ஓ.எல்) பட்டம் பெற்றவர். இளம்பூரணர் உரையில் ஆய்வுசெய்து அங்கே முனைவர் பட்டமும் (பிஎச்.டி) பெற்றவர் மற்றும் ஆசிரியப்பயிற்சி (பி.எட்), மொழியியல் ஆகியவற்றில் பட்டமும் பட்டயமும் பெற்றவர். இவர் 27.4.84 முதல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஓலைச்சுவடித்துறை, அகராதித்துறை ஆகியவற்றில் பணியாற்றிவிட்டு, 3.8.87 முதல் ஓலைச்சுவடித்துறையின் விரிவுரையாளராகப் பணியாற்றிவருகிறார். இலக்கணம், உரைகள், சங்க இலக்கியம், சுவடியியல் ஆகியவற்றில் ஈடுபாடும் ஆய்வுச் சீர்மையும் கொண்ட இவரின் ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள் குறிப்பிடத்தக்கனவாய் இலங்குகின்றன.

6. முனைவர் ம. இராசேந்திரன் (நூலாக்கத்தில் தாள்சுவடிகளும் ஓலைச்சுவடிகளும்)

இவர் தஞ்சைமாவட்டத்தில் குடவாயில் ஊரில் 3.3.1951 இல் பிறந்தவர். தமிழில் முதுகலைப்பட்டம், எம்.பில் ஆய்வுப்பட்டம், ஆகியவற்றைப்பெற்றவர். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 'மெக்கன்சியின் தமிழ்ச்சுவடிகள் ஓர் ஆய்வு' என்னும் ஆய்வை மேற்கொண்டு முனைவர் பட்டம் (பிஎச்டி) பெற்றவர். சென்னை, அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகத்தில் 12 ஆண்டுகளும், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஓராண்டும் பணிபுரிந்துவிட்டு, தமிழ்ப் பல்கலைக்கழக அரிய கையெழுத்துச் சுவடித்துறையில் சிறப்புத்தகைமையாளராகவும் 3.8.87 முதல் விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகிறார். மெக்கன்சி சுவடிகள், தமிழக வரலாறு, நாட்டுப்புற இலக்கியங்கள்

போன்றவற்றில் ஈடுபாடும் ஆய்வும் கொண்ட இவருடைய ஆய்வுக் கட்டுரைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாம்.

7. புலவர் செ. இராசு (செப்பேடுகளும் ஓலைச்சுவடிகளும்)

இவர் பெரியார் மாவட்டம் வெள்ளமுத்துக் கவுண்டன் வலசில் 2.1.1938 இல் பிறந்தவர். திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் புலவர் பட்டம் பெற்றவர். தமிழில் முதுகலைப்பட்டமும் பெற்றவர். தமிழாசிரியராக 22 ஆண்டுகள் பணிபுரிந்தவர். தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையில் 15 திங்கள் ஆய்வாளராகப் பணிபுரிந்துவிட்டு 1.2.82 முதல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வெட்டுத்துறையில் இணைப்பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். இலக்கியம், தொல்லியல், வரலாறு, கலைக்கூட அமைப்பு, கல்வெட்டு, செப்பேடு ஆகியவற்றில் இவர் துறைபோய பயிற்சியும் ஆய்வும் கொண்டவராவார். பழம்பொருள் பாதுகாப்பில் பெரிதும் ஆர்வம் கொண்ட இவர் மேற்கண்ட பொருள்களில் எழுதிய நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் சிறப்பாகக் கூறத்தக்கனவாம்.

8. முனைவர் இ. சுந்தரமூர்த்தி (பழந்தமிழ்ப் பதிப்புகள்)

தமிழில் புலவர், முதுகலை, முனைவர் பட்டங்களைப்பெற்ற இவர் மானிடவியலில் பட்டயமும் பெற்றவராவார். சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் மொழித்துறையில் இணைப்பேராசிரியராக விளங்கும் இவர் 1969 ஆம் ஆண்டு முதலாக அங்கே பணிபுரிந்து வருகின்றார். சுவடியியல், பதிப்பியல், தொல்லியல், மானிடவியல், அகராதியியல் முதலிய துறைகளில் பயிற்சியும் ஈடுபாடும் உடையவர். நடையியல், இலக்கணம், பத்தி இலக்கியம் இவற்றில் தனிஆர்வம் கொண்டவர். மேற்கண்ட பொருள்களின் கூறுகளைப்பற்றி இவர் எழுதியுள்ள நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் சிறப்பாகக் கூறுதற்குரியன.

9. புலவர் இரா. இளங்குமரன் (மறைந்த நூல்களைப் பதிப்பித்தல்)

இவர் நெல்லை மாவட்ட வாழவந்தாள்புரத்தில் 30.1.1930 இல் பிறந்தவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில்

1951இல் புலவர் பட்டம் பெற்றவர். அந்நாள் முதல் உயர்பள்ளி, மேனிலைப்பள்ளித் தமிழாசிரியராகப் பணியாற்றி 1985 முதல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற் புல ஆய்வாளராகப் பணியாற்றி 1989 சனவரி 10இல் ஓய்வு கொண்டவர். பாவாணர் ஆய்வு நூலகம் நிறுவி ஆய்வாளர்க்கு உதவி வருபவர். இலக்கியம், இலக்கணம், வரலாறு, சுவடியியல், பதிப்பியல் ஆகியவற்றில் துறைபோய அறிஞராக விளங்கும் இவர் பதிப்பித்தும், இயற்றியும் வெளியிட்ட நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் சிறந்த ஆய்வை வெளிப்படுத்துவனவாம்.

10. செல்வி ந. விசாலாட்சி (சங்க இலக்கியப் பதிப்புகள்)

இவர் சென்னை இராணிமேரிக் கல்லூரியில் இளங்கலைப் பட்டப்படிப்பையும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப்படிப்பையும் முடித்தவர். அங்கேயே 'எம்.பில்' ஆய்வை முடித்த இவர் முனைவர் பட்ட ஆய்வை, 'சங்க இலக்கியப் பதிப்புகள்' என்னும் தலைப்பில் மேற்கொண்டு வருகிறார். சங்க இலக்கியம், தற்கால இலக்கியம், பதிப்பியல் ஆகியவற்றில் ஈடுபாடும் ஆய்வும் கொண்ட இவர் அப்பொருள்களின் ஆய்வுக்கட்டுரைகளையும் வழங்கி வருகின்றார்.

11. திரு. சி. இலட்சுமணன் (ஆறுமுக நாவலரின் பதிப்புமுறைகள்)

இவர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மதுசூதன புரத்தில் 24.8.1952இல் பிறந்தவர். நாகர்கோயில் தெ.தி. இந்துக் கல்லூரியில் தமிழ் முதுகலை பயின்றவர். மதுரை அரசரடி இறையியல் கல்லூரியில் 4 ஆண்டுகள் பணியாற்றிவிட்டு, 12.8.1983 முதல் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையில் தொழில் நுட்ப உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். பேரா. மு. சண்முகம்பிள்ளையின் பதிப்புப்பணி என்ற பொருளின் 'எம்.பில்' ஆய்வும் செய்துவருகின்ற இவர், தொல்காப்பியம், மரபுக்கவிதைகள், தத்துவம், உளவியல், சுவடியியல் ஆகியவற்றில் சிறப்பு ஈடுபாடு கொண்டவர். அப்பொருள்களில் ஆய்வுக்கட்டுரைகளையும் வழங்கிவருகின்றார்.

12. பேரா. மு. சண்முகம் பிள்ளை
(பேரா. வையாபுரிப்பிள்ளையின் பதிப்புமுறைகள்)

இவர், கன்னியாகுமரி மாவட்டம் வீமநகரியில் 16.12.1919 இல் பிறந்தவர். திருவையாறு அரசர் கல்லூரியில் வித்துவான் பயின்றவர். தமிழ்ப்பண்டிதராகச் சைதை அரசு உயர்நிலைப்பள்ளியிலும் விரிவுரையாளராகக் கோவை அரசு கலைக்கல்லூரியிலும், -தொகுப்பாளராகத் தமிழ் வளர்ச்சித் துறையிலும், விரிவுரையாளராகத் திருக்குறள் துறை-சென்னைப் பல்கலைக்கழகத்திலும், ஆய்வாளராக- தமிழியல் துறை-மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும் பணியாற்றிவிட்டு, இறுதியாகச் சிறப்புநிலைப் பேராசிரியராக ஓலைச்சுவடித்துறை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளையவர்களின் அணுக்க மாணவரான இவர் சங்க இலக்கியம், தொல்காப்பியம், பத்தி இலக்கியம், நிகண்டு, சிற்றிலக்கியங்கள், பாரதி பாடல்கள், அகராதிக்கலை, சமண இலக்கியங்கள் ஆகியவற்றில் தோய்ந்த ஈடுபாடும் ஆய்வும் கொண்டவராவார். இப்பொருள்களில் அமைந்த இவர் தம் நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் சிறந்து விளங்குவனவாம்.

13. புலவர் வீ. சொக்கலிங்கம் (சரசுவதிமகால் பதிப்புகள்)

இவர் தஞ்சையில் 11.12.1925 இல் பிறந்தவர். கரந்தைப் புலவர் கல்லூரியில் வித்துவான் பட்டம் பெற்றவர். பாண்டிச்சேரி விஜயன் வித்யாலய மெட்ரிக்குலேஷன் பள்ளியில் 3 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றிவிட்டுப் பின்னர் மன்னர் சரபோஜியின் சரசுவதிமகால் நூலகத்தில் 25 ஆண்டுகள் தமிழ்த் துறைத்தலைவராகப் பணியாற்றியுள்ளார் 30.3.87 முதல் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையில் திட்ட உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். சுவடிகள் சேகரிப்பதிலும் அவற்றைப் பாதுகாத்து வெளியிடுவதிலும் பேரார்வம் கொண்ட இவர் பலநூல்களைச் சுவடியினின்று வெளிப்படுத்தியுள்ளார். சமய நூல்கள், தொல்பொருளியல், கல்வெட்டியல் ஆகியவற்றிலும் சமயப்பணிகளிலும் இவர் ஈடுபாடுகொண்டவராவார்.

14. திரு. தி.வே. கோபாலையர் (இலக்கணச்சுவடிகளின் ஆய்வுப்பதிப்பு)

இவர் தஞ்சைமாவட்டத்துத் துகிலி என்ற சிற்றூரில் 22.1.1925 இல் பிறந்தவர். திருவையாற்றில் கல்வி பயின்றவர். உயர்நிலைப்பள்ளியில் பயின்றகாலை தவறாது ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மதிப்பெண் பெற்று வந்தவர். கல்லூரிப் படிப்பிலும் அந்நிலை தொடரப்பெற்றவர். வித்துவான், பண்டிதம், பி.ஓ.எல்., பி.ஓ.எல் (ஆனர்சு) ஆகிய தேர்வுகளில் முதல் மதிப்பெண் பெற்றுப் பரிசும் பதக்கமும் பெற்றவர். பதினைந்து ஆண்டுகள் உயர்நிலைப்பள்ளியிலும் பதினைந்து ஆண்டுகள் தமிழ்க் கல்லூரிகளிலும் ஆசிரியராகப் பணியாற்றியவர். சில ஆண்டுகளாகப் புதுவை பிரஞ்சு இந்திய ஆய்வு நிறுவனத்தில் தமிழ்த்துறைத்தலைவராகப் பணியாற்றி வருபவர். சரசுவதிமகால் நூலகத்தின் வழியாகவும், புதுவையில் பணியாற்றும் இந்நாளிலும் இவர் வெளியிட்ட பதிப்புகளும் ஆய்வுரைகளும் அருமை வாய்ந்தன. இவரின் நினைவாற்றலைப் பலரும் சிறப்பித்துச் சொல்வர். தமிழ் இலக்கணம் பற்றிய அகராதி, வைணவத்தமிழ் அகராதி முதலியன தொகுத்து வருபவர். தமிழின் இன்றியமையாத எல்லாத் துறைகளிலும் நிரம்பிய புலமையும் ஈடுபாடும் உடையவர்.

15. முனைவர் அ.நா. பெருமாள் (கலை இலக்கணப் பதிப்புமுறைகள்)

இவர் கன்னியாகுமரி மாவட்டம் உசரவிளையில் 14-4-1930இல் பிறந்தவர். பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகம் பற்றிய திறனாய்விற்கு 1972 இல் முனைவர் பட்டம் பெற்றவர். உயர்நிலைப்பள்ளி ஆசிரியராகப் பத்து ஆண்டுகளும், கல்லூரிப் பேராசிரியராகப் பத்து ஆண்டுகளும், முதுகலைப்பட்ட வகுப்பு ஆசிரியர் பணியில் 1 1/2 ஆண்டுகளும், ஆராய்ச்சித்துறைப்பேராசிரியராகப் பத்துஆண்டுகளும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநராக 2 ஆண்டுகளும் பணியாற்றிவிட்டு 5.10.88 முதல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நாடகக் களஞ்சியத்துறையின் தலைவராகப் பணியாற்றிவருகிறார். நாடகம், நாட்டுப்புறக்கலைகள், தமிழிசை ஆகியவற்றில் சிறப்பு ஈடுபாடுகொண்ட இவர், பதிப்பித்தும்

இயற்றியும் வெளியிட்ட நூல்களும் ஆய்வுரைகளும் சிறப்புநிலையைக் காட்டுவனவாம். சுவடியியலில் இவர் தம் தோய்ந்த ஈடுபாடு எடுத்துச்சொல்லும் தரத்ததாம்.

16. முனைவர் வே.இரா.மாதவன் (மருத்துவச் சுவடிகள் பதிப்பு நெறிமுறைகள்)

இவர் வடார்க்காடுமாவட்டம் வேலூரில் 6.4.1952இல் பிறந்தவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலைப் பட்டமும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் இளங்கல்வியியல் (பி.எட்.) பட்டமும் பெற்றவர். தமிழ் மருத்துவச் சுவடிகளை முதன் முதலாக ஆய்வுசெய்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றவர். சித்த மருத்துவம், ஓவியம், சுவடியியல் ஆகியவற்றில் பட்டயங்களையும் பெற்றவர். சுவடியியலின் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றவர். பயின்ற நிறுவனமான உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆறு ஆண்டுகள் பணியாற்றிய பின் 18.6.86 முதல் தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச் சுவடித் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். சுவடியியல் ஆய்விலும், இலக்கியம் மற்றும் மருத்துவச் சுவடிப் பதிப்பிலும் சிறப்புப்பயிற்சியும் ஈடுபாடும் கொண்ட இவரின் நூல்களும் ஆய்வுரைகளும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

17. முனைவர் சி.மூக்கரெட்டி (சோதிடச் சுவடிகளின் பதிப்புகள்)

இவர் திருச்சி மாவட்டம் மகாதேவி என்ற ஊரில் 12.5.1936இல் பிறந்தவர். வரலாற்றுத்துறையில் இளங்கலைப் பட்டத்தைச் சென்னைப் பல்கலைக் கழகத்திலும், முதுகலைப் பட்டத்தைத் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்திலும், முனைவர் பட்டத்தை மைசூர் பல்கலைக் கழகத்திலும் பெற்றவர். நூலகத்துறையில் இளங்கலைப் பட்டத்தைக் கேரளப்பல்கலைக் கழகத்திலும் பெற்றவர். 1957ஆம் ஆண்டுமுதல் திருச்சிராப் பள்ளி மாவட்டத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய பின் 1968 முதல் ஈரோடு வாசவி கல்லூரியில் நூலகராகப்பணியாற்றி வருகிறார். இவர் இலக்கியம், வரலாறு, பண்பாடு, தொல்லியல், கல்வெட்டியல் போன்ற துறைகளில் ஈடுபாடும் ஆய்வும்

கொண்டவர். இவர்தம் நூலும், ஆய்வுக் கட்டுரைகளும் மேற்கண்ட பொருள்களில் அமைந்து சிறக்கின்றன.

18. பேரா.கா.செ.செல்லமுத்து (ஓலைச்சுவடியாய்வில் கணிப்பொறியின் பயன்பாடுகள்)

இவர் திருச்சி மாவட்டத்திலுள்ள காட்டுப்பாளையம் என்ற சிற்றூரில் 12.1.1956இல் பிறந்தவர். கோவை அரசு பொறியியல் கல்லூரியில் மின்னணுவியல் மற்றும் தொலை தொடர்புப் பொறியியலில் இளங்கலைப் படிப்பும் (பி.ஈ.ஆனர்சு), சென்னைப் பொறியியல் கல்லூரியில் (அண்ணா பல்கலைக் கழகம்) கணிப்பொறி அறிவியலில் முதுகலைப் பட்டமும் பெற்றவர். பங்களூரில் உள்ள இந்தியத் தொலைபேசி நிறுவனத்தில் ஓராண்டுத் திட்டப் பொறியாளராகவும் பின்னர் தனியார் கணிப்பொறி நிறுவனம் ஒன்றில் ஈராண்டுகள் ஆய்வுப் பொறியாளராகவும் பணியாற்றியவர். 1982 சூன் முதல் 1986 மே வரை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கணிப்பொறி அறிவியல் இணைப்பேராசிரியராகவும் சூன் 1986 முதல் கணிப்பொறி அறிவியல் பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார். கணிப்பொறியை மொழியாய்வுக்கும் மொழி வளத்துக்கும் எவ்வெவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை நுணுகி ஆய்ந்து வரும் இவர் சுவடியியலுக்கும் அதைப் பயன்படுத்த முனைந்துள்ளார். கணிப்பொறிவழி வரிவடிவமாற்ற அமைப்பு, மொழிபெயர்ப்பு, இயற்கை மொழியாய்வு, மொழி கற்பித்தல் போன்ற துறைகளில் இவர் ஈடுபாடும் ஆய்வும் கொண்டவர். இவரது ஆய்வுநூல்களும் கட்டுரைகளும் இப்பொருளில் சிறப்பாகச் சொல்லத் தகுவன.

19. முனைவர் க.ப.அறவாணன் (பல்கலைக் கழகப் பாடநூல்களும் பதிப்பு முறைகளும்)

இவர் தஞ்சைமாவட்டம் கடலங்குடியில் 9.8.1941இல் பிறந்தவர். தமிழில் வித்துவான், பி.ஓ.எல் பட்டங்களை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், முதுகலையைக் கேரளப் பல்கலைக் கழகத்திலும், எம்.லிட், மற்றும் முனைவர் பட்ட ஆய்வுகளைச் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் முடித்தவர். பிரஞ்சு, உருசிய மொழி, மொழியியல், கல்வெட்டியல்,

மானிடவியல் ஆகியவற்றில் பட்டயங்களும் சான்றிதழ்களும் பெற்றவர். சேவியர் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, இலயோலா கல்லூரி ஆகியவற்றில் பேராசிரியராகப் பணிபுரிந்த இவர், இன்று புதுவை மத்தியப் பல்கலைக் கழகத்தின் தமிழியல் துறைத் தலைவராகப் பணிபுரிந்து வருகிறார். தமிழியலின் பன்முகப்பட்ட பொருள்கள் அனைத்திலும் ஈடுபாடும் ஆய்வும் கொண்ட இவருடைய நூல்களும் ஆய்வுரைகளும் தரம் வாய்ந்த சிறப்புடையன என்றால் அது மிகையாகாது.

20. முனைவர் பெ.சின்னையன் (Publication of Historical Palm-leaf Records)

இவர் கோவையில் 12.1.1936இல் பிறந்தவர். வரலாற்றில் முதுகலைப் பட்டத்தையும், கல்வியியலில் முதுகலைப் பட்டத்தையும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பெற்ற இவர், வேலூர் புரட்சியைச் சிறப்பாக ஆய்வு செய்து மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்தைப் பெற்றவர். ஈரோடு வாசவி கல்லூரியின் வரலாற்றுத் துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்த இவர் 1987 முதல் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பதிவாளராகப் பணிபுரிந்து வருகிறார். கற்காலம், பிரிட்டிஷ் வரலாறு, தொல்லியல், அகழாய்வு, தமிழகத் தற்கால வரலாறு, பண்பாடு, சுவடியியல் ஆகியவற்றில் தோய்வும் ஆய்வும் கொண்டவர். இவரது தமிழ், ஆங்கில நூல்களும் ஆய்வுரைகளும் எடுத்துச் சொல்லும் சிறப்புடையன.

21. முனைவர் வி.முருகன் (A Descriptive Catalogue of the Tamil mss.)

ஆங்கில மொழியில் முதுகலையும் ஒப்பாய்வில் முனைவர் பட்டமும் பெற்ற இவர், திருவான்மியூர் ஆசியவியல்கல்விக் கழகத்தில் ஆங்கில இணைப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். மொழியியல், ஒப்பாய்வு, சுவடியியல் போன்றவற்றில் ஆய்வும் ஈடுபாடும் கொண்ட இவர், சுவடி விளக்க அட்டவணையை உருவாக்குவதிலும், ஆய்வுக் கட்டுரைகள் வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளார் (இவரைப் பற்றிய பிற குறிப்புகள் இப்பகுதி, அச்சாகும் வரை கிடைக்கவில்லை).

நன்றியுரை

இக்கருத்தரங்கக் கட்டுரைத்தொகுப்பிற்கும், இதை மலர்விப்பதற்கு அடிப்படையாய் அமைந்த கருத்தரங்குக்கும் மூலகாரணமாய் விளங்குபவர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மாண்புநிறை முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்களேயாவர். இப்பொருளில் கருத்தரங்கை நடத்த வேண்டும்-இத்துறையில் ஈடுபாடு கொண்ட அறிஞர் பெருமக்களை அழைத்து, ஆய்வுரை பெறுதல் வேண்டும் என்று ஆணை வழங்கியதோடு அடிக்கடி உசாவியறிந்து ஊக்கப் படுத்தியமையை நன்றியோடு நான் நினைத்துப் பார்க்கிறேன். அவர்கள் துறைப்பணிகளில் கருத்தரங்கப் பணியையும் ஒன்றாக்கி உரமூட்டினார்கள். இக்கருத்தரங்கு வெற்றியுடன் நிறைவுபெறுவதற்குரிய அனைத்துப் பணிகளிலும் தம் கவனத்தைச் செலுத்தி ஒத்துழைத்தார்கள்.

'இவ்வாண்டு ஓலைச் சுவடித்துறை என்ன கருத்தரங்கை நடத்தப் போகிறது? சென்ற ஆண்டு நடந்த கருத்தரங்கின் கட்டுரைகளை என்ன செய்தீர்கள்? அதை நுண்ணாய்வு செய்து வெளிப்படுத்த வேண்டாமா? இத்துறையில் துறைபோய அறிஞர் பெருமக்களின் ஆய்வுரைகளை வெளிப்படுத்தினால்தானே கருத்தரங்கின் நோக்கம் முழுமைபெறும், கட்டுரைகளைக்கூட சென்ற கருத்தரங்கத்திலேயே தொகுத்து வெளியிட்டீர்களே, அதை அச்சிட்டு இந்தக் கருத்தரங்கில் வெளியிடலாமே' என்று ஊக்கப்படுத்தினார்கள். அதை நுண்ணாய்வு செய்து வெளிப்படுத்துவதற்குரிய காலம் போதாதே. இன்னும் இருவாரங்களில் இவ்வாண்டைய கருத்தரங்கின் தொடக்க விழா நடத்தத் திட்டமிட்டு விட்டோமே ... இது முடிகின்ற பணிதானா? என்று நான் ஐயுற்றுக் கவன்றபோது -' வெளியிடவேண்டும் என்றால் உடனே ஒரு வாரத்திலே கூட வெளியிடமுடியும் - பணத்தைப் பற்றிய கவலை வேண்டாம். நல்ல கட்டுரைகள் என்றால் உடனே வெளிப்படுத்திவிடுவோம். நுண்ணாய்வு செய்வதற்கு நேரே சென்று வாருங்கள், அச்சகத்தை உடனே ஏற்பாடு செய்யுங்கள் என்று நெறிப்படுத்தியதோடு, எல்லாவற்றுக்கும் உடனுக்குடன் இசைவாணைகள் வழங்கி, அச்சுப் பணியை விரைவுபடுத்தினார்கள்.

அவர்தம் ஊக்கவுரையாலும் ஆக்கவுரையாலுமே இம்மலர், இன்று அச்சு வடிவில் உலவுகிறது. எனவே, மாண்புநிறை துணை வேந்தர் அவர்களுக்கு நான் முதற்கண், பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

கருத்தரங்கப் பொருள் மற்றும் அமைப்பைப் பதிவாளர் திருமிகு பேராசிரியர் பெ.சின்னையன் அவர்களிடம் விவாதித்து நெறிப்படுத்த வேண்டியபோது, வரலாற்றில் துறைபோய அவர்கள், தாமே ஒரு கட்டுரையளிப்பதாக உற்சாகப் படுத்தினார்கள். சொல்லியவண்ணம், ஆங்கிலத்தில், அழகிய கட்டுரையொன்றைப் பல்வேறு வகைப்பட்ட தம் அலுவல் பொறுப்புகளுக்கிடையேயும் உருளச்சு வடிவிலேயே வழங்கி ஊக்கப்படுத்தினார்கள். அன்று, கருத்தரங்க ஏற்பாடுகளில் பல்லாற்றானும் துணைநின்று சிறப்பித்ததுபோலவே, இன்றும், இக்கட்டுரைகள், நூல்வடிவில் வெளிவருவதற்குரிய அனைத்துப் பணிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் வழங்கித் துணை நின்றார்கள். அவர்களுக்கும் நன்றி பாராட்டுவது, என் கடமையும் பொறுப்புமாகும் என்று உணர்கின்றேன்.

தஞ்சைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினருமான திருமிகு எஸ்.என்.எம்.உபயதுல்லா அவர்கள், பழமையைப் போற்றிப் பாதுகாக்கவேண்டும் என்னும் வேட்கையில் சிறந்து விளங்குபவராவர். அவர்களை, இவ்வாண்டு நடைபெறும் கருத்தரங்கத்திற்கு வாழ்த்துரை வழங்க வருதல் வேண்டும் என்று வேண்டியபோது-கருத்தரங்க நடைமுறை-கட்டுரை வெளியீடுகள் ஆகியவற்றை ஆர்வமுடன் கேட்டறிந்து, சென்ற ஆண்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளை அச்சிட்டு வெளியிடலாமே என்று ஊக்கப்படுத்தினார்கள். அவர்தம் ஊக்கமே, மாண்புநிறை துணைவேந்தர் அவர்களிடம் விரைவில் செயல்வடிவம் கொண்டது. அவர்கள் அத்துடன் நில்லாமல், ஓலைச் சுவடித்துறையின் பணிகளை ஊக்கப்படுத்தும் வண்ணம் ரூ.12000/- அளவில் அறக்கட்டளை ஒன்றை நிறுவினார்கள். எனவே, தஞ்சைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு எஸ்.என்.எம்.உபயதுல்லா அவர்களுக்கு நன்றி பாராட்டுவதை என் உரிமையும் கடமையுமாகக் கருதி மகிழ்கின்றேன்.

அவ்வாறே, அலுவலக நடைமுறைப் பணிகளில் துணைநின்ற துணைப் பதிவாளர், நிதி அலுவலர், கணக்கு அலுவலர் மற்றுமுள்ள அலுவலர் அனைவர்க்கும் தனிப்பட்டமுறையிலும், துறை சார்பாகவும் நன்றி பாராட்டுகின்றேன்.

ஓலைச்சுவடித்துறை கருத்தரங்கு நடத்துகின்றது என்பதையறிந்து உடனே, நெஞ்சார வரவேற்றுக் கடிதம் வழியாக, அவ்வப்போது கட்டுரைகள் குறித்து வினவி ஊக்கப்படுத்தியதுடன், தம் கட்டுரையை உடனே அனுப்பித் துணைபுரிந்தவர் முன்னாள் சுவடிப்புலத்தலைவரும், ஓலைச்சுவடித்துறையின் தலைவருமான பேராசிரியர் மு.சண்முகம்பிள்ளையாவார். சுவடியியலில் நெடுநாளைய பட்டறிவைக் கொண்ட அவர்தம் வழிகாட்டுதல் அனைத்துக்கும் நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இக்கட்டுரை மலருக்கு இன்றியமையாத இதழ்களாக விளங்குபவர்கள் கட்டுரை வழங்கிய ஆய்வாளர்களாவர். அவர்களின் ஒத்துழைப்பு இல்லையேல் கட்டுரை ஏது?கட்டுரை மலர் ஏது? அவர்கள், தம் பல்வேறு பணிகளுக்கிடையில்-ஓலைச்சுவடித்துறையின்பால், சுவடியின்பால் கொண்ட ஈடுபாட்டினால் அரிதின் முயன்று ஆய்வுரைகளை வழங்கி, இம்மலரைப் பொருளுடையதாக ஆக்கியுள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும்-அறிஞர் மு.கோ.இராமன், அறிஞர் தி.வே.கோபாலையர், முனைவர் அ.நா.பெருமாள், புலவர் இரா. இளங்குமரன், முனைவர் ம.இராசேந்திரன், பேரா.கா.செ.செல்லமுத்து, புலவர் செ.இராசு, முனைவர் சி.மூக்கரெட்டி, புலவர் வீ.சொக்கலிங்கம், பேரா.ச.பாலசுந்தரம், செல்வி.ந.விசாலாட்சி, முனைவர் வி.முருகன் ஆகிய அனைவர்க்கும் என் நன்றி உரியதாகும்.

சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தியவர்கள் அரிய ஆய்வுரை வழங்கித் துணை புரிந்தோடு-கால நெருக்கடியிலும், இம்மலரை முழுமையாக நுண்ணாய்வு செய்து வழங்கிச் சிறப்பித்தார்கள். அவர்களின் அரிய துணைக்கும் வாழ்த்துக்கும் என் நன்றி உரியது.

கருத்தரங்கில் அமர்வுத் தலைமையேற்று அரிய தலைமைப்பொழிவுகளை வழங்கிச் சிறப்பித்த சுவடிப் புலத்தலைவர் பேரா.எ.சுப்பராயலு, மொழிப் புலத் தலைவர் பேரா.சோ.ந.கந்தசாமி, அரிய கையெழுத்துச் சுவடித்துறை பேரா.ப.சுப்பிரமணியன் ஆகியோர்க்கும் என் நன்றி உரியது.

எல்லாப் பணிகளிலும் என்னுடன் துணைநின்று அரிய கட்டுரைகளை வழங்கியதுடன் காலநேரம் பாராமல் முகம் கோணாமல் உழைத்து நின்றவர்கள் ஓலைச்சுவடித்துறை அன்பர்களாவர். அவ்வப்போது கட்டுரைகளை உற்று நோக்கியும் தட்டச்சுப்படிகளை, உருளச்சுப்படிகளைத் திருத்தியும், இன்று, அச்சுப் படிகளை உற்றுநோக்கித் திருத்தியும் பெரிதும் துணைநின்ற முனைவர் வே.இரா.மாதவன், முனைவர் சா.கிருட்டிணமூர்த்தி, புலவர் ப.வெ.நாகராசன், திரு.சி.இலட்சுமணன், புலவர் வீ.சொக்கலிங்கம் ஆகிய அனைவர்க்கும் நான் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக, முனைவர் சா.கிருட்டிணமூர்த்தி அவர்கள் கருத்தரங்க அமர்வுச் சிந்தனைகளைத் தொகுத்ததுடன், அச்சுப்பணிகளுக்காக இரவு பகலாகப் புதுக்கோட்டையிலேயே தங்கிப் பணிபுரிந்தார்கள். புலவர் ப. வெ. நாகராசன் அவர்கள் சொல்லடைவைத் தொகுத்து வழங்கினார்கள். இவர்கள் அனைவருடைய கடின உழைப்பின் காரணமாகவே, இந்நூல் இவ்வளவு விரைவில் வெளிவருகிறது.

கட்டுரைகளை உரிய காலத்தில் தட்டச்சு செய்துதவிய திருமதி கலைச்செல்வி, செல்வி நா.பாரதி, திருமதி கலாவதி ஆகியோர்க்கும் என் நன்றியுரியது.

இவ்வளவு முயற்சியும் துணையும் முழுவெற்றி பெறும்முகத்தான்-கால நெருக்கடியிலும் இம்மலரைச் சிறப்பாகக் கணிப்பொறி மூலம் அச்சடித்து வழங்கினர் புதுக்கோட்டை சர்மா சானடோரியம் அச்சகத்தினர். அவர்தம் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது. அவர்களுக்கும் என் நன்றி உரியது.

ஆய்வுக்கு நெறிமுறைகளை வகுப்பது என்பது நிறைவுபெற்று விடமுடியாது. காலமும் மொழியறிவும் பெருகப்பெருக, நெறிமுறைகளும் புதிதுபுதிதாக வளருந் தன்மையுடையன. இந்த வகையில் சுவடிப்பதிப்பு நெறிமுறைகள் என்னும் இந்நூல், சுவடியியல் முழுவதையும் கூறிவிட்டதாகக் கூறமுடியாது; என்றாலும் சுவடியியலுக்கு ஓர் அறிமுகமாக, திறவுகோலாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இத்திறவுகோலை

அடிப்படையாகக்கொண்டு சுவடியியல் பற்றிய நுணுக்கமான செய்திகள் பலவற்றை மேலும் இத்துறை அறிஞர்கள் வெளிப்படுத்தவேண்டும். அறிமுகநிலையில் உள்ள இந்நூல், மாணாக்கர், சுவடி ஆய்வோர், சுவடி ஆர்வலர், மொழி ஆர்வலர் போன்ற அனைவர்க்கும் பெரிதும் பயனுடையதாக விளங்கும் என்னும் நம்பிக்கை பெரிதுடையேன்.

இந்நூலில் காணப்படும் குறைகளையும் இனி மேற் கொள்ளப்படவேண்டிய திருத்தங்களையும், இணைத்து வளப்படுத்தவேண்டிய கருத்துகளையும் அறிஞர் உலகு சுட்டிக் காட்டி வாழ்த்துமேல், அவர்களுக்கெல்லாம் பெரிதும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன் ஆவேன்.

இக்கருத்தரங்க மலர் இனிதே வெளிவரத் தோன்றாத்துணையாய் அருள் பாலித்த திருவருளை எண்ணி வியக்கின்றேன்; வாழ்த்துகின்றேன்.

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்கணக் கின்னம்பர் ஈசனே'

- அப்பர்

பதிப்பு நெறிநின்று சுவடியாய்ந்து தமிழ்வளம் காக்கும் அறிஞர் பலர், நம் தமிழன்னைக்கு வாய்ப்பார்களாக.

தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்,
10.3.1989.

கு.கோ.பரமசிவம்

தமிழ்ச் சுவடிகள்-பயிற்சியும் பதிப்பும்

மு.கோ. இராமன்

உலகின் புறஇருளை நீக்குவது வெம்மையான கதிரவனும், அகவிருளை நீக்குவது ஒப்பற்ற தண்தமிழுமாகும். இக்கருத்தை,

"ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஈங்கொலிநீர் ஞாலத்து இருள்கடியும்-ஆங்கவற்றுள்
மின்னேர் தனிஆழி வெங்கதிர்ஒன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்"

என்ற பழைய பாடல் விளக்கி நிற்கின்றது. உலகிற் சூரியன்போல் மக்கள் அகத்தில் ஒளிர்வது தமிழ் எனப் பேசப் பெறுவதால் மனிதன் நாகரிகம் பெற்றுப் பேசமுயன்ற போது தோன்றிய பழைய மொழிகளுள் தமிழ் ஒன்று என்பதுணரலாகும்.

மொழியின் தோற்றம்

ஆதியில் மனிதன் தன் உணர்ச்சிகளைச் சைகைமூலம் வெளிப்படுத்தினான். அந்தப் பேச்சு அவர்கள் சூழ்நிலை, தட்பவெப்ப நிலைக்கேற்ப ஒலிவடிவம் பெற்றது. இவ்விதம் ஒலிவடிவம் பெற்ற மொழி பின்னர் வரிவடிவம் பெற்றது. வரிவடிவம் பெற்றமையால் மொழி பல இடங்களுக்கும் பல காலத்துக்கும் பரவ வாய்ப்பேற்பட்டது.

எழுத்தின் தோற்றம்

முதலில் மக்கள் வரிவடிவத்தில் தங்கள் கருத்துக்களைக் கூறச் சித்திரங்களையே பயன்படுத்தினர். சிந்துவெளி நாகரிகத்தின் அகழ்வாய்வுகளில் இந்தச் சித்திரவடிவக் கருத்துக்களே காணப்படுகின்றன. மக்கள் தங்கள் கருத்துக்களை வரைய முதலில் ஈரக்களிமண்ணைப் பயன்படுத்திப் பின்னர்

அதைச் சுட்டுப் பாதுகாத்தனர். பானை ஓடுகளிலும் இவ்விதம் எழுதிவந்ததை ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழிகளின் மூலம் உணரமுடிந்தது. பின்னர் எழுத்துமுறை உருவாகித் தம் கருத்தை இலைகளிலும், தாழைமடல்களிலும் பனையோலைகளிலும் வரைய முற்பட்டனர்.

ஆதியில் தமிழ் எழுத்துக்கள் எவ்விதம் எப்போது உருப்பெற்றன என்பது கூற இயலவில்லை. பிராம்மி எழுத்தே தமிழுக்குரிய எழுத்தாக இருந்தது எனவும் "தமிழி பிராம்மி" எனத் தனியே எழுத்துமுறை இருந்தது எனவும் ஆராய்ச்சியாளர்கள் இன்றும் வாதிடுகின்றனர். இவை யாவும் கி. மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட செய்தியாகும். கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து தமிழ்மொழி வரிவடிவம் எவ்விதம் உருப்பெற்றது என்பதைத் திரு. சா. கணேசன் அவர்கள் இரண்டாம் உலகத் தமிழ் மகாநாட்டில் வெளியிட்ட கையேட்டில் பட்டியவிட்டுக் காட்டியுள்ளார். இவ்வெழுத்துக்கள் யாவும் கல்வெட்டுக்கள் மூலம் அறிந்தவையாகும்.

தமிழ்மொழி வரையப் பயன்பட்டது ஓலைச்சுவடியும் எழுத்தாணியுமே

ஆதி காலத்தில் தமிழ் மொழியை வரிவடிவத்தில் மனிதர் எப்படி, எதில் வரைந்துவந்தனர் என்பது தெளிவாக அறியக்கூடவில்லை. தமிழில் தோன்றியுள்ள பழந்தமிழ்ச் சங்க இலக்கியங்களில் இதுபற்றிய குறிப்புகள் காணப்பெறவில்லை. இதழ், ஏடு, மடல் எனப்பெறும் தாழை, பனை ஓலை போன்றவைகளில் எழுத்தாணி கொண்டு எழுதி வந்திருக்கவேண்டும் என்றே கருதவேண்டியுள்ளது.

அகத்துறையில் மடலூர்தல் என்ற துறை இதற்குச் சான்றாக அமைகின்றது. பனை மட்டைகளால் செய்யப் பெற்ற குதிரையில் கைக்கிளைத் தலைவன் தன் காதலியின் உருவத்தை மடலில் வரைந்து தன் ஒருதலைக் காதலை ஊரார் அறியும்படி எடுத்துக்கொண்டு ஊர்ந்து வருவதாக இத்துறை அமைந்துள்ளது. மொழி எழுத்துவடிவம் பெறுவதற்கு முன்னமேயே எண்ணங்களை மனிதன் சித்திர வாயிலாகப் புலப்படுத்தி வந்தமைக்கும் அதற்கு மடல் (ஏடு) பயன்படுத்தப்பெற்றமைக்கும் சான்றாக இது அமைகின்றது.

பல ஏடுகளில் தங்கள் எண்ணத்தின் சுவடாகிய எழுத்துக்கள் பதிக்கப்பெற்றமையால், ஏட்டுச்சுவடி என இத்தொகுப்புக்கள் கூறப்பெற்றன. பல சுவடிகளைச் சேர்த்துச்

கயிற்றில் கட்டித் தொங்கவிட்டமையால், "தூக்கு" என்ற பெயரும் சுவடிகள் பெற்றன. இவற்றைச் "சுவடித்தூக்கு" என்பர். பண்டைய காலத்தில் காலமெல்லாம் நினைந்து பாதுகாக்கப் பெறவேண்டிய கருத்துக்களையெல்லாம் பாடல் வடிவில் எழுதிச் சுவடிகளில் கட்டித் தூக்கி வந்தமையால் காலப்போக்கில் பாட்டே "தூக்கு" என்றும் கூறப்பெற்றதென ஊகிக்கலாம். பலவகைச் செய்திகளும் ஓலையில் எழுதப்பெற்றுக் கட்டி முடக்கிவைக்கப் பெற்றமையால், இவை "முடங்கல்" எனவும் கூறப்பெற்றன. தூக்கு, முடங்கல் என்ற சொல்லாட்சிகள் சங்க இலக்கியங்களில் பயிலக் காணலாமாயினும் இவை நேரிடையாக ஓலைச்சுவடியைக் குறிப்பனவாக அமையவில்லை.

பலவகைச் செய்திகளும் ஆணைகளும் பனை ஓலையில் வரையப் பெற்றுத் தற்காலக் கோப்புக்கள் போல வரிசையாகக் கயிற்றில் கோத்துச் சுருட்டிவைப்பதால் அவை "சுருணை" எனவும், பல செய்திகள் திரட்டி வைக்கப் பெற்றமையால் "திரட்டு" எனவும் கூறப்பெற்றன. இன்றும் இவ்வழக்கைத் திருவனந்தபுரம் ஆவணக் காப்பகத்தில் காணலாம்.

சங்கப் புலவர்களில் ஒருவராகக் கருதப் பெறுபவர் இடைக்காடனார். இவர் பாடல்கள் அகநானூற்றிலும், புறநானூற்றிலும் தொகுக்கப் பெற்றுள்ளன. அகத்தில் முறையே 139, 194, 274, 284, 304, 374 என்ற எண்ணுள்ள பாடல்களும், புறத்தில் 42ஆம் எண்ணுள்ள பாடலும் இவர் இயற்றியனவாகும். 'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்' என்ற திருவள்ளுவமாலைப் பாடலும் இடைக்காடனார் இயற்றியதாகக் கூறப்பெறுகின்றது. திரு. மு. இராகவையங்கார் பதித்த பெருந்தொகையில் இடைக்காடர் பாடிய ஊசிமுறிப்பாட்டு என மூன்று பாடல்களுள்ளன (பக். 327). இப்பாடலின் பெயரைக் கொண்டே இவை ஊசி (எழுத்தாணி)யால் வரையமுடியாத ஒலிக்குறிப்புக்களைக் கொண்ட பாடல்கள் என்பது விளங்கும். யாழில் இசைக்க இயலாதவகையில் திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் யாழ்முறி யாகும். இடைக்காடர் ஊசிமுறிப் பாடல் பாடியது பற்றிக் கதையும் உள்ளது. இதிலிருந்து சங்க காலத்திலேயே ஏட்டில் எழுத்தாணி கொண்டு எழுதும் பழக்கம் தமிழர்களிடை நிலவி வந்துள்ளதை உணரலாம்.

திருஞானசம்பந்தர் மதுரையில் சமணர்களுடன் அனல்வாதம் புனல்வாதம் செய்தபோது தம் தேவாரப் பாடல் எழுதிய ஓலையை அனலிலிட்டபோது, அது எரியாமலிருந்தது எனவும், வேறொரு பாடலை வைகையிலிட்டபோது அது ஆற்றின்

போக்கை எதிர்த்துச் சென்றதாகவும் வரலாறு கூறுகின்றது. அவ்விதம் எதிர்த்துச் சென்ற ஏடு கரை ஒதுங்கிய இடமே "திருஏடகம்" என்ற தலமாக இன்றும் விளங்குகின்றது. இச்செய்தியை நால்வர் நான்மணி மாலையில்.

"ஏடேறப் பால்குறைந்த தென்றமுவ ரேகமுவின்
காடேறப் புக்கஅருகர்"

எனச் சிவப்பிரகாச சுவாமிகள் நயம்பட நவின்றுள்ளார்.

திருவாரூரில் 10-ஆம் நூற்றாண்டில் ஆண்ட ராஜராஜன் அபயகுலசேகரன் அவையில் சிலர் பாடிய தேவாரப் பாடல்களின் சுவையில் ஈடுபட்டுத் தேவாரம் முழுமையும் தேடிப் பாதுகாக்க வேண்டுமென்ற கருத்துள்ளவனாகித் திருநாரையூர் நம்பி மூலம் பொள்ளாப் பிள்ளையார் திருவருளால் திருமுறை ஏடுகளைத் தேடிக் கண்டுபிடித்தார். அப்படித் தேடி கண்டுபிடித்தபோதே பல சுவடிகள் செல் பற்றி அழிந்துவிட, மீதியிருந்தவற்றைப் பாதுகாத்துப் பின்னர்த் திருமுறைகள் அமைத்ததாகத் திருமுறை கண்ட புராணம் கூறுகிறது.

ஏட்டில் எழுதிப் பிரதி செய்து வரும் பழக்கம் தொன்றுதொட்டு வழங்கிய போதிலும் ஏடுகளை நீண்டகாலம் பாதுகாக்க முடியாமையால் சில முக்கியமான வரலாற்றுச் செய்திகளைச் செப்புத் தகட்டிற் பொறித்துப் பாதுகாத்தனர். பனை ஏட்டில் எழுதும் பழக்கமே மிகுதியாக இருந்தமையால் எழுதப் பயன்படுத்திய செப்புத் தகடுகளையும் செப்பேடுஎன்றே குறிப்பிடல் பழக்கமாகிவிட்டது. சின்னமனூர்ச் செப்பேடு, அன்பிற் செப்பேடு போல்வன இதற்குச் சான்றாகும்.

'பாடம் ஏறினும் ஏடது கைவிடேல்' என்ற பழமொழியும் நம்நாட்டில் புழங்கிவருகிறது. பிற்காலத்தில் அந்தகக் கவி வீரராகவரும்,

"ஏடாயிரம் கோடி எழுதாது தன்மனத்து
எழுதிப் படித்த விரகன்"

எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஏட்டுச் சுவடிகளின் பெருக்கம்

பண்டு தொட்டு ஏட்டில் செய்திகளும், இலக்கிய, இலக்கணம், மருத்துவம் போன்ற நூல்களுமெல்லாம் பிரதிசெய்துவரல் பழக்கமாக இருந்ததாயினும் ஏடுகள் எவ்வளவு

நல்லமுறையில் பாதுகாக்கப் பெற்றாலும், சுமார் 400 ஆண்டுகட்குமேல் அவை இருப்பதில்லை. எனவே, அவ்வப்போது பழைய சுவடிகளைப் பிரதி செய்து மக்கள் பாதுகாத்தனர். மொழியின் வரிவடிவ மாறுதல்களுக்கேற்ப இந்தப் பிரதிகளும் மாறுதலடைந்த எழுத்துக்களாலேயே வரையப் பெற்றன.

சங்க இலக்கியங்களும் பண்டைக் காப்பியங்களும், தொல்காப்பியமும், திருக்குறளும் தோன்றிய காலத் தமிழ் மொழிக்குரிய வடிவில் அவை கிடைக்கப்பெறின், இப்போது அவற்றைப் படித்தறிதல் மிகவும் அரிதாக இருக்கும். அவைபற்றி உணர நமக்குக் கல்வெட்டுக்களே சான்றாக உள்ளன. 'கல்வெட்டில் திருக்குறள்' என்ற நூலின் ஆசிரியர் காலந்தோறும் தோன்றிய கல்வெட்டு எழுத்துமுறைகளைக் கொண்டு அவ்வக் காலங்களில் திருக்குறள் இன்னவாறு இருந்திருக்கும் எனக் கற்பனை செய்து வெளியிட்டுள்ளார். தற்கால வரிவடிவத்தையே அறிந்துள்ள நமக்கு அவை சீன, ஜப்பானிய மொழி போன்று தோன்றுகின்றன.

காலந்தோறும் மாறுபடும் வரிவடிவத்துக்கு ஏற்ப நூல்களை, ஏட்டில் பெயர்த்தெழுதிப் பயின்று மக்கள் பாதுகாத்து வந்தனர். பக்தி இலக்கியங்களின்பாலுள்ள பக்தியால், அவற்றைப் பிரதிசெய்து பூசித்தும் வந்தனர். இவ்வாறு பிரதிசெய்யப்பெற்ற ஏடுகள், காலந்தோறும், இடந்தோறும் உள்ள மாறுதல்களுக்கேற்ப வடிவம் பெற்றுப் பல்கிப் பெருகலாயின.

ஏட்டில் எழுதும் முறை

ஏட்டில் எழுத்தாணியால் எழுத மக்கள் சிலமுறைகளை மேற்கொண்டனர். ஏடுகளில் இருபக்கமும் எழுதுவதால் புள்ளியிடுவதைத் தவிர்த்தனர். எழுத்து வடிவத்தையும் பிறமொழிகள்போலச் செங்குத்துவசமாகவோ, நேர்கோட்டு வசமாகவோ அமைக்காமல் சாய்வு நிலையிலும், வட்டநிலையிலும் அமைத்தனர். இவற்றால் ஏடு முறிவினின்றும் பாதுகாப்புப் பெற்றது. மேலும் எகர, ஒகர, உயிர்மெய் எழுத்துக்களில் குறிலையும் நெடிலையும் ஒன்றாகவே அமைத்தனர். இடையின 'ர'வுக்கும், 'காலு'க்கும் வேறுபாடு உணரமுடியாது. இதுபற்றி டாக்டர் உ. வே. சாமிநாதையர் 'என் சரித்திரத்தில்'.

> "இது கொம்பு, இது சுழி என்று வேறுபிரித்து அறியமுடியாது.
> மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியே இராது. ரகரத்துக்கும்
> காலுக்கும் வேற்றுமை தெரியாது. சாபம் சரபமாகத் தோற்றும்.
> ஓரிடத்தில் "சரடு" என வந்திருந்தது. அந்த வார்த்தையைப்

> பலகாலம் "சாடு" என்றே எண்ணிவந்தேன். "தரன்" என்பதைத் "தான்" என்று நினைத்தேன். இடையின 'ர'கரத்துக்கும், வல்லின 'ற' கரத்துக்கும் பேதம் தெரியாமல் மயங்கின இடங்கள் பல.[13]

என வரைந்துள்ளார்.

பிரதிசெய்வதில் பிழைமலியும் வாய்ப்பு

ஏட்டுச்சுவடிகள் காலந்தோறும் ஏற்பட்ட மொழியின் வரிவடிவ மாற்றம் பெற்றுப் பிரதிசெய்யப் பெற்றுப் பரவிவந்தாலும், இவற்றைப் பிரதி செய்பவர்கள் பல்வேறு நிலையில், பல்வேறு இடங்களில் பிரதிசெய்யும்போது, வடிவ வேறுபாடுகளும் பாடபேதங்களும், பிழைகளும் மலியச் செய்துவிட்டனர்.

15-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் ஒரு இலக்கியம் தோன்றிய காலத்து எழுதப்பெற்ற சுவடிகள் இப்போது கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. சுவடிகள் 300-400 ஆண்டுகளுக்கு மேல் அழியாமலிருப்பதில்லை. அப்படி ஏதேனும் கிடைப்பதாக இருந்தாலும், அவை தோன்றிய காலத்து வரிவடிவம் (எழுத்து வடிவம்) வேறாக இருக்கும். எனவே, காலந்தோறும் ஏற்பட்ட மாறுபாடுகளுக்கேற்பத் தமிழ்நூல்களை ஏடுகளில் பெயர்த்து எழுதியே பாதுகாத்துப் பயின்று வந்தனர். இப்போதுள்ள அச்சுமுறைபோல ஆயிரக்கணக்கில் பிரதி செய்யும் முறை பண்டு இல்லாததால் சுவடிப் பிரதிகள் ஒருசில கல்வி நிலையங்களிலும், மாடாலயங்களிலும் புலவர்களின் வீடுகளிலுமே இருந்தன. பிரதிசெய்தலின் அருமை கருதித் தமிழ் நூல்கள் பலவும் மனப்பாடம் செய்து உள்ளக்கிழியில் எழுதிவைப்பதற்கு வாய்ப்பாகச் செய்யுளிலேயே அமைந்தன. உரையாசிரியர்கள் உரைநடையும், கல்வெட்டுச் செய்திகளும், அரசாணைகளும், மெய்க்கீர்த்திகளும் கூட ஒருவகைச் சந்தத்தில் மனப்பாடம் செய்ய ஏற்றவகையில் அமைந்திருந்தன.

16 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட சுவடிகளே இப்போது நமக்குக் கிடைக்கின்றன. அவற்றின் வரிவடிவத்தில் இப்போது பெரிதும் மாறுபாடுகளில்லை. 18 ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவரும், 20 ஆம் நூற்றாண்டில் பெரியார் ஈ. வே. ரா. வைப் பின்பற்றித் தமிழக அரசும் செய்த சிறிய மாறுபாடுகள்தான் உள்ளன. குறில் நெடில் மாறுதல்களையும் பிற வேறுபாடுகளையும் உணர யாப்பு இலக்கணமும், சந்தமும் மிகவும் இன்றியமையாததாக உள்ளது. இவை தெரியாமல் ஏட்டைப் பிரதிசெய்வது பல பிழைகள் தோன்ற ஏதுவாகின்றது.

ஏட்டில் பிரதி செய்து நூற்களைப் பாதுகாக்கப் பலமுறைகளையும் மக்கள் கையாண்டனர். படிக்கும் மாணாக்கர்கள் தங்கள் தேவைக்கேற்பச் சுவடியில் நூலைப் பெயர்த்தெழுதினர். இம்முறையில் ஒருவர் படிக்கப் பலர் அதைக்கேட்டு எழுதும் பழக்கமும் இருந்தது. இதனால் , ஒரே சமயத்தில் பல பிரதிகள் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது. இந்தக் கேட்டெழுதும் முறையில் எழுதுபவர் கவனக்குறைவாலும், அறியாமையாலும், கேட்கும் சக்திக் கேற்பவும் ஏட்டில் பலவகைப் பிரதிபேதங்களும் பிழைகளும் ஏற்படலாயின.

பக்தி இலக்கியங்களைப் பெயர்த்தெழுதுவதற்குப் பல ஆலயங்களிலும், மடங்களிலும் மானியம் வழங்கியதாகத் தெரிகின்றது. நாஞ்சில் நாட்டிலும், கேரள மாநிலத்தில் பாலக்காட்டைச் சார்ந்த சில பகுதிகளிலும் கம்பராமாயணத்தைப் பெயர்த்தெழுத மானியங்கள் இருந்தன என்று கூறப்பெறுகின்றது. எனவே நூல்களின் தன்மைக்கேற்பக் கூலி கொடுத்து எழுதும் முறையும் இருந்ததை உணரலாம். கூலிக்குப் பிரதிசெய்பவர்கள் சிறந்த மொழிப்புலமை இல்லாதவராகவும் எழுத்துக்கூலியே வயிற்றுப் பிழைப்பாக உள்ளவராகவும் இருந்தமையால் இவ்வளவு சுவடி எழுதினால் இவ்வளவு கூலி என்ற நினைப்பைக் கொண்டு விரைவாகப் பிரதி செய்தமையால் இம் மாதிரிப் பிரதிகளில் பலவகையான பிழைகள் மலிந்திருந்தன. மேலும் வட்டாரங்களுக்கேற்பப் பேச்சின் ஒலி மாறுபாட்டால் அவையும் ஏட்டில் ஏறிவிட்டன. தென்பாண்டி நாட்டில் பேச்சு வழக்கில் 'ழ'கரம், 'ள' கரமாகவே ஒலிக்கப்பெறும். ஆயினும் எழுதும்போது "வெளுத்து" என்பதை "வெழுத்து" எனவும், "வாழி" என்பதை "வாளி" எனவும் சகஜமாக எழுதுவர். "அளித்து" என்ற சொல் "அழித்து" என்றே காணப்பெறும். இந்த முறையை அறியாத பிற இடங்களைச் சேர்ந்தவர்கள் பிழையாகப் பொருள்கூறும் வாய்ப்புகளும் உள்ளன.

பிற்காலத்தில் தமிழ்மொழிப் பயிற்சி குன்றல்

சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் தமிழகத்தில் நிலையான ஆட்சியின்மையால் மொழி வளங்குன்றலாயிற்று. பல குறுநில மன்னர்கள் ஆட்சியாலும், பிறமொழியாளர்கள் செல்வாக்காலும், பின்னர் ஐரோப்பியர் வருகையாலும், தமிழ்மொழி வளர்ச்சி குன்றலாயிற்று. ஆட்சியாளர் விருப்பிற்கேற்பவும், ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்தவும் தேவையான நூல்களே எழுந்தன. பண்டைய தமிழ்நூல்கள் பெயரளவிலேயே அறியப்பெற்றிருந்தன. சிலப்பதிகாரம்

சேரமான் பெருமாள் நாயனார் இயற்றியது எனவும், "சிறப்பதிகாரம்" எனவும் வழங்கப்பெற்றது. "எட்டுத்தொகை" என்ற நூல்கள் இருப்பதையே மக்கள் அறியவில்லை. ஏட்டில் நெடில் 'ஏ' 'எ' எனவே வரையப்பெறுமாதலால் ஏதோ ஏடுகளின் தொகுதி எனக் கருதி எட்டுத் தொகையை "ஏட்டுத் தொகை" எனக் குறிப்பிடநேர்ந்துள்ளது.

பக்தி இலக்கியங்கள் பிற்காலத்தெழுந்த நூற்களில் முற்பட்டவையாயினும் பக்தி காரணமாக ஓதியும், பிரதி செய்து பாதுகாத்தும் வரப்பெற்றன. இவ்விதம் தேவாரம் ஓதுபவர்கள் 'ஓதுவார்' என்றே அழைக்கப்பெற்றனர். எனினும் நாயன்மார்கள் அருளிய தேவார திருவாசகங்கள் வேதத்துக்கும் உபநிடதத்துக்கும் ஒப்பானதெனக் கருதி அவற்றுக்குப் பொருள்காண்பது பிழை எனக்கொண்டு ஏட்டிலுள்ளவாறே ஓதிவருகின்றனர். 5, 6 ஆம் நூற்றாண்டு முதல் வழிவழியாக ஓதி வந்த இந்தப் பாசுரங்களில் பாடபேதங்களும், பிழைகளும் மலிந்துள்ளன. இந்தப் பிழைகள் இவற்றை அருளிய நாயன்மார்களால் ஏற்படவில்லை. அவர்கள் அருளிச் செய்த காலத்து வரிவடிவமே வேறானது. அவர்கள் காலத்து ஏட்டுச்சுவடிகள் 16 ஆம் நூற்றாண்டின் கால அளவில் கூட இருப்பதற்கு வாய்ப்பில்லை. காலங்காலமாக வடிவ மாற்றத்துக்கு ஏற்பப் பெயர்த்தெழுதியவர்கள் கவனக்குறைவாலும், அறியாமையாலும் செய்த பிழைகளையும் பாடங்களையும் அருளாளர் திருவாக்காகக் கருதுவது பிழையாகுமல்லவா?

பாதுகாக்கப் பெற்ற தமிழ்ச்சுவடிகளின் நிலை

தமிழ்ச்சுவடிகள் இவ்வாறு பாதுகாக்கப் பெற்றவை 17 ஆம் நூற்றாண்டிலிருந்து இப்போது கிடைக்கின்றன. இதுவரை கிடைக்கப்பெற்ற தமிழ்ச்சுவடிகளில் பழைமையானது கி. பி. 1611 ஆம் ஆண்டைச் சேர்ந்த "கம்பராமாயணச்" சுவடியாகும். இவை பலவகையைச் சார்ந்தவையாக உள்ளன. இவற்றைக் காவியம், புராணம், இலக்கணம், நிகண்டு, மருத்துவம், சோதிடம், இசை, சிற்றிலக்கியங்கள் (அந்தாதி, ஆற்றுப்படை, உலா, ஊஞ்சல், கலம்பகம், சதகம், தூது, பிள்ளைத்தமிழ், கும்மி, குறவஞ்சி, குளுவ நாடகம்) எனப் பலப்பல வகையாகப் பிரிக்கலாம். இவை நாடெங்கும் பரவலாக உள்ளன. ஐரோப்பிய நாட்டினரின் வியாபாரம், ஆட்சி ஆதிக்கத்தால் பல அரிய சுவடிகள் மேலை நாட்டிற்கும் கடத்தப்பட்டுள்ளன.

சுவடிப் பதிப்பு முயற்சி

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் அச்சிற் பதிப்பிக்கும் முறை வரும் வரையில் ஓலைச்சுவடிகளில் எழுதும் முறை இருந்துவந்தது. இன்றும்கூட நம் நாட்டின் சில பகுதிகளிலும் கேரளத்திலும் ஜாதகம், திருமணப் பரிசம் முதலியவற்றை ஏட்டில் எழுதுவது புனிதமானது என்ற கருத்தில் எழுதிவருகின்றனர். டாக்டர் ஐயரவர்கள் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பயிலும்போது அவர் பாடிய புராணங்களைச் சுவடிகளில் தாம் எழுதியதாக "என் சரித்திரத்"தில் வரைந்துள்ளார். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தாம் பாடிய பாடல்களைத் தம் கையாலேயே எழுதிய சுவடிகள் திருஆமாத்தூர் கௌமார மடாலயத்திலுள்ளன.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அச்சில் தமிழ்ச்சுவடிகளைப் பதிப்பிக்கும் முயற்சியில் இராமாநுசக் கவிராயர். ஆறுமுக நாவலர், விசாகப் பெருமாளையர், ட்ரு துரை, பாவர் துரை, தாமோதரம் பிள்ளை, கோமளேசுவரன் பேட்டை ராசகோபால பிள்ளை, எழும்பூர் வேங்கடாசல முதலியார், சபாபதி முதலியார், உ. வே. சாமிநாதையர் ஆகியோர் ஈடுப்பட்டுத் தமிழ் நூல்கள் பலவற்றைப் அச்சிட்டு வெளியிட்டனர். பண்டைய ஏட்டில் எழுதியிருந்தவற்றை இவர்கள் ஆதியில் பதிப்பித்தனர். முன்னுரை, முகவுரை, பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை எதுவுமே இல்லாமல் ஏட்டிலுள்ளவாறே பதிப்பாகி இருக்கும் பாடலும் உரையும் பாடல் எது ? உரை எது? என்பது பிரித்துணர இயலாதவண்ணம் பதிப்பிக்கப் பெற்றது. இவற்றை முறைப்படுத்தி முகவுரை, ஆய்வுக்குறிப்புக்கள், மேற்கோளகராதி, அரும்பத அகராதிகளுடன் பதிப்புமுறையில் செம்மையைப் புகுத்தியவர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களாவார்.

உ. வே. சா. அவர்கள் பயின்ற காலத்தில் தமிழின்நிலை

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் ஐயரவர்கள் பக்தி இலக்கியங்களும், புராணங்களும், சிற்றிலக்கியங்களும், கம்பராமாயணமும், நன்னூல், தொல்காப்பியம், திருக்குறள் போன்ற பழைய நூல்களுமே பயின்றார். இவை அக்காலத்தில் நடைமுறையில் பயின்றுவந்த நூல்கள் ஆகும். தொல்காப்பியமும் திருக்குறளும் அவற்றின் சிறப்பால் உணரப்பெற்று வழங்கிவந்தன. சீவகசிந்தாமணியை ஒருசில ஜைனர்கள் மட்டும் அறிந்திருந்தனர்.

கி. பி. 1880-இல் தமிழ்த்தாயின் நல்வினைப் பயனால் சேலம் ராமசாமி முதலியாரின் முயற்சியால் சாமிநாதையர் சீவகசிந்தாமணிப் பதிப்பை மேற்கொண்டார். சீவகசிந்தாமணியின் நச்சினார்க்கினியர் உரையைப் படிக்கும்போதுதான் நச்சினார்க்கினியர் காட்டியுள்ள மேற்கோள்களிலிருந்து பழங்காலத் தமிழ்நூல்கள் பல உருவம் அறியாத நிலையில் மறைந்து கிடப்பதை உணர்ந்து அவற்றைத் தேடித் தொகுத்து வெளியிடும் பணியைத் தம் வாழ்க்கைக் குறிக்கோளாக மேற்கொண்டார். அவர் தேடித் தொகுத்த சுவடிகள் 1400 ஆகும். மேலும் சுவடி உரிமையாளர்கள் பெற்றுப் பிரதிசெய்த காகிதப்பிரதிகள் 74 ஆகும். இந்தத் தொகுப்பிலுள்ளவர் 300 நூல்களுள்ளன. ஐயரவர்கள் தம் 60 ஆண்டுப் பதிப்புப் பணியில் சுவடியினின்றும் பதிப்பித்த நூல்கள் 74 ஆகும். அவருக்குப் பிறகு அவர் பேராவியலும் அவர் சுவடிகளைத் தன்னகத்தே கொண்ட நூல்நிலையம் பதிப்பித்துள்ள நூல்கள் சுமார் ஐம்பதாகும். அவர் தொகுப்பில் மட்டும் இன்னும் பதிப்பிக்கப் பெற உள்ள நூல்கள் சுமார் ஆயிரம் உள்ளன.

சுவடிப் பயிற்சியில் தளர்ச்சி

டாக்டர் ஐயரவர்களுக்குப் பிறகு ஏட்டுச் சுவடிகளைப் பதிப்பிக்கும் முயற்சியைப் பொறுப்புடன் மேற்கொள்ளவில்லை (ஸ்ரீ வையாபுரிப்பிள்ளையவர்கள் ஐயரவர்கள் காலத்துக்குப் பின்னர் ஒருசில ஆண்டுகளே வாழ்ந்தமையாலும், சில நூல்களே வெளியிட்டமையாலும் இவ்விதம் கூற நேர்ந்தது)

அச்சு முறையில் தெளிவான அமைப்பில் நூல்கள் பல வெளிவந்தபிறகு படிப்பதற்குக் கஷ்டமான சிறிய எழுத்துக்களில் புள்ளியின்றி கொம்பு, சுழி மாறுபாடின்றி ஓலைச்சுவடியில் உள்ள நூல்களைப் படிக்க யாரும் அக்கறை கொள்ளவில்லை. சுவடிகளைப் படிப்பதே ஒரு அரிய கலையாகிவிட்டது. ஒரு சிலரே சுவடிக் கலையில் வல்லுநர் எனக் கூறுமளவுக்குத் தமிழின் நிலை தாழ்ந்துவிட்டது. இதன் காரணமாக அச்சில் வராத தமிழ்ச் சுவடிகளைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஒருசிலரும் சுவடி படிக்கும் ஆற்றல் இன்மையால் நூலின் பொருளை உணராதுபிழைமலியப் பதித்து வெளியிடலாயினர். 'பச்சை நரம்போடி' என்ற பகுதி 'பச்சை நாமப்பொடி' எனவும், 'கரதலத்தான்' என்ற பகுதி 'காதலத்தான்' எனவும், 'ஸ்ரீகோதை கேரளவன்மன்' என்ற பெயர் "ஸ்ரீகோதைகொள்வன்மன்" எனவும், "கோதாவிரி" "சேர்தாவிரி" எனவும் பதிப்பில் வந்துள்ளன. ஏட்டில் அப்படியே இருந்தாலாவது நூலின் சரியான பாடத்தை

ஊகிக்கலாம். தவறான வடிவில் அச்சுப் பதிப்பில் வந்துவிட்டால், பின்னர் சரியான பாடம் காண்பதே அரிதாகிவிடும்.

ஏட்டுச் சுவடிகளின் சிதைவு

ஏட்டுச் சுவடிகளில் தமிழ் நூற்கள் வழிவழியாகக் காலந்தோறும் ஏற்பட்ட வடிவ மாற்றங்களுக்கேற்பப் பிரதிசெய்யப் பெற்றுப் பாதுகாத்து வந்தது ஒருபுறமிருக்க, மேலை நாட்டினர் வியாபாரத்தில் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி மக்களை அடிமைப்படுத்தி ஆண்ட காலத்தில் நாட்டில் குழப்பங்கள் மிகுந்த கல்வி வளர்ச்சியும் மொழி வளர்ச்சியும் வெகுவாகச் சரிந்துவிட்டன. அன்னிய ஆட்சியில் ஆளுபவர்களுக்கு வேண்டியவர்களாக அவர்கள் கூறியவிதம் எல்லாம் ஆளுபவர்களே செல்வாக்குப் பெற்றமையால் மக்கள் தமிழ்மொழி பயில்வதையே மறந்தனர். தாய் மொழியிற் பேசுவது அநாகரிகம் என்றும் கருதினர். இன்றைக்கும் பலர் அந்த எண்ணம் கொண்டுள்ளனர்.

ஆட்சியிலிருந்த ஆங்கிலேயரும் தங்கள் கல்வித் திட்டத்தில் ஆங்கிலத்திற்கு முதலிடம் அளித்துப் பிராந்திய மொழிகளைப் புறக்கணித்தனர். எட்டாம் வகுப்புக்குமேல் தாய் மொழிக்கு இடமில்லை. இந்த நிலையில் தமிழ், தமிழர் அறியாத மொழியாகித் தமிழர்களே தமிழ்ச் சுவடிகளைச் சுமையெனக் கருதி அழிக்கவும் நேரிட்டது. ஐயரவர்கள் "என் சரித்திரத்"தில் குறிப்பிடும் இரண்டு நிகழ்ச்சிகளைத் தமிழர் எவ்விதம் தமிழை (சுவடிகளை) அனலிலும், புனலிலுமிட்டு அழித்தனர் என்பதற்குச் சான்றாகக் காணலாம்.

தற்போது சுவடிகள் உள்ள இடங்கள்

இவ்விதம் அனலிலும் புனலிலும் அழிந்தவை போக, நம் நாட்டில் மடாலயங்களிலும் புலவர் பரம்பரையினர் வீடுகளிலும், சுவடி நூலகங்களிலும் பாதுகாக்கப் பெற்ற தமிழ்ச் சுவடிகள் இப்போது அடியிற் குறிப்பிட்ட இடங்களிலுள்ளன. அவை அண்மைக்காலம் வரை சரியாகப் பாதுகாக்கப் பெறாமலுள்ளன. பல இடங்களில் விளக்க அட்டவணைகூட இல்லை.

1. சென்னை

அ. பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நிலையம், சென்னை.
ஆ. உ. வே. சா. நூல்நிலையம், திருவான்மியூர்.
இ. பிரமஞானசபை நூலகம், அடையாறு.
ஈ. தொல்பொருள் ஆய்வுத்துறை - சென்னை 28.

உ. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113.
ஊ. சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், சென்னை
எ. ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை 41.

2. காஞ்சிபுரம்

அ. காமகோடிபீடம் ஸ்ரீசங்கராச்சார்யர் மடம்

3.பாண்டிச்சேரி

அ. பிரஞ்சிந்திய கலைக்கழகம்

4.தஞ்சை

அ. சரஸ்வதி மகால் நூல்நிலையம்
ஆ. தமிழ்ப்பல்கலைக் கழகம்
இ. தருமபுர ஆதீனம், மயிலாடுதுறை
ஈ. ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள்
உ. திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

5. மதுரை

அ. மதுரைத் தமிழ்ச் சங்கம்
ஆ.மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

6. கோவை

சாந்தலிங்க அடிகளார் திருமடம், பேரூர்

7.பெரியார் மாவட்டம்

கலைமகள் கல்வி நிலையம் - ஈரோடு

8. கேரள மாநிலம்

அ. கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த் திசைச் சுவடிநிலையம், காரியவட்டம், திருவனந்தபுரம்
ஆ.கள்ளிக்கோட்டை சர்வகலாசாலை- கோழிக்கோடு
இ. சாகித்ய அகாதமி - திருச்சூர்

9. ஆந்திர மாநிலம்

அ. ஆந்திரப் பல்கலைக்கழகம் - விசாகப்பட்டினம்
ஆ. உஸ்மானியா பல்கலைக்கழகம் -ஹைதராபாத்
இ. திருவேங்கடவன் பல்கலைக்கழகம் - திருப்பதி

10. மேற்கு வங்கம்

தேசிய நூலகம் - கல்கத்தா
மேலே குறிப்பிட்ட இடங்களில் சுமார் இருபத்தையாயிரத்துக்கு

மேல் தமிழ்ச் சுவடிகள் உள்ளன. இவற்றில் பல இடங்களிலுள்ள தமிழ்ச் சுவடிகளுக்கு அட்டவணையே இல்லை. ஆந்திரத்திலுள்ள தமிழ்ச் சுவடிகள் தெலுங்கு வடிவிலுள்ளன. கேரளத்தில் தமிழ்ச் சுவடிகளேயன்றி மலையாளச் சுவடிகளுமுள்ளன. மலையாள எழுத்தில் பல தமிழ்ச் சுவடிகளுமுள்ளன. இவற்றுக்குச் சரியான அட்டவணை இல்லை.

மேலைநாடுகளில் தமிழ்ச் சுவடிகள்

ஐரோப்பிய மேலைநாட்டினர் இங்கு 16 ஆம் நூற்றாண்டில் வியாபாரம் செய்ய வந்து ஆட்சியைப் பிடித்து ஆண்ட காலகட்டங்களில், தமிழ் மொழியின் சிறப்பையுணர்ந்து தங்கள் ஆதிக்கமிருந்த காலத்தில் போர்த்துக்கீசியர்களும், பிரஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும், அவர்கள் நேசநாட்டினரான பிறரும் சுவடிகள் பலவற்றைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றுவிட்டனர். அண்மைக்காலம் வரையில் அங்குள்ள தமிழ்ச்சுவடிகள் பற்றிய விபரம் தெரியவில்லை. அவற்றுள் முக்கியமாகப் பாரிசு தேசிய நூலகம், இங்கிலாந்தில் பிரிட்டிஷ் கவுன்சில் நூலகம், இந்தியா ஆபீசு நூலகம் என்ற இடங்களில் பல சுவடிகள் உள்ளன. அவற்றுக்கெல்லாம் விளக்கமான அட்டவணை இல்லை. நூற்பெயர் மட்டும் குறிக்கப்பெற்ற லிஸ்டே (*list*) உள்ளன.

1960 ஆம் ஆண்டில் நம் நாட்டிலிருந்து பேராசிரியர் அ.கிருஷ்ணமூர்த்தி என்பவர் மேலை நாட்டில் பல இடங்களுக்கும் சென்று தமிழ்ச் சுவடிகளுக்கு விளக்கமான அட்டவணை தயாரித்துத் தமிழக அரசிடம் 5 தொகுதிகள் சமர்ப்பித்துள்ளார். அந்த அட்டவணைத் தொகுதிகள் பற்றிய விவரம் 1982 ஆம் ஆண்டுவரை ஒன்றும் தெரியாமலிருந்தது. இப்பொழுது அவற்றில் நான்கு தொகுதிகள் சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறை நூலகத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பெற்றது. ஒரு தொகுதி காணாமற் போய்விட்டது. இந்த நான்கு தொகுதிகளையும் பரிசீலித்ததில் கிரேட் பிரிட்டனில் 12 இடங்களிலும் மற்றைய ஐரோப்பிய நாடுகளில் 22 நூலகங்களிலுமுள்ள சுவடிகளின் விவரம் அறிய வந்துள்ளது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அரையாண்டு சஞ்சிகை 'தமிழ் இயல்' 18 ஆவது இதழின் கிரிகோரி ஜேம்ஸ் என்பார் 'ஐரோப்பிய நாட்டில் தமிழ்ச்சுவடிகள்' என்ற கட்டுரையில் ஐரோப்பாவில் 88 இடங்களிலுள்ள தமிழ்ச்சுவடிகள் பற்றிய விவரங்கள் தந்துள்ளார். இவற்றில் பல இடங்களில் தமிழ்ச்சுவடிகள் இருக்கலாமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலண்டன் "தமிழ்ச் சங்க மலர்" (1975-76) இதழில் மேற்கு ஜெர்மனியிலுள்ள பேராசிரியர் தாமோதரன் அவர்கள் 'தமிழ்ச் சுவடிகளின் தலைவிதி' என்ற கட்டுரையில் மேலை நாட்டிலிருந்து தமிழகம் வரும் ஐரோப்பியர்கள் ஏட்டுச்சுவடிகளின் பழைமை, எழுத்தாணியால் ஏட்டில் எழுதியுள்ளதின் அருமை ஆகிய இவற்றின் சிறப்பில் ஈடுபட்டு அரும்பொருட்காட்சிப் பொருளாகச் சுவடிகளை வாங்கித் தங்கள் நாட்டிற்குக் கடத்திச் செல்வதாக எச்சரித்துள்ளார். அப்படி, அவர்கள் கடத்திச் செல்லும் சுவடிகளில் உள்ள செய்தி பற்றி அவர்களுக்கும் தெரியாது. தெரிந்தவர்களைப் பார்க்கவும் அனுமதிப்பதில்லையாம்.

"Tamil culture" தொகுதி 3-4 அக்டோபர் 1954 இதழில் தனிநாயக அடிகள் 'ஐரோப்பிய நூலகங்களில் தமிழ்ச்சுவடிகள்" என்ற கட்டுரையில் போர்த்துகல், ஸ்பெயின், இத்தாலி நாட்டிலுள்ள சுவடிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். வியாபார நோக்கமும், மதப் பிரச்சார நோக்கமும் கொண்ட இந் நாட்டினர் பெரும்பாலும் கிறிஸ்துவ மதத் தொடர்பான தமிழ்ச்சுவடிகளை எடுத்துச் சென்றுள்ளனரெனக் குறிப்பிடுகின்றார். மேலும், இவற்றுடன் பல சுவடிகள் இன்னதென அறியாத நிலையில் இருப்பதாகவும், இவை முற்றும் தக்கவர்களைக் கொண்டு அட்டவணை செய்யப்பெறல் வேண்டுமென்றும் வரைந்துள்ளார்.

அமெரிக்க நாட்டிலும் சில தமிழ்ச்சுவடிகள் இருப்பதாகப் பேராசிரியர் வ. அய். சுப்பிரமணியன், முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம் எழுதியுள்ளார்.

'சீவக சிந்தாமணி - முதல் புத்தகம் நாமகள் இலம்பகம்' என்ற நூலை 1867 இல் பதிப்பித்த ரெவ. எச். பாவர் என்பவர் அந்த நூலின் முன்னுரையில், தாம் சீவக சிந்தாமணி நூல் முழுவதையும் அச்சிற் பதிப்பிக்கும் நோக்கத்துடன் பிரதி செய்து குறிப்புகள் எழுதி வைத்திருந்ததாகவும், பின்னர் அப்பிரதியை அமெரிக்க மிஷனைச் சார்ந்த 'ஸ்டேர்' என்ற பாதிரியாரிடம் பதிப்பிக்குமாறு அளித்ததாகவும், அவர் அந்தப் பிரதியுடன் அமெரிக்கா சென்றுவிட்டதாகவும், ஒருகால் அப்பிரதி அமெரிக்க நூலகங்களில் எங்காவது இருக்கலாமெனவும் குறிப்பிட்டுள்ளார். 1867 ஆம் ஆண்டிற்கு முன்னரே சீவகசிந்தாமணிப் பிரதி ஒன்று அமெரிக்கா சென்றுவிட்ட செய்தி இதன்மூலம் தெரியவருகிறது. டாக்டர் ஐயரவர்களின் சீவக சிந்தாமணி ஆய்வில் அகப்படாத பிரதி இது.

கீழைநாடுகளில் தமிழ்ச் சுவடிகள்

கீழை நாடுகளிலுள்ள தமிழ்ச் சுவடிகள் பற்றிய செய்தி ஒன்றுமே தெரியவில்லை. ஐரோப்பியர் வருவதற்கு முன்பே பல நூற்றாண்டு காலமாகத் தமிழ்நாட்டுடன் அரசியல், வாணிபம், கலாசாரம் முதலிய தொடர்பு கொண்டவை கீழைநாடுகளே. கீழைநாட்டிற்குப் புத்தமதம் தமிழகத்தின் வழியாகவே சென்றுள்ளது. இன்றும் தாய்லாந்தில் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் பொருள்தெரியாமல் அவர்கள் மதச் சடங்குகளில் ஓதப்பெறுவதாகவும் அறியமுடிகின்றது. எனவே இந்நாடுகளில் பல தமிழ்ச்சுவடிகள் இருப்பதற்கு வாய்ப்புண்டு.

அண்மையில் ஒரு நண்பர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கு அளித்த தமிழ்ச்சுவடியின் இறுதியில் '1853-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி வெள்ளிக்கிழமை சிங்கப்பூரில் எழுதியது' என்ற குறிப்பு காணப்படுகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சுவடியியல் பயிற்சி பெற்ற மாணாக்கர் ஒருவர், இரண்டு சுவடிகளின் நிழற்படப் பிரதியைப் பிரதி செய்து, அதை நிழற்படப் பிரதியுடன் ஒப்புநோக்கித் தரவேண்டுமென வேண்டினார். அவை 'வர்மக்கலை' பற்றிய நூல்கள். ஜப்பான் நாட்டிலுள்ள ஏட்டுச் சுவடியிலிருந்து நிழற்படப் பிரதியெடுக்கப் பெற்றதாகக் கூறினார்.

இச்செய்திகளால், பல தமிழ்ச் சுவடிகள் கீழை நாடுகளிலும் இருக்கலாமென்ற ஊகம் வலுப்பெறுகின்றது.

தமிழ்ச்சுவடிகளின் வெளிவராத நிலை

நம் நாட்டிலுள்ள பல நூலகங்களிலிருந்தும் சுவடிகளின் பெயர் மட்டும் அறிய வந்த சுவடிகள் சுமார் இருபதாயிரமாகும். இவற்றை, ஒருவாறாக வகைப்படுத்தியதில் சுமாராக இவை கீழே குறிப்பிட்ட சதவீதத்திலிருப்பதாக உணரப்பெற்றது.

மருத்துவம்60 சதவீதம்
சோதிடம் 10 சதவீதம்
சமயம், பக்தி 10 சதவீதம்
கலை, இலக்கியம் 10 சதவீதம்
வரலாறு 5 சதவீதம்
இலக்கணம் 5 சதவீதம்

இன்னும் கணக்கில் வராத தமிழ்ச்சுவடிகளைத் தேடிப்பிடித்து ஆராய்ந்தால், இந்தப் புள்ளிவிவரம் மாறுபடலாம்.

டாக்டர் உ.வே.சா. அவர்கள் தம் அறுபதாண்டுப் பதிப்புப் பணியில் சுவடிகளினின்றும் பதிப்பித்த நூல்கள் 74 என்பதை அறியும்போது, இன்னும் வெளிவரவேண்டிய சுவடிகள் சுமார் 20,000 என்பதை எண்ணுகையில் உ.வே.சா. போன்ற தமிழ் அறிஞர்கள் எத்தனை பேர், எத்தனைக் காலம் உழைக்கவேண்டும் என்பது மலைப்பைத் தருகின்றது.

தற்போது அச்சுப்பிரதிகளையே படித்துப் பழகிய தமிழறிஞர்களுக்கு ஏட்டுச் சுவடி படிக்கத் தெரியவில்லை. ஆர்வங்காரணமாகத், தமிழ்ச்சுவடிகளைப் பதிப்பிக்கும் சில அறிஞர்களும், சுவடிப் பயிற்சியின்மையால், பிழைபடப் பதித்துவிடுகின்றனர். எனவே, இப்போதைய தலைமுறையில் தமிழைப் பயில்பவர்களுக்குச் சுவடியில் படிக்கும் பயிற்சியும், பிரதிசெய்வதில் பயிற்சியும் அளித்தல் அவசியமாகின்றது. சுவடிப் பயிற்சி அளிப்பதற்கு முறையான நெறிமுறைகள் (Methodology) ஏற்படவில்லை. யானறிந்த வரையில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சுவடியியல் பயிற்சி துவங்கியபோது, சில நெறிமுறைகள் வகுக்கப்பெற்றன. அவற்றை இங்கு எடுத்துக் கூறுகிறேன். இதையே முடிந்த முடிபென்று கொள்ளாமல் பயிற்சி முறை வளர வளரப் புதிய நெறிமுறைகள் உருவாகும்.

இப்போது கிடைக்கும் ஏடுகள் எல்லாம் கி.பி. 1600 க்குப் பிற்பட்டவையாகும். பழைய நூல்கள் எல்லாம், எழுத்து மாற்றத்துக்கேற்பப் பிரதி செய்யப்பெற்றவை. பிரதி செய்தவர்கள் எல்லாரும் சிறந்த அறிஞர்கள் எனக் கூற வியலாது. கூலிக்கெழுதியவர்களுமுண்டு. ஏடெழுதும் முறையில் ஒற்றுக்குப் புள்ளிகள் இராது. குறில்நெடில் கொம்பு வித்தியாசமிராது. 'எ' 'ஒ' நெடில்-குறில் வேற்றுமையிராது. 'ா' கால் 'ர' உயிர்மெய், 'ர்' ஒற்று மாறுபாடின்றியிருக்கும். 1/2 புள்ளி, 1/4 புள்ளி, சீர் முதலிய குறியீடுகளின்றி ஏட்டில் ஒரே தொடராக எழுதப் பெற்றிருக்கும். இவற்றைப் பொருளுணர்ந்து பிரதி செய்ய வேண்டும்.

நல்லவேளையாகப் பண்டைத் தமிழ் நூல்கள் எல்லாம் எளிதில் மனப்பாடம் செய்யக் கூடிய வகையில் செய்யுள் அமைப்பிலேயே உள்ளன. எனவே, ஏட்டைப் பிரதி செய்பவருக்கு யாப்பிலக்கணம், பாட்டியல் நூல்களில் பயிற்சி மிக மிக அவசியம்.

பாட்டியல் பயிற்சியால், நூல் எந்த யாப்பிலமைந்தது என எளிதில் உணரலாம். யாப்பிலக்கணத்தின்மூலம் எதுகை, மோனை,

சீர், தளை முதலியவற்றை யறிந்து, ஏட்டில் எழுதப்பெற்ற பாடலின் வடிவத்தைச் செம்மையாகக் காணலாம். மேலும் ஏட்டில் எழுதுவோர் கவனக் குறைவால் ஏற்படும் எழுத்துமிகை, எழுத்துக் குறை, புள்ளி மயக்கம், எழுத்து மயக்கம், குறில் நெடில் மயக்கம், சந்தி மயக்கம், ஒருமை பன்மை ஆகிய மயக்கங்களை யாப்பிலக்கணப் பயிற்சி மூலம் பொருளுணர்ந்து பிரதி செய்யலாம். மேலும் சில வட்டாரங்கள் (தென்பாண்டி நாட்டில்) 'ழ' கரம் 'ள' கரமாகவும், 'ள' கரம் 'ழ' கரமாகவும் தாராளமாக மாற்றியெழுதப் பெற்று மயங்கச் செய்யும். 'ல்' 'ள்' என்ற மெய்களோடு வல்லினம் புணரும்போது, 'ல்', 'ற்' என்றும், 'ள்' 'ட்' என்றும் மாறும். ஆனால் தென்பாண்டி நாட்டில் அப்படி மாற்றாமலேயே இரண்டு ஒற்றுக்களைப் போட்டு எழுதுவது பல ஏடுகளிலும் காணப்பெறுகின்றது. கல் தூண் - கற்றூண் என எழுதப்பெறாமல் 'கல்த்தூண்' எனவும், நாள் குறிப்பு- 'நாட்குறிப்பு' என இல்லாமல் "நாள்க்குறிப்பு" எனவும் காணப்பெறும். மேலும் ஏட்டில் எழுதுவோர், இடச் சிக்கனம் கருதி 'மூர்த்தி' என்பதை "மூற்தி" எனவும், "கார்த்திகை" யை "காற்திகை" எனவும் எழுதுவதுமுண்டு. இவற்றையுணர்ந்து பிரதிசெய்ய வேண்டும். இதற்குச் சுவடிப் பயிற்சி மிகவும் அவசியம்.

சுவடிப் பயிற்சியில் ஈடுபடுவோர் மொழியில் சிறந்த புலமை பெற வேண்டும். ஆதலால் அவர்களுக்கு,

1. மொழி வரலாறு
2. எழுத்து வரலாறு
3. சுவடியில் எழுதிய முறை
4. யாப்பியல்
5. பாட்டியல்
6. செயல்முறை

முதலியவற்றின் கடினமான பயிற்சி அவசியம். நாடோறும் சில ஏடுகளைப் பிரதிசெய்து, பிரதி செய்யும்போது ஏற்படும் பிழைகளைக் களையும் முறைகளை அறியவேண்டும். இயல்பாகப் பயிற்சியின்மையால் ஏற்படும் பிழைகள், அவற்றைக் களையும் முறைகள் சில உதாரணங்களால் அடியில் விளக்கப்பெற்றுள்ளன:-

"மெய்தவிரும் கழற்குடம்போல் முறையன்றிப் பிறழ்தல்
மிகும்முடத்தெங் காய்முயன்றோர்க் கன்றி அல்லோர்க்கீதல்
செய்பருத்திக் குண்டிகைபோல் கோளல் கொடைமுட்டுறுதல்
செறியுமடற் பனையெனத்தா னேகொடுத்தால் அன்றி
எய்து அடுத்தோர்க்கு ஈயாமை உடைத்தாகி யெவைக்கும்
இச்சித்தல் அழுக்காறு மனவார்சங் கொடுமை

இப்பாடல் "சுவாமி நாதம்" என்ற இலக்கண நூலின் ஐந்தாம் பாடலாகும்.

இந்நூல், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1975 இல் டாக்டர் செ.வை. சண்முகம் அவர்களால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. பதிப்பில் உள்ளபடியே மேலே எழுதப் பெற்றுள்ளது. இப்பாடல் மூன்று காய்ச்சீரும், ஒரு மாச்சீரும் ஆக 4 சீர் மீட்டும் மோனையுடன் மடங்கி எண் சீராக வந்த விருத்தமாகும். சுவடியைப் பிரதி செய்யும் பயிற்சியின்மையாற் பிரதி செய்வோர் பிழைபடப் பிரதி செய்துள்ளார். முதலடி சரியாகப் பிரதி செய்யப்பட்டுள்ளது. விருத்தப் பாடல்களின் அடி அளவொத்து வரவேண்டும். இரண்டாமடி பிரதியிலுள்ளபடி பார்த்தால் அளவொத்து வரவில்லை.

3 - காய்ச்சீர், 1 மாச்சீராக இல்லாமல் "செய்பருத்திக் குண்டிகைபோற் கோளல் கொடை முட்டுறுதல்" என உள்ளது. மூன்றாம் சீர் "கோளல்கொடை" எனவும், நான்காம் சீர் "முட்டுறுதல்" எனவும் கனிச்சீராகவும், காய்ச்சீராகவும், பிரதி செய்யப்பெற்றுளது. இது பிழை. 3 ஆம் சீர் காய்ச்சீராகவும், 4 ஆம் சீர் மாச்சீராகவும் இருத்தல் வேண்டும். யாப்பிலக்கண அளவு கொண்டு கவனிப்பின் பிழை புலனாகும். படிக்கும்போதே ஓசை நெருடும் 3 ஆம் சீரில் "கோளல் கொடை" எனக் கொண்டது பிழையாகும். ஏட்டில் குறில்நெடில் கொம்பு வித்தியாசமிராது.

"கொளல்" "கோளல்" இரண்டும் கொளலாகவே காட்சியளிக்கும். இப்பகுதியில் நெடிலாக்காமல், "கொளல்" எனக் கொளின், "கொளல்கொடை" என விளச்சீராகும். இந்த விளச்சீருடன் 4 - ஆம் சீரில் "முட்டுறுதல்" என்ற மூவகைச் சீரிலுள்ள முதலசை 'முட்' என்பதைச் சேர்த்து, "கொளல்கொடைமுட்" எனக் காய்ச்சீராக்கினால் மூன்று சீர்களும் காய்ச்சீராகும். நான்காம், சீரில் மீதமுள்ள 'டுறுதல்' புளிமாவாகிப் பாவடிவளவுக்கேற்ப அடி

"செய்பருத்திக் குண்டிகைபோற் கொளல்கொடைமுட் டுறுதல்"
என அமையும். இஃது குறில்நெடில் மயக்கால் வந்த பிழையாகும்.

மூன்றாமடி அளவொத்துள்ளது. நான்காமடியில் சீர்கள் சரிவரப் பிரிக்க இயலாமல் பிரதி செய்யப்பெற்று 7 சீர்களே காட்டப் பெற்றுள்ளன.

"ஐயுறல்வீண் படிப்போதன்ற குருவுக்குள தாமக் குணங்கள்
இன்மையுமே உள்ளவன் துற்குருவே"

இரண்டாம்சீர் - "படிப்போதன்ற குருவுக்குள்"
நாலாம் சீர்- "தாமக்குணங்கள்"
4 அசை, கனிச்சீர், 4 அசைச்சீர்களாக அளவொத்து வரவில்லை. மேலும், "இன்மையுமே உள்ளவன் துற்குருவே" என்ற பிற்பகுதி மோனை பெறாமல் அளவொத்து வராமலுள்ளது. உரையைக் கொண்டு சரியான வடிவத்தைக் காணமுயலல் வேண்டும்.

வீண்படிப்பு, நற்குருவுக்குள அக்குணங்கள் இன்மை என உரை காணப்பெறுகின்றது. எனவே, இவ்வடியில்,

"ஐயுறல்வீண் படிப்போதல் நற்குருவுக் குளதாம்"

எனப் படிப்போதன்ற என்ற பகுதியில் "படிப்போதனற்" எனப் புள்ளியை மாற்றியமைத்துப் படிப்போத இரண்டாம் சீராகி "குளதாம்" என்பதை 4 ஆம் சீராகக் கொண்டு, அக்குணங்கள் 5-ஆம் சீராகின் 4ஆம் அடி எட்டுச் சீருடன் மோனை பெற்று,

"ஐயுறல்வீண் படிப்போத னற்குருவுக் குளதாம்
அக்குணங்கள் இன்மையுமே உள்ளவன்துர்க் குருவே"

எனச் சரியாகவமையும். இவ்வடியில் "படிப்போதனற்" என்பதில் புள்ளி மயங்கிப் "படிப்போதன்ற" என வந்தது பிழையாகும். மேலும் "துர்க்குரு" என்பது ஏடெழுதுவோர் சுருக்கமுறையைக் கையாண்டு "துற்குரு" என எழுதியுள்ளனர். இதுவும் "துர்க்குரு" எனப் பிரதிசெய்யப் பெறவேண்டும். இந்த ஒரு பாடலின் எடுத்துகாட்டின் மூலம், குறில் நெடில் மயக்கம், புள்ளி மயக்கம், பாடலமைப்பு உணர்த்தப் பெற்றது. இனி எழுத்துமிகை, எழுத்துக் குறைக்குரிய எடுத்துக்காட்டு வருகிறது.

"மங்கையர்க்கரசி வெண்பா" என்ற நூல் அண்மையில் மதிப்புரைக்காக வரப்பெற்றது. நூலைப் பதிப்பித்தவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து டாக்டர் சு. சாமி ஐயா ஆவார். அந்த நூலில் ஒரு பாடலில்,

"வில்லா வளையாமல் வில்வளைக்கு மேருவுக்கு
வில்லார்ந்த வாகுவலையம் மேலி யிட்டான்"

என உள்ளது. இந்த நூல் வெண்பா நூலாதலால், வெண்பாவிலக்கணம் பொருந்தியுள்ளதா? எனக் காணல் வேண்டும். அப்படிக் காண்கையில் "வில்லார்ந்த வாகுவலையம்" என்ற இரண்டாமடி தளை கெடுகின்றது. வெண்பாவில் 4 அசைச்சீர், கனிச்சீர் வராது.

"வாகுவலையம்" - என்றால் 4 - அசை
"வாகுவ லையம்" - எனில் கனிச்சீர்

எனவே, இரண்டாமடி இரண்டாம் சீர் காய்ச்சீர் அல்லது விளச்சீராக வேண்டும். "வில்லார்ந்த" என்பதில் "ஆர்ந்த" என்ற எழுத்துக்கள் மிகை. இவற்றை நீக்கி, "வில்வா குவலையம்" எனப் பதிக்க வேண்டும். "வில்வாகு வலையம்" - வில்லும் அம்பறாத்தூணியும் என்ற உம்மைத்தொகை. இதே நூலில்,

"தனை - நயந்து நின்றான் தாதையும்தன் பாவை
தனைநயந்து முன்னீந்தான் சார்ந்து"

"தனை நயந்து-நின்றான் தாதையும்" என்பது பிழை. வெண்பாவில் மாமுன் - நிரையும், காய்முன்-நேரும் வரலே விதி. இங்கு "நின்றான் தாதையும்" என்பதில் மாமுன் நேர்வந்து தளை பிறழ்ந்தது. இறுதியடி, "தனைநயந்து முன்னீந்தான்" என்பதற்கேற்பத் "தனைநயந்து முன்நின்றான்" எனவமையின் தளை கெடாது. இதிற் பிரதிசெய்பவர் "முன்" என்ற சீரை விட்டுவிட்டார். யாப்பிலக்கண உதவிகொண்டு இம்மாதிரிப் பிழைகள் களையப் பெறவேண்டும்.

புள்ளி மயக்கம், கால் மயக்கம், குறில்நெடில்

"அமுத ரஸ மஞ்சரி" என்ற நூலில் சூலுற்ற ஒரு பெண்ணின் உடலில் பசலை படர்ந்ததைக் கூறுமிடத்து, "பச்சை நாமப் பொடி படர்ந்து கொண்ட" எனப் பதிப்பாகியுள்ளது. இது "பச்சை நரம்போடிப் படர்ந்து கொண்ட" எனவமைதல் வேண்டும்.

"நரம்" என்பது "நாம" எனவும், "போடி" என்பது "பொடி" எனவும் தவறாகக் கொள்ளப்பெற்றது.

"ஆழிவளைக் கரதலத்தான்" என்ற பகுதி "ா" என்ற காலுக்கும், 'ர' என்ற இடையின உயிர்மெய்க்கும் வேறுபாடறியாமையால் "ஆழிவளைக் காதலத்தான்" எனப் பிரதிசெய்யப்பெற்றது.

கல்வெட்டெழுத்துக்களிலும் இதுபோன்ற குழப்பமுண்டு. "ஸ்ரீகொதைகொளவனமன என்ற பகுதி - ஸ்ரீகொதை கொள்வன்மன்" எனப் பேர்த்தெழுதப் பெற்றுள்ளது. ஆனால் இது உண்மையில் ஸ்ரீகோதை கேரளவன்மனாகும்.

ஏட்டில் பிரதிசெய்கையில் இவ்விதம் ஏற்படும் குறைகளை யாப்பின் உதவியுடன் பொருளும் கண்டு சீர்திருத்த வேண்டும்.

இனிச் சுவடிப் பதிப்பு நெறிமுறை பற்றிக் கவனிப்போம். பதிப்பிக்க எடுத்துக்கொள்ளும் சுவடியைச் சுவடிப் பயிற்சியின் துணைகொண்டு, சுவடியிலுள்ள நூல், பாட்டியல் வகையின் எந்த வகையைச் சார்ந்ததெனை அறிந்து யாப்பிலக்கண அடிப்படையில் அதற்குரிய வடிவுடன் பிரதிசெய்தல் வேண்டும். பிரதிசெய்யும்போது சில இடங்கள் சிதைந்திருப்பின்........... எனப் புள்ளியிட்டுக் காட்டலாம். அல்லது, அதே நூலின் வேறு சுவடி கிடைப்பின், அதன் உதவியுடன் நிரப்பலாம். பதிப்பாசிரியரே தம் ஊகத்தினால் நிரப்புவதாயின், [ ] எனப் பகர வளைவிட்டு, அதற்குள் ஊகித்தவற்றை எழுதவேண்டும். ஒரு சுவடியைப் பதிப்புக்கு மூலப்பிரதியாகக் கொண்டு, பிற சுவடிகள் கிடைப்பின், ஒத்துப் பார்த்துப் பிழைகளைச் செப்பம் செய்யலாம். பாடபேதங்கள் காணப்பெறின், அவற்றைப் பாடலின் கீழ், அடிக்குறிப்பில் காட்டவேண்டும். மூலப்பிரதியைத் தயார்செய்தபின் நூலுக்குச் சொல்லடைவு தயாரித்தல் மிகவும் முக்கியம். இந்தச் சொல்லடைவால், நூலின் பிழையான பகுதிகள் திருந்த வாய்ப்புண்டு. இப்போது அப்படிச் செய்யாமல், நூல் அச்சானபிறகு, அச்சுப் பிரதியின் சொல்லடைவு பின்னிணைப்பாக வருகிறது. இது தவறு. இந்தச் "சொல்லடைவு" நூல் பற்றிய ஆராய்ச்சி முன்னுரைக்குப் பெரிதும் உதவும்.

நூலைப் பதிப்பிக்கும்போது, பாடலை முதலில் பதித்து, அதன்கீழ் பொழிப்புரை, குறிப்புரை வரையவேண்டும். இவ்வுரையின்கீழ், அரிய சொற்களுக்கு விளக்கமும், மேற்கோளும் அமைதல் வேண்டும். மேற்கோள், கூடியவரை பதிப்பிக்கும் நூலிற்கு முன்வந்த நூல்களிற் பழமையான நூலிலிருந்து காட்ட வேண்டும். பல மேற்கோள்கள் காட்ட விரும்பினால், அவை, கால அடிப்படையில் அமையவேண்டும். சில பழந்தமிழ் நூல்களுக்கு முந்திய கால நூல்களிலிருந்து மேற்கோள் காட்ட இயலாவிடின், அந்த நூலைத் தொடர்ந்துவந்த அண்மைக்காலத்து மேற்கோள்களைக் காட்டலாம்.

பாடபேதம் - அடிக்குறிப்பில் அமைய வேண்டும்.

இப்போது கிடைக்கும் தமிழ்ச்சுவடிகள் யாவும் கி.பி. 1600க்குப் பிற்பட்டவையே. எனவே இதற்கு முற்பட்ட காலத்தெழுந்த நூல்களுக்கு, மூலபாட ஆய்வுசெய்து தெளிதல் இயலாது. கூடுமானவரை கிடைக்கும் ஏடுகளைக் கொண்டு, சுத்தமான பாடமே காணலாம். நூலை வரையறை செய்து, மூலம், பொழிப்புரை, குறிப்புரை, அரும்பதவுரை, மேற்கோள், பாடபேதம் அமைத்த பின் முன்னுரை வரைதல் வேண்டும்.

முன்னுரையில், 1. பதிப்பிக்க எடுத்துக் கொண்ட நூலின் இலக்கணத்தை முதலிற்கூறிப் பின்னர், 2. நூல் இன்ன செய்தி தருகின்றது எனக் கூறவேண்டும். இப்பகுதியில் பாட்டுடைத் தலைவன் பற்றிய செய்திகள், சிறப்புக்கள், எல்லாவற்றையும் பிற நூற்செய்திகளையும் கூறவேண்டும். நூலைப் படிப்பவர்கள், பாட்டுடைத் தலைவன் பற்றிய, நூலைப் பற்றிய செய்திகள் அறியப் பிற நூலைத் தேடாத வகையில், இப்பகுதி அமைதல் வேண்டும். 3. இதில், நூலைப் பற்றிய செய்திகள் - நூலாராய்ச்சி அமைதல் வேண்டும். இதற்குச் சொல்லடைவு மிகவும் பயன்தரும். 4. அடுத்து, நூலாசிரியர் வரலாறு கூற வேண்டும். 5. சுவடி பற்றிய் செய்திகளும், 6 நன்றியுரையும் அமைய வேண்டும்.

நூலின் பின்னிணைப்பாகப் பாடல் முதற்குறிப்பகராதி, அருஞ்சொற் பொருளகராதி, துணை நூற்பட்டியல், மேற்கோளாகக் காட்டும் நூற்களின் சுருக்க விளக்கம் அமைதல் வேண்டும்.

சுவடிப் பயிற்சி - சுவடிப் பதிப்பு நெறிமுறை பற்றி இது ஒரு கன்னி முயற்சி. இதைத் தொடர்ந்து, அறிஞர்கள் சிறந்த நெறிமுறைகளை வகுக்கலாம் என்ற ஆசை பற்றியே இவற்றை கூறலானேன். கன்னிமுயற்சியாதலால், குறைகள் இருக்க வாய்ப்புண்டு.

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

என்ற எண்ணத்தில் இக்கட்டுரையை ஏற்கவேண்டும்.

எழுத்து வரிவடிவும் திரிபுகளும்

ச. பாலசுந்தரம்

இருதிணைப் பொருளையும் அவற்றின் நிலைகளையும் இயக்கங்களையும் ஒருவர் ஒருவர்க்குப் புலப்படுத்த மக்களான் தோற்றுவிக்கப்பட்ட மொழி முதற்கண் செவிப்புலனாகும் ஒலிக்கூட்டங்களான் ஆக்கம் பெற்றதாகும். அது கொண்டு பல்லாண்டுகட்குப் பின்னர்க் கட்புலனாக உருவாக்கப்பட்டதே எழுத்துமொழியாகும். பேச்சுமொழி முன்னிலை இடத்திற்கும், நிகழ் காலத்திற்கும் மட்டும் பயன்பட்ட நிலையினின்றும் வளர்ந்து படர்க்கையிடத்திற்கும் எதிர்காலத்திற்கும் பயன்படவேண்டிச் சமைத்துக் கொள்ளப்பட்டது எழுத்துமொழியாகும். எழுத்துமொழி அழியாததாகும். அதனை அழியாமற் காப்பது எழுதப்படும் கருவிகளைப் பேணும் நிலையைப் பொருத்ததாகும்.

வரிவடிவ எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய வரலாறு யாவரும் ஏற்கும் வண்ணம் தெளிவுபடக் கூறற்கு அரியதொன்றாக உள்ளது. ஒரு பொருளையோ சுருக்கத்தையோ சொல் வடிவான் உணரவும், உணர்த்தவும் இயன்றதொரு காலஎல்லையிற்றான் அச்சொல்லுக்கு வரிவடிவ அடையாளம் அமைக்கும் சிந்தனை தோன்றும். முதற்கண் ஒரு சொல்லுக்கு ஓர் அடையாளமாக அமைந்து பின்னர் எழுத்தொலி அடையாளங்கள் தோன்றும். அங்ஙனம் எழுத்துக்களை வகைப்படுத்தி அவற்றிற்கு வரிவடிவம் அமைப்பது என்பது ஓர் அரிய செயலேயாகும்.

அங்ஙனம் ஒரு மொழியின்கண் முதற்கண் அமைத்துக் கொள்ளப்பட்ட வரிவடிவம் எழுதும்கருவி, எழுதப்படும் கருவி வளர்ச்சிகட்கு ஏற்ப வேறுபடும். கையால் எழுதும் பயிற்சிக்கு ஏற்பக் காலந்தொறும் வேறுபடும். அங்ஙனம் வேறுபட்டு வளர்ந்து ஒரு காலத்திற் செம்மையுறும். செம்மையுற்ற வடிவங்கள் மக்களின் அறிவு வளர்ச்சிக்கேற்பத் திருத்தங்களும் பெறும். மேற்கூறிய கருத்துக்கள் உலக மொழி யாவற்றிற்கும் பொதுவானதொரு மரபாகும்.

தமிழ்மொழியமைப்பினையும் அதனைக் கையாளும் முறைமையையும் பற்றி அறிவியலடிப்படையில் மிக நுட்பமாகவும் தெளிவாகவும் இலக்கண நெறியான் வகுத்துக்கூறும் தொல். காப்பியம் தனக்கு முன் வழங்கிய பல நூல்களையும் நூன்மரபுகளையும் சுட்டிக் கூறுவதனை நோக்குமிடத்து இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழில் செம்மையான எழுத்து வரிவடிவங்கள் அமைந்திருத்தல் வேண்டுமென்பது புலனாகிறது.

எனினும் வரலாற்றுக் காலத்திற்கு முன்னைய வரிவடிவங்களையோ தொல்காப்பியர் கால வரிவடிவங்களையோ இன்றைக்குக் கட்புலனாக அறியக்கூடிய ஆதாரங்கள் ஒன்றுமில்லை. காரணம் எழுதப்படும் கருவிகள் காலத்தால் அழியும் தன்மையுடையனவாக அமைந்தமையேயாம். கல் எழுத்துக்களும் காலத்தான் அழிதற்கும் மறைதற்கும் உரியனவேயாம். செம்பு முதலாய மாழைகளில் எழுதியனவும் அவ்வாறேயாம், மாழைகள் அழிக்கப்படுவதற்கு உரியனவாகும்.

இன்றைக்கு அழிவினின்று உய்ந்து கிடைத்துள்ள கல்வெட்டுக்களானும் சங்ககால இலக்கியங்களானும் வரிவடிவ எழுத்துக்களைப் பற்றியும் அவை எழுதப்பெற்ற முறைகள் பற்றியும் எழுதப்பட்ட கருவிகள் பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்ளலாம்.

> விழுத்தொடை மறவா வில்லிடத் தொலைந்தோர்
> எழுத்துடை நடுகல் (ஐங். 352)
> செல்லுந்த தேயத்துப் பெயர்மருங் கறிமார்
> கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த (மலைபடு. 395)
> கூருளிகுயின்ற கோடுமாய் எழுத்து (அகம். 297)

என்றாற்போலப் பயின்றுவரும் சங்க இலக்கியத் தொடர்கள் வரிவடிவ எழுத்தினைப்பற்றி ஐயமற அறிவிக்கின்றன.எனினும் சான்றுகளோடு தெளிவாக அமைந்த எழுத்து வரிவடிவங்கள் கி.பி.க்குப் பின்னர்தான் கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி ஆகிய கருவிகள் வாயிலாக நமக்குக் கிட்டியுள்ளன. அவற்றுள்ளும் ஓலைச்சுவடிகளைப் பொறுத்தவரை 16-17 ஆம் நூற்றாண்டுகளில் அமைந்தவையே பழமையானவையாக உள்ளன. காரணம் ஓலைகள் மடிந்து ஒடிந்து சிதையும் இயல்பினவாதலான் என்க.

இதுகாறும் கூறிய சில குறிப்புக்களான் வரிவடிவங்கள் காலந்தொறும் திருத்தம் பெற்று அமையும் தன்மையன என்பது விளங்கும்.

பண்டை நூல்களை ஓலைச் சுவடிகளில் எழுதிப் பயிலும் மாணாக்கர் அவற்றைப் படி எடுக்குந்தொறும் சில குறை நிறைகள் நேரலாம். அதனான் பாடத் திரிபுகள் உண்டாவது இயல்பே. அங்ஙனம் ஒரு நூல் காலந்தொறும் ஓலைகளிற் பெயர்த்து எழுதப்பட்டு எழுதப்பட்டு வந்து இற்றை நாம் காணும் வடிவத்திற்றோற்றமளிக்கின்றது. உலோக அச்சு எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பெற்று அச்சிடத் தொடங்கிய காலத்தில் உள்ள வரிவடிவங்களும் காலந்தொறும் மாறி வந்துள்ளமையைக் காணலாம்.

இற்றைக்குப் பன்னூறாண்டுகட்கு முன்பிருந்தே இலக்கண இலக்கிய நூல்களைவரிப்படுத்தப் பெற்ற ஓலைகளில் எழுதப்பெற்று வந்துள்ளமையைச் சங்கப்பாக்களுள் வரும் குறிப்புக்களான் அறியலாம். இற்றைக்கு அச்சுவாயிலாகப் பதிவு செய்யப்பெற்று நாம் பயிலும் நூல்கள் யாவும் ஓலைச் சுவடிகளினின்றும் சிறுபான்மை கல்வெட்டுப்படிகளினின்றும் பெயர்த்தெழுதிப் பதிவு செய்யப்பெற்றவையே. தமிழ் எழுத்துகளான் ஆன ஓலைச்சுவடிகள் இற்றைக்கு உலகில் பல்வேறு நாடுகளில் கல்விக்கூடங்களில் உள்ளன. நமது நாட்டிலும் பல்வேறிடங்களில் நூற்றுக்கணக்கான சுவடிகள் உள்ளன. அண்மையில் தமிழ் வளர்ச்சி கருதித் தோன்றிய தமிழ்ப்பல்கலைக்கழகம் அதற்கென்றே ஒரு புலத்தை நிறுவி அரிய ஓலைச் சுவடிகளைத் திரட்டி ஆராய்ந்து வேண்டுவனவற்றை வெளியிடும் பணியை மேற்கொண்டு அரும்பணியாற்றிவருவதை நாமறிவோம். இற்றைக்குத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் மட்டும் இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம் முதலாய பல துறைப்பட்ட ஓலைச் சுவடிகள் 1725 உள்ளன.

இனி ஏடு பெயர்த்து எழுதுவோர் யாவரும் அந்நூற் பயிற்சியுடையார் எனற்கியலாது; கூலி பெற்று எழுவோரும் உண்டு. இந்நிலையிற்றான் பாடவேறுபாடுகளும் பிழைகளும் தோன்றும். பெயர்த்தெழுதுவோர் தம் அறிவாற்றலுக்கேற்பச் சில பல திருத்தங்களைச் செய்துகொள்வதும் சிலவற்றைக் கூட்டுவதும் குறைப்பதும் செய்தல் இயற்கையே. மேற்கூறிய பல நிலைமைகளுக்குட்பட்டவையே இன்று நாம் அச்சிட்டுப் பயிலும் பழந்தமிழ் நூல்கள்யாவும்.

இருக்கும். மாணாக்கரின் தரத்திற்கேற்ப அவற்றுள் சில மாற்றங்கள் அமையும். இவ்வாறே காலந்தோறும் பயில்வோருக்குத் தக்கச் சுவடிகள் பெருகும் அருகும்.

இனி ஏடு பெயர்த்து எழுதுவோர் யாவரும் அந்நூற் பயிற்சியுடையார் எனற்கியலாது கூலி பெற்று எழுவோரும் உண்டு. இந்நிலையிற்றான் பாடவேறுபாடுகளும் பிழைகளும் தோன்றும். பெயர்த்தெழுதுவோர் தம் அறிவாற்றலுக்கேற்பச் சில பல திருத்தங்களைச் செய்துகொள்வதும் சிலவற்றைக் கூட்டுவதும் குறைப்பதும் செய்தல் இயற்கையே. மேற்கூறிய பல நிலைமைகளுக்குட்பட்டவையே இன்று நாம் அச்சிட்டுப் பயிலும் பழந்தமிழ் நூல்கள்யாவும்.

ஓலை எழுத்தும் ஒப்புமைவடிவமும்

எழுத்தொலிகளை உணர்த்தும் வரிவடிவ அடையாளங்கள் யாவும் கையினால் வரைந்து எழுதுவதற்கேற்ப அமைத்துக் கொள்ளப்பட்டவையே ஆகும். அவையாவும் வட்டம், கோணம், சதுரம், கீற்று, புள்ளி, ஒற்று என்னும் அடிப்படை வடிவங்களைக்கொண்டு அமைந்தவையே. ஒரு மொழிக்கண் வரையறைப்பட்ட எழுத்தொலிகள் எவ்வளவோ அவ்வளவு அடையாளங்கள் அமையும். எழுத்துக்களின் எண்ணிக்கைப் பெருக்கிற்கேற்ப அடையாள வேறுபாடுகள் நுட்பமாக அமையும்.

இனி எழுத்து அடையாளங்கள் எழுதும் கருவி, எழுதப்படும் கருவிகளுக்கு ஏற்பவும் அமையும். கல்லிற் பொறிக்கப்படும் அடையாளத்திற்கும், செம்பு முதலாய தகடுகளில் செதுக்கப்பெறும் எழுத்தடையாளத்திற்கும், திரைச்சீலை அல்லது துணிகளில் எழுதப்பெறும் அடையாளத்திற்கும், ஓலைகளில் வரையப்பெறும் அடையாளத்திற்கும் வேறுபாடுகள் உண்டு. சில கூறுகளைத் தவிர பல கூறுகள் வேறுபடும். கல்லெழுத்துக்கள் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பெறா. தகட்டிற் சிறுபான்மை பிணைக்கப்பெறும். எனவே கையெழுத்துக்கள் பிற எழுத்துகளின்றும் பெரிதும் வேறுபட்டமையும் என்பதை நினைதல் வேண்டும். மற்றும் வட்ட வடிவங்கள் கல்லெழுத்துக்களில் தவிர்க்கப்பெறும். நேர்க் கீற்றும், வளைக்கீற்றும் புள்ளியுமே பயின்றுவரும். ஓலையில் வட்ட வடிவங்கள் பயின்று வரும். புள்ளியும் ஒற்றும் தவிர்க்கப்பெறும்.

இனி எழுத்து வடிவங்களைப் பொறுத்தவரை கிழக்காசிய மொழி எழுத்துக்கள், மேற்காசிய மொழி எழுத்துக்கள், ஐரோப்பிய, அமெரிக்க மொழி எழுத்துக்கள், இந்திய மொழி

எழுத்துக்கள் என நான்கு வகையாகப் பிரிக்கலாம். ஒவ்வொன்றும் தமக்குள் பெரிதும் வேறுபாடுடையவை. இந்திய மொழிகளுள் தென்னிந்திய மொழி எழுத்துக்கள் ஏறத்தாழ ஒரு நெறியினை உடையவையாகும். அவற்றுள் தமிழ் மொழி எழுத்துக்களை மட்டும் சிறிது காண்போம்.

தமிழ் மொழியில் அடிப்படை எழுத்துக்களும் அவற்றின் வடிவங்களும் தனியாகவும் இணைத்தும் எழுதப்பட்டு வந்துள்ளன. அஃதாவது உயிரெழுத்து வடிவம், மெய்யெழுத்து வடிவம் இரண்டும் கூடிய உயிர்மெய் எழுத்துவடிவம். அம்முறையான தமிழில் வரிவடிவம் பல்கியதோடல்லாமல் சிக்கலுக்கும், உட்படுவனவாயின். உயிரெழுத்து வடிவங்களுள் எ, ஏ, ஒ, ஓ, என்பவையும் மெய்யெழுத்து வடிவங்களுள் கசத-ஞந-பயமழ-லவ-ளண ற என்பவையும் பெரிதும் ஒற்றுமை உடையவை. உயிர்மெய் வடிவ அடையாளங்கள் யாவும் ஒரு நெறிமுறை உடையனவல்ல காரணம் குழப்பமின்றி வரைந்துணரவேண்டிப் பல்வேறு நெறிகளில் அமைக்கப்பெற்றமையேயாகும். உயிர்மெய் ஆகார நெட்டெழுத்தின் துணைவடிவமும் மெய்யுள் இடையினரகரமும் ஒற்றுமையுடையவை, இவை யாவும் ஓலை எழுத்துக்களில் அமைந்துள்ள வடிவம் பற்றியவையாகும். இன்றைய அச்சுவடிவங்களும் அவற்றைச் சார்ந்தவையேயாகும்.

தமிழ் மொழி எழுத்து வடிவங்கள் தனித்தனி வடிவங்களேயாயினும் கையால் எழுதுவோர் அவற்றைப் பிணைத்து எழுதும் வழக்கினை மேற்கொண்டமையான் பல சிக்கலுக்கு உட்படுவனவாயின. மேலும் தமிழ் மொழி ஓசையை அடிப்படையாகக் கொண்டதாதலின், புணர்ச்சி விகாரங்களுக்கு உட்படும் கடப்பாட்டினதாக உள்ளது. அவ்வகையில் ஓலைச் சுவடியைப் படிப்போரும் படியெடுப்போரும் பிழை புரிதற்கு வாய்ப்புடையதாயிற்று.

சில எடுத்துக்காட்டுகள்

உடம்படுமெய் : நாவாடிற்று - நா ஆடிற்று

பிறழ்பிரிப்பு : பணியாரம்மா - பணியாரம் மா; மாதேவா - மா தேவா,

குற்றுகரப்பிரிப்பு : மருதுவந்தான் - மருது உவந்தான் வந்துஆட்கொண்டான் - வந்தாள் கொண்டான்

னகரப்புணர்ச்சி	: அவனல்லன் - அவன் நல்லன், அவன் அல்லன்
ணகரப்புணர்ச்சி	: கண்ணீர் வந்தது - கண்நீர் - கள்நீர்
இலக்கணம் அறியார்	: மலர்கழல் - மலர்க்கழல்
அரைகுறையறிவோர்	: வயிறு - வயறு, மன்னன் - மண்ணன், கவிஞர்கோயிலன் - கவிஞர்கோ இலன்
கல்லார் செய்பிழை	: - எழுத்துமாற்றம் : ஆலிநாடர் - ஆவிநாடார்பாடுபெற்றார் - மாடுபெற்றார், நாகுயர்ந்தது - நாடுயர்ந்தது, பொருது சென்றான்- பொறாது சென்றான், கன்னிவந்தாள்- கள்ளிவந்தாள் பாடிவீடு-மாடிவீடு
பொருள் மாற்றம்	: அலம்படுவென்றி-வளம்படுவெற்றி, அளிக்கத்தக்கவன் - அழிக்கத்தக்கவன், கொளைவல்பாணன், - கொலைவல்பாணன், கட்டூர் சென்றான் - காட்டூர்சென்றான், கழுதுநீண்டது - கழுத்துநீண்டது, தொல்செருவு - தோல்செருப்பு
சுவடி எழுத்துணராமை	: பரவினான் - பாவிநான், காமலர் - கரமலர்,
நன்வாய்ச்சென்றான்	: நனவாய்ச்சென்றான், நேர்வாய் என்றான் - நோவாய் என்றான்.

இவ்வாறு நேரும் பிழைகளை ஓர்ந்து ஓலைச்சுவடிகளைப் பயின்றறிதல் வேண்டும்.

பாடவேறுபாடும் பாடத்தெரிவும்

த.கோ. பரமசிவம்

'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்
படித்தவன் பாட்டைக் கெடுத்தான்'

என்னும் பழமொழி மிகப்பரவலாகவும், மிகமிகச் சாதாரண நிலையிலும் வழங்குகிறது. இப்பழமொழி எல்லாவகைப்பட்ட நூல்களிலும் பாடவேறுபாடுகள் தோன்றுவது இயல்பு, தவிர்க்க முடியாதது, அவ்வக் காலத்தே கூடத் தோன்றுமுடிந்த விரைவைக் கொண்டது என்பவற்றைத் துல்லியமாகக் காட்டவல்லதாம்.

பாடவேறுபாடுகளும் பாடத்தெரிவும் என்னும் இக் கட்டுரையில் ஒரு நூலின் படிகளாகக் காணப்பெறும் சுவடிகளில் அமைந்த பாடவேறுபாடுகள் தோன்றும் சூழலையும் அப்பாடங்களுள் மூலபாடமாகக் கருதத்தக்க - சிறந்த பாடமாகக் காணத்தக்க பாடத்தைத் தேர்வு செய்வதற்கு வேண்டிய வழி முறைகளையும் காண்போம்.

பாடவேறுபாடு தோன்றும் விதம்

பனிமலையிலிருந்து உருண்டு வரும் பனிக்கட்டி அடிவாரத்துக்கு வருமுன் பல்வேறு மாற்றங்களை அடைதல் கண்கூடு. வடிவச் சிதைவும் வடிவமாற்றமும் அடைவதோடு அளவில்கூட அது மாற்றத்தையடைய நேரிடும். அப்பனிக்கட்டி பல பொருள்களுடன் கூடித்திரண்டு பெருத்துவரலாம். பாறைகளில், மரங்களில் மோதி உடைந்து சிதறிச் சிறுத்தும் வரலாம். ஒரு காலத்தில், ஒரு தலைமுறையில் தோன்றிய நூல்களும் கால இடையீடுகளுக்குப் பின்பும், தலைமுறையிடையீடுகளுக்குப் பின்பும் பல்கியும், சிறுத்தும் வேறுபட்டு வடிவ வேறுபாடுகளுடன் காணப்படுதல் இயல்பு.

ஆயின் மனிதனுக்கிருக்கின்ற பகுத்தறிவும், அதைச் சார்ந்த நினைவாற்றலும் இவ்வேறுபாடுகளைத் தவிர்க்கப் பெரிதும் துணை நிற்பன. எனினும் சில நேரங்களில் இவையே வேறுபாடுகளைத் தோற்றுவிக்கவும் துணை செய்கின்றன எனத் தோன்றுகிறது.

நம் காலத்தில் நம் கையெழுத்தைப் பார்த்துத் தட்டச்சு செய்யும் போதும், அச்சுக்கோக்கும்போதும், அல்லது தட்டச்சுப்படியைப் பார்த்து அதை அச்சுக்கோக்கும்போதும் எம்பெருமான் என்பதை எமபெருமான் எனவும், கதலிவாழை என்பதைக் காதலிவாழை எனவும், தேவாரத் திரட்டு என்பதைத் தேவாரத் திருட்டு எனவும், சிந்தனை என்பதை நிந்தனை எனவும் பல்வேறுவகைப்பட்ட எழுத்துப் பிழைகளைச் சந்தித்து அதனால் பொருள் விபரீதங்களையடைந்து வருந்துகிறோம். அவ்வாறெனில் எப்போதோ தோன்றிய நூல்கள் வாய்மொழியாகக் கேட்கப்பெற்றும், எழுதப்பெற்றும், திருத்தப்பெற்றும் மீண்டும் மீண்டும் காலயிடையீட்டுக்குள்ளான தலைமுறைகளால் படி எடுக்கப்பெற்றும் வருகின்றன. அத்தகு நூல்களில் - அச்சுக்கலையும் பதிப்புக்கலையும் தோன்றாத காலத்துப் பாடவேறுபாடுகள் தோன்றுவது இயல்பே. பாடவேறுபாடுகள் தோன்றாதிருப்பதுதான் வியப்புக்குரியது.

பாடவேறுபாடுகள் தோன்றுவதற்கு அடிப்படையே மொழியின் ஒலியமைப்புதான் என்றால் அது மிகையாகாது. நெருங்கிய ஒப்புமை கொண்ட ஒலியமைப்பும், மிக நுட்பமான வேறுபாட்டைக் கொண்ட ஒலியமைப்பு முறையும்தான் ஒன்றை மயங்கிக் கேட்பதற்கும், புரிந்து கொள்வதற்கும், மயங்கிய நிலையிலேயே எழுதுவதற்கும் காரணமாக அமைகின்றன. மனம் என்பதும் மணம் என்பதும் கிட்டத்தட்ட ஒலியமைப்பில் ஒன்றுபோலவே தோற்றமளிப்பன. பனி-பணி, வால்-வாள்-வாழ், அனு-அணு, பரவை- புறவை போன்றன நுட்பமான ஒலிவேற்றுமை கொண்டன. இவை ஒன்று மற்றொன்றாகக் கருதப் பெற்றால் எவ்வளவோ பொருள் மாறுபாட்டை விளைவித்து விடுவனவாம். நுண்ணிய ஒலி வேறுபாடுகளையுடைய எழுத்துக்கள் மிகுந்துள்ள மொழிகளின் நூல்களில் இத்தகு பாடவேறுபாடுகள் மிக்கிருப்பது தவிர்க்க முடியாததாம். மூலபாட ஆய்வில் பாட வேறுபாடுகள் தோறும் காரணங்களை அறிந்துகொள்ளாமல் பாடத்தெரிவில் நுழைவது அடிப்படையில்லாமல் கட்டடம் கட்டுவது போன்ற சிக்கலை உருவாக்குவதாம்.

வாய்மொழி நூல்கள்

உலக மொழிகளுள் பெரும்பாலன தொடக்ககாலத்தில் வாய்மொழி வழியாகவே நூல்களைப் பரவச் செய்தன. (பைபிள், எழுதப்பட்ட காலம் அது எழுந்த காலத்தைவிட மிகமிகப் பிந்தியதாகும்). நம் பாரத நாட்டின் பழம்பெரும் காவியமான மகாபாரதம் தோன்றிய வரலாறு இக் கருத்தை அரண் செய்தல் நோக்கத்தகும்.

வியாசர் மகாபாரதக் கதையைத் தம் 5 சீடர்களுக்கும் மொழிந்தார். அவர்கள் அதனை ஆங்காங்குச் சொற்பொழிவாகப் பரவச் செய்தனர். அவர்கள் தாம் சென்ற நாடு, திசை, மொழி, கேட்கும் மக்கள், சூழல் இவற்றையொட்டித் தம் விளக்கங்களை மாற்றித்தான் பரப்பியிருப்பர். ஆகத் தொடக்க காலத்திலேயே - வியாசர் காலத்திலேயே 5 வகைப்பட்ட பாரதக்கதை உருவாக்கப்பட்டுவிட்டது எனலாம். அதாவது ஒன்று ஐந்தாக, ஐந்து பத்தாக, பத்து நூறாக என அக்கதை நாடுமுழுவதும் பரவப் பரவப் பல்கிப் பெருகிவிட்டது. அடிப்படை ஒன்றாக அமைந்தாலும் இடம், காலம், சூழல், மொழி, அரசியல், கேட்போர் அறிவு முதலான பல்வேறு சூழல்களுக்கு ஏற்பச் சொற்பொழிவாளரின் மொழித்தன்மை, கற்பனைச்சூழல், பாத்திரப்படைப்பு விளக்கக்கதைகள் ஆகியன மாறிவிட்டன. இச்சூழலுடன் காலந்தோறும் மாறிவந்த மொழிமாற்றங்கள் எழுத்துமாற்றங்கள், நாகரிகப் பழக்க வழக்கங்கள் இவையும் அக்கதையில் ஊடுருவிவிட்டன. அதாவது இம்மாற்றங்கள் ஏதோ சொற்களில் மட்டும் நிகழ்ந்துவிடவில்லை. சுலோகங்களின் எண்ணிக்கை, கதையமைப்புகளில் கூட பெரும் மாற்றத்தை உருவாக்கிவிட்டன.

சான்றாக மகாபாரதத்தின் ஆதிபருவத்தைக் காண்போம்.

கல்கத்தா பதிப்பு	: 8,460 சுலோகம்
பம்பாய்ப் பதிப்பு	: 8,620 சுலோகம்
சென்னை சாஸ்திரியார் பதிப்பு	: 9,984 சுலோகம்
கும்பகோணப் பதிப்பு	: 10,889 சுலோகம்
சாரதா சுவடி	: 7,984 சுலோகம்

அதாவது குறிப்பிட்டுச் சொல்லும் சிறப்புடைய பதிப்புகளிலும் சுவடிகளிலும் கூட இவ்வளவு பெரிய மாற்றங்கள் காணும் போது பாடவேறுபாடுகளின் தோற்றத்தை நாம் ஓரளவு

கணிக்க முடியும். விரிவான மாற்றங்களைச் சுத்தாங்கரின் மகாபாரதப் பதிப்பில் காணலாம்.

நம் தமிழ் மொழியின் நூல்களும் இவ்வாறு வாய்மொழியாகவே பரவத் தொடங்கிய சூழலை நாம் பல்வேறு சான்றுகளால் தெளியலாம். இந்நூல்கள் தோன்றி 1,000 ஆண்டுக் கால இடைவெளிக்குப் பின்பும் எழுத்துவடிவம் பெறுவதுண்டு. அதுவரை அது வாய்மொழியாக - செவிவழிச் செய்தியாகவே பரவி நிலைத்திருக்கும்.

இறையனார் அகப்பொருள் உரை தோன்றிய வரலாறு இதனை அரண் செய்தல் காணலாம்.

> "மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங்கொற்றனார்க்கு உரைத்தார். அவர் தேனூர்க் கிழார்க்கு உரைத்தார், அவர் படியங் கொற்றனார்க்கு உரைத்தார், அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கு உரைத்தார், அவர் மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்கு உரைத்தார், அவர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்குமாரனார்க்கு உரைத்தார், அவர் மாதவனார் இளநாகர்க்கு உரைத்தார், அவர் திருக்குன்றத்தாசிரியர்க்கு உரைத்தார் அவர் முசிறியாசிரியர் நீல கண்டனார்க்கு உரைத்தார்"

என ஒன்பது தலைமுறையினர் வரை வாய்மொழியாக வளர்ந்து வந்த செய்தியைக் காண்கிறோம்.

இவ்வாறே சங்க இலக்கியக் குறிப்புகளில் காணப்படும் தொகுத்தார் தொகுப்பித்தார் போன்ற செய்திகளும் வாய்மொழியாகப் பரவிய நூல்கள் சில காலத்துக்குப் பின்பே எழுத்துவடிவம் பெற்றன என்பதை உறுதி செய்கின்றன.

படிஎடுத்தல்

வாய்மொழியாகக் கேட்டு எழுதும் பழக்கத்தைத் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் வரலாற்றிலும் நாம் காணலாம். எழுதுகிறவர் ஓய்ந்து போகுமளவிற்கு ஆசுகவியாக, காளமேகமாகப் பாடலைப் பாடுகின்ற புலவர்கள் பெரும்பாலான நூல்களைத் தம் மாணாக்கரைக் கொண்டே எழுதுவித்தனர். மூல நூலின் தோற்றம் இந்நிலையில் காணப்படுகிறது. எழுதுவித்தபின் அவற்றைப் பிழையறப்

பார்த்தோதித் திருத்துவது நூலாசிரியர் கடனாகும். அவர் திருத்திய செய்தியினைக் கேட்டுப் பல படிகளைத் தொழில்முறை எழுத்தர்கள் உருவாக்கிப் பரப்பினர்.

நூலாசிரியரிடம் நெருங்கிப் பயின்றுவந்த மாணாக்கரின் நுண்ணறிவைப் போன்ற தொரு அறிவைத் தொழில்முறை எழுத்தர்களிடம் நாம் எதிர்பார்க்க முடியாது. எனவே மாணாக்கர் எழுதிய படியைவிடத் தொழில்முறை எழுத்தர் எழுதிய படிகளில் மாறுபாடுகள் குறிப்பிடும் அளவில் புகுவதற்குப் பெரிதும் வாய்ப்புள்ளது எனக் கருதவேண்டும்.

அறிவிற் சிறந்த மாணாக்கர் கேட்டெழுதும்போதுகூட ஒலிமாற்றம் காரணமாக எழுத்துகளைப் பிழைபட எழுதுவதற்கும், கைச்சோர்வால் சொற்களிடையே சிலபல மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் இடம் உண்டு. இவ்வாறே படிப்பவரின் ஒலிப்புமுறையும் ஒரு சில பிழைகளை உருவாக்குதல் கூடும். இந்நிலையில் தொடக்க காலச் சுவடிகளிலே கூட அதாவது ஆசிரியரின் காலத்தே படி எடுக்கப்பெற்ற நூல்களிலே கூட எழுத்துகளும் சொல்வடிவங்களும் மாற்றங்கண்டன என்றால் அது மிகையாகாது.

மாணாக்கர் சுவடியே இவ்வாறு மாற்றங்களை உண்டாக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும்போது, பொருளீட்டம் கருதித் தொழில்முறையாக விரைவாக எழுதித் தருவோரால் மாற்றங்கள் ஏற்படாதிருக்குமோ? இத் தகையோர் நூல்களை எழுதி வரும்போது படித்தவாறோ, கேட்டவாறோ அல்லது புரிந்து கொண்டவாறோ தம் மொழியறிவுக்கு ஏற்ப எழுதிவிடுவர். நினைவாற்றலால் தமக்குத் தெரிந்த நூல்களில் உள்ள சொற்களை தொடர்களை, சிலர் புகுத்திவிடுவதும் உண்டு.

ஆசிரியர் தாமே முயன்று எழுதிய சுவடியிலும், தம்மேற்பார்வையில் எழுதுவித்த சுவடியிலும் பிழைகள் குறைந்திருக்கும். பிழைகள் இல்லையெனும்படி நிறைவாக மூலப்படியாக அவை இலங்கும். மூலப் படியைப் பார்த்து ஒன்றின்பின் ஒன்றாக கால இடையீட்டுடன் பெருகிய படிகளில் பிழைகள், மாற்றங்கள் பலவாகப் பெருகி நிற்றல் இயல்பு.

முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் சுவடிப்பதிப்பில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள், தோய்ந்த அறிவைப் புலப்படுத்தியவர்கள். அவர்கள் மூல, படி ஏடுகளைப் பற்றி பிரதிபேத ஆராய்ச்சியின் (மு. இராமகிருட்டிணன்) அணிந்துரையில் கூறும் செய்தி இவண் சுட்டத் தகுவதாம்.

"இலக்கிய ஆசிரியர் தாமே எழுதிய அல்லது பிறர் எழுதத் தாமே சரிபார்த்துத் திருத்திய பிரதியைத் தன்பிரதி (Autograph) என்பார்கள். இந்தப் பிரதி கிடைக்குமாயின், அந்த இலக்கியத்தின் பாடத்திற்கு இதை விட உறுதி நல்கும் வேறொரு சான்று இருக்கமுடியாது. பின்னுள்ளவர்கள் இந்தப் பிரதியைப் பலமுறை நகல் செய்திருப்பார்கள். இவ்வாறு செய்பவர்கள் மனிதர்கள். ஆகையால், அறிந்தோ அறியாமலோ பல மாறுபாடுகள் நகலில் புகுவது திண்ணம். எடுத்துக்காட்டாகப் புறநானூற்று ஏட்டை எழுத்தர் சொக்கன் நகல் எடுத்தார் என வைத்துக்கொள்வோம். அந்த நகலிலிருந்து எழுத்தர் முருகன் மீண்டும் நகல் செய்தார் என்றும் வைத்துக்கொள்வோம். ஒவ்வொரு நகலிலும் ஒரு விழுக்காடு (Percentage) பிழை இருக்கும் என்றும் வைத்துக் கொள்வோம். புறநானூற்றின் மூலப்பிரதி முற்றிலும் (100%) சரியாக இருக்கும். சொக்கனின் நகல் ஒரு விழுக்காடு குறையுடையதாக இருக்கும். முருகனின் நகல் 2:73 விழுக்காடு குறையுடையதாக இருக்கும். இதில் இருந்து தலைமுறை தலைமுறையாக வழங்கிவரும் இலக்கிய ஏட்டு நகல்களில் எவ்வளவு மாறுபாடுகள் மலிந்திருக்கும் என்று தெளியலாம்" (பக். 9).

இவ்வாறு தவறாகப் படிப்பதால், கைத்தவறாக, வாய்த்தவறாக, மறதியாகத் தோன்றிய பாடவேறுபாடுகள் போலவே, தமிழ் எழுத்துக்களின் கால வளர்ச்சியும் பாடவேறுபாடுகளை உருவாக்கின. குறில் நெடில் மாற்றமில்லாமை, மெய்யெழுத்துகளும் உயிர் மெய்களும் ஒன்று போலவே எழுதப்பட்டமை, ரகரத்திற்கும் காலுக்கும் (ா) வேறுபாடின்றி எழுதப்பட்டமை, ஒற்றைக் கொம்புக்கும் டுவுக்கும் வேறுபாடின்மை - இவ்வாறே த, ற, ந; டு, ரு, கு; ர, ற; து, று, நு; மு, மூ, ழு, ழூ; ன, ண; ல, ள, பு; அ, வ, சு; ஆ, சூ; பா, ய; ப, ய; த, ச, க; போன்றன ஒன்றைப்போன்று வேறொன்றின் தோற்ற மயக்கத்தைக் கொடுத்துப் பின் பொருள்வேறுபாட்டை உண்டாக்குகின்றன. வரிவடிவில் இவற்றிடையே காணப்படும் வேறுபாடு சிறிதே. எனினும் பொருளடிப்படையில் பெருத்த வேறுபாட்டைக் காட்டுவன. அச்சுக்கலை தோன்றிய இக் காலத்தும் இவ்வெழுத்துகள் ஒன்றுக்கொன்று மயக்கமூட்டி அச்சுப்பிழைகளை உண்டாக்குகின்றனவெனில் பழைய சுவடிகளின் எழுத்து மாற்றத் தோற்றங்கள் பலவாக இருப்பது வியப்புக்குரியதன்று. ஆக இவ்வாறெல்லாம் பாடவேறுபாடுகள் தோன்றுகின்றன என்பதை முதற்கண் அடிப்படையாகத் தெரிந்துகொண்டு பாடத்தெரிவுக்குச் செல்வோம்.

பாடங்களைத் தேர்வு செய்தல்

ஆசிரியரின் மூலம் எதுவதாக இருக்கும் என்பதை நுண்ணிதின் ஆய்ந்து தேர்வு செய்வதே பாடத்தெரிவு ஆகும். ஒருவரால் ஒரு காலத்து இயற்றப்பட்ட மூலத்தில் பிற்காலத்தில் நிகழ்ந்த மாசுகளை நீக்கி, அம் மூலத்தின் உண்மையான பொருளை நிச்சயித்து மூலத்தை நிலைபெறச் செய்தலையே மூலபாட ஆய்வு (Textual Criticism) என்பர்.

சுவடிகளில் இவ்வாறெல்லாம் பல வேறுபாடுகள், மாறுபாடுகள் தோன்றும் விதத்தை நம்முன்னோர் நன்குணர்ந்திருந்தனர். பாடங்களைத் தேர்வு செய்து உரை கண்டனர். தொல்காப்பிய உரைகளிலும், திருக்குறள், சிந்தாமணி, கலித்தொகை போன்ற நூல்களின் உரைகளிலும் வருகின்ற குறிப்புகள் நம் முன்னவரிடம் மூலபாட ஆய்வு சிறப்பாகக் குடிகொண்டிருந்தமையைப் புலப்படுத்துவனவாம். 'இன்னவாறு பாடம் ஓதுவாரும் உளர்', 'இன்னவாறு பாடங்கொள்வாரும் உளர்' இன்னதூஉம் பாடம், இன்ன காரணத்தால் அது பொருந்தமையறிக' என வரும் குறிப்புகள் இக்கருத்தை அரண் செய்தல் காணலாம். இவற்றினின்று வேறொரு சிறந்த குறிப்பும் நமக்குக் கிடைக்கிறது. நூலாசிரியரும் உரையாசிரியரும் தாம் பயில்வதற்கும், பயிற்றுவிப்பதற்கும் ஒரே நூலின் பல சுவடிகளை-படிகளைத் தொகுத்திருக்கின்றனர் என்பதே அது.

நூல்களைப் பதிப்பிப்பாரும் முதற்கண், தொடர்புடைய சுவடிப் படிகளைத் தொகுத்துக் காண்பது இன்றியமையாக் கடமையாகக் கொள்ளவேண்டும் என்பது நம்முன்னோர் அடிச்சுவடிட்டினின்று தெரிவதாகும். சுத்தாங்கரின் மகாபாரதப் பதிப்புக்கு நாடெங்கிலுமிருந்து 200 க்கும் மேற்பட்ட சுவடிகள் தொகுத்து ஒப்புக் காணப்பெற்றன என்பது ஈண்டுக் குறிப்பிடவேண்டிய செய்தியாகும்.

சுவடிகளும் பாடவேறுபாடுகளும் மிக மிக - ஆசிரியரின் மூலம் எது என்பதைத் துணிவதில் குழப்பமும் தயக்கமும் மிகும். பாடவேறுபாடுகள் நூல்களின் இலக்கிய இலக்கணத் தன்மைக்கேற்பவும் மாறுபடுகின்றன. அறிஞர் பெருமக்களிடம் மட்டுமே உலவித் திரிகின்ற நூல்களில் பாடவேறுபாடுகள் குறைவு. ஆயின் இலக்கிய நூல்களில் குறிப்பாக, பாமரமக்களிடம் பரவியுள்ள நாடகநூல்கள், புராணங்கள் போன்றவற்றில் பாட வேறுபாடுகள், கதை வேறுபாடுகள் மிக்குக் காணப்படுகின்றன. மகாபாரதத்தில் பாடவேறுபாடுகள் மிகுந்து காணப்படுவது அது

நாடெங்கும் பரவியதாலேயாம். நம் தொல்காப்பியத்துள் பாடமாறுபடுகள் குறைந்திருப்பதற்குக் காரணம் அது அறிஞர்தம் மத்தியில் மட்டுமே உலவியமைதான் எனலாம். அவ்வாறே மக்களிடம் அதிகம் பரவாத சங்க இலக்கியங்களில் பாடவேறுபாடுகள் குறைவு, ஆயின் மக்களிடையே அதிகமாகப் பரவிய கம்பராமாயணத்தில் பாடவேறுபாடுகள் மிகுதி. பாடல் எண்ணிக்கையில் கூடப் பெருத்த மாற்றம். சங்க இலக்கியத்துள் (குறுந்தொகை 400 என்பதற்கு 420 என்றோ 500 என்றோ மாறுபடுமளவிற்கு) பாடல் எண்ணிக்கை மாறுபாடுகள் காணப்படவில்லை. கம்பராமாயணத்தில் ஒரு படலத்திலேயே கூட நூற்றுக்கணக்கான பாடல்கள் மாறுபடுகின்றன. இந்த அடிப்படையை மனதில் இருத்தி முதற்கண் ஏடுகளைத் தொகுத்தல் வேண்டும்.

ஏடுகளைத் தொகுத்தபின் அவற்றை இனங்காண முடியுமா? என்னும் ஆய்வில் ஈடுபட்டு ஏடுகளின் கொடிவழியைக் காணல் வேண்டும். இதற்கு இது மூலமாக இருக்குமா? எழுத்தமைதியாலும், ஓலைகளின் பழமையாலும் ஏட்டின் பழமையை நிச்சயித்து அந்த அடிப்படையில் தலைமை ஏடு ஒன்றை மூலமாகக் கருதி பாடங்களைத் தொகுத்தல் பயனுடையதாக அமையும். ஏடுகளை வகைப்படுத்தி இனம் காணப் பெற்றால்தான் ஏடுகளின் மொழிநிலை உறுதியாகும். ஏடுகளில் காணப்படும் ஒற்றுமைப்பகுதிகள் ஒன்றுபோல அமைவதைக் கண்டு இனம்பிரிக்கலாம். வேற்றுமைப் பகுதிகள் ஒன்றாக, தவறுகளும், பிழைகளும் குறையும் ஒன்றாகவே அமைவதையொட்டியும் இனம்பிரிக்கலாம். ஏடுகளைத் தொகுத்தபின் அவற்றின் உள்ளே காணப்படும் முற்குறிப்பு பிற்குறிப்புகளை ஆய்தல் வேண்டும். அவற்றுள் காணப்படும் காலம், எழுதியவர் வரலாறு போன்ற குறிப்புகள் ஏட்டின் தரத்தை நிச்சயிப்பதற்குப் பெரிதும் பயன்படுவதாகும். காலப்பழமைக்கு அகச்சான்றையும் புறச்சான்றையும் உறுதிப்படுத்தியபின் அவற்றின் கொடிவழியைக் கண்டு பாடவேறுபாடுகளின் புள்ளி விவரத்தைக் கணக்கிடலாம்.

பாடவேறுபாடுகளைத் தொகுத்தபின் பழைய உருவத்தை மீட்டுருவாக்கம் செய்யமுடியுமா என்பதில் தலைப்படுதல் வேண்டும். அவ்வாறு தலைப்படும்போது ஒற்றுமையான பாடங்கள், சற்று வேற்றுமை காட்டுவது, முற்றிலும் வேறுபட்டன என மூவகையாகப் பிரித்துக்கொண்டு ஒப்பியல் நோக்கில் ஏடுகளையும் பாடங்களையும் இனப்படுத்தவேண்டும். வேறுபாடுகளில் ஒரு விதிமுறை இருக்கிறதா என்பதை நுணுகிக் காணலாம்.

ஏடுகளைத் திரட்டும்போது இது தொடர்பான உரைநடை நூல்களையும் பிற உரைநூல்களையும், பிறநூல்களில் எடுத்தாளப்பெறும் மேற்கோள் வடிவங்களையும் தொகுத்தல் இன்றியமையாததாகும். புறநானூற்றில் சில பாடங்கள் பாட்டின் பழைய உரையால் திருத்தம் பெற்றமை இங்கே சுட்ட வேண்டுவதாம். இவை போன்றே மொழிபெயர்ப்பு நூல்களையும் செய்திகளையும் கூட திரட்டி - நோக்குதல் வேண்டும். இவற்றையெல்லாம் திரட்டிப் பாட வேறுபாடுகளைத் தொகுத்த பின்பு, முந்தைய திராவிட மொழியமைப்பு எவ்வாறிருந்தது என்பதை ஆராய்ந்தால் பழைய நூல்களின் பதிப்புக்கு அது வகை செய்வதாக அமையும். பழந் திராவிட மொழியாய்வும், சொல் வழக்குகளும் பிறநூல்களில் காணப்பெறும் ஒப்புமை வடிவங்களும் பொருள்களும் பாடங்களைத் தேர்வதில் பெரிதும் துணைநிற்பனவாம்.

பெரும்பாலான ஏடுகளில் ஓரடி, ஒரு சொல் மாற்றமின்றித் காணப்பெறின் அது மூலமாக இருக்க முடியும் எனக்கருதலாம். அது பிழையான வடிவமாக இருப்பினும் அதனை ஏற்கவேண்டும். சொல்லும் பொருளும் மயக்கத்தை உண்டாக்குகிறதா என்பதைக் கூர்ந்து பார்த்து ஏற்பது, ஏலாதது, ஐயமானது என அவற்றைக் துணிந்து பொருள்பொருத்தம் காணமுற்பட வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கும் பாடம் யாப்போடு உடன்பட்டு உள்ளதா? நூல் முழுவதும் யாப்பமைதி எவ்வாறுள்ளது? நூலாசிரியரின் யாப்புக்கொள்கை யாது? சொல்லின் இலக்கண அமைதி இடங்கொடுக்கிறதா? ஒரு குறிப்பிட்ட புலவரின் தொடரை, சொல்லை ஆயும்போது வேறு இடங்களில் அவர்தம் தொடர்கள், சொற்கள் எவ்வாறு உள்ளன என்பதை ஆராய்ந்தால் அவர்தம் யாப்புக் கொள்கை புரிந்துவிடும் பரணர் பாடல்கள் எல்லாமே இப்படித்தான் இருந்தனவா? என்றவாறெல்லாம் ஆய்ந்து துணிதல் வேண்டும். இவ்வகை இலக்கண இலக்கிய மொழி ஆய்வு அக்குறிப்பிட்ட நூலில், குறிப்பிட்ட காலத்தைச் சார்ந்த இலக்கிய வகையில் அப்பதிப்பாசிரியர்க்கு மிகுந்த பயிற்சியிருந்தாலொழியச் சிறக்காது எனலாம்.

இவ்வாறெல்லாம் செய்யுமுன் ஏடுகளைத் தொகுத்த உடனே தள்ள வேண்டியவற்றை உடனே தள்ளிவிட வேண்டும். இது நம்பிக்கைக்குரிய ஏடன்று - இவ்வளவு பிழை மலிந்ததைத் சான்றேடாகக் கொள்ளலாமா? எனச் சிந்தித்துத் தள்ளுவது போலவே பாடவேறுபாடுகளிலும் தள்ளத் தகுந்த வடிவங்கள், பொருளற்ற வடிவங்கள், முரணான வடிவங்கள் போன்றவற்றைத்

தள்ளிக் கழித்தபின் பொருளான பாடங்களுள் தேர்வு செய்தல் சிறந்ததாக அமையும்.

எவ்வளவு விழிப்பாகச் செய்தாலும் மூல நூலாசிரியரின் பாடத்தை மீட்டுருச் செய்துவிட்டோம் என்று கூறிவிட முடியாது. மூல நூலாசிரியர்க்கு நெருங்கிய வடிவுக்குச் சென்றிருக்கிறோம் என்ற நிலை கிடைத்தாலும் அப்பதிப்பு வெற்றிபெற்ற பதிப்பாகக் கருதமுடியும்.

சுருங்கச் சொல்லின் பாடத்தெரிவுக்குக் கீழ்க்கண்ட வழிகளில் ஆய்வு செய்தல் சிறந்த பயனைத் தருவதாகும்.

1. மூலஏடு ஒப்பு
2. பலசுவடி ஒப்பு
3. எடுத்தாண்ட நூல்கள் ஒப்பு
4. உரைகள் ஒப்பு
5. பொருட்பொருத்தங் காணல்
6. இலக்கண அமைதி காண்டல், செய்யுளாயின் யாப்பமைதி நோக்குதல்
7. சொல்வழக்கு, சொல்லாட்சி ஆய்தல்
8. செய்யுளும் உரையுமாயின் உரையால் தெளிதல்
9. மொழிபெயர்ப்பாயின் மூலநூல் ஒப்பு
10. நூலின் பொதுக் கோட்பாட்டில், நோக்கில், அமைப்பில் மாறுபடாமை ஆய்தல்.
11. மொழிநூல் ஒப்பு
12. பிறநூல் ஒப்பீடு

பொருட்பொருத்தம் கருதுதல்

பொருட்பொருத்தமும் பொருட்செறிவும் கருதிப் பாடங்களைத் தேர்வு செய்தல் சில நேரங்களில் மூலபாட ஆய்வுக்குச் சிறந்ததாகத் தோன்றும். இலக்கணமரபு, யாப்பமைதி எனப் பல்லாற்றானும் ஒத்து விளங்குகின்ற பாடங்களுள் ஒன்றைத் தெரிவு செய்வது எவ்வாறு? இச்சூழலில் அப்பாடங்களுள் பொருட்பொருத்தமும் பொருட்செறிவும் கொண்டு நூலின் மையக் கருத்தை-சூழலைப் பெரிதும் பொருந்தியிருக்கின்ற பாடங்களைத் தேர்வு செய்தலே சிறந்ததாக அமையும்.

'ஆவொடு பட்ட நிமித்தம் கூறலும்' எனும் பொருளதிகாரப் பகுதியுள் (தொல். பொருள். நச். 177) 'வேள்விக் கபிலையாற் பயங்குறுதலும், குன்றாது கலநிறையப் பொழிதலானும்' என்பது முந்தைய அச்சுப் பாடமாகக்

காணப்படுகிறது. இப்பகுதியின் பொருட்பொருத்தம் கருதி, (பா, யாவாகத் தவறாகப் படிக்கப்பட்டது என்பதையுணர்ந்து) கழகப் பதிப்பினர்,'வேள்விக்கபிலை பாற்பயங் குன்றுதலும்' எறு மாற்றி அச்சிட்டுள்ளனர். உள்ளபடியே பாராட்ட வேண்டிய பாடமாகும் இது.

இவ்வாறே மற்றோரிடத்து (தொல். பொருள். நச். 187) 'தலைவியும் தலைவனும் துணிந்தும் இருத்தலிற் பிரிந்துரையார் எனப் பன்மையாற் கூறினர்' என்றிருப்பதன் பொருட் செறிவின்மையையுணர்ந்து சிறப்பின்மையையுணர்ந்து (ன-ண வாகப் படிக்கப்பட்டுத் தவறாகப் பதிப்பிக்கப்பெற்றது) கழகப் பதிப்பினர் 'தலைவியும் தலைவனும் துனித்தும் இருத்தலிற் பிரிந்துரையார் எனப்பன்மையாற் கூறினர்' எனப் பதிப்பித்துள்ளனர். அகப்பொருளில் துனித்திருத்தலுக்குள்ள சிறப்பிடத்தைக் காண இப்பொருட்செறிவு கொண்ட பாடத்துணிவு பாரட்ட வேண்டுவதேயாகும்.

அகநானூற்றில் (31) 'சென்றார் என்பிலர் தோழி' என்ற பகுதிக்குச் 'சென்றார்.அன்பிலர் தோழி' என்றொரு பாடம் கிடைக்கும் போது 'சென்றார் அன்பிலர் தோழி' என்னும் பாடத்தைத் தேர்வு செய்வதுதானே பொருட் பொருத்தமுடையதாகும்?

இலக்கண அமைதி காணல்

இலக்கண அமைதி கொண்டும் யாப்பமைதி கண்டும் பாடங்களைத் தெரிவு செய்தல் பல நேரங்களில் பொருத்தமாக இருப்பதைக் காணலாம். சங்க இலக்கியங்களில் பயிலப்பெறும் சேர நாட்டு ஊரான மாந்தை, பதிப்பாசிரியப் பெருமக்களால் (சி. வை. தா., வையாபுரியார்) மாந்தை, மரந்தை என்றெல்லாம் மாற்றி மாற்றிப் படிக்கப்பெற்றது. ஊர்ப்பெயர் என்னவாக இருக்கும் என்பதை உறுதியாகக் கூறமுடியவில்லை. ஆயின், இராகவையங்கார் அவர்கள் அச் சொல் இடம்பெறும் வெண்பாவைச் சுட்டிக் காட்டி வெண்பாவிற்கு வேண்டியதளை, தொடையமைப்புகளையும் விளக்கி அது 'மாந்தை' என்றுதான் படிக்கப்பெறுதல் வேண்டும் என்பதை நிறுவினார்கள்.

இவ்வாறே சங்க இலக்கியத்தில் பயிலப்பெறும் மரவகை ஒன்றின் பெயரும் பல்வேறு வகையான வடிவுடன் காட்டப்பெற்றது. 'யா' எனப்படும் அம்மரத்தின் பெயரை 'யாஅ' எனவும் 'யாம்' எனவும் தவறாகக் கணித்தனர் என்பதை அவர்கள் கொண்ட விளக்கங்கள் காட்டுகின்றன. செய்யுளின் ஓசை கருதி

வரும் அளபெடை, சந்தி கருதிவரும் எழுத்துக்கள் அப்பெயரைக் காட்டுவதில் மயக்கமூட்டின.

மென்சினை யாஅம் நெறிக்கும்-குறுந். 37
நிலையுயர் யாஅந் தொலையக் குத்தி-குறுந். 307
யாஅங் கொன்ற மரஞ்சுட்டு-குறுந். 198

இங்கெல்லாம் அளபெடை ஓசை கருதியே இடம் பெற்றுள்ளது. ஆயின் அதையும் பெயருடன் இணைத்து யாஅம் எனவும், சந்திகளைச் சேர்த்து யாவும் எனவும் கருதிய பதிப்பாசிரியர்கள் உண்டு. 'மரப்பெயர்க்கிளவி மெல்லெழுத்து மிகுமே' -தொல். உயிர்மயங். 15,

குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக் கிளவி - தொல். உயிர்மயங். 24

யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே' தொல். உயிர்மயங். 27

என வருகின்ற நூற்பாக்களைக் காணும்போது 'யா' என்பதுதான் அதன் பெயராகும் என்பது வெள்ளிடைமலையாகிறது. உ.வே. சாமிநாதையரைக்கூட இந்த இடம் மயக்கிவிட்டது போலும். இவ்வாறு இலக்கண மரபுகளை-யாப்பு வடிவங்களைக் கொண்டும் பாடங்களைத் தெரிவு செய்தல் அறிஞர் தொழிலாகும்.

பாடவேறுபாடு-வடிவவேறுபாடு

ஒரே நூலின் படிகளாகவுள்ள சுவடிகளுள் காணப்படும் செய்தி வேறுபாடுகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் என்பர். ஒன்று பாட வேறுபாடு, மற்றொன்று வடிவவேறுபாடு. இவை இரண்டுக்கும் உள்ள வேற்றுமை நுண்ணிது.

பாடலின் கருத்தை மாற்றுவதாகவோ தொடரின் பொருளுக்கு மாற்றுக் கருத்தைத் தருவதாகவோ ஒரு சொல்லுக்கோ தொடருக்கோ மாற்றுச் சொல்லோ, மாற்றுத் தொடரோ காணப்படுவது பாடவேறுபாடாகும். இது ஓசையமைப்பிலும், யாப்பமைதியிலும்கூடப் பொருந்திக் காணப்படுவதாம்.

'மாதர்கள் கற்பின்மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்' இக் கம்பராமாயண அடிக்கு, (கைகேயி சூழ்வினைப். 70)

'மாதர்கள் வயதின்மிக்கார் கோசலை மனத்தைஒத்தார்' என்பது பாடவேறுபாடாகும். இவ்வேறுபாடுகளுள் கம்பரின் உயர்ந்த நோக்கை-காப்பியத்தின் ஒட்டுமொத்த பார்வையை-சொற்களின் ஆழமான பொருளுணர்ச்சியைக் கருத்தில் கொண்டு நாம் உரியவற்றைத் தேர்ந்தெடுத்தல் வேண்டுவதாகும். இத்தேர்வுக்கு மொழிப்பயற்சி இன்றியமையாதது. சிந்தனைத் தெளிவும் மொழியறிவும் காப்பியத்தை-நூற்பொருளை முழுவதுமாக ஊடுருவிய நுண்ணறிவும் இன்றியமையாத்தாகும். திருக்குறளுக்குச் சுகாத்தியர் கண்ட மாற்றங்கள்கூடப் பாடவேறுபாடுகள் (தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்-தக்கார் தகவிலர் என்பது அவரவர் மக்களாற் காணப்படும்) போல்வனவே.

வடிவவேறுபாடு என்பதும் கிட்டத்தட்ட இதுபோல்வதோர் வேறுபாடே, எனினும், இது பெரும்பாலும் பொருளடிப்படையில் பெரிய மாற்றத்தை உருவாக்குவதாக அமையாது. அதாவது பாடலின், தொடரின் முழுக்கருத்தை மாற்றுவதாக இவ்வேறுபாடு காணப்படாது.ஒரு சொல்லில், தொடரில் காலப்போக்கில் காணப்படும் உருமாற்றமாகவே இதனைக் கருதலாம்.

புலைத்தி-புலத்தி - குறுந். 230
புலைத்தி-புலச்சி - குறுந். 230
கொடுங்கால்-கொடுந்தாள் - குறுந். 324
தப்பற்கு-தப்பிற்கு - குறுந். 292
அவிழ்ந்த-விரிந்த - குறுந். 282

இவை பொருளடிப்படையில் பெருமாற்றத்தைத் தரவில்லை. ஆயின் இவ்வகை ஒத்த பொருளுள்ள சொற்களிலேகூடச் சிலபொழுது பொருள்மாற்றத்தை நாம் சந்திக்கவேண்டி வரும் என்பதும் இங்குச் சுட்டத் தகுவதாம்.

சினை என்பதற்கு மாற்றுச் சொல்லாகக் கிளை என்பது வடிவவேறுபாடாகத் தோன்றலாம். அதுவே முட்டை என்ற பொருளையும் பயந்து நிற்பதால் ஆண்டு மயக்கமும் நேர்தல் கூடும். இவ்வகை வடிவ வேறுபாட்டைக் கூர்ந்து நோக்கி, மொழி வரலாற்றுக் காலப்போக்கோடு, நூல் தோறிய காலச் சூழலோடு நாம் நுண்ணிதின் வேறுபடுத்தி இது நூலின் சொல்லாக இருக்கக்கூடும், இது பிற்கால வழக்கினது என்றெல்லாம் உறுதி செய்யலாம். சங்க இலக்கியத்துள் கடந்தான் என்ற பொருளுக்கு இறந்தான் என்ற சொல்லை விடுத்துச் செத்தான் என்ற

வடிவவேறுபாடு காணப்பட்டால் எவ்வளவு பொருள்மாற்றும் வந்துவிடும்? இவ்வித வேறுபாடுகளை நுண்ணிதின் உணர்ந்து அவ்வக்காலத்துத் தோன்றிய பிறநூல்களை எல்லாம் ஒப்பீடு செய்வதால் தெளிவாக்கிக் கொள்ளல் கூடும்.

திவ்வியப் பிரபந்தம் முதலாயிரம் முகவுரையில் அதன் பதிப்பாசிரியர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கள் இவ்விரண்டையும் பற்றிக் கூறியுள்ள கருத்து இங்குச் சிந்திக்கத் தகுவதாகும்.

> 'பாடபேதம் என்று குறிப்பது ஒரு சொல்லுக்குப் பிரதியாக வரும் பிறிதொரு சொல்லை, உதாரணமாக, 'கோளரி மாதவன்' (556) என்பதற்குக் 'கோளரி வாமனன்' என்று வருவது போல்வன பாடபேதங்கள். 'துரியோதனன்' 'திரியோதனன்' (175) 'முழுசாதே-முழுவாதே' (734) என வருவன போல்வன ரூபபேதங்கள்.'

பொருளடிப்படையில் இவைபெருமாற்றத்தை உண்டாக்காவிட்டாலும் மூல நூலாசிரியரின் சொல்லுக்கு மாறுபட்ட எதுவும் பாடவேறுபாடாகக் கொள்ளத் தகுவனவேயாம் எனக் கருதுவாரும் உளர். வளர்ந்துவரும் மொழிநிலை காலந்தோறும் சொற்பொருள் மாற்றத்தை உருவாக்கி நிற்பதாகும். ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில் நாற்றம் என்ற சொல்லின் பொருள் இந்நூற்றாண்டில் கொள்ளும் பொருளோடு முற்றிலும் மாறுபட்டதாகும். ஒரு காலத்தில் தோன்றிய சொல்லுக்கு வேறொரு காலத்தில் மாற்றுச் சொல் போட்டுவிட்டு அதனை மற்றொரு காலத்தில் கற்பார் முற்றிலும் மாறுபட்ட பொருளைக் காணவேண்டிய சூழலுக்கு ஆளாதல் தவிர்க்க முடியாததாகும். எனவே மாறுபட்ட சொல், தொடர் எதுவும் பாடவேறுபாடே எனக் கொள்வதில் தவறேதுமில்லை எனலாம்.

சொற்திரிபுகள், சொற்குறைகள் திரிந்த வழக்குகள், மாறுபட்ட பேச்சு மொழிகள், போலி, மரூஉ மொழிகள், கொச்சை வடிவங்கள், கிளை மொழிகள், வட்டார வழக்குகள், பிறமொழிச் சொற்கள் போன்றனவும் வடிவ வேறுபாடுகளாகக் கருதத் தக்கனவே. தொடங்கற்க-துடங்கற்க, பைய-பய, பசலை-பயலை, தசை-சதை, இயம்பினான்-சொன்னான், துளை-தொளை, வெண்ணெய்-வெண்ணை, தஞ்சாவூர்-தஞ்சை, சொன்றி-சோறு, அழகு-சுந்தரம், அழகு-ரம்யம், ஞமலி-நமலி, ஞெண்டு-நண்டு போன்ற வேறுபாடுகளும் நூல் தோன்றிய காலச் சூழலுள்,

வட்டாரச் சூழலுள், மொழி வழக்குள் மயக்கத்தை ஊட்டுவதால் இவ்வேறுபாடுகளையும் நாம் பாடவேறுபாடுகளாகவே கருதலாம்.

இவ்வகை வேறுபாடுகளையெல்லாம் நுண்ணிதின் நோக்கி, பிழைபட்டன இவை, மாறுபட்டனஇவை, தள்ளத்தக்கன இவை, கொள்ளத்தக்கன இவை என்றெல்லாம் சிந்தித்துத் தெளிதில் பதிப்பாசிரியர் கடனாம். இவற்றைத் துணியும்போது இலக்கிய ஆட்சி, வழக்குமொழி, மொழிமரபு ஆகியவற்றை ஒப்புநோக்கியும், மொழி பெயர்ப்பு நூல்களுக்கு மூலநூல் கொண்டும் உரை நூல்களுக்கு உரைப்பொருள் கருதியும் அவ்வக்காலத்தின் இலக்கண அமைதி, ஓசையமைதி, எதுகை மோனையமைப்பு ஆகிய மொழியின் பலதரப்பட்ட அமைதியுடன் பொருள் பொருத்தத்தைக் கணித்துத் தேர்வு செய்தல் நலம் பயப்பதாகும்.

பாடவேறுபாடுகள் தருதல்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பல சுவடிகளை ஒப்புநோக்கிக் கம்பராமாயணத்தைப் பதிப்பித்து வெளியிட்டது. அதில் 5, 000 பக்கம் மூலம், 5,000 பக்கம் உரை, 5,000 பக்கம் பாடவேறுபாடுகள் என்னும் விகிதத்தில் மூலநூலின் அளவுக்குப் பாடவேறுபாடுகள் பல்கியிருப்பதைக் காணலாம். அவர்கள் பார்வைக்குக் கிட்டாத-பதிப்புக்கு எடுத்துக் கொள்ளாத கம்பராமாயணச் சுவடிகள் மேலும் சிலவாக இருத்தல் கூடும். அவ்வாறானால் இந்த 5,000 பக்கத்தையும் தாண்டி 6,000 பக்கம் மூலநூலைவிட பாடவேறுபாடுகளின் அளவு மிகுந்து தோன்றுவதற்கு வாய்ப்பு உள்ளமை நாம் உணரலாம்.

டாக்டர். உ.வே. சாமிநாதையர், பேராசிரியர். ச. வையாபுரிப் பிள்ளை போன்ற பதிப்பாசிரியப் பெருந்தகையினர் வெளியிட்ட நூல்களில் பாட வேறுபாடுகளையும் நாம் காணலாம். அவ்வாறே சைவ சித்தாந்த மகாசமாஜத்தினரின் திருவாசகம், திருமந்திரம், மர்ரே ராஜமையரின் திவ்வியப் பிரபந்தம் போன்ற நூல்களிலும் அவர்கள் பாடவேறுபாடுகளைத் தொகுத்துத் தந்துள்ளனர். வையாபுரிப்பிள்ளையவர்கள் வெளியிட்ட சங்க இலக்கியப் பதிப்புக்கும் பாடவேறுபாடுகள் தொகுக்கப்பெற்றன. ஆயின் அப்பாட வேறுபாடுகள் பொருளாதாரத் தட்டுப்பாடு கருதி நூலுள் சேர்க்கப்பெறவில்லை

சில நூல்களில் முதற்பதிப்பில் கொண்ட பாடங்கள் அடுத்த பதிப்புகளில் தள்ளப்பெற்றும் காணப்படுகின்றன. மொழி அறிவும், பிறநூல் ஒப்பும் பெருக மூலபாட ஆய்வின் தரம் உயர்வதை இவை

காட்டுகின்றன எனலாம். இவற்றை உற்றுநோக்கும்போது பாடவேறுபாடுகளையும் பதிவு செய்தல் இன்றியமையாததாகத் தோன்றுதல் காணலாம்.

பாடங்களைச் சீர்தூக்கித் தேர்வு செய்த பின்பு பிறபாடங்களை ஒதுக்கி இருட்டடிப்பு செய்துவிடுதல் பதிப்பாசிரியர் நேர்மையாகாது. தாம் கண்ட பாடங்களை ஏதேனும் ஓரிடத்தில் அடிக்குறிப்பாலோ, வேறோரிடத்துத் தொகுத்தோ காட்டுதல் வேண்டும். இவ்வாறு பாட வேறுபாடுகளையெல்லாம் தொகுத்துத் தருவது ஆராய்ச்சி முறையில் பதிப்பிக்கும் ஒரு பதிப்புக்கு இன்றியமையாத அமைப்பாகக் கருதப்பெறும்.

பாடவேறுபாடுகளின் தொகுப்பு எல்லோருக்கும் பயன்படுவதன்று. எனினும் ஆராய்ச்சியாளர்கட்கு மொழி பற்றிய பல்வேறு மரபுகள்,வழக்குகளை ஆய்ந்து துணிய இவை பெரிதும்பயன்படுவதாகும். மொழிநூல் வல்லார், இலக்கியச் சுவைஞர், இலக்கணிகள், இலக்கணங்கற்றார், மொழிவழிச் சமுதாயத்தை ஆய்வார், ஒப்பியல் மொழி ஆய்வார் போன்றார்க்கு இவ்வேறுபாடுகள் மொழியின் மரபையும், மாற்றத்தையும், வளர்ச்சியையும் இவற்றின் காரணத்தையும் அறியப் பெரிதும் பயன்தருவனவாம். எனவே சுவடியில் தாம் கண்ட பாடவேறுபாடுகளையெல்லாம் தொகுத்துத் தருவது பதிப்பாசிரியரின் பெருங்கடமையாகும். இவ்வாறு காணப்பெறும் பாடவேறுபாடுகள் எந்தச் சுவடியில் காணப்பட்டன என்னும் விவரத்துடன் அவற்றைத் தருவது மேலும் பயனுடையதாகும், அறமுடையதாகும் எனலாம்.

தவறுகளைத் திருத்தலாமா?

நமக்குக் கிடைக்கின்ற சுவடிகளில் எல்லாம் காணப்படுகின்ற பாட வேறுபாடுகளும் வடிவவேறுபாடுகளும் தவறாகவோ, பொருத்தமற்ற தாகவோ தோன்றுகின்ற சூழல்களும் சிலபோது ஏற்படும். சொற்பிழை, எழுத்துப் பிழை, ஒலிப்பிழை போன்ற பிழைகளை விடுவித்துப் பாடமாற்றப் பிழைகளாகத் தோன்றுகின்ற பிழைகளை என்ன செய்வது? ஓர் ஏட்டிலும் காணாத-ஆனால் பொருத்தமாக இருக்கும் எனக் கருதும் பாடத்தை நாமாகப் புகுத்தலாமா? நூலமைப்பில் உரையமைப்பில் இடமாற்றத்தைச் செய்வதைக் கூட நாம் சுட்டிக்காட்டவேண்டிய அமைப்பியல் மாற்றத்தைச் சுட்டிக்காட்டவேண்டிய கடப்பாடு நமக்குண்டு. அவ்வாறு இருக்க

நாமாகப் புகுத்தும் பாடங்களை அறிஞர் உலகு ஏற்குமா? அது பதிப்பாசிரியர் அறமாகுமா?

ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழையைத் திருத்துவதற்குக்கூட முந்தைய பதிப்பாசிரியர்கள் அஞ்சினர்.

அடியோடு அழிந்தபோகும் பழைய நூல்களை நிலைநிறுத்துவான் புகுந்தேனாதலின் நூலைத் திருத்துவதும் பொருள் இசையச் செய்வதும் என் கடமையன்று. இயன்றளவும் பூர்வரூபம் பெறச் செய்வதும் இயலாதவிடத்து இருந்தபடி உலகிற்கொப்பிப்பதுமே யான் தலையிட்ட தொழில்
(சி.வை.தா. கலி, பதிப்புரை)

'ஏட்டுச் சுவடிகளிற் கண்ட பாடங்களின் வேறுபாட்டைக் கண்டு கண்டு என்மனம் புண்ணாகி இருக்கிறது. இன்னபடி இருந்தால் பொருள் சிறக்குமென்று எனக்குத் தோற்றின இடங்களிலும், பிரதியில் உள்ளதையே பதிப்பித்தேன். என்னுடைய கருத்தையோ, திருத்தத்தையோ சிந்தாமணியில் ஏற்றாமல் மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்துப் பதிப்பித்தேன். பதிப்பிக்கத் தொடங்கிய நூல் எனக்கு ஒரு தெய்வ விக்கிரகம் போல் இருந்தது. அதன் அழுக்கைத் துலக்கிக் கவசமிட்டுத் தரிசிக்க வேண்டுமென்பதே என் ஆசை. 'கைகோணியிருக்கிறது, வேறுவிதமாக அமைக்கலாம்; நகத்தை மாத்திரம் சிறிது திருத்தலாம்' என்ற எண்ணம் எனக்கு உண்டாகவில்லை. அதன் ஒவ்வோரணுவிலும் தெய்வீக அம்சம் இருக்கிறதென்றே நம்பினேன். அழுக்கைநீக்கி விளக்குவதற்கும் அங்கத்தையே வேறுபடுத்தவதற்கும் உள்ள வித்தியாசத்தை நன்றாக அறிந்திருந்தேன்'
(உ.வே. சா. என் சரித்திரம். பக். 389)

இன்னோரன்ன குறிப்புகளைக் காணும்போது நாமாக எதையும் புகுத்துவதோ, திருத்துவதோ அறமாகாது என்பது வெள்ளிடைமலை. எனினும் எழுத்துப்பிழைகளை, வழூஉக்களைத் திருத்தி அச்சிட்டால் அவை குறித்த விளக்கத்தை முன்னுரையில் சொல்லிவிடுதல் இன்றியமையாததாகும்.

முடிவுரை

பாடவேறுபாடுகளைக் கண்டுணர்ந்து பாடத்தெரிவை மேற்கொள்வதில் பதிப்பாசிரியரின் சிந்தனையாற்றல் தலைசிறந்த இடத்தைப் பெறுவதாகும். பாடவேறுபாடுகளைப் பற்றிய ஆய்வில் எல்லாவகைப்பட்ட நோக்குகளிலும் ஆய்வை

மேற்கொண்ட பின்பு, சுயமாகச் சிந்தித்து 'நாம் இப்பாடத்தை ஏன் தேர்வு செய்யவேண்டும்? இத் தேர்வுக்கு நாம் எதைக் காரணமாகக் காட்ட முடியும்? அக்காரணம் அறிஞர் பெருமக்களால் ஏற்கப்படுமா? ஏற்கப் படாதென்றால் அவர்களின் தடைகளுக்கு விடைகொடுக்க முடியுமா? என்பவற்றை ஆழமாகச் சிந்திக்கவேண்டும். மொழிநிலை, காலநிலை, சொல்நிலை இவற்றைத் தெளிந்து தாம் அந்நூலின் தோய்ந்துநின்ற பயிற்சியை வெளிப்படுத்தி நிற்கும்போது, அவர் தேர்ந்தெடுத்த பாடம் சிறந்ததாக விளங்க முடியும் என்பது திண்ணம். அத்தகு பதிப்பாசிரியர்கள் வெளியிட்ட நூல்களை அறிஞர் உலகம் நம்பிக்கையுடன் வரவேற்று மகிழும்.

இன்றைய இலக்கிய இலக்கண ஆய்வுலகம் எவ்வளவோ விரிந்தும் பரந்தும்,ஆழ்ந்தும் விளங்குகிறது. சொல்லடைவுகள், தொடரடைவுகள், பிற அகராதிகள், ஒப்பீடுகள் போன்ற பல வசதிகள் பெருகியமைந்துள்ளன. கணிப்பொறியின் பயன்பாடு இதில் மிகச் சிறந்த நிலையில் பயன்படுவதாக வளர்ந்துள்ளமையும் இங்குச் சுட்டத் தகுவதாம். இந்நிலையில் மொழிநிலை, சொல்நிலை, காலநிலை, இவற்றையெல்லாம் பிறநூல்களுடன், பிற உரைகளுடன், பிற விளக்கங்களுடன், பிற இன மொழிகளுடன் ஒப்பிட்டு ஆய்வது எளிதாகிவிட்டது. இவ்வளர்ச்சியும் வாய்ப்பும் சுவடிப் பதிப்பாசிரியர்க்குப் பெரிதும் துணை செய்வனவாய் அமைதல் மகிழ்வுக்குரியதாகும்.

இவ்வாறெல்லாம் சிந்தித்து ஆய்ந்து வெளியிட்ட நூல்களையும் அறிஞர்தம் கருத்துரைக்கனுப்புதல் நன்று. அவர்தம் கருத்துரையை ஏற்று அடுத்தடுத்த பதிப்புகளில் திருத்தி வெளியிடுதல் மேலும் அந்நூலைச் செப்பம் செய்வதாக அமையும். ஒருமுறை பதிப்பித்து வெளியிட்ட நூல்களை, 'பதிப்பித்து வெளியிட்டாயிற்று, இனி நமக்கென்ன' என்று வாளாவிராமல் அதைப்பற்றிய சிந்தனையைத் தொடர்ந்து செயலாக்க வேண்டும். டாக்டர் உ.வே. சாமிநாதையரின் முதற்பதிப்பு நூல்களையும் அடுத்தடுத்து வந்த பதிப்புகளையும் காண்பார் மேலே கூறியவற்றின் தேவையை நன்கு உணர்வர். பதிப்பாசிரியத் தந்தையாக விளங்கிய சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களின் தொல்காப்பியப் பொருளாதிகாரப் பதிப்புரை இதனை அரண் செய்தல் காணலாம்.

> 'இஃது இப்போது வழுவறப் பிரசுரஞ் செய்யப்பட்டதென்று
> கொள்ளற்க. எனக்குச் சந்தேகம் பிறந்துழியெல்லாந்
> தற்காலத்துப் பெயர் போந்த வித்வான்களாயுள்ளார் பலரையும்

வினவியும் அயனூற் துணிபுகள் மேற்கோள்களோடு சீர்தூக்கியும் இன்றும் ஐயமறுத்துக் கொள்ளாத இடங்கள் அனேகம் உள. அவைகளைக் கூடிய மாத்திரம் பிரதிகளிலிருந்தவாறு அச்சிடுவித்தனன். ஆயினும் பொருட்தொகுதி, போருட் தொகுதி, பேரர் உட்தொகுதி, பேர் அருட்தொகுதி, பேரருட் தேர்குதி, போருட் தேர்குதி, பொருட் தேர்குதி என்றற் தொடக்கத்தனவாய் இன்னும் பல பாடபேதமாகப் படித்தற்கிடம் பெற்றுப் பொருட்டொகுதி என்றெழுதிக் கிடந்த தொன்றையான் அவற்றுள் ஒன்றாக என் சிற்றறிவு சென்றவழிக் குறிப்பிட்டுப் பதிப்பித்தமைபற்றி அதுவே பாடமென்று நிச்சயிக்கற்க. சமுசய நிகழ்வுழியெல்லாஞ் சந்தியை மீளவும் இலக்கணப் பிரகாரம் புணர்த்துத் தீர்க்க பேதத்தையும், புள்ளியையும் நீக்கிப் பாடபேதப் படுத்திப் பார்க்குமாறு வேண்டிக்கொள்கிறேன்' (பக். 6).

பன்னிரண்டு சுவடிகளைத் தேடித் தொகுத்துச் சிறந்த முறையில் ஒப்பிட்டுப் பதிப்பித்தவரின் கூற்றே இது என்பது நினைவில் கொள்ளத் தகுவதாம்.

இது அவர்தம் பதிப்பாசிரிய அறத்தை நிறுவுவதாகவும் திகழ்தல் காணலாம்.

எனவே, பாடவேறுபாடுகளுடன் கூடிய சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடும் பதிப்பாசிரியர்க்கு மொழியறிவும் சிந்தனையாற்றலும் இருந்தால் போதும்..... அவர்வழிச் சிறந்த நூல்கள் வெளிவந்துவிடும் என்று உறுதியாக நம்பலாம். அவர் தேர்ந்தெடுத்த பாடத்தையும் பதிப்பித்த நூலையும் முழுதும் ஏற்று மகிழலாம். அத்தகு மொழியறிவு நிறைந்த சிந்தனையாளர்கள் பலராகத் தமிழன்னைக்கு வாய்ப்பார்களாக.

சுவடிப்பதிப்பில் யாப்பின் இன்றியமையாமை

ப.வெ.நாகராசன்

பழந்தமிழ் நூல்களுள் பெரும்பாலானவை செய்யுளால் ஆனவையாகவே காணப்படுகின்றன. தமிழில் உரைநடை நூல்கள் தோன்றத் தொடங்கியது வீரமாமுனிவர் காலத்திற்கு - அதாவது கி.பி.17ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் எனலாம். எனவே, கிடைக்கின்ற தமிழ்ச் சுவடிகளில் அதிகமானவை செய்யுள் நூல்களே. இதன் காரணத்தை ஆராய்வது இக்கட்டுரைக்கு அப்பாற்பட்டது. எனவே அதனை விடுத்துச் செய்யுள் நூல்களைச் செம்மையாகப் பதிப்பிக்க விழைபவருக்கு யாப்பறிவு மிக இன்றியமையாதது என்பதையும், யாப்பிலக்கணத்தைக் கவனிக்காவிடில் எத்தகைய பிழைகள் நேரிடும் என்பதையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

தமிழில் யாப்பிலக்கணம் நாளடைவில் விரிந்து வளர்ந்துள்ளது. தொல்காப்பியர் காலத்தில் பொருளதிகாரத்தின் ஒரு பகுதியாகச் செய்யுளியல் என்ற அளவில் இருந்த நிலை மாறி, யாப்பிலக்கணம் ஒரு தனித்தகுதியும் பெற்றது. பிறகு அணியும் சேர்ந்து ஐந்திலக்கணமானதை அனைவரும் அறிவர். என்றாலும் மற்ற நான்கையும்விட யாப்பிலக்கண நூல்களே தமிழில் அதிகமாகத் தோன்றின. இலக்கியங்கள் மாறி மாறித் தோன்றியதால் இலக்கணங்கள் புதிதாகத் தோன்ற வேண்டிய இன்றியமையாமை நேர்ந்ததே இதற்குக் காரணம்.

தொல்காப்பியர் கூறும் நேர்பு, நிரைபு போன்ற வாய்பாடுகள், கட்டளையடி போன்ற அடிவகைகள் எல்லாம் மிக விரைவில் வழக்கொழிந்தன. நாயன்மார், ஆழ்வார்களின் தோற்றத்தால் பாவினங்கள் மிகுதியும் செல்வாக்குப் பெற்றன. யாப்புவகைகள் விரிய விரிய, யாப்பு நூல்களும் புதியனவாகத் தோன்றத் தொடங்கின. பாரதியாரின் காலத்திற்குப் பிறகு தோன்றிய புலவர் குழந்தையின் யாப்பதிகாரம், சிந்துப் பாடல்களுக்குச் சிறந்தமுறையில் இலக்கணம் கூறிச்செல்வதை இங்குச்சிந்திக்கலாம். இவற்றிலிருந்து தமிழில் யாப்பியல் மற்ற

துறைகளை விட விரிவாகவும் விரைவாகவும் வளர்ந்துள்ளது என்பது வெளிப்படை.

ஒரு செய்யுள்நடையிலமைந்துள்ள ஓலைச் சுவடியைப் பதிப்பிக்க முயலும் பதிப்பாசிரியர் முதலில் அக்காலத்தின் யாப்பு நிலையைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். அகவல், வெண்பா, கலிப்பா எனும் சங்கநூல் யாப்புகளை மட்டும் அறிந்த ஒருவர் பாவினங்கள் நிறைந்த பிற்கால நூல்களைப் பதிப்பிக்க இடர்ப்படுவர். யாப்பருங்கலக் காரிகை கற்றுத் தேறிய புலவரும், சந்தப் பாடல்களாகிய திருப்புகழ், வகுப்பு, வண்ணங்களில் தடுமாறுவர். எனவே எத்தகைய நூல் பதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறதோ அதில் பயின்றுள்ள பா மற்றும் பாவினங்களைப் பற்றிய தெளிவான அறிவு அப் பதிப்பாசிரியருக்கு மிக மிக இன்றியமையாது வேண்டப்படுகிறது.

ஏட்டுச் சுவடிகளில் மெய்யெழுத்துகட்குப் புள்ளியின்மை, சில உயிர்களில் குறில் நெடில் வேற்றுமையின்மை, எழுத்து மாற்றங்கள் என்பன போன்ற வேறுபாடுகளால் விளையும் சிக்கல்களையே நாம் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறோம். இந்த வேறுபாடுகளை ஊக்கமும் கூரிய அறிவும் உள்ள ஒரு மாணவர் குறுகிய காலத்தில் பயின்றுவிட முடியும். ஆனால் இலக்கிய மரபு யாப்பறிவு என்பனவற்றைத் தெள்ளத் தெளிய உணர அவருக்கே சற்றுக் காலம் பிடிக்கும். எனவேதான், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள், "ஏட்டுப் பாடங்கள் பரிசோதிக்கப்படல் வேண்டும். இவ்வாறு பரிசோதிப்பதற்கு ஏடுகளை வாசிப்பதில் தக்க பயிற்சி உடையவர்களே உரியர். பயிற்சியற்றவர்கள் ஏடு வாசிப்பதால் பெரும்பிழைகள் நேரிடுதல் கூடும். பயிற்சி என்ற அளவில், ஏடுகளைச் செய்யுளோசை, பொருள் முதலியவற்றைக் கவனியாதபடி வாசித்தல் மட்டும் அன்று. அது போதுமானதல்ல. செய்யுளிலக்கணம் முதலியவற்றிலும் தக்க பயிற்சியுடையாரே இதற்கு உதவக் கூடியவர்கள்" என அழுத்தமாக வலியுறுத்துகிறார் (காரைக்குடிக் கம்பன் கழகத்தில் 1950ஆம் ஆண்டின் கம்பன் விழா உரை). இவ்வுரையில் ஏடுகளைச் செய்யுளோசை, பொருள் முதலியவற்றைக் கவனியாதபடி வாசித்தல் என்பது புள்ளியின்மை முதலாகக் கூறப்படுகின்ற சுவடி எழுத்திற்கே உரிய இயல்புகளை மட்டும் அறிந்தவராய், யாப்பு, இலக்கிய மரபு அறியாதவராய் உள்ள நிலையையே சுட்டுகிறது. பேரா.வ.அய்.சுப்பிரமணியம் அவர்களும், "இலக்கிய ஆசிரியர் கையாளும் செய்யுளமைப்பு முறையையும் நன்கு தெரிதல் சுத்தப் பதிப்பிற்கு இன்றியமையாதது. பாடத்தெளிவு இல்லாத இடமொன்றில் மட்டும் செய்யுளமைப்பு கெட்டிருக்குமாயின்,

இருக்கும் பாடம் தவறானது என்பது கூறாமலே விளங்கும்" (சில கட்டுரைகள் பக்.120) என்று கூறுவதிலிருந்து பாட நிர்ணயத்திற்கு யாப்பறிவின் இன்றியமையாமை உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்குகிறது.

இனி மு.கோ.இராமன் அவர்கள் ஓலைச்சுவடிப் பதிப்பில் எவ்வாறெல்லாம் பிழைகள் நேருகின்றன என்பதனை விளக்கமாக எடுத்துக்காட்டுவதன் பொருட்டுத் தம் சுவடியியல் பயிற்சிக் கையேட்டில் மொத்தம் 150 தவறுகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். இவற்றை எழுத்துமிகை, எழுத்துக்குறைவு, குறில்நெடில் மயக்கம், புள்ளி மயக்கம், எழுத்து மயக்கம், பாடலமைப்பு, பலவகை என்ற ஏழு பகுதிகளாகப் பிரித்துள்ளார். அவர் காட்டியுள்ள 150 பதிப்புப் பிழைகளுள் 77 பிழைகளை யாப்புக் கண்கொண்டு பார்த்திருந்தால் தவிர்த்திருக்கலாம். எனவே மு.கோ.இராமன் அவர்களின் ஆய்விலிருந்தே சுவடிப்பதிப்பில் நேருகின்ற பிழைகளிற் செம்பாதி யாப்பிலக்கணத்தைச் சரியாகக் கவனிக்காததால்தான் நேருகின்றது என்பதும், மற்ற எல்லாவகையான தவறுகளும் சேர்ந்து அடுத்த பாதியாக அமைகின்றன என்பதும் உறுதியாகப் பெறப்படுகிறது.

அரைத்த மாவையே திரும்பத்திரும்ப அரைப்பதுபோல் அவர் காட்டிய பிழைகளையே மறுபடியும் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்காமல் சுவடிப்பதிப்பில் எவ்வாறெல்லாம் யாப்புப் பிழைகள் காணப்படுகின்றன என்பதனை வேறு சில பதிப்புகளிலிருந்து எடுத்துக்காட்டி விளக்க விரும்புகிறேன். நான் காட்டாக எடுத்துக் கொண்ட நூல்கள் யாவும் சுவடிப்பதிப்புகளே. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், தஞ்சை சரசுவதிமகால் ஆகிய புகழ்பெற்ற இரு நிறுவனங்களின் வெளியீடுகளான இவை பேரறிவும், நீண்ட அனுபவமும் பெற்ற மாபெரும் புலவர்களால் பதிப்பிக்கப்பெற்றனவாகும். அப்பிழைகளை இங்கு எடுத்துக்காட்டுதல் அவர்களைக் குறை கூறுவதற்காக அன்று. அத்தகைய யானைகளுக்கே அடிசறுக்குமென்றால் சுவடிப் பதிப்பில் ஏற்படுகின்ற யாப்புச் சிக்கல் எத்தகையது என்பதை உய்த்துணர வைப்பதே இதன் நோக்கம் ஆகும்.

நான் காட்டக் கருதும் பதிப்புப் பிழைகளை யாப்பிலக்கண நெறியிலேயே எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற முறையில் காட்டி இறுதியில் சிலவற்றை இணைக்க விழை கிறேன்.

எழுத்து

அ. புள்ளிமயக்கம்

ஓலைச்சுவடிகளில் மெய்யெழுத்துகள் புள்ளி பெறுவதில்லை என்பதும் அதனைப் பதிப்பாசிரியரே இடவேண்டும் என்பதும் நாமனைவரும் நன்றாக அறிந்த ஒன்று. ஒரெழுத்தைச் சரியாகப் படிப்பதற்கு யாப்பறிவு எவ்வளவு இன்றியமையாதது என்பது இப்பகுதியில் காட்டப்படும். இது உயிர்மெய்யை மெய்யெழுத்தாகக் கொண்டது எனவும், மெய்யெழுத்தை உயிர்மெய்யாக மயங்கியது எனவும் இரு பிரிவாகக் காட்டப்படும்.

1. உயிர்மெய்யை மெய்யெழுத்தாகக் கருதிய மயக்கம்

சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம் வெளியிட்ட தூதுத்திரட்டு என்னும் நூலில், பெரிய தம்பிப்பிள்ளை மான்விடுதூது என்னும் ஒரு சிற்றிலக்கியமும் இடம் பெற்றுள்ளது. அத்தூதின் 58 ஆவது கண்ணி கீழ்க்கண்டவாறு உள்ளது (பக்.5)

> கட்டியமே கூற ரதிகண்ணார் மயங்கிவர
> மட்டார் மகிழ்மலர் சூடி - இட்டமாந்

இக்கண்ணியில் இரண்டாமடியின் மூன்று நான்காம் சீர்களுக்கிடையே வெண்டளை அமையவில்லை. கலிவெண்பா வாலியன்ற தூதுப் பிரபந்தத்தில் தளை இன்றியமையாதது. மோனையும் அமையவில்லை. மகிழமலர் என்பதனை மகிழ்மலர் எனப் படித்ததே குழப்பத்திற்குக் காரணம். இக்கண்ணி பின் வருமாறுதான் இருக்க வேண்டும்.

> கட்டியமே கூறரதி கண்ணார் மயங்கிவர
> மட்டார் மகிழ மலர்சூடி·இட்டமாந்

அதே நூல் 11ஆம் பக்கத்தில் உள்ள 62ஆவது கண்ணி,

> சாந்திருக்கும் கும்பத் தனமடவார் கண்போல்
> வாய்ந்திருக்கும் பூங்குவளை மாலிகையான்

என உள்ளது. இதில் கண்போல் வாய்ந்திருக்கும் என்றால் வெண்டளை பிறழ்கிறது. எனவே இங்கு லகரத்தை உயிர்மெய்யாகக் கண்போல என்றே படிக்க வேண்டும்.

மேலும் அதே பக்கத்தில் 66 ஆவது கண்ணி,

தென்னா லூரங்காள் தேவி இருபதத்தை
என்னாளும் போற்றிவள ரிங்கிதவான்

என உள்ளது. இங்கு முதலடியில் தளை தட்டுகிறது. பொருளும் தெளிவில்லை. இங்கு ளகரத்தை உயிர்மெய்யாக்கித்

தென்னாலூ ரங்காள தேவி இருபதத்தை

என்றால் சரியாகிவிடும்.

2. மெய்யெழுத்தை உயிர்மெய்யாகக் கருதிய மயக்கம்

முன்சொன்ன பெரியதம்பிப்பிள்ளை மான்விடு தூதிலேயே 49 ஆம் கண்ணி (பக்.4) பின்வருமாறு உள்ளது.

அன்னங் கொடுத்து அரவின் மணியளித்தும்
சொன்னமொழி தப்பாத துரந்தரீகன்

என உள்ளது. தப்பாத துரந்தரீகன் என்றால் காய் முன் நிரை வந்து வெண்டளை பிறழ்கிறது. எனவே இதனைத், தப்பாத் துரந்தரீகன் என்றுதான் பதிப்பிக்க வேண்டும். தகர மெய்யை உயிர் மெய்யாகக் கொண்ட பிழை இது.

மேற்படி நூல் 28ஆம் பக்கத்திலுள்ள 112 ஆவது கண்ணியின் பதிப்பு வடிவம் வருமாறு:-

சிவனடிக்கீ ழாய்வணங்கும் செவ்வியா லதன்மேல்
துவளும் பணிகலந்தச் சூழ்வால்.

இதில் செவ்வியா லதன்மேல் என்பது நிரையொன்றாசிரியத் தளை ஆகிறது. இதற்குக் கலிவெண்பாவில் இடமே இல்லை. இது லகர மெய்யை உயிர் மெய்யாகக் கருதியதால் வந்த பிழை. யாப்பு மட்டும் அன்று. பொருளிலும் தெளிவின்மை வந்துவிட்டது. சரியான வடிவம் இவ்வாறு இருத்தல் வேண்டும்.

சிவனடிக்கீ ழாய்வணங்கும் செவ்வியால் தன்மேல்
துவளும் பணிகலந்த சூழ்வால்.

ஆ. எழுத்து மிகை

சுவடி எழுத்தர்கள் சில இடங்களில் சில எழுத்துகளைத் தாமாகச் சேர்த்துவிடுவதுண்டு. இதனால் தளையும், சிற்சில இடங்களில் பொருளும் மாறுபடக்கூடும். இதனை அறிந்து களையவும் யாப்பறிவே துணைபுரியும் என்பது அடுத்துக் காட்டப்பெறுகிறது.

சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலக வெளியீடாகிய கலம்பகக் கொத்து என்னும் நூலில் பேரைக் கலம்பகம் ஒன்று. அதன் 6ஆம் பாடலின் இரண்டாம் அடி பின்வருமாறு உள்ளது.

கழைத்ததிருப் பாவிசை கண்டருள் வோர்குழைக் காதர்நன்னாட்

இப்பா நிரையசைக் கட்டளைக் கலித்துறையாகும். இது மெய் ஒழியப் பதினேழு எழுத்துகளை உடைய அடிகளானியன்றது. இவ்வடியைப் படித்துப் பார்த்தால் கட்டளைக் கலித்துறை ஓசையின்மை எளிதில் புலப்படும். கூர்ந்து பார்த்தால் ஒரு தகரம் இடையே புகுந்து ஓசையைக் கெடுப்பது வெளியாகும். இவ்வடியின் சரியான வடிவம் வருமாறு:-

கழைத்திருப் பாவிசை கண்டருள் வோர்குழைக் காதர்நன்னாட்

முன்கூறப்பட்ட தூதுத்திரட்டில் உள்ள பெரிய தம்பிப்பிள்ளை மான் விடுதூதில் 59 ஆவது கண்ணியின் முதலடி பின்வருமாறு பதிப்பிக்கப்பட்டுள்ளது. (பக்.11)

கொண்டெதிர்த்த வொன்னார்க் கற்கோட்டை நெறுநெறென

இதில் வெண்டளை தட்டுகிறது. மோனை சரியான இடத்தில் அமையவில்லை. கலிவெண்பாவில் இத்தவறுகள் நேரக்காரணம் சுவடி எழுதியவர் ஒரு ககரத்தை அதிகப்படியாகச் சேர்த்துவிட்டார் என்பதே. அதை நீக்கிவிட்டால் இதே அடி,

கொண்டெதிர்த்த வொன்னார்கற் கோட்டை நெறுநெறென

எனப் பொலிவு பெறும்.

சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம் முத்துநயினாத்தை முதலியார் அவர்களால் இயற்றப்பெற்ற பேரூர்க் கோவையை வெளியிட்டுள்ளது. அதில் ஆறாம் பாட்டின் ஈற்றடி,

உளந்தோய் தலைக்குறி யீர்பெறு குவனுயிர் ஒண்டொடியே

எனப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. (பக்.2). இந் நிரையசைக் கட்டளைக் கலித்துறையின் தளைப் பிறழ்ச்சியால் இதில் ஓரெழுத்து மிகை என உணரப்படுகிறது. “வேனு” எனச் சுவடியில் உள்ளது. இதில் இரட்டைக் கொம்பு கு எனக் கொள்ளப்பட்டதால் வந்த வினை இது. இதோ சரியான வடிவம்.

உளந்தோய் தலைக்குறி யீர்பெறு வேனுயிர் ஒண்டொடியே

சுவடி எழுத்தர் விளக்கம் கருதி விரித்த பிழை இதே நூல் 89 ஆம் பாடல் 2ஆம் அடியில் நேர்ந்து உள்ளது. (பக்.14)

வான்போதி சூழ்ந்தெனப் பேரைப்பட் டீசர் வரையிலிந்த

என இருக்க வேண்டிய அடியில் சூழ்ந்தென எனும் சீர் விரிந்து

வான்போதி சூழ்ந்ததெனப் பேரைப்பட் டீசர் வரையிலிந்த

என ஓர் எழுத்து மிக்குப் பிழைபடக் காட்சியளிக்கிறது.

இந்தப் பேரூர்க் கோவையிலேயே 168 ஆம் பாடலின் 1,2 ஆம் அடிகளில் (பக்.25) இந்த மிகை எழுத்து பரிதாபகரமான பொருள் மாற்றத்தைத் தந்துவிடுகிறது. அவ்வடிகள் வருமாறு:-

விரும்பு மெயினர் தினைப்புனம் நாளைக்குமே விடக்கடன்
இரும்புகொண்டேகுது மென்றா ரிறைவர்நம் மேந்திழைகோங்

முதலடியில் ஓரெழுத்து மிகை என்பதை ஓசை காட்டுகிறது. சற்றுப் பொருளுணர்வோடு பார்த்தால் தலைவியின் உறவினர்கள் மறுநாள் தினைப் புனத்தில் அறுவடை செய்யப் போகிறார்கள் என்ற செய்தியைத் தோழி தலைவனுக்குக் கூறுகிறாள். அறுவடைக்கு அரிவாள் வேண்டுமே. அந்தக் கூன் இரும்புதான் கடன் இரும்பு ஆகிவிட்டது. கூ என்ற சுவடி எழுத்து கட என்ற இரண்டு எழுத்துக்களாகப் படிக்கப்பட்டு அச்சுவாகனமும் ஏறிவிட்டது. அடுத்த அடியில் தலைவனைக் கூப்பிடுகிறாள். எனவே இறைவ எனத்தான் இருக்கவேண்டும். ரகரமெய் மிகையே.

இ. எழுத்துக்குறை

வேகமாக எழுதும்போது சில எழுத்துகள் விடுபட்டுப் போவது இயல்பே. செய்யுள் நூல்களில் அத்தகைய விடுபாடுகள்

காணப்பட்டால் பதிப்பாசிரியன் அவற்றை உணர்ந்து நிரப்ப வேண்டும். நிரப்பாவிடில் பிழைகளாக முடியும்.

முன்சொன்ன பேரூர்க்கோவையிலேயே 223ஆம் பாடலின் 2ஆம் அடி,

நறைகொப் புளிக்கு மலர்க்குழ லாயிந் நள்ளிருளில்

என உள்ளது. இவ்வடியில் தளை தட்டுகிறது. பதினேழு எழுத்துகளும் இல்லை. எனவே ஓர் எழுத்து விடுபட்டுவிட்டது என்பது நன்கு புலனாகிறது. திருத்தினால் சரியான வடிவம் கிடைக்கும். அது இதுதான்.

நறைகொப் புளிக்கு மலர்க்குழ லாயிந்த நள்ளிருளில்

இவ்வாறே, இதே நூல் 257 ஆம் பாடலாகிய நேரசைக் கட்டளைக் கலித்துறையில் ஓர் எழுத்து விடுபட்டுக் குழப்பியுள்ளது. (பக்.38)

காமனைக் காய்ந்த விழியின்று காண்கிலனே கதிர்ச்

எனக் காட்சி தரும் அந்த அடி.

காமனைக் காய்ந்த விழியின்று காண்கி லனேககதிர்ச்

என்பதுதான். ஒரு 'க' வைச் சேர்த்தால் அனேக கதிர்கள் ஒளிவீசுகின்றன அல்லவா?

ஈ. எழுத்து மாற்றம்

சுவடிகளுள் ஓர் எழுத்து வேறோர் எழுத்தாகக் காட்சியளித்து மயக்குவதை நாமறிவோம். இதனால் வரும் பிழைகளை யாப்பறிவால் களைதல் எவ்வாறு என நோக்குவோம். சுவடியில் இடையின ரகரமும் உயிர்மெய் நெடிலின் காலும் ஒன்றாகவே இருக்கும். இது பல இடங்களில் மாற்றிப் படிக்கப்பட்டுவிடும். முன் சொன்ன தூதுத் திரட்டில் 22ஆம் பக்கத்திலுள்ள 17ஆவது கண்ணி,

பூட்டிய பாவையுடன் புல்லும் வகைதெரியக்
காட்டிமிஞ்ச வரற்றுவண் டகர்முகனே

என உள்ளது. இதன் இரண்டாமடியில் வெண்டளை பிறழ்ந்துள்ளது. மோனை இல்லை. பொருள் விளங்காமல் ஏதோ

வேற்றுமொழி போல மருட்டுகிறது. ரகரமும் காலும் இரண்டு இடங்களில் மாறியதால் தோன்றிய அசுர வடிவம் இது. நேராக்கிவிட்டால் இது,

காட்டிமிஞ்ச வாற்றுவண்ட காமுகனே

எனத் தெளிவாகிவிடும். காமுகன் பாவையை ஆற்றுகிறானோ இல்லையோ யாப்பு நம் குழப்பத்தைத் திண்ணமாக ஆற்றிவிடும்.

இவ்வாறே சுவடியில் தகர நகரங்கள் கூர்ந்து நோக்கித் தீர்மானிக்க வேண்டியவனவாக அமைந்துள்ளன. இவைகளின் மாற்றமும் மயக்கத்தை விளைவிக்கக்கூடும்.

மேற்படி நூலிலேயே 28ஆம் பக்கத்திலுள்ள 114 ஆம் கண்ணி

.... பாரரசர்
தந்தா வளமும் தலமும் விலக்கஎன்றே
நந்தா வளங்கொடுத்துச் சந்திக்க

என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதில் தளை சரிதான். பொருளும் கூட எப்படியோ, "பெரிய தொகையைக் கப்பமாக வருடம்தோறும் தொடர்ந்து செலுத்துவதால் நந்தாவளம் எனப்பட்டது" என விசேடஉரை கூறி ஒப்பேற்றலாம். ஆனால் இரண்டாம் அடியில் மோனை இன்மையைக் கவனித்தால் இரண்டாமடி தந்தாவளம் கொடுத்து என இருப்பதே சிறப்பு. தம்தாவளமும் (வசிப்பிடம் இங்கு தலைநகரைச் சுட்டும்) தலமும் (நாட்டைக் குறிக்கும்) போரிலிருந்து விலக்கப்படுவதற்காகத் தந்தாவளத்தை (யானையை)த் திறையாகச் செலுத்துகிறார்களாம். யானையைத் திறையாகத் தருதல் இலக்கியங்களில் பரவலாகப் பேசப்படுகிறது. இக்கண்ணியில் தந்தாவளம் என்பது மடக்கு. இச்சிறப்பான பொருளை அறிய மோனை உதவி செய்கிறது.

அசை

சுவடிகளில் சில இடங்களில் எழுத்தைப் போலவே அசையும் பிழை தோன்றக் காரணமாகின்றது.

அ. அசைமிகை

பேரூர்க்கோவையின் 45ஆம் பாடலின் ஈற்றடி,

தாங்கற் கருமையென் னாற்பாங்க நீயிகழுந் தன்மைநன்றே

எனப் பதிப்பாகி உள்ளது (பக்.7). இவ்வடியின் தளை சரிதான். எனினும் ஓசை இல்லை. சோதித்துப் பார்த்தால் உம் என ஒரு நேரசை இடையே புகுந்துள்ளது. அவ்வடி,

தாங்கற் கருமையென் னாற்பாங்க நீயிகழ் தன்மைநன்றே

என்றே இருத்தல் வேண்டும்.

இம்மாதிரியே மேற்படி நூலின் 223 ஆவது பாடலிலும் அசைமிகை இடம் பெற்றுள்ளது (பக்.33).

பறையை யறைவது போற்கா வலர்கள்செய் பறையொலியே

என்னும் இந்நிரையசைக் கட்டளைக் கலித்துறையடியில் தளை தட்டி, எழுத்துக் கட்டளை பிறழ்கிறது. இம்மயக்கத்திற்குக் காரணம் சுவடி எழுத்தர் காவலர்க்குக் கள் கொடுத்ததுதான்.

பறையை யறைவது போற்கா வலர்செய் பறையொலியே

என்பதுதான் இந்த அடியின் செப்பமான வடிவம்.

ஆ. அசை குறை

மேற்படி கோவையின் 70ஆம் பாடல் நிரையசைக் கட்டளைக் கலித்துறையாகும். அது பின்வருமாறு பதிப்பில் காணப்படுகிறது (பக்.11).

தொலையா நலஞ்செயும் பட்டீசர் மால்வரை சூழ்ந்த

இதில் எழுத்துகள் குறைகின்றன. ஈற்றில் பெரும் என்ற ஓர் அசையைச் சேர்த்துப் பதிப்பித்திருந்தால் (அடைப்பிற்குள்) சிறப்பாக இருந்திருக்கும்.

சீர்

இப்பகுதியில் சீர் மிகுதியாக இருத்தல், சீர் குறைந்து போதல், யாப்பிற்குப் பொருந்தாச் சீர் இடம் பெறுதல் என மூன்று வகையாகப் பார்க்கலாம்.

அ. சீர்மிகை

தூதுத் திரட்டு பக்கம் 36இல் உள்ள 221 ஆவது கண்ணி,

வரிசைப்ப வனிவழங்கு வழங்குமுலாப் போந்து

என அலங்கோலமாகக் காட்சியளிக்கிறது. இதை மேற்போக்காகப் பார்த்தாலே சுவடி எழுதியவர் வழங்கு என்னும் சொல்லைத் தவறாக இருமுறை எழுதிவிட்டார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிகிறது. அவர் அதிகமாக வழங்கியதை ஏற்றுக் கொள்ளாமல் விட்டுவிட்டால் அந்த அடி,

வரிசைப் பவனி வழங்குமுலாப் போந்து

அலங்காரமாக நடக்கும்.

ஆ.சீர்க்குறை

மேற்படி நூல் முத்துவீரப்பப்பிள்ளை மான்விடுதூதின் 26ஆவது கண்ணியின் முதலடி

வளமேவு மிந்திரர்க்கு மையல்தீர

என உள்ளது. இவ்வடியில் ஒரு சீர் குறைந்துள்ளது. இது மூன்றாம் சீர் ஆகும். இது தேமாச் சீராக இருத்தல் வேண்டும். எனவே இதனை,

வளமேவு மிந்திரர்க்கு (வாட்டும்) மையல்தீர

எனப் பதிப்பிக்கலாம். வாட்டும் என்பதற்குப் பதில் வந்த என்றாலும் சரி. ஆனால் இவ்வாறு பதிப்பாசிரியர் தாமாக ஒரு சொல்லைப் பயன்படுத்தினால் அதனை அடைப்புக் குறியிட்டுத் தெளிவாகக் காட்டிவிட வேண்டும். பிழைத்திருத்தமாக மட்டும் அமையாமல் இது இடைச்செருகலாகவும் அமைகிறபடியால் இதனை மறைக்காமல் காட்டிவிட வேண்டியது பதிப்பாசிரியரின் கடமையாகும்.

இ.பொருந்தாச்சீர்

குறிப்பிட்ட யாப்பில் இடம் பெறக் கூடாத சீர்கள் அதற்குப் பொருந்தாதனவாகும். வெண்பா நூல்களில் கனிச்சீர் வரலாகாது.

வித்துவபரி பாலனஞ்சேர் விற்பனவான் - சத்தியவரிச்
சந்திரன்கங் காகுலபிர தாபன்வீ ரப்பமன்னன்

என்பது பெரியதம்பிபிள்ளை மான்விடுதூதின் 68-69ஆம் கண்ணிப்பகுதி (பக்.12) கலிவெண்பாவாலான இவ்விலக்கியத்தில்

வித்துவபரி, சத்தியவரிச், சாகுலபிர என மூன்று கூவிளங்கனிச் சீர்கள் அடுத்தடுத்து வந்துள்ளன. இது நூலாசிரியரின் பிழை அல்லவே அல்ல. அவர் இச்சீர்களாக முறையே வித்வபரி, சத்யவுரிச், காகுலப்ர என வடமொழித் தற்சமப் பதங்களையே பயன்படுத்தினார். இவை கூவிளங்காய்ச் சீர்களே. இவற்றால் கலிவெண்பாவின் செப்பலோசை சிதையாது. ஆனால் சுவடி எழுதியவர் தமிழ் மரபிற்கேற்ப அவ்வடமொழிச் சொற்களைத் தற்சமமாக்கிவிட்டார். அதனால் அக்கண்ணிகள் கலிவெண்பா என்னும் சீரிய தன்மையையே இழந்து விட்டன. மேற்படி நூல் 24ஆம் பக்கம் 61ஆம் கண்ணி, 30ஆம் பக்கம் 141 ஆம் கண்ணி, 35ஆம் பக்கம் 217 ஆம் கண்ணி ஆகிய இடங்களிலும் இத்தகைய மாற்றத்தைக் காணலாம்.

தஞ்சைச் சரசுவதி மகால் நண்ணாலூர் சங்கமேஸ்வர் விறலிவிடு தூது என்னும் ஒரு சிற்றிலக்கியத்தைப் பதிப்பித்துள்ளது. அதில் 123 ஆவது கண்ணியை,

நாளும் புரிந்து நரசிம்மையரும்வருக

எனப்பதிப்பித்து பூச்சீர் வந்துள்ளது, என ஓர் அடிக்குறிப்பும் தந்துள்ளனர். இக்குறிப்பு தேவையற்றது.

நாளும் புரிந்துநர சிம்மைய ரும்வருக

என்பதுதான் அடி. பல சிற்றிலக்கியங்களில் மோனைக்குரிய எழுத்து உரிய இடத்தில் இல்லாமல் சில சமயங்களில் முன்பின் அசையில் அமைவதும் உண்டு. இதனைத் தண்டபாணி சுவாமிகள் சொல்நடுஉறு மோனை என்பார் தம் அறுவகை இலக்கணத்தில் (நூற்பா 483).

அன்னத் திருவுரு வுள்ளே வளர்ந்ததற் கோரண்டமாம்

(திருவரங்கத்துமாலை 21)

பெருமையைப் பேசுவ தெப்படி நாம்பிறை வாளெயிற்று

(மேற்படி 27)

என்னும் கட்டளைக் கலித்துறையடிகளில் ஐந்தாம் சீரின் முதல் எழுத்தில் நிற்க வேண்டிய மோனை முறையே அடுத்த அசையிலும், முதலசையிலும் இருக்கக் காண்கிறோம். இத்தகைய மோனை மிகப்பலவாகத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றதால்தான் அறுவகை இலக்கணம் அதனைக் காட்ட வேண்டி வந்தது.

பொதுவாக அடியைப் பொறுத்தவளவில் பெரும் பிழைகள் நிகழ்வது அரிது. சீர், தளை முதலியவற்றின் பிழைகளைக் களைந்தால் அடி தானாகவே சரியாகிவிடும். எனினும் எடுத்துக்கொண்ட முறைக்கேற்ப இங்கும் இரண்டு காட்டுகிறேன். இவை வேறிடத்திற்கே உரியன என்பதை நான் நன்கு உணர்ந்துள்ளேன்.

முத்துவீரப்பபிள்ளை மான்விடு தூது 144ஆம் கண்ணியில்

கங்கைகுல திலக்கான னவதாரன் வந்தான்

என உள்ளது (பக்.16). இவ்வடி கலிவெண்பாதானா? தளையோ, மோனையோ, செப்பலோசையோ இல்லாத இவ்வடியின் வடிவம் என்ன? திலக்கான என்னும் சீரில் உள்ள ககர மெய்யை உயிர்மெய்யாக்கிக் காலை இடையின ரகரமாகப் படித்தால் திலககர்ன ஆகும். இப்போது அந்த அடி,

கங்கை குலதிலக கர்னனவ தாரன்வந்தான்

எனத் தமிழ்வடிவம் பெற்று வெண்பாவாக வீறுநடை போடும்.

பெரியதம்பிப்பிள்ளை மான்விடு தூது இப்பதிப்பில்,

மாலைதனை வாங்கிவர வாழி

என முடிகிறது (கண்ணி 69, பக்.5). கலிவெண்பா எங்காவது வாழி என முடியலாமா? இது தேமாச்சீரன்றோ? சுவடி படிப்பதில் நேர்ந்தபிழை இது. வா என்பது வர எனப் படிக்கப்பட்டது. நூலிற்குப் புறத்தே தனியாக அமைந்த வாழிச்சொல் பாட்டின் அங்கமாகக் கொள்ளப்பட்டது. இவற்றைச் செப்பமாக்கினால் வெண்பா ஈற்றடி சரியான வடிவம் பெற்று,

மாலை தனைவாங்கி வா

என உண்மையாக வாழும்.

தொடை

இனித் தொடை நோக்கியும் சுவடிப் பதிப்பில் செப்பம் காணலாம். இங்கு எதுகை, மோனை, அந்தாதி ஆகியன எவ்வாறு பிழைகளைக் களையப் பயன்படுத்தப்படலாம் என்பது காட்டப்படும்.

அ.எதுகை

முற்கூறப்பட்ட பெரியதம்பிப்பிள்ளை மான்விடுதூதின் 52ஆம் கண்ணி,

.... துத்தியம்சேர்
போகன் அளகப்ப பூபன் துணைவன்எனப்
பேசும் தென்கூடல் பெரியவனாம் - வீசுமதன்

எனப் பதிப்பாகி உள்ளது (பக்.4). போகன் என்ற சீரில் எதுகை அமையவில்லை. (இரண்டாமடியில் சீர்ப்பிரிப்பால் விளைந்த தளைப் பிறழ்ச்சி வேறு.) போகன் என்பது போசன் என இருந்தால்தான் எதுகை சரியாகும். மேலும் துத்தியம்சேர் போசன் என அடையோடு இயைந்து புகழ்மிக்க போஜராஜன் என்று பொருள்தரும். இரண்டாமடியையும் சரியாகப் பிரித்து இக்கண்ணியை,

போசன் அளகப்ப பூபன் துணைவன்எனப்
பேசும்தென் கூடல் பெரியவனாம் - வீசுமதன்

எனப் பதிப்பிக்க வேண்டும்.

ஆ.மோனை

"மோனை இல்லா முத்தமிழ்ப் பாட்டு
நாணம் இல்லா நங்கையொப் பாமே"

என்பார் தண்டபாணி சுவாமிகள் (அறுவகை இலக்கணம் 495). ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகு தோன்றிய தமிழ் இலக்கியங்களில் மோனை இல்லாத பாடலைக் காண்பதே அரிது. எனவே மோனையும் ஓரடியின் சரியான வடிவத்தைத் தீர்மானிக்கத் துணைபுரியும்.

முத்துவீரப்பபிள்ளை மான்விடுதூது 15ஆம் கண்ணி,

கொண்டாடு நல்லகுல மானீ யாதலினால்
தண்டாமரை யாளுன்றன் வடிவங் - கொண்டதுவும்

என அச்சாகியுள்ளது (பக்.8). இரண்டு அடிகளிலும் எல்லா எழுத்துகளும் பிழையின்றி இருந்தும் மோனையை நோக்காமல் மனம் போனவாறு பிரித்ததால் தளை பிறழ்ந்துவிட்டது. ஒன்று மூன்று சீர்களில் மோனையை அமைத்தால் இதே கண்ணி,

கொண்டாடு நல்ல குலமானீ யாதலினால்
தண்டா மரையாளுன் றன்வடிவங்-கொண்டதுவும்

என்று தன் சுயவடிவம் கொள்ளும்.

மேற்படி நூலின் 16ஆம் பக்கத்திலுள்ள 148 ஆம் கண்ணி,

சீதள நீலத்திரைக் கடலி னோசையென்ன
ஊதிய தாரை ஒலிகேட்டு

என உள்ளது. இதன் முதலடியை,

சீதள நீலத் திரைக்கடலி னோசையென்ன

என மோனை வழிப் பிரித்தால் வெண்பாவடி எளிதில் துலங்கும்.

இ. அந்தாதி

அந்தாதித் தொடையால் அமைந்த இலக்கியங்களுள் சிற்சில இடங்களில் இதுவும் பதிப்பாசிரியருக்குப் பேருதவி செய்யக்கூடும்.

சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் கலம்பகக் கொத்து என ஒரு நூலை வெளியிட்டுள்ளது. இதில் இடம் பெற்ற கலம்பகங்களுள் பேரைக் கலம்பகமும் ஒன்று. கலம்பகங்கள் எப்போதும் அந்தாதித் தொடை பெற்றே நடக்கும்.

இக் கலம்பகத்தின் 33ஆம் பாடல் "நமக்கிலையோ" என முடிகிறது. அடுத்த பாடல் (34 ஆவது) "எமக்கு முகம் வாட" எனத் தொடங்கி, "கொண்மதி உண்டோ கழல்" என முடியும் ஒரு வெண்பாவாக உள்ளது. 35 ஆவது பாடலோ "தழல் பிழிந்து" எனத் தொடங்குகிறது. இதனால் 33, 34, 35ஆம் பாடல்களுக்கு இடையே இரு இடங்களிலும் அந்தாதித் தொடை அறுபட்டுவிட்டது. வெண்பா ஈற்றடியில் மோனையும் இல்லை. பதிப்பிக்கும்போது இவற்றைக் கவனித்திருந்தால் எளிதில் திருத்தியிருக்கலாம். இப்போது திருத்தினால் நம் யூகம்தான் இடம்பெறுமே அன்றி நூலாசிரியனின் கருத்து இதுதான் என உறுதியாகக் கூற முடியாது.

இதுகாறும் கூறப்பட்ட சுவடி மயக்கங்களுள் ஒன்றுக்கு மேற்பட்டவை ஒரே இடத்தில் சேர்ந்து விடுவதால் ஏற்படும் குழப்பங்களைச் சற்றுக் காண்போம்.

முற்கூறப்பட்ட பேரூர்க் கோவையின் 29ஆம் பாடல் "ஆயவெள்ளம் வழிபடக்கண்டிது மாயமோ என்றல்" என்னும் துறையிலமைந்தது. இதன் மூன்று நான்காவது அடிகள் பதிப்பில் பின்வருமாறு காட்சியளிக்கின்றன.

குடமோங் குயதனத் தாய் மெரி இன்மைக் கூடினவென்
மடமோ கனவு கொல்லோ நனவோ வென்(னீ) னமாய நெஞ்சே

இதில் பொருளும் விளங்கவில்லை. யாப்பமைதியும் சரியாக இல்லை. இதில் நேர்ந்துவிட்ட சுவடிப் பிழைகளை ஆராய்வோம். இதற்குத் துறைப் பொருள் பற்றிய ஆய்வும் துணைசெய்ய வேண்டும்.

முதலடியில் குயதனத் என்பதற்கிடையில் ஒரு ரகரமெய்யும், மெரி என்பதற்கிடையில் ஒரு காலும் விடப்பட்டுவிட்டன. தாய எனப்படிக்கப்பட வேண்டியது தாய் எனவும், மொரீ எனப் படிக்கப்பட வேண்டியது குறிலாக மொரி எனவும் படிக்கப்பட்டது. இவ்வடியில் உள்ள இகரம் மொரீஇ என்பதன் அளபெடைக் குறியே என்பது உணரப்படவில்லை. இகரத்தை அடுத்த ஈற்று னகரம் தந்நகரமாகப் படிக்கப்படாமல் இரண்டு சுழி னகர மெய்யாகப் படிக்கப்பட்டு விட்டது. ஒரு கட்டளைக் கலித்துறை யடியில்தான் இவ்வளவு பிழைகள். இவ்வழுக்களைக் களைந்துவிட்டால் இவ்வடி,

குடமோங் குயர்தனத் தாய மொரீஇநமைக் கூடினதென்

எனக் கவர்ச்சிகரமாக அமைந்துவிடுகிறது. இறுதியில் உள்ள வென், தென் மாற்றம் அச்சகத்தில் நேர்ந்த பிழையாகக் கூட இருக்கலாம். இவ்வடியை இப்படிச் சரிசெய்து விட்டால் அடுத்த அடி தானாக,

மடமோ கனவுகொல் லோநன வோவென்ன மாயநெஞ்சே

எனத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுவிடும். யாப்பறிவோடு இந்தத் துறையில் இந்தப் பொருள்தான் கூறப்பட்டிருக்கும் என்னும் இலக்கிய மரபு உணர்வும் இத்தனைப் பிழைகளையும் களைய உதவி புரிகின்றன.

இதே நூலின் 75ஆவது கட்டளைக் கலித்துறையின் பிற்பாதி பின்வருமாறு பதிப்பிக்கப்பட்டுள்ளது. (பக்.12)

சூதி லெழுந்த களபமும் வெவ்விடந் தோய்குவளைப்
போதி லெழுந்துமை யுரும்மளி யாதுன் புனல்குடைவே

ஈற்றடியில் தளை தட்டுகிறது. ஓர் எழுத்து மிகுதியாக உள்ளது. முதல் நிலையாகப் பொருளின் துணைகொண்டு இதனைத் திருத்திக் கொண்டால்,

போதி லெழுதுமை யும்மளி யாதுன் புனல்குடைவே

என வரும். குவளைப் போது என்றது கண்களை. கண்களில் எழுதும் மை என்ற உடனே அழியாது என்றே இருத்தல் வேண்டும். வழக்கமான ளகர ழகர மாற்றமே. இதனையும் செப்பமிட்டால் இவ்வடி,

போதி லெழுதுமை யும்மழி யாதுன் புனல்குடைவே

என விளக்கம்பெறும்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடுகளுள் ஒன்று நண்ணாவூர் சங்கமேஸ்வரர் விறலிவிடு தூது. இதில் 151 ஆவது கண்ணி,

சாற்று மரகத மேரிமிகச் சாரிவந்து தகை

எனக் காட்டப்பட்டுச் சீர் சரியில்லை என்ற குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. இது கலிவெண்பா. வெண்டளையும் மூன்றாஞ்சீரில் மோனையும் வரும். இந்த நினைவுடனும், பொருள் உணர்ச்சியுடனும் மேற்கண்ட அடியை நோக்குவோம். சுவடியில் ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகள் ஓரடியில் சேர்ந்துவிட்டன. நிதானமாக ஆய்வோம். சாரிவந்து என்ற சீர் பிழையில்லாமல் இருப்பதுடன் சகர மோனை பெற்றிருப்பதால் மூன்றாம் சீராக இருக்கலாம். இது ஏறிமிக என இரண்டாம் சீரின் ரகர மயக்கத்தைக் களைய உதவுகிறது.

சாற்று மரகத மேறிமிகச் சாரிவந்து

என நிற்கின்றது. சாற்றுமரகத வெண்பாவில் ஒரு சீராக வராது. இதில் மகரத்தை மெய்யாக்கி, ஏறிவருவதுரதத்தில்என உணர்ந்து இப்பொருள் தெளிவால் ஒரு ககரம் மிகையான எழுத்து என நீக்கிவிட்டால் இச்சீர்கள்

சாற்றும்ரத மேறிமிகச் சாரிவந்து

எனவரும். இனிச் சாரிவந்து என்னும் காய்ச்சீரை அடுத்து நிரையசை வரா. எனவே அங்கும் சுவடியில் விடுபாடு நேர்ந்துள்ளது. எனவே இவ்வடியைச்

சாற்றிரத மேறிமிகச் சாரிவந்து;.........தகை

எனப் பதிப்பிக்க வேண்டும். அங்கோர் அசையை ஊகித்து அடைப்புக் குறியில் காட்டினாலும் சிறப்பே.

இனி இதே நூலின் 232 கண்ணியை

கண்டாள் குறிப்பதனி லக்க மணிபோலப்

பெண்ரூபம் உண்டாமெனவே உறுதிகொண்டாள் ஒண்டொடியாள் எனக் காட்டிவிட்டுச் சீர்கள் சரியில்லை என்ற அடிக்குறிப்பும் தரப்பட்டுள்ளது (பக். 19). சீர்கள் எல்லாம் சரியாகத்தான் உள்ளன. சுவடிகளுக்கே உரிய சில பிழைகள் சேர்ந்துவிட்டன. அவ்வளவே. இதனை ஒவ்வொன்றாக நோக்குவோம். அச்சுப்புத்தகத்தில் உள்ளபடி இரண்டு அடிகளிலும் எதுகை, மோனை சரியில்லை. (கண்டாளுக்குப் பெண்ரூபம் நல்ல எதுகை ஆகாது). எதுகை மோனைகளை மட்டும் வைத்துப் பார்த்தால்.

கண்டாள் குறிப்பதனி லக்கமணிபோலப் பெண்ரூபம்
உண்டா மெனவே உறுதிகொண்டாள் - ஒண்டொடியாள்

என நின்று இரண்டாமடி சரியாகி விடும். அடுத்து முதலடியை ஆராய்வோம். முதலடியில் இரு லகரங்களையும் மெய்யாகப் படித்தால்,

கண்டாள் குறிப்பதனில்க் கமணிபோல்ப் பெண்ரூபம்

என அமையும். சற்றுச் சிந்தித்தால் கமணி என்னுமிடத்தில் சுவடி எழுத்தர் ஒரு ணகரத்தை விட்டுவிட்டார் என்பது புலப்படும். அதனைச் சேர்த்து விட்டால் இந்த அடி

கண்டாள் குறிப்பதனிற் கண்மணிபோற் பெண்ரூபம்

என நிறைவு பெற்று அடுத்த அடியுடன் அழகாக இணைந்து

கண்டாள் குறிப்பதனிற் கண்மணிபோற் பெண்ரூபம்
உண்டா மெனவே உறுதிகொண்டாள் - ஒண்டொடியாள்

என முழுக்கலையாகப் பொலிவு பெறும்.

இதே நூலில் 634 ஆவது கண்ணி

மோக விகாரம்வந்து முடிப்பதால் எந்தனுக்கு

வாகான புத்தி மதிமயங்கி

எனக் கொடுக்கப்பட்டு வழக்கமான "சீர் சரியில்லை" என்னும் அடிக் குறிப்பும் தரப்பட்டுள்ளது (பக்.50). இங்கும் முதலடியில் இரு பிழைகள் நேர்ந்துவிட்டன. மு என்ற எழுத்து நெடிலாகப் படிக்கப்பட வேண்டும். ப்ப எனக் கூட்டெழுத்தாகப் படித்தது சரியன்று. அது யகரமே. இந்த இரு பிழைகளைக் களைந்துவிட்டால் இக்கண்ணி

மோகவிகா ரம்வந்து மூடியதால் எந்தனுக்கு;
வாகான புத்தி மதிமயங்கி

எனப் பொருள் தெளிவுடன் அமைந்துவிடும். என்றாலும் இதில் நூலாசிரியனால் நேர்ந்த ஒரு குறை இருக்கத்தான் செய்கிறது. நெடிலடுத்த ககரக் குறிலுக்கு அத்தகைய ககர நெடிலை எதுகையாக மரபுப்புலவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் இதற்குப் பதிப்பாசிரியர் ஒன்றும் செய்ய இயலாது.

இனி இப்பதிப்பைப் பற்றி மற்றொரு இன்றியமையாத செய்தியையும் சுட்டிக் காட்டுதல் இக்கட்டுரைப் பொருளோடு தொடர்புடையதாகும். இந்நூலில் 35க்கு மேற்பட்ட இடங்களிலுள்ள சீர்கள் வெண்பாவிற்கு ஆகாத சீர்கள் என அடிக்குறிப்பில் காட்டப்பட்டுள்ளன. (கண்ணி எண்கள்: 3, 70, 94, 102, 130, 197, 205, 210, 217, 220, 253, 271, 286, 319, 332, 343, 350, 357, 381, 384, 392, 396, 528, 547, 565, 566, 579, 590, 596, 603, 629, 708, 718, 757, 765, 789, 847, 896). மேலோட்டமாகப் பார்த்தால் ஆயர்மனை, மன்னவிசை, செஞ்சொல்மிகும், தங்கள்குடி, யானும்விளை, தன்னில்வைத்தே போன்ற சீர்கள் கனிச்சீராகவும், பூச்சீராகவும் அமைந்து வெண்பாவிற்கு உரிமை யற்றனவாகத்தான் உள்ளன. ஆனால் தூது பாடவந்த ஒரு புலவன் ஒரு நூலில் 35 இடங்களில் இவ்வளவு பெரிய பிழையைச் செய்வானா? சற்றுச் சிந்திக்க வேண்டும்.

ய, ர, ல, ள ஆகிய நான்கு மெய்கள் இரு குறில்களுக்கு இடையே இடம்பெற்று, அங்கு அலகிடும்போது வெண்டளை பிறழுமானால் இம்மெய்களே இல்லாததுபோல் பாவித்துக்கொள்ளவேண்டும் என்பது யாப்பிலக்கண மரபு. உதாரணமாகப் பாயல்தவிர், ஆயர்மனை, செஞ்சொல்மிகும், மன்னன்விசை எனும் சீர்களைத் தேமாங்கனியாகக் கொள்ளாமல் கூவிளங்காயாகக் கொள்ள வேண்டும். முறையே யல்த, யர்ம,

சொல்மி, னன்வி என்பவை நிரையசையாகக் கொள்ளப்படும். தண்டபாணி சுவாமிகள் இந்நுட்பத்தைத் தெளிவாக,

"செய்கை தர்மம் கல்வி தன்மை
பொன்வில் எனுமிவை போன்றநேர் நேரும்
நிற்கும் இடத்தால் நிரைஎனப் படுமே"

என உணர்த்துகிறார். இரண்டாவது குறிலுக்குப்பின் மற்றொரு மெய் வந்தாலும் இவ்விதி பொருந்தும் என்பதனை உணர்த்தவே பொன்வில் என்னும் உதாரணத்தையும் தந்துள்ளார். இவ்விலக்கணத்திற்கு இலக்கியம் 17ஆம் நூற்றாண்டிலிருந்து நிறையக் காணக் கிடைக்கின்றன. சங்கமேஸ்வரர் விறலிவிடு தூதில் அனைத்துச் சீர்களும் இவ்விதியின்படி விளங்காயாகவே கொள்ளப்படும். ள், ம் என்னும் இரண்டு மெய்களையும் இவர் இவ்விதிக்குட்படுத்தித் தங்கள்குடி, யானும்விளை என ஆளுகிறார் என்பது சிறப்பாக எத்துக்காட்டத் தக்கது.

நாம் இப்போது செய்யுளாகட்டும், உரைநடையாகட்டும் பிரித்துப் பிரித்து எழுதியே பழகிவிட்டோம். உரைநடை எப்படியோ போகட்டும். இந்தப் பதிப்பு முறையால் செய்யுளின்பம் கெடுதல் ஒருதலை. பல பதிப்புகளில் கவியைப் பாவோசையுடன் படிக்கவே இயலவில்லை. குறிப்பிடத்தக்க வகையில் குற்றியலுகரப் புணர்ச்சி பல இடங்களில் மயக்கந் தருகிறது.

சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் பதிப்பித்த தூதுத் திரட்டில் 4 ஆம் பக்கம் 49ஆம் கண்ணி

அன்னங் கொடுத்து அரவின் மணியளித்தும்

எனப் பதிப்பாகி உள்ளது. இரண்டு மூன்றாவது சீர்கள் இணைந்தால் கொடுத்தரவின்றானே ஆகும். பிறகு வெண்டளை எங்கே? சற்று இந்த அடியைக் கூர்ந்து கவனித்தால் மணியளித்தும் என எண்ணும்மை வருவதால் கொடுத்தும் என இருத்தல் வேண்டும் என்பது விளங்கும்.

அன்னங் கொடுத்தும் அரவின் மணியளித்தும்

என்பதுதான் சரியான அடி.

இவ்வாறே பேரூர்க் கோவையின் 225ஆம் பாடல்

பாகைப் பழிக்கும் பனிமொழி யாயரும் பாவலர்க்கு

ஈகை யெனநடங் காட்டுந்தென் பேரைப்பட் டீசர்வெற்பின்

என உள்ளது (பக்.33). முதலடி ஈற்றுச்சீரின் இறுதியில் உள்ள குற்றுகரம் இரண்டாம் சீர் முதலடியிலுள்ள உயிர்வந்த உடனே ஓடிவிடுமே. பாவலர்க் கீகை என்றே வரும். அப்போது முதலடியில் பதினாறு எழுத்துகள் இராதே. அந்த எழுத்து எதுவாக இருக்கும் என்று கண்டுபிடிக்க வேண்டும். பாவலர் என்பதில் சுவடி எழுத்தர் ஒரு வகரத்தை விட்டுவிட்டார். பிரித்துப் பதிப்பிப்பதால், இப்பிழையைக் கண்டு களைய இயலவில்லை. இங்கு முதல் அடியின் ஈற்றுச்சீர் "பாவலவர்க்கு" என்றே இருத்தல் வேண்டும்.

சில சமயங்களில் குறுக்கல், நீட்டல் போன்ற செய்யுள் விகாரங்களைப் பயன்படுத்தியும் சுவடிகளில் ஏற்பட்டு விடுகின்ற பிழைகளைக் கண்டு பிடிக்கலாம். மேற்படி பேரூர்க்கோவை 88ஆம் பாடலின் ஓரடியின் பதிப்பு வருமாறு:- (பக். 14)

துன்று மலர்க்குழ லாள்மன முமிவர் தூய்மனமும்

மூன்று நான்காம் சீர்களுக்கிடையே வெண்டளை அமையவில்லை. எழுத்துகள் எதுவுமே விடுபட்டுவிட்டதாகவும் தெரியவில்லை. சற்று ஊன்றிக் கவனித்தால் இவ்விடத்தில் மனமும்மிவர் என விரித்தல் விகாரம் பெற்றிருக்க வேண்டும் என்பதையும் சுவடியில் ஒரு மகரம் விடுபட்டிருக்கலாம் என்பதையும் உணர்வோம். செப்பம் செய்து படித்தால் இந்த அடி,

துன்று மலர்க்குழ லாள்மன மும்மிவர் தூய்மனமும்

எனத் தூய்மை பெறும்.

அடுத்துத் தமிழில் சந்தக் குழிப்புடன் அமைந்த வண்ணப் பாடல்களுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. ஆனால் இத்தகைய பாக்களைப் பற்றிய தெளிவான இலக்கணம் துரதிருஷ்டவசமாக அதிகம் பரவாததால் மிகப் பெரும்பாலான பதிப்புகளில் சந்தப்பாடல்கள் பிழைகள் நிறைந்தே காணப்படுகின்றன. சந்தப் பாடல்களில் காணப்படும் யாப்புப் பிழைகளை ஆய்வுசெயத் தொடங்கினால் அதுவே ஒரு மிகப்பெரிய கட்டுரை ஆகிவிடும். எனவே இப்போது அதில் நுழையவில்லை. இத்தகைய பாடல்களில் பொருளமைதி கூடச் சரியாகக் கவனிக்கப்படுவதில்லை என்பதனைக் காட்ட ஒரே ஒரு எடுத்துக்காட்டு மட்டும் தருகிறேன்.

முன்சொன்ன பேரைக்கலம்பகத்தின் 7ஆம் பாட்டு ஒரு சந்த விருத்தமாகும். இதன் சரியான சந்தக் குழிப்பு

தான தந்த தந்த தான தந்த தந்த
தான தந்த தந்த தனனா

என்பதாம். இதனைக்

தானனந் தனந்த தானனந் தனந்த
தானனந் தனந்த தனனா

என்பது போலப் பதிப்பித்துள்ளனர். ஆனால் குறிப்பேதும் கொடுக்கப்படவில்லை. அதைப்பற்றிய ஆய்வும் இங்கு மேற்கொள்ளப்படவில்லை. இதன் ஈற்றடி பின்வருமாறு காணப்படுகிறது. (பக்.5)

கோகிலங் களினா விமென்று தின்று
கூவுகின்ற தன்பர் குறையே

சந்தத்தை விட்டுவிடுவோம். இவ்வடியின் பொருள் என்ன? குயில்களைப் பிடித்துக் கடித்துத் தின்றுவிட்டுத் தலைவன் கூச்சலிடுவது பிழை என்பதா தலைவி கூற்று? கட்டாயமாக இருக்க முடியாது. இவ்வடி

கோகி லங்க ளின்றெ னாவி மென்று தின்று
கூவு கின்ற தன்பர் குறையே

என்றுதான் இருத்தல் வேண்டும். குயிலோசையைக் கேட்டு வருந்தும் தலைவி, தன் துயரத்திற்குத் தலைவனே காரணம் என்கிறாள். இதுபோன்ற வெளிப்படையான பிழைகளையாவது பதிப்பாசிரியர்கள் கவனித்துக் களையத்தான் வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால் சுவடிகளுள் காணப்படும் பெரும்பாலான பிழைகளை யாப்பிலக்கணத்தின் உதவியைக் கொண்டு திருத்திப் பதிப்பிக்க இயலும் என்பது பெறப்பட்டது.

துணை நூல்களின் அகரநிரல்

1. <u>அறுவகை இலக்கணம்</u>
   ஆசிரியர்: வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.
   தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி, பேரூர், 1978.

2. <u>அஷ்டப்பிரபந்தம்</u>
   ஆசிரியர்: பிள்ளைப்பெருமாளையங்கார்.

மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, 1957.

3. கலம்பகக் கொத்து
பதிப்பாசிரியர்: தி.சந்திரசேகரன்.
கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, 1960.

4. சில கட்டுரைகள்
ஆசிரியர்: முதுமுனைவர். வ.அய்.சுப்பிரமணியம்
மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
5 ஆம் பதிப்பு, 1987.

5. சுவடிஇயல் பயிற்சிக் கையேடு
ஆசிரியர்: மு.கோ.இராமன்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982.

6. தூதுத்திரட்டு
பதிப்பாசிரியர்: தி.சந்திரசேகரன்,
கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை,1957.

7. நண்ணாவூர் சங்கமேஸ்வரர் விறலிவிடுதூது
பதிப்பாசிரியர்: புலவர்.வீ.சொக்கலிங்கம்.
சரசுவதி மகால், தஞ்சாவூர், 1979.

8. பேரூர்க்கோவை
ஆசிரியர்: முத்து நயினாத்தை முதலியார்.
பதிப்பாசிரியர்: திரு.சி.எம்.இராமச்சந்திரன் செட்டியார்
கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, 1955.

பதிப்பாசிரியர்களும் அவர்தம் கடமைகளும்

சா. கிருட்டிணமூர்த்தி

பதிப்பு-ஒரு தொடர்பணி

பதிப்பித்தல் என்பதற்கு ஒன்றை வெளிப்படுத்திக் காட்டுதல் என்று கூறலாம். ஓவியமாயினும் சிற்பமாயினும் கல்வெட்டாயினும் பிறவாயினும் அவற்றைப் பிறிதொன்றின் மூலமாகப் பதித்துவைத்தல்-வெளிப்படுத்திக் காட்டுதலாகும். ஒவ்வொரு கால கட்டத்திலும் எழுதுபொருள்களின் (Writing Materials) பல்வேறு நிலைகளுக்கேற்பப் பதிப்பித்தல் மாறுபட்டிருக்கும் என்று கொள்ளலாம். ஓலை எழுதுபொருளாகப் பயன்பட்ட காலத்தில் ஒருவர் கருத்தை-படைப்பை அவ்வோலையின் மூலமாகப் பதிப்பித்து வந்தனர். ஓலைச்சுவடிகளில் இன்னார் குமாரன் இன்னார் எழுதியது என்று குறிப்பிடப்பெறும் முன், பின் குறிப்புகளெல்லாம் அந்நூலுக்கு (சுவடிக்கு) உரிய பதிப்பாசிரியர் அவரே என்று துணிதற்கு இடமளிக்கும். சுவடி எழுதியவன், எழுதப்பட்ட காலம், எழுதவியன்ற இடம் போன்றவை, இன்று அச்சுநூல்களில் காணப்படும் பதிப்பு விவரங்களைப் போன்று அமைந்துள்ள தன்மை அன்றை நிலையில் அவை பதிப்பு வேலையாகப் போற்றப்பட்டிருந்தன என்பதை நன்கு விளக்கும்.

கல் எழுதுபொருளாகப் பயன்பட்ட காலத்திலும் அவ்வாறே. கல்வெட்டிலிருந்து ஓலையில் எழுதப்பட்ட செய்திகள் எழுதுபொருள் பயன்பாடு பிறிதொன்றாக மாற்றப்பட்ட தன்மையை உணர்த்தும். அதோடு மட்டுமன்றிக் கல்வெட்டில் பதிப்பிக்கப்பட்ட செய்தி மீண்டும் ஓலையில் பதிப்பிக்கப்பட்ட தன்மையை உணர்த்துவதாகவே நாம் கொள்ளவேண்டும்.

எவ்வாறெனில் ஓலைச்சுவடிகளில் உள்ளவற்றை இன்று நாம் தாள்களில் பதிப்பிப்பதைப் போன்றதாகும். எனவே பதிப்பு வேலை என்பது காலந்தோறும் பல்வேறு நிலைகளில் தொடர்ந்து நிகழ்ந்து வரும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

பதிப்பு-சொற்பொருள்

சுயமாக உருவாக்கி வெளியிடுவதும், முன்னுள்ளவற்றை வெளியிடுவதுமே பதிப்பு என்று கொள்ளப்படும். முன்னுள்ளவற்றை வெளியிடுதல் என்பது இதுவரை அச்சாகாத, வெளிவராத எழுதப்பட்ட செய்திகளைக் குறிக்கும்.

பதிப்பித்தல் என்னும் பொருள்தரும் ஆங்கிலச் சொல்லாகிய *'edit'* என்பது *'edit-us'* என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து வந்தது என்று அகராதி கூறும் *(OED Vol. III 1961). editio-onis* என்னும் இலத்தீன் சொல்லுக்கு நூல் வெளியிடுதல் *(the Publishing of a Book)* என்ற பொருளை இலத்தீன் ஆங்கில அகராதி கூறுகின்றது *(D.D.Simpson, Latin English Dictionary)*

பதிப்பித்தல் என்பதற்கு அகராதிகள் கூறும் பல்வேறு விளக்கங்கள் அதற்குரிய பொருள்களைத் தெளிவுபட எடுத்துக் காட்டுகின்றன.

1) எழுத்து வடிவங்களில் நிலவுகின்ற முந்தைய படைப்பாளர்களின் பலதரப்பட்ட படைப்புகளை வெளியிடுதலும் உலகோர்க்கு அளித்தலும்

2) முந்தைய படைப்பாளர்களின் படைப்பையே பதிப்புப் பொருளாகக் கொண்டு அதனைப் பதிப்பிற்கு உருவாக்கம் செய்தலும்

3) முழுமையுடைய ஒன்றையோ பிறரின் பகுதியான ஒன்றையோ முறைப்படுத்தி அமைத்தலும், உருவாக்குதலும்

4) திரைப்பட வெளியீட்டிற்கான ஒலி, ஒளி பதிவுகளில் தேவையில்லாதவற்றை நீக்கிவிட்டு அதனைச் செப்பம் செய்தலும்

5) செய்தித்தாள், மலர் போன்றவற்றின் வெளியீட்டில் அவற்றை மேற்பார்வை செய்தலும், நெறிப்படுத்துதலும் பதிப்பு *(edit)* வேலைகளாகக் கொள்ளப்படுகின்றன.

மேற்கருத்துகளைப் பொதுமைப்படுத்தி நோக்கும் பொழுது

அ. தானே புதிய படைப்பை உருவாக்குதல்
ஆ. முன்புள்ள பிறர் படைப்பை வெளிப்படுத்திக் காட்டுதல்
இ. தொகுப்புக் கூறுகளை வகைப்படுத்திக் காட்டுதல் போன்றவை

பதிப்பித்தலின் செயலாக அடங்குமென்பதை உணரலாம்.

பதிப்பு வேலையும் வெளியீட்டு வேலையும்

பதிப்பிற்கு உருவாக்குதல் பதிப்பு வேலை என்று கொண்டால் அதனை வெளியிடுதல் வெளியீட்டுப் பணியாகும். பதிப்பித்தல் வேறு; வெளியிடுதல் வேறு. பதிப்பிற்குரிய பணிகளுக்குள்ளாகாமல் ஒரு வெளியீட்டாளர் பதிப்பாளராக முடியாது. வெளியிடுதல் என்பது பதிப்பு வேலைகள் முடியப்பெற்ற ஒரு படைப்பை அச்சுவடிவமேற்றி உலகோர்க்கு அளித்தலும் அளிக்கக் காரணமாய் இருத்தலும் ஆகும் (*OED Vol.iii. 1961*). பதிப்பு என்பது முன்னிலை; வெளியீடு என்பது பின்னிலை. நூலை வெளிக்கொணர்தல் பதிப்பு என்று கூறும்பொழுது, நூலாக்க வேலைகள் முடிந்தபின் அதனைக் கொணரும் வேலையும் இப்பொழுது பதிப்பு வேலையாகக் கருதப்பட்டு வருகின்றது. இவ்வளவில் பதிப்பித்தல் என்பதை அச்சேற்றுதல் என்று கொண்டு சில அச்சகங்கள் பதிப்புப் பொறுப்பை மேற்கொண்டனவாக நிலவுதலைக் காணலாம். அத்தகைய நிலையில்கூட நூலாசிரியர்க்கு முதன்மை தந்து அவ்வச்சகங்கள் இலங்குகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அவ்வாறாயின் பதிப்பு வேலை என்பது என்ன? இதற்கு ஓராசிரியர் தரும் விளக்கத்தை இங்கு அப்படியே நோக்குதல் பொருத்தமுடையதாக விருக்கும்.

> To edit means to present anything in a disciplined manner-to arrange, to annotate or otherwise prepare an author's work for Publication (M.L.Chakkaraborti 1975, P.318)

உள்ளதைக் கொணர்வதும் உள்ளத்தைக் கொணர்வதும் நூலாக்கம் அல்லது நூற்பதிப்பு என்று கொள்ளலாம். சான்றாக உள்ளதைக் கொணர்தல் - முன்னிலவுவதை வெளிக் கொணர்தல் என்பதற்குச் சுவடியை அச்சேற்றுவதைக் கொள்ளலாம். அச்சுவடியைத் தேடி, அதற்குரிய பல பிரதிகளையும் தொகுத்து,

அவற்றுள் ஒன்றை அடிப்படையாகவும் ஏனையவற்றைத் துணையாகவும் கொண்டு சுவடி பெயர்த்தெழுதிப் பிழைநீக்கம் செய்து, பாடம் தேர்ந்து படித்தவை போற்றி, விளக்கம் அளித்து வேண்டுவன தந்து, படி பெயர்த்தெழுதிப் பாங்குடன் திருத்திப் பதிப்புக்குரிய செம்பதிப்பாக விதிப்படி அளித்தலே பதிப்பு வேலையாகும். அச்சக வாசலை அடையும்வரை நிகழ்கின்ற அனைத்து வேலைகளுமே பதிப்பு வேலைகள் என்று கொள்ளத் தகும். எனவே பதிப்புக்குரிய-பதிப்பை நோக்கிச் செய்ய வேண்டிய வேலைகள் பதிப்பு வேலைகள் எனலாம்.

பதிப்பாசிரியர் (Editor)

பதிப்பு வேலைகளைச் செய்பவர் பதிப்பாசிரியர். பதிப்பு, ஆசிரியர் எனும் இருசொற்களின் கூட்டுச் சொல்லே பதிப்பாசிரியர் என்பதாகும். இச் சொல்லோடு மட்டுமன்றித் தொகுப்பு, வெளியீடு, புத்தகம், பத்திரிகை, இதழ் போன்ற சொற்களோடும் இவ்வாசிரியர் என்ற சொல் சேர்ந்து தொகுப்பாசிரியர், வெளியீட்டாசிரியர், புத்தகவாசிரியர், பத்திரிகையாசிரியர், இதழாசிரியர் எனக் கூட்டுச் சொற்களாவதைக் காணலாம். இவற்றினின்றும் ஒருண்மை புலனாகும். ஆசிரியர் என்ற சொல் (*Teacher*) தனக்குரிய பழம் பொருளினின்றும் மாறுபட்டிருப்பதை உணரலாம். ஆசிரியர் என்ற சொல்லிற்குப் பல பொருள்கள் உண்டு. குரு, ஆக்கியோன், உரிமையுடையோன், செய்பவன் என்னும் பல பொருள்களைக் கூறலாம். பின்னுள்ள இருபொருள்களையும் ஏற்பனவாகவே மேற்கண்ட கூட்டுச் சொற்கள் அமைந்துள்ளன. 'ஆளன்' என்னும் பின்னொட்டிற்கு (*Suffix*) உள்ள பொருளைக் கொண்டதாகவே 'ஆசிரியர்' என்ற சொல் காணப்படுகின்றது என்று கூறலாம். ஆராய்ச்சியாளர், தொகுப்பாளர் போன்று பதிப்பாளர் என்று கூறலாமா என்பதும் ஆய்விற்குரியது.

எனினும் பதிப்பு வேலைகளைச் செய்பவர் பதிப்பாசிரியர் எனத் தொழிற்பெயர் உணர்த்தும் நிலையிலேயே அவ்வாசிரியர் என்ற சொல் அமைந்துள்ளது என்று கருதலாம். எனவே சொற்றன்மை திரிந்து பின்னொட்டு நிலையில் பதிப்பு என்ற சொல்லோடு சேர்ந்து நிற்கிறது என்பது புலனாகும். இச்சிறப்புச் சொல்லாகிய பதிப்பாசிரியர் என்பது நூற்பதிப்பாசிரியர் என்ற தன்மையில் மட்டுமே நமக்குப் பொருந்துவதாகத் தோன்றக்கூடும். பதிப்பாசிரியர் (*Editor*) என்பதோடு

தொடர்புடைய பிற சொற்களை நோக்கும்பொழுது இவ்வுண்மை நமக்குப் புலனாகும்.

பதிப்பாசிரியர்கள் பலர்

பதிப்பாசிரியர் என்றவளவில் நாம் பலரைக் காணமுடியும். நூற்பதிப்பாசிரியர் (Book Editor), இதழாசிரியர் (Journal Editor), மலர் ஆசிரியர் (Magazine Editor), கலைக்களஞ்சியப் பதிப்பாசிரியர் (Encyclopeadia editor), அகராதிப் பதிப்பாசிரியர் (Lexicon Editor), பத்திரிகையாசிரியர் (News paper Editor), திரைப்படத் தொகுப்பாளர் (Motion Picture Editor), ஓவியத் தொகுப்பாளர் (Art Editor) போன்றும் இன்னும் பல திறத்திலும் இப்பொருண்மையுடையோர் காணப்படுகின்றனர். இவற்றுள் பதிப்பாசிரியர் என்ற பெயரில் சில அமைவுகளும், ஆசிரியர் என்றபெயரில் சில அமைவுகளும், தொகுப்பாளர் என்ற பெயரில் சில அமைவுகளும் நிலவுவதைக் காணலாம். இவை அடிப்படையில் ஒரே பணித்தன்மையைக் கொண்டனவாக இருப்பினும் இடத்திற்கேற்ப வேறு பெயர் கொண்டனவாக அமைகின்றன. பொதுவாகப் பதிப்பாசிரியர் என்ற சொல்லைப் பயன்படுத்துவது அவற்றின் ஒற்றுமை நயம் கருதியேயாகும். வேற்றுமை நயம் கருதும்போதுதான் அவற்றைப் பிரித்துப்பார்த்து அவற்றிற்குரிய பணித்தன்மையைக் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது. இப்பதிப்பாசிரியர்கள் ஒவ்வொருவரின் பணிநிலைகளையும் கடமைகளையும் நோக்குவதால் அக்கடமைகளினிடையே ஒரு பொதுத்தன்மை நிலவுவதை நம்மால் உணர முடியும். பணியின் செயற்பாடுகள் வேறுவேறாக அமையுமேயன்றிப் பிறிதில்லை.

இப்பதிப்பாசிரியர்களை ஆய்வு நோக்கிற்காக நாம் இருவகையில் பிரித்துக் காணலாம். தொழில்சார் பதிப்பாசிரியர்கள் (Technical Editors), கல்விசார் பதிப்பாசிரியர்கள் (Academic Editors) என. திரைப்படத் தொகுப்பாளர் (Motion Picture Editor), ஓவியத் தொகுப்பாளர் (Art Editor) போன்றோர் முன்வகையைச் சேர்ந்தவர்கள்; ஏனையோர் பின்வகையைச் சேர்ந்தவர்கள்.

திரைப்படத் தொகுப்பாளர்

இத்திரைப்படத் தொகுப்பாளரின் பணி மிக இன்றியமையாததொன்றாகும். இங்கும் Editor என்ற சொல்லே

அவர் பணியைக் குறிக்கும் சொல்லாக அமைகின்றது. இச்சொல்லிற்குத் தொகுப்பாளர் என்றே பொருள் கொள்ள வேண்டியுள்ளது. இத்தொகுப்பாளருக்கு முதல்வேலை நறுக்குதலாக இருப்பினும் இவ்வேலை சிறப்பது தொகுப்பதினால் ஆதலின் இவருக்குத் தொகுப்பாளர் என்று பெயர் வந்தது. திரைப்பட வெளியீட்டில் இவர்தம் பணியைக் குறிக்கும்பொழுது, "படத்தொகுப்பு" என்று சுட்டுதலும் 'எடிட்டர்' என்று சொல்லுதலும் அவற்றை வெளிப்படுத்திக் காட்டும்பொழுது கூடவே ஒரு கத்திரிக்கோலை இணைத்துக் காட்டுதலும் இவ்வுண்மையைப் புலனாக்கும். வளர்ந்த துறையான தொலைக் காட்சியிலும் இத்தகைய தொகுப்பாளர்கள் உள்ளனர். இவர்தம் பணியை

> to adopt (film) as for television or motion picture, by rearranging, cutting and splicing (New Webster's Dictionary, 1971)

> To prepare a film for the cinema or recordings for broadcasting by eleminating unwanted material (OED Supplement Vol.I)

இத்திரைப்படத் தொகுப்பாளரை நறுக்குவோர் (*cutter*) என்றே கூறுவர் (*World Book, Vol. 13*). ஒரு நாளைய படப்பிடிப்பு முடிந்தவுடன் அவற்றுள் நன்முறையில் அமைந்த காட்சிகளை முதற்கண் தேர்ந்தெடுத்துக்கொள்கிறார். பிறகு படத்திற்கான அனைத்துப்படப்பிடிப்பும் முடிந்தபின் தேர்ந்த காட்சியெடுப்புகளை (*film shots*) சாதாரண நிலையில் வெட்டிச் சேர்க்கிறார் (*Rough cut*). அதன்பின் அச்சாதாரணத் தொகுப்பிற்குள்ளான படத்தொகுப்பை மீண்டும் இறுதித் தொகுப்பிற்குக் (*Final cut*) கொண்டு வருகிறார். இதுவே படத்தொகுப்பாளரின் பணி.

படத்தைத் தொகுத்தளிக்கும் படத்தொகுப்பாளர் பல நிகழ்ச்சிகளை மனத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது. தனித்த பலவேறுபட்ட காட்சியெடுப்புகளை (*Film shots*) முறையான வெளிப்பாட்டில் ஒன்றுசேர்த்துச் சீரிய கதையமைப்பை உருவாக்கித் தரவேண்டிய நிலையில் அத்தொகுப்பாளர் இருக்க வேண்டும். படத்தை நுகர்வோர், ஓரிடத்தின் நிகழ்ச்சிக்குப்பின் அடுத்த நிகழ்ச்சியை முறையே நுகர முடிகின்ற அளவிற்கு அக்காட்சியை அமைத்துத் தரவேண்டுமென்ற உணர்வும் அவருக்கு இருக்க வேண்டும். படத்தொகுப்பு என்பது உணர்வின்

ஓத்திசைவையும் (*Sensibility to rhythm*), விறுவிறுப்பையும் (*tempo*) உண்டாக்கும் தன்மையது. சான்றாகக் காட்சியெடுப்புகளில் உண்டாகும் எதிர் பாராத மாற்றங்கள் (*abrupt to changes in shots*) காணுதற்கு வேண்டுமானால் களிப்பூட்டுவனவாக அமையலாம். அவையும் துப்பாக்கிச் சண்டை போன்ற காட்சிகளுக்குத்தான் பொருந்தும், உணர்வியல் காட்சிகளுக்குப் பொருந்தாது (*World Book, Vol.13*).

இச்செயற்பாடுகளின் நுண்மைக் கூறுகளை நாம் நூற்பதிப்பிற்கும் பொருத்திக் காணமுடியும். நுகர்வோரின் ஏற்பிற்குப் பொருந்துமாறு செய்யப்படும் எந்தவொரு பணியும் சிறந்த பணியாக அமையும்.

ஓவியத் தொகுப்பாளரும் மற்றும் வானொலித் தொகுப்பாளரும் ஏறத்தாழ இத்தகைய பணிநிலைகளைக் கொண்டவர்களே.

பத்திரிகைப் பதிப்பாசிரியர்

பத்திரிகையியலைப் பொறுத்தவரை ஆசிரியருக்கும் பதிப்பாசிரியருக்கும் பொருள் வேறுபாடு இல்லாதநிலையிலேயே இருவேறு சொற்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. பத்திராசிரியர் என்பதற்குப் பத்திராதிபர் என்ற பொருளைத் தந்து அச்சொல்லிற்குப் பத்திரிகையை நடத்தும் தலைவர் (*Editor of a Journal*) என்று பொருள் கூறப்படுகின்றது (சென்னைப் பல்கலைக்கழக அகராதி, தொகுதி 4). இன்றும் ஒவ்வொரு பத்திரிகையின் முழுமையான பதிப்புப் பணிகளைக் கவனிக்கும் தன்மை பெற்றவர்க்கு ஆசிரியர் (*Editor*) என்ற சொல்தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தினமணி ஆசிரியர் ஐராவதம் மகாதேவன், துக்ளக் சோ போன்ற எடுத்துக்காட்டுகள் மேற்கருத்தை விளக்கும். பத்திரிகையியலில் தலைமையிடம் பெறுவது செய்தித்தாளாதலால் அதன் உருவாக்கத்தில் ஆசிரியரின் கடமை இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் பத்திரிகையியல் என்பது சமுதாய மாற்றத்தை மதிப்பிடுகின்ற முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் பொது நோக்கங்களின் சூழல்காட்டி (*Barometer*) யாகவும் விளங்குகின்றது (*John Hohenberg 1978, P. 3*). செய்தித்தாளைப் பொறுத்தவரை ஆசிரியரும் பதிப்பாசிரியர் பலரும் தொழில் சார்ந்த பணியாளர்களுமாக இணைந்து உருவாக்கப்படுகின்றது என்பது

வெளிப்படை. ஆசிரியர் (*Editor*) தலைமையில் ஒரு பதிப்பாசிரியர் குழு இடம் பெறுகின்றது. இறுதிமுடிவும் உறுதியான முடிவும் ஆசிரியரின் உள்ளத்தைப் பொறுத்ததே.

பத்திரிகையாளருக்கு என்னென்ன குணநலன்கள் அமையவேண்டும், என்னென்ன கடமைகள் உண்டு என்பன பதிப்புத் (*Editing*) தொடர்பிலுள்ள அனைவருக்கும் பொருந்துவனவாகவே உள்ளன. துணிவு, உறுதிப்பாடு (*Persistence*) வலிமை (*vitality*), தொழில் நேர்மை (*moral purpose*), போர்க்குணம் (*aggressiveness*), ஒப்பற்ற எழுத்தாளுமை, தொழில்நுட்ப மேம்பாடு (*Technical Excellence*) போன்றவை ஒரு பத்திரிகை ஆசிரியருக்குரிய குணங்களாக வரையறுக்கப்படுகின்றன (*John Hohenberg, 1978, P. 100*). செய்தித்தாளில் வரும் அனைத்துச் செய்திகளுக்கும் அவ்வாசிரியரே பொறுப்பாளியாகிறார். செய்தித்தாள் நிலையில் ஆசிரியர் அல்லாமல் *News editor, copy editor, top editor* என்று பதிப்பாசிரியர்கள் பலர் காணப்படுகின்றனர். இவ்வொவ்வொருவரின் கடமையையும் காணுதல் விரிந்துபடும் என்பதால் நகல் பதிப்பாசிரியர் (*copy editor*) என்பவரின் செயற்பாடுகளை மட்டும் காணுதல் பயனுடையதாகவும் எல்லாப் பதிப்பாசிரியர்களுக்கும் பொருந்துவனவாகவும் அமையும்.

நகல் பதிப்பாசிரியர் ஒவ்வொரு கருத்துக்கோவையையும் மூன்று முறை படிக்க வேண்டும். முதன்முறையில் எந்தவிதமான ஒதுக்குதல் (*editing*) வேலையையும் செய்யாமல் அக் கருத்துக்கோவையின் பொருளமைதியினை மட்டும் நோக்கவேண்டும். வேண்டுமானால் எழுத்துப்பிழைகளைக் களைதலையும் மிகுதியான காற்புள்ளியை அகற்றுதலையும் மட்டுமே செய்யலாம். இரண்டாம் முறை படிக்கும் பொழுதுதான் ஒதுக்குவதும் சேர்ப்பதுமாகிய முழுமையான பதிப்பு வேலைகளைச் செய்ய வேண்டும். மூன்றாம் முறை படிப்பதன்மூலம் இனிமேல் அதனுள் பிழையில்லை என்பதை அவர் உறுதி செய்யவேண்டும் என்று அவர்க்குரிய கடமைகள் உரைக்கப்படுகின்றன (*Thomas Berner, 1982, P. 44*).

மேலும் அக்கருத்துக்கோவைகளின் மிகுதியான நீளத்தைக் குறைப்பதும் அவற்றிற்குரிய பொருத்தமான தலைப்பினையிடுவதும் அவர்க்குரிய பணிகளாகும். அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்கக்கூடியவர் தலைமைப் பதிப்பாசிரியர்

என்றும், மேலாண்மைப் பதிப்பாசிரியர் என்றும் பதிப்பாசிரியர் (ஆசிரியர்) என்றும் அழைக்கப்படுகின்றார். இவர் செய்தித்தாள் பற்றிய அனைத்துக் கூறுகளிலும் தெளிந்த அறிவுடையவராகவும் மக்களை '(நுகர்வோரை) எப்படி அணுகவேண்டும் என்பதைத் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும் (*World Book, Vol. 14*). அப்பொழுதுதான் அப்பதிப்புப்பணி சிறந்ததாக அமையும்.

மலர் ஆசிரியர் (Magazine Editor)

மலர் (இதழ்) ஆசிரியர்கள் நூற்பதிப்பாசிரியர்க்குரிய பொறுப்பும் கடமையும் கொண்டவர்கள். கட்டுரைகள், கதைகள் போன்றனவும், பிறவும் எவை எவை மலருள் இடம்பெற வேண்டும் என்பதை முடிவு செய்கிற பொர்றுப்பு ஆசிரியருக்கு உண்டு. மலரில் இடம்பெறும் செய்திகள் பலவும் கிடைத்தவுடன் அவற்றை நன்கு நோக்கி அவற்றின் மெய்ம்மையையும் (*Accuracy*), எளிமையையும் (*readability*) சரிபார்க்கிற பொறுப்பும் அவருக்கிருக்கிறது.

மலருக்கான கட்டுரைகளையும் பிறவற்றையும் மற்றவரிடமிருந்து பெறுவதில் மட்டுமன்றி மறுப்பதிலும் பதிப்பாசிரியரின் கடமையுறுதி பொதிந்திருக்கின்றது (*Chalapathi Rao, 1984*. பக். *89*). ஏனென்றால் மலரின் தன்மை, அதன் வடிவம், அழகு போன்றவற்றில் அவர் மிகவும் கவனமாக இருக்கவேண்டியுள்ளது.

பதிப்பாசிரியராக இருந்தாலும் அச்சுப்படி திருத்துவதிலும் அவர் சிறந்தவராக இருக்கவேண்டும். ஒரு நல்ல பதிப்பாசிரியரிடத்தில் குறை காணுதற்கியலாதவகையில் எழுத்துப்பிழைகள் தோன்றாதிருக்கவேண்டும்.

கலைக்களஞ்சிய அகராதிப் பதிப்பாசிரியர்கள்

முதன்மைப் பதிப்பாசிரியர், பதிப்பாசிரியர்கள், துணைப்பதிப்பாசிரியர்கள், தொகுப்பாளர்கள் என்ற முறையில் அடங்கிய குழு களஞ்சிய அகராதிப் பணிகளை மேற்கொள்கின்றது.

கட்டுரைகளைத் தாங்களே எழுதியும், செய்திகளை வல்லுநர் பலரிடமிருந்து திரட்டியும் தொகுத்துக்கொள்கின்றனர். தொகுக்கப்பெற்றவை அனைத்தும் பதிப்பாசிரியர் குழுவினால் ஆய்வு செய்யப்பெற்று மீண்டும்

துறைவாரியான வல்லுநர்களால் சரிபார்க்கப்படுகின்றன. அடுத்து முதன்மைப்பதிப்பாசிரியரின் பார்வைக்குப்பிறகு அவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. செய்திகளைப் பிறர் கொண்டு திரட்டுவது முதல் தொகுத்து வகைப்படுத்திச் சரிபார்த்து ஏற்றுக்கொள்வது முடிய பதிப்பாசிரியர் குழுவின் தலையாய பணியாக அமைகின்றது.

தனி ஒருவராலும் களஞ்சியத்தைப் பதிப்பிக்க முடியும் என்பதற்கு அபிதான சிந்தாமணி சான்றாகும். ஆ.சிங்காரவேலு முதலியார் அவர்கள் தனது முகவுரையில் இதனைக் குறிப்பிடும்போது "நான் ஒருவனே பலர் கூடிச் செய்யவேண்டிய இதனைக் கலேகபோத நியாயமாகப் பலவிடங்களில் சென்று பல அரிய கதைகளைத் தொகுத்த"தாகக் கூறுகிறார். மேலும் அபிதான சிந்தாமணியை எழுதப்புகுங்கால் அவர் மேற்கொண்ட சில செயற்பாடுகளையும் குறிக்கிறார். 'இதனை எழுதப்புகுங்கால் சிலர் வாயிலாகக் கேட்டதை அப்போதைக்கப்போது மறப்பெனும் கள்வன் அவற்றை வஞ்சியாது என் கைப்புத்தகத்தில் முதலில் குறித்துவைத்துக்கொண்டு, பின்னர் கதையெழுதும் புத்தகத்தில் பதித்து, அவற்றைச் சின்னாள் பொறுத்து, அகராதி முறைப்படுத்தி மீண்டும் பெயர்த்து எழுதினேன்' (ஆ. சிங்காரவேலு முதலியார், 1986) என்று கூறுவார். இக்கூற்றினுள் இரண்டு உண்மைகள் அடங்கியுள்ளன. ஒன்று அவருக்கு அப்பணியில் இருந்த பொறுமை உணர்வு; இரண்டு அயராத முயற்சி. இவ்விரண்டு உணர்வுகளும் பதிப்பாசிரியருக்கு மிக இன்றியமையாதவை.

அகராதி, களஞ்சியப் பணிகள் தனித்தாயினும் கூட்டு முயற்சியினாயினும் செய்யப்பெறும்பொழுது அவற்றுள் தம் முழு நேரத்தையும் செலவிடுகிற கடமை உணர்வு பதிப்பாசிரியருக்கு இருக்க வேண்டும். இல்லையெனில் பணியும் நிறைவடையாது நிறைவடைந்தாலும் சிறக்காது. பாலி ஆங்கில அகராதியின் தயாரிப்புப் பணியைப் பற்றி அதன் பதிப்பாசிரியர் கூறும் பொழுது அகராதிப்பணி என்பது ஒருவரின் இடைப்பட்ட காலத்திலோ (enpassant) எஞ்சிய நேரத்திலோ (spare time) செய்யவியலாதது; அவரின் முழு நேரத்தையும் அதற்காகவே செலவிட வேண்டும் என்று கூறுவார் (William Stede, 1975).

இவ்வாறு இப்பதிப்பாசிரியர்க்குள்ள கடமையுணர்வுகளும் பிறவும் ஒரு சுவடிப்பதிப்பாசிரியர்க்கும் மிக இன்றியமையாது

வேண்டப்படுகின்றன. புதியன உருவாக்கும் திறமும், இருப்பதை வெளிக்கொணரும் திறமும் மேற்கூறப்பெற்ற பதிப்பாசிரியர்களின் பொதுமைக் கூறுகளைக் கொண்டவர்க்கே கைவரப்பெறும்.

நூற்பதிப்பாசிரியர்கள் (Book Editors)

நூற்பதிப்பாசிரியர்கள் என்ற வடிவில் நாம் இங்குக் கருதுவது இலக்கிய இலக்கண நூற்பதிப்பாசிரியர்களையே. அவர்களுள்ளும் இருப்பவற்றை வெளிக்கொணருபவரும், புதியன படைப்பவரும் என இருதிறத்தோர் உள்ளனர். இருப்பவற்றை வெளிக்கொணரும் தன்மையரே இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார். இருப்பவை என்பது இதற்கு முன் வெளிவரப்பெறாத சுவடியில் உள்ளனவும், வெளிவந்து அருகியனவுமாகும். இவ்விருநிலையிலும் நூல்கள் பதிப்பிக்கப்பெறுகின்றன.

சிறப்பாகச் சுவடியில் உள்ளவற்றைப் பதிப்பிக்கும் ஆசிரியர் என்னென்ன தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும், என்ன என்ன கடமையுணர்வுகள் கொண்டிருக்கவேண்டும் என்பனவற்றையெல்லாம் அறிவார்ந்த பதிப்பாசிரியர்கள் பலரும் திறம்படக் கூறிச்சென்றுள்ளனர். வையாபுரிப்பிள்ளை, தாமோதரம்பிள்ளை, சண்முகம்பிள்ளை போன்றோர் பல கட்டுரைகளில் மேற்கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளனர்.

சுவடிப் பதிப்பாசிரியர்களைப் பொறுத்தமட்டில் அவர்களின் பணியை இருநிலைகளில் பகுத்துக் காணலாம்.

1. சுவடி பெயர்த்தெழுதுவதற்குமுன்
2. சுவடி பெயர்த்தெழுதிய பின்

சுவடி பெயர்த்தெழுதுவதற்கு முன்

ஒரு சுவடியைப் பதிப்பிக்க எடுத்துக்கொண்டவுடன் அதன் பிரதிகள் இன்னும் உள்ளனவா என்று அறிந்து தேடுதலில் முயலவேண்டும். உ. வே. சாமிநாதையர் சுவடி தேடி அலைந்த நிகழ்ச்சிகளை அவர்தம் நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். சுவடி நூலக அட்டவணைகளைக் கண்டு அவற்றின் படிகளைப்பெற்ற பின் அவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பதிப்பிற்குத் தெரிந்தெடுத்துக்கொள்வதில் பதிப்பாசிரியர்

மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். அதன் நிலை (முழுமை அல்லது குறை) தன்மை, காலம், செம்மை போன்ற பல கூறுகளின் அடிப்படையில் அத்தேர்வு நடைபெறும். ஆசிரியர் தம் கையாலேயே எழுதிய பிரதியை (*Autograph*) பெறுவதென்பது இயலாதது. வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் தாமே எழுதிய சுவடிகள் இன்னும் இருப்பதாகக் கூறுவர். சுவடி பெயர்த்தெழுதுபவர் எழுதிய சுவடிகளே (*Holograph*) நமக்குக் கிடைப்பதால் அவற்றுள் மேற்கண்ட கூறுகளைக் கொண்டு மூலப்பிரதியைத் தேர்ந்தெடுப்பர். அவ்வாறு தேர்ந்தெடுத்த பிரதியை ஆதாரமாகவும் ஏனையவற்றை அதற்குத் துணையாகவும் கொள்ளுவர். அதன்பின் அம்மூலப்பிரதியை அதன் தன்மைக்கேற்பப் பெயர்த்தெழுதுவர்.

சுவடி பெயர்த்தெழுதிய பின்

நூல் முழுமையும் பெயர்த்தெழுதிய பின் பலவற்றோடும் ஒப்பிட்டுப் பாடவேறுபாடுகளைப் பட்டியலிட்டுக் குறித்துக்கொள்வர். அவற்றுள் எவற்றை நூலுள் குறிப்பிட்டுக் காட்டவேண்டும் என்பதும், எந்தப் பாடத்தை இறுதிசெய்து உறுதிப்படுத்த வேண்டும் என்பதும் பதிப்பாசிரியரின் பொறுப்பே.

பாடவேறுபாடுகளை ஒப்பிடும்பொழுது வரிக்கு வரி, சொல்லுக்குச்சொல், எழுத்துக்கு எழுத்து ஒப்பிட வேண்டும் என்று கூறுவர். அவ்வாறு ஒப்பிடும்போது மூலத்திற்கு ஒவ்வாத பொருள்தரும் பிழையான பாடங்களைக் களைந்து அதனைத் திருத்துவது பதிப்பாசிரியரின் கடமையாகும்(*Chakkaraborti, 1975, P. 317*). திருத்தப்பட்ட பாடத்தை மூலத்திலும், பிழையாய் இருந்த பாடத்தை அடிக்குறிப்பிலும் தருதல் வேண்டும். விளங்காத பகுதியையும், பாடத் திருத்தத்திற்கான கருதுகோளையும் அடிக்குறிப்பில் தரவேண்டும். அவ்வாறு தருவது நுகர்வோரின் ஆய்வு நோக்கிற்குப் பெரும்பயன் அளிப்பதாக அமையும். அதன்பின் அவற்றை ஒழுங்குபடுத்தி வேண்டியவற்றிற்கு விளக்கம் தந்து வேண்டும் பின்னிணைப்புகளுடனும் பிறவற்றுடனும் அச்சுக்கு ஏற்ற நிலையில் தயார் செய்தல் வேண்டும். இவ்வாறு இருநிலைகளிலும் செய்யப் பெறுகின்ற வேலைகள் அனைத்தும் பதிப் பாசிரியர்க்குரியன.

தகுதியும் கடமையும்

இத்தகு பதிப்புப் பணியை மேற்கொள்ளுகிற பதிப்பாசிரியர் பல்வகைத்திறனும் பெற்றவராக இருக்க வேண்டும். பலதுறை அறிவும் கைவரப்பெற்றவராக இருந்தால்தான் பதிப்பின் திறம் நன்கு வெளிப்படும்.

ஒரு சுவடிப் பதிப்பாசிரியர் நல்ல சுவடிப் பெயர்ப்பாளராகவும் (*Transcriber*), எழுத்தமைதியியல் அறிவு (*Palaeographic knowledge*) கொண்டவராகவும், மொழியியல் சிந்தனை (*Linguistic thoguht*) உடையவராகவும், சிறந்த இலக்கண அறிஞராகவும் (*Grammarian*), சொல்வளம் (*Copiousness of language*) கைவரப்பெற்றவராகவும், திறனாய்வாளராகவும் (*critic*) இருக்கவேண்டும் என்று கொள்வது பதிப்புச் செம்மை கருதியேயாகும்.

சுவடி பெயர்த்தெழுதுவது என்பது எல்லாராலும் செய்யவியன்ற எளிய செயலன்று. அதற்கெனத் தனிப்பயிற்சி பெற்றவரும் மரபுவழிக் கற்றவருமாகிய சிலரால் மட்டுமே செய்யவியலும். பிழையற்ற முறையில் எழுதப்படும் பெயர்ப்பே பதிப்புப்பணியின் சிக்கலைக் குறைக்கத் துணை செய்யும். அவ்வாறு செய்வதற்கு முதற்கண் யாப்பியல் அறிவு மிக இன்றியமையாதது. யாப்பின் பல்வேறு நிலைகளையும் அறிந்தவராலேயே அந்தந்தக் கால இலக்கியங்களைப் பெயர்த்தெழுதிப் பதிப்பிக்கவியலும்.

பதிப்பிற்கு இன்றியமையாததான பெயர்த்தெழுதுதலும், ஒப்பு நோக்கலும் இலக்கண அறிவும், சொல்வளமும் கொண்ட பதிப்பாசிரியரால்தான் செய்தற்கியலும். சுவடியைப் படிக்கும்பொழுது ஏற்படுகிற பல்வேறு பிழைகளும் பாட வேறுபாடுகளும் பதிப்பிற்குப் பல்வேறு சிக்கல்களை உண்டாக்கக் கூடும். பெயர்த்தெழுதுவதிலும் படிப்பதிலும் உண்டாகிற குறைபாடுகளை டாக்டர் உ. வே. சா. அவர்கள் தம் நூல்களுள் பலவிடங்களிலும் சுட்டியுள்ளார். இது தமிழுலகிற்கு மட்டும் உரியதன்று. கிரேக்கத்திலும் இந்நிலை இருந்தது என்பதை நம்மால் உணர முடிகின்றது. 'ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும்' என்ற சொற்றொடர் (*phrase*) தவறாகப் படிக்கப்பெற்றதன் விளைவாகும்.

Kamilos - rope
kamelos - camel

கயிறு என்று பொருள் தரும் சொல்லை (*kamilos*), ஒட்டகம் என்று பொருள் தரும் சொல்லாகப் (*kamelos*) படித்ததன் விளைவே மேற்குறிப்பிட்ட சொற்றொடராகும். இச்சொற்கள் பாடவேறுபாட்டிற்குட்பட்டன என்பதைக் கிரேக்க - ஆங்கில அகராதி தெளிவுபடுத்தியுள்ளது (*Greek-English Dictionary, 1968*).

இத்தகைய வேறுபாடுகள் தோன்றாதிருக்க வேண்டுமெனில் எழுத்தமைதியியல் (*Palaeography*) அறிவைப் பெற்றிருக்க வேண்டும். காலந்தோறும் இடந்தோறும் எழுத்துகளின் வடிவம் மாறும் என்பதைப் பதிப்பாசிரியர் தெரிந்துகொள்ளவேண்டும் என்பர் (மு.சண்முகம் பிள்ளை, 1984). குறில் நெடில் வேறுபாடுகளைச் சுட்டும் குறியீடுகள் காலத்திற்குக் காலம் சுவடிகளில் வேறுபட்டிருக்கும் என்பதையும், அவற்றின் வடிவ வளர்ச்சிநிலைகளையும் அறியும்பொழுது பாட வேறுபாடுகள் குறைவதோடு சுவடிகளின் காலநிலையைக் கணிப்பதற்கும் ஏதுவாகும்.

பெயர்த்தெழுதும்காலும், அதன்பிறகும் நடைபெறும் பதிப்புப்பணிகள் திறம்பட நடைபெறுதற்கும் பதிப்பாசிரியரின் சொல்வளத்திறன் குறிக்கத்தக்க இடம் வகிக்கின்றது. நிரம்பிய சொற்களை அவர் அறிந்திருக்கவேண்டும். சான்றாக 'கொளஎ' என்ற சொல்லைக் காண்போம். இதனைக் 'கொளஎ' என்றும் 'கொள்' என்றும், 'கோள்' என்றும், 'கோளஎ' என்றும் 'கேரஎ' என்றும் படித்தற்கியலும். இவ்வாறு படித்துப் பொருண்மை காண்பதற்கு நிரம்பிய சொல் தொகுதியை (*Vocabulary*) மனத்துள் பெற்றிருக்கவேண்டும். அவ்வாறு இருந்தாலன்றி முன்னும் பின்னும் இயைய உச்சரித்துப் பல்வேறு பொருளைக் கண்டு உண்மைப் பொருளைத் தெளியமுடியாது.

வட்டாரமொழிக் கூறுகளை ஒருவாறு அறிந்திருந்தால் இது எவ்விடத்தில் எழுதப்பட்ட சுவடி யென்பதைத் தெரிந்துகொள்ள வியலும். சில பகுதிகளில் மட்டுமே வழக்கத்திலிருக்கும் வழக்குச்சொற்களை அறிந்து அதற்குரிய பொருளை அளிக்கவும், இருவேறிடத்தில் வழக்கத்திலிருக்கும் சொற்களை அறிந்து அவற்றிற்கேற்பப் பொருளுரைக்கவும் அத்தகைய மொழியியல் அறிவு இன்றியமையாததாகும்.

பரந்துபட்ட நூற்புலமை பெற்றவராகப் பதிப்பாசிரியர் விளங்கவேண்டும். பதிப்பித்தற்கு எடுத்துக்கொண்ட பொருளை விளக்குவதற்கும், நடுவு நின்று வேறுபடுத்திக் காட்டுதற்குமுரிய

திறனாய்வுஉணர்வு நூற்புலமை இருந்தாலொழியச் சிறப்படையாது. பண்டைய உரையாசிரியர்கள் அனைவரும் இத்தகு திறம் வாய்ந்தவர்களே. நூல்களுக்குத் தம் புலமை நலத்தால் உரைவகுத்து அவற்றை அவர்கள் வெளிக்கொணர்ந்து காட்டியமையும் ஒருவகைப் பதிப்புப் பணியேயாகும்.

இவை போன்ற பல்வேறு இன்றியமையாக் கூறுகளோடு பதிப்பாசிரியர் ஒரு சிறந்த மெய்ப்புத் திருத்துநராகவும் (Proof reader) திகழவேண்டுவதும் குறிப்பிடத்தக்கதாகும். நூலின் சிறப்பிற்கு அது பிழையின்றி வெளிவருவது அடிப்படைக் காரணமாகும். எனவே பிழைதிருத்தத்தில் பதிப்பாசிரியரின் முடிவே இறுதியானதாக அமையவேண்டுவதால் அப்பணி செம்மை பெறச் செய்யப்பெறுதல் வேண்டும். மெய்ப்புத் திருத்துநர் எப்படியிருக்கவேண்டும், திருத்துமுறை எப்படி அமையவேண்டும் என்பதைப் பல்வேறு நூல்கள் எடுத்தியம்புகின்றன. நூலின் வடிவம் தெரிந்தெடுத்தல்முதல் அதன் வண்ணம் தெளிவது வரையிலும் முழுக்கவனத்தையும் பதிப்பாசிரியர் செலுத்த வேண்டும்.

மேற்கூறப்பட்ட தொழில்சார், கல்விசார் பதிப்பாசிரியர்களின் செயற்பாடுகள் வெவ்வேறாக அமைந்திருப்பினும் அவற்றினுள்ளே காணப்படுகின்ற நெறி முறைகளும் நுட்பங்களும் அனைவர்க்கும் பொதுவானவையே.

நூற்பட்டியல்

1. சண்முகம்பிள்ளைமு. பாடவேறுபாடுகளும் பதிப் பாசிரியர்களும்', தமிழ்க்கலை,(காலாண்டு ஆய்விதழ், தமிழ் 2 கலை 1) தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.

2. சண்முகம் பிள்ளை மு.'முகவுரை' தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை தொகுதி ஒன்று, த. கோ. பரமசிவம் (பதி), தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1987.

3. சிங்காரவேலு முதலியார் அபிதான சிந்தாமணி, ஆசியன் கல்விக்கழகம்,புதுடில்லி, 1986.

4. வையாபுரிப்பிள்ளை, ச. தமிழ்ச்சுடர்மணிகள்.

5. Chakkarborti, M. L., Bibliography in Theory and Practice, The world Press Private Limited,Second Revised edition, Calcutta, 1975.

6. *Chalapathi Rao, M.Journalism and Politics,*
Vikas Publishing House Pvt., Ltd.,New Delhi, 1984.

7. *Henry George Liddell Greek-English Dictionary*
& Robbert Scott The Clarendon Press,Oxford, 1968.

8. *John Hohenberg The Professional Journalist,*
Columbia University, New, York, 1978.

9. *Katre, S. M. Introduction to Indian Textual Criticism,*
Deccan College,Poona, 1954.

10. *New Webster's Dictionary, Delair Publishing Company,* 1971.

11. *Rhys Davids, T. W. Pali-English Dictionary,*
William Stede Oriental Books Reprint Corporation,
54, *Rani Jhansi Road,New Delhi,* 1975.

12. *Sham Singh Sindhu Guide to Proof Reading,*
Hindustan Times Press,New Delhi, 1940.

13. *The Oxford English Dictionary Volume III,*
The Clarendon Press, 1961.

14. *The Oxford English Dictionary Supplement Volume I*
The Clarendon Press.

15. *Thomas Berner, R. Editing, CBS College Publishing,*
New York, 1982.

16. *World Book E Volume* 6 *Child Craft International Inc.,*
Chicago.

17. *World Book M Volume* 13
Child Craft International Inc.,Chicago.

18. *World Book N-O Volume* 14,
Child Craft International Inc.,Chicago.

நூலாக்கத்தில் தாள் சுவடிகளும் ஓலைச்சுவடிகளும்

ம. இராசேந்திரன்

முன்னுரை

காலமும் இடமும் கடந்து நிலைத்துநிற்க, கருத்துக்கள் பதிவு செய்யப் படுகின்றன. கால்களில் இரண்டைக் கைகளாக மாற்றிக்கொண்டு விலங்கினின்று மனிதன் வேறுபட்ட காலம் முதல் கருத்தறிவித்தல் இருந்திருக்கிறது. மனிதகுல வரலாற்றில் தொன்மைப் பொதுவுடமைச் சமுதாயத்தில் வேட்டைக்குச் சென்ற இடம் பற்றியும் வேட்டையாடிய விலங்குபற்றியும், வேட்டையாடிய முறை பற்றியும், கோடுகளால் அக்கால மக்கள் வரைந்து காட்டியுள்ளனர். இவ்வாறு தொடர்ந்து ஒவ்வொரு கட்ட சமுதாய வளர்ச்சியின்போதும், பதிவு செய்யும் முறையிலும் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தும் பொருள்களிலும் பல்வேறு வகையான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அவ்வகையில் தொன்மையான வரலாற்றிற்குரியவர்களாகிய சுமேரியர்கள் பச்சைக் களிமண்ணைப் பயன்படுத்தியுள்ளனர். எகிப்தியர்கள் கி. மு. நான்காம் நூற்றாண்டிலேயே கிரேக்கத்திற்கு ஏற்றுமதி செய்ததோடு தாங்களும் பேப்பிரசைப் பயன்படுத்தியுள்ளனர். ஆசியாவைச் சார்ந்தவர்கள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் பர்ச்மெண்ட் (Parchment) எனும் விலங்கின் தோலையும் கி. பி. முதல் நூற்றாண்டு முதல் பேப்பிரசையும் இரண்டாவது நூற்றாண்டில் கோடக்சை (Codex)யும் பயன்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு அந்தந்த நாட்டுச் சூழலுக்கு ஏற்பவும் கிடைக்கும் பொருள்களுக்கு ஏற்பவும் செய்யப்படும் பொருள்களில் நிலவிய வேறுபாடுகள் பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பியர் குடியேற்ற ஆதிக்கத்தாலும் இன்று அறிவியல் வளர்ச்சியாலும் குறைந்து வருகின்றன. இந்தியாவில் கல்வெட்டு, ஓலை, செப்பேடு, தாள், அச்சு, ஒலிப்பதிவு, ஒலி ஒளிப்பதிவு, கணிப்பொறி என்று கருத்துப்பதிவு பல்வேறு வகையில் வளர்ந்து வருகிறது. அவற்றுள் ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் உள்ள தமிழக வரலாற்றின்

பன்முகப் பாங்கையும் வெளிப்படுத்தும் கருத்துப் பதிவுகளைத் தம்மகத்தே கொண்டுள்ள தாள் சுவடிகளின் நூலாக்க நெறிமுறைகளை ஓலைச்சுவடிகளின் நூலாக்க நெறிமுறைகளுடன் ஒப்பிட்டு ஆய்வது இக்கட்டுரையாகும்.

தாள்: கடுதாசி என்பது (லெக். 673) போர்த்துக்கீசியச் சொல்லாகிய கேர்டாசு (*Cartaz*) என்பதிலிருந்தும் காகிதம் என்பது மராத்தியச் சொல்லாகிய காகடா (*Kagada-Kagaz in Urudu*) என்பதிலிருந்தும் தமிழில் வந்து சேர்ந்துள்ளன. தமிழிலேயே அப்பொருளுக்குத் 'தாள்' என்பது வழங்கிவருகிறது (லெக். 1355).

எகிப்தின் நைல் நதிக்கரைப் பகுதியிலுள்ள 'பேப்பிரசு' (*Papyrus*) எனும் ஒருவகையான தாவரத்தின் பகுதியை எழுதுவதற்குப் பயன்படுத்திய காரணத்தினால் 'பேப்பர்' (*Paper*) எனும் பெயர் தோன்றியுள்ளது. இதனாலேயே 'விவிலியம்' 'பைபிள்' என்று அழைக்கப்பட்டது. என்பர்.[1] நான்காயிரம் ஆண்டுகட்கும் முற்பட்ட கிரேக்க ரோமானிய பேப்பிரசு சுவடிகள் கெய்ரோ,(*National Museum*) இலண்டன், பெர்லின் ஆகிய இடங்களில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன[2].

தாள் உற்பத்தி ஆலை வரலாறு

இயற்கையாகக் கிடைத்தவற்றை எழுதுவதற்குப் பயன்படுத்திவந்த மக்கள் வளர்ச்சிப் போக்கில் எழுதிவைத்தற்குரிய பொருளை உற்பத்திசெய்யத் தொடங்கினர். கி. பி. 150இல் சீனப் பேரரசின் அரசவையிலிருந்த 'சைலுன்' (*Tsai Lun*) எனும் அலுவலர் மல்பரி (*Mulberry*) முதலான இழைகளை மீன்வலை, பழையதுணி, கூடை ஆகியவற்றின் துண்டுகளுடன் சேர்த்து ஒற்றைத்தாளாக உருவாக்கியுள்ளார்.

பின்னர் தாள் செய்யும் கலை மைய ஆசியாவின் சமர்கந்து (*Samarkand*) பகுதிக்கு கி. பி. 751இல் சென்றுள்ளது. கி. பி. 793 இல் அருன்-ஆர்-இரசீது (*Harun-ar — Raschid*) காலத்தில் முகம்மதியர்களின் பொற்காலத்தில் பாக்தாத்தில் முதன்முதலாகத் தாள் ஊற்பத்தி தொடங்கப்பட்டது. அங்கிருந்து பின்னர் ஐரோப்பா சென்றது. கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் தாள் ஆலைகள் ஐரோப்பா முழுவதிலும் குறிப்பாக சுபெயின் (*Spain*) இத்தாலி, பிரான்சு, செர்மனி நாடுகளில் எண்ணற்றவை ஏற்பட்டன.

கி. பி. 1450 இல் அச்சுப்பொறி கண்டுபிடிக்கப்பட்டபின்னர் தாளின் தேவை மிகுந்தது. நாளும் நாளும் தாள்

உற்பத்தி ஆலைகள் மிகுந்துவந்தன எனினும் அன்றையத் தேவை நிறைவாகவில்லை. கி. பி: 1799இல் நிக்கோலசுலூயிசு இராபர்ட் (Nicholas Louis Robert) எனும் பிரான்சுக்காரர் முதன்முதலில் தொடர்ச்சியாக தாள்சுருள் உருவாக்கும் பொறியைக் கண்டுபிடித்தார். அப்பொறியை 'இலிகர் டிடாட் (St. Leger Didot) என்பவரிடம் விற்றார். வாங்கியவர் அதனை இலண்டனுக்கு எடுத்துச் சென்று 'பிரியன்டான்கின்' (Bryan Donkin) எனும் ஓர் பொறியாளரின் உதவியுடன் மேலும் அப்பொறியைச் செம்மையான வடிவத்திற்கு மாற்றியமைத்தார். அதன்பின்னர் தனித்தாளிற்குப் பதிலாக ஆலையில் தாள் உருளைகள் உருவாக்கப்பட்டன.

தாள், உருளைகளாக உருவாக்கப்பட்டபொழுது அதற்குரியகச்சாப் பொருள்கள் கிடைக்காமற் போயின. ஆகவே மலிவானதும் நிறையக் கிடைப்பதுமான ஒரு பொருளிலிருந்து தாள் தயாரிக்க வேண்டியிருந்தது. 1840இன் 'பிரிட்ரிச் கோத்தோலோப் கெல்லர்' (Friedrich GottoRob Keller) எனும் செருமானியர் மரக்கட்டைகளை அரைத்துக் கூழ் செய்யும் ஓர் இயந்திரத்தை உருவாக்கினார். பின்னர் 1850இல்தான் இரசாயன முறையில் கூழ் தயாரித்துத் தாள் தயாரிக்கும் முறை அக் பர்கீசு (Hugh Burgees) எனும் ஆங்கிலேயரால் வளர்ச்சி பெற்றது இன்றும் அது தொடர்ந்து பல்வேறு தொழில் நுட்பங்களால் வளர்ந்து வருகிறது[3].

சுவடி

மேனுசுகிருப்டசு (Manuscriptus) எனும் இலத்தீன் மொழிச்சொல்லிலிருந்து மேனுசுகிருபட்சு (Manuscripts) எனும் ஆங்கிலம் எடுத்துக் கொண்டுள்ளது. இதற்கு இணையாகத் தமிழில் சுவடி எனும் சொல் கையாளப்படுகிறது.

அவை ஓலைச்சுவடி, தாள்சுவடி என்று இருவகையாகப் பகுக்கப்பபடுகின்றன. மேனு (Manu) சுகிருப்டசு (Scriptus) எனும் இரண்டு சொற்கள் கையால் எழுதப்பட்டது (written by hand) எனும் பொருள் தருவதால் எழுதப்பட்ட ஓலைகளை ஓலைச்சுவடி என்றும், எழுதப்பட்ட தாளைச் சுவடி என்று மட்டுமே கூட குறிப்பிடலாம். ஏனெனில் ஓலைச்சுவடி என்று அழைப்பதால் வெளிப்படும் தெளிவு அரிய கையெழுத்து (காகித)ச் சுவடி என்றழைக்கும்போது கிடைப்பதில்லை. சிலர் 'கையெழுத்துப்பிரதிகள்' (Marx, Engels Manuscripts, unaddressed letters) என்ற தலைப்பில் அச்சிட்டுள்ளனர். 1597 ஆம் ஆண்டினைச்

சேர்ந்த ஒரு நூல்' *'Certain Worthey Manuscript poems of great Antiquitie'* என்றே தலைப்பிடப்பட்டுள்ளது.

பழமையான தாள் சுவடிகள்

இவ்வாறு 'காகிதத்தில் எழுதிய சுவடிகளிலேயே இதுகாறும் நமக்குக் கிடைத்தவற்றுள் மிகவும் பழமையானது மத்திய ஆசியப் பகுதியில் காஷ்கரில் இருந்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வழங்கிய குப்த எழுத்துக்களில் எழுதப்பட்டுக் கிடைத்ததாகும்.[5] எனினும் நம் நாட்டில் கிடைக்கும் காகிதப்பிரதிகள் கி.பி. பதினான்காம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தனவாக இல்லை.'[6]

தமிழில் தாள் சுவடிகள்

தமிழ் நாட்டில் தாளும் அச்சும் வந்தபின்னரும் ஓலையில் எழுதுவதையும் எழுதி வைப்பதையுமே பெருமையாகவும் உண்மையுடையதாகவும் கருதி வந்தனர். இன்றும் சிலர், பிறந்தநாள் பற்றிய குறிப்புகளை ஓலையில் எழுதிவருவதையும் ஐரோப்பியப் பாதிரிமார்கள் தங்கள் நூல்களை ஓலையில் எழுதிவைத்துள்ளமையும் மேற்கூறிய கருத்திற்குச் சான்றுகளாகின்றன. மேலும் அச்சுநூலைப் பார்த்தும் ஓலையில் படி எடுத்திருக்கிறார்கள். மெய்ப்பில் விடுபட்டுப் போன பிழைகள் அச்சடிப்பிழை என்று ஓலைச்சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளன[7].

எனவே ஓலையில் எழுதி வைப்பது என்பது நம்பிக்கையின் அடிப்படையில் தாள் வந்தபிறகும் இங்கு நடைபெற்று வந்துள்ளது. ஆனால் காலப்போக்கில் எளிமையும் முயற்சிச் சுருக்கமும் அறிவியலும் ஓலையின் பயன்பாட்டைக் குறைத்துவிட்டன.

ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் தாளின் பயன்பாடு தமிழகத்தில் அதிகமாயிற்று. வாணிக விவரங்களும் அரசியல் குறிப்புகளும் தாளில் எழுதப்பட்டன. தொடர்ந்து நமது பழக்கவழக்கம், பண்பாடு, வரலாறு தொடர்பான செய்திகளை ஐரோப்பியர்கள் தொகுக்கவும் எழுதிவைக்கவும் தொடங்கினர். இங்கிருந்த கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள் ஆகியவைகூட தாளில் படி எடுக்கப்பட்டன. அதனால் அவை பாதுகாக்கவும்பட்டன. இவ்வாறு தமிழ் நாடு பற்றித் தமிழிலும் பிற மொழிகளிலுமான

தாள்சுவடிகள் தமிழகத்திலும் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் உலகின் பல நாடுகளிலும் இடம்பெற்றுள்ளன.[8]

இதுவரை நமக்குக் கிடைத்துள்ள தமிழ்ச்சுவடிகளுள் (தாள்) இந்தியாவின் முதல் தலைமை நில ஆய்வாளராகப் பணியாற்றி மறைந்த கர்னல் காலின் மெக்கன்சி (Col.Colin Mackenzie - 1753 - 1821) என்பவர் தொகுத்து வைத்திருக்கும் தாள் சுவடிகள் தாம் பெரும்பான்மையானவையாக உள்ளன.

வகைகள்

தமிழில் உள்ள தாள் சுவடிகளை, ஓலைச்சுவடிகளிலிருந்து படியெடுக்கப் பட்டவை, மூலமாகத் தாளிலேயே எழுதிவைக்கப்பட்டவை என்ற இரண்டுபெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

ஓலையின் நகல்

ஓலைச்சுவடிகளிலிருந்து படி எடுக்கப்பட்ட தாள்சுவடிகளுள் 90 விழுக்காடு செய்யுள் நடையிலேயே அமைந்திருக்கின்றன. இச்சுவடிகள் சிதைவுற்றிருப்பினும் மூல ஓலைச்சுவடியிலிருந்து நிறைவு செய்து கொள்ள முடியும். அது போன்றே படியெடுக்கப்பட்ட பின்னர் ஓலைச்சுவடி சிதைந்திருப்பின் அப்பகுதிகளைத் தாள் சுவடி கொண்டு நிறைவு செய்து கொள்ள முடியும். இலக்கியம், இலக்கணம் மருத்துவம், புராணம் என ஓலைச்சுவடிகளின் பெரும்பான்மையான துறைகளைச் சார்ந்தே இத்தாள் சுவடிகள் அமைந்திருக்கின்றன.

மூலமான தாள்சுவடிகள்

ஐரோப்பியர்களே தமிழகத்தில் தாளில் எழுதும் முறையைப் பெரிதும் பயன்படுத்தினர். அவர்களுக்கு உதவியாக தமிழகத்தில் இருந்த சிலரும் தாளில் எழுதத் தொடங்கினர். அவ்வாறு எழுதிவைக்கப்பட்டுள்ள தாள் சுவடிகள் மூலமான தாள் சுவடிகளாகும்.

நூலாக்கத்தில் பொதுப்பண்புகள்

தமிழர்கள் தாளில் எழுதத் தொடங்கிய பிறகும் பழக்கத்தால் ஓலையில் எழுதுவதைப் போன்றே எழுதிவந்தனர். அதனால் குறில், நெடில்; உயிர்மெய் மெய், துணையெழுத்து உயிர்மெய்/ மெய்யெழுத்து ஆகியவற்றில் ஓலைச்சுவடி போன்றே வேறுபாடுகளற்றும் இடைவெளியின்றியும் தாள் சுவடிகள்

எழுதப்பட்டு உள்ளன. சான்றாக 'தெகதுமாமபலகை' என்ற சொல் ஓலையில் எப்படி எழுதப்படுமோ அவ்வாறே 'பழவேற்காடு கைபீது' எனும் தாள் சுவடியிலும் எழுதப்பட்டுள்ளது. இதனைத் தேக்குமரம் பலகை என்றும் தேக்கு மாம்பலகை என்றும் கருதலாம். எனினும் இரண்டாவதே ஏற்புடையதாகும். இதுபோன்று ஓலைச்சுவடிகளை நூலாக்கம் செய்யும்பொழுது மேற்கொள்ள வேண்டிய சில நெறிமுறைகள் தாள்சுவடிக்கும் பொருந்துவனவாக அமைந்துள்ளன. மேலும் ஓலைச்சுவடியிலிருந்து படி எடுக்கப்பட்டுள்ள தாள் சுவடிகளை நூலாக்கம்செய்யும் பொழுதும் ஓலைச்சுவடிக்குரிய நெறிமுறைகளே அத்தகைய தாள் சுவடிகளுக்கும் பொருந்துவனவாகும்.

நூலாக்கத்தில் (தாள் - ஓலைச்சுவடி) வேறுபாடுகள்

உள்ளடக்கம்

ஓலைச்சுவடிகள் இலக்கியம், இலக்கணம், புராணம், மருத்துவம், சோதிடம் எனும் வகைக்குள் பெரும்பான்மையும் அடங்கிவிடும். ஆனால் மூலமான தாள் சுவடிகள் 1) ஆவணம், 2) கடிதம், 3) வரலாறு, 4) அயல்நாட்டார் குறிப்புகள், 5) விண்ணப்பம், 6) வாக்குமூலம், 7) நீதிமன்ற முடிவுகள், 8) ஆட்சிமுறைப்பதிவேடுகள் 9) காவல்துறைப் பதிவேடுகள் 10) நாட்டுப் புறவியல் 11) நாட்குறிப்பேடுகள் 12) தன்வரலாறுகள் 13) அறிக்கைகள் 14) பேட்டிகள் என்று பல்வேறு வகைகளாக அமைந்துள்ளன. இவற்றை ஐரோப்பியர் காலத் தமிழகம் பற்றியவை என்றும் தமிழர்களின் வரலாறு பண்பாடு பற்றியவை என்றும் இருபெரும் பிரிவுகளாக்கலாம்.

உள்ளடக்க வேறுபாடுகள் நூலாக்க நெறிமுறைகளையும் வேறுபடுத்தும் என்பதால் ஓலைச்சுவடி, தாள் சுவடி நூலாக்கத்திலும் இத்தகைய வேறுபாடுகள் வெளிப்படுகின்றன. இலக்கணக் குறிப்பு, பொருள், குறிப்புரை, முன்னுரை, பின்னிணைப்பு என்று ஓலைச்சுவடிகளை நூலாக்கம் செய்வது போல் மூலமான தாள் சுவடிகளை நூலாக்கம் செய்திட முடியவில்லை. மூலமான தாள் சுவடிகளை ஆதாரமாகக் கொண்டு, அவற்றிலிருந்து கிடைக்கும் செய்திகளை முற்கால, தற்கால இக்காலச் சான்றாதாரங்களுடன் ஒப்பிட்டு இருக்கின்ற வரலாற்றுச் செய்திகளைத் தெளிவு படுத்தும் வகையிலும் புதிய செய்திகளை வெளிப்படுத்தும் வகையிலும் தாள் சுவடிகள் நூலாக்கம் செய்யப்படுகின்றன.

நூலாக்கம் அமைப்பு

ஓலைச்சுவடியை நூலாக்கும்பொழுது சுவடியே நூலாகிறது. மூலத்தாள் சுவடியை நூலாக்கும்பொழுது நூலில் அது ஒரு பகுதியாகிறது.

நூலாக்கத் தேர்வு

இதுவரை அச்சாகவில்லை என்பதும் மொழியின் வளர்ச்சிக்கு ஒருநூல் புதிதாக வருகிறது என்பதுமே ஓலைச்சுவடியை நூலாகத் தேர்ந்திடும்போது அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன.

ஆனால் தாள் சுவடியை நூலாக்க எடுத்துக் கொள்ளும்பொழுது இதுவரை அச்சாகவில்லை என்பதுடன் அச்சிடப்பட்டால் வெளிப்படும் புதிய செய்தி என்ன என்பது அடிப்படையாகிறது. அதனால் தாள் சுவடியின் நூலாக்கத் தகுதியை அதன் உள்ளடக்கமே தீர்மானிக்கிறது எனலாம்.

பதிப்பாசிரியர் தகுதிகள்

ஓலைச்சுவடிப் பதிப்பாசிரியர், தாள் சுவடிப் பதிப்பாசிரியர் இருவருக்கும் இருக்கவேண்டிய அடிப்படையான தகுதிகள் பொதுவாகின்றன. ஆனால் தாள் சுவடிப் பதிப்பாசிரியர்க்குரிய தனித்தகுதிகளும் ஓலைச்சுவடிப் பதிப்பாசிரியர்க்குரிய தனித்தகுதிகளும் வேறுபடுகின்றன. அவை பின்வருமாறு.

ஓலைச்சுவடிகள் பெரிதும் செய்யுள் நடையில் அமைந்திருப்பதால், பதிப்பாசிரியர்க்கு யாப்பறிவு இன்றியமையாததாகும். யாப்பறிவால் ஓலையின் சிதைந்த பகுதிகளையும் எதுகை, மோனை, இலக்கண விதிமுறை ஆகியவை கொண்டு துணிந்திட இயலும். மெய்யெழுத்து உயிர்மெய்யெழுத்து குறில் நெடில் போன்ற வேறுபாடுகளைக் கண்டறிந்து சரியான பாடத்தைத் தேர்ந்திட இயலும். ஆனால் மூலமான தாள் சுவடி பெரிதும் உரைநடையில் அமைந்துள்ளதால், பதிப்பாசிரியர்க்கு யாப்பறிவு அடிப்படைத் தேவையாக இல்லை. மேலும் நாட்டுப்புறப்பாடல்களாக உள்ள தாள் சுவடிகளும் இலக்கண விதிகளோடு முழுவதும் பொருந்தி இருப்பதில்லை.

ஓலைச்சுவடிப் பதிப்பாசிரியர் இலக்கிய இலக்கணப் புலமையுடன் வரலாற்றுப் பார்வையும் கொண்டிருந்தால் பாராட்டிற்குரியவராகிறார். ஆனால் தாள் சுவடிப் பதிப்பாசிரியருக்கு மொழியியல், மொழிபெயர்ப்பியல்,

தொல்லியல், கடலியல், வரலாறு, நிலவியல், நீதிமுறை, வாணிகவியல், சமூகவியல், புள்ளியியல், பொருளியல், மானிடவியல், விலங்கியல், தாவரவியல் அளவையியல், பண்பாடு ஆகியபல்வேறு துறைகளின் வரலாறும் வளர்ச்சியும் பற்றிய பொது அறிவு தேவையாகிறது. 18 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஆராய்ச்சி பல்வேறு துறைகளில் பரந்து விரிந்தமையால் அதன்பின்னர் தமிழகத்தில் பெரிதும் பயன்பாட்டிற்கு வந்த தாளில் அத்துறை சார்ந்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. எனவே அதற்கு முந்திய பயன்பாட்டிலிருந்த ஓலையில் அத்தகைய பல்துறை சார்பான செய்திகள் தாள் சுவடியில் இடம் பெற்றிருக்கும் அளவிற்கு இடம் பெறவில்லை. எனவே ஓலைச்சுவடிப் பதிப்பாசிரியரைவிடவும் தாள் சுவடிப் பதிப்பாசிரியருக்கு அத்தகைய பொதுஅறிவு தேவையாகிறது. அவற்றைப் பின்வரும் சான்றுகள் உறுதிப்படுத்தும்.

மொழியியல்

ஓலைச்சுவடி பாடல் அமைப்பில் இலக்கிய வழக்கில் இருப்பதால் அகராதிகள் கொண்டே பொருள்காண முடியும். ஆனால் தாள் சுவடிகளில் பெரிதும் பொதுமக்கள் பேச்சு மொழியே எழுதப்பட்டுள்ளது. ஓலைச்சுவடியாக இருப்பின் இலக்கண விதிகளுக்கேற்பச் சொற்களின் உண்மை வடிவத்தைக் கண்டு பிழை நீக்கி மூலபாடத்தைக் காணமுடியும். தாள் சுவடியில் அக்காலத்திய பேச்சு மொழி எழுத்து வடிவம் பெற்றிருப்பதால் அச்சொல்லின் இலக்கிய வழக்கு தெரிந்த பின்னரே பொருள் காண இயலும். பெரும்பாலான சொற்கள் அகராதியிலும் இடம் பெற்றிருப்பதில்லை. இச்சிக்கலைத் தீர்ப்பதற்கு முதலில் அப்பேச்சுமொழிச் சொற்களின் சரியான வடிவத்தைக் கண்டறிதல் வேண்டும். அதற்கு மொழியியல் அறிவு அவசியமாகிறது. ஒரு சொல் எந்த அமைப்பில் அருகில் என்ன ஒலி வரும்பொழுது பேச்சில் எவ்வாறு மாறுதலடையும் என்பதை மொழியியல் விதிகளின் வழியே கண்டறிந்து அச்சொல்லின் சரியான வடிவத்தைக் காணவேண்டியுள்ளது (சான்றுகள், உரல்-ஒரல்; இலை-எலை; வெற்றி- வெத்தி).

மொழிபெயர்ப்பியல்

தமிழில் பிறமொழிக் கலப்பு காலந்தோறும் அரசியல் சமூகப்பொருளியல் ஆதிக்கங்களால் நடந்து வருகின்றன. எழுத்து வழக்கைவிடவும் பேச்சுவழக்கில் கலப்பு அதிகமாகக் காணப்படுகிறது. பேச்சு வழக்கே தாள் சுவடியில்பெரிதும்

எழுதியுள்ளனர். அவ்வாறு எழுதும்பொழுது சில சொற்களை மொழிபெயர்ப்பாகவும் சில சொற்களை எழுத்துப் பெயர்ப்பாகவும் (Transliteration) அமைத்துள்ளனர். சான்றாக 'தீபாராதனை' என்பது தீப்பூசை என்று தாள் சுவடியில் இடம் பெற்றுள்ளது. 'ஜூனியர் கேப்டன்' (Junior Captain) என்பது 'சின்னக் கப்பித்தான்' என்று முதற்பகுதி (Junior) மொழிபெயர்ப்பாகவும் இரண்டாம் பகுதி (Captain) எழுத்துப் பெயர்ப்பாகவும் இடம் பெற்றுள்ளன. 'கவர்னர்'(Governor) என்பது 'கெவுனர்' என்றும், 'கம்பெனி'(company) என்பது 'கும்பினி' என்றும் 'போர்த்துக்கீசியர் (portugal) என்பது 'புடிதிகீசுகாரர்' என்றும் 'கோசுடல் கார்டுசுமென்' (coastal guardsmen) என்பது கொஸ்தகுற வந்தோர் என்றும் எழுதப்பட்டுள்ளன. எளிதில் பொருள் புரியா வகையில் சில சொற்களும் இடம்பெற்று உள்ளன.

தொல்லியல்

ஓலைச்சுவடியைப் பதிப்பிக்கும்பொழுது சுவடியில் உள்ள விவரங்களே ஆய்விற்குரியவையாகின்றன. தாள் சுவடியைப் பதிப்பிக்கும் பொழுது அதன் முற்காலத் தொல்லியல் சான்றாதாரங்களும் கவனத்திற்குரியவையாகின்றன.

சான்றாகப் பழவேற்காடு பற்றிய ஆய்விற்கு கி.பி.1521 ஆம் ஆண்டைச் சேர்ந்த நாகலாபுரம் கல்வெட்டில் பழவேற்காடு துறைமுகமாக இருந்தசெய்தியும் அத்துறைமுகத்தில் நின்ற கப்பலில் ஏற்றப்படும் சேலை மற்றும் துணிகளுக்கு விதிக்கப்பட்ட வரி பற்றியசெய்தியும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

வரலாறு

தாள் சுவடிகள் பெரிதும் ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே எழுதப் பட்டுள்ளதால் அவற்றை நூலாக்கம் செய்வோர்க்கு, ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் தமிழகம், ஐரோப்பியர் ஆட்சியில் தமிழகம் ஆகிய வரலாறு தெரிந்திருக்க வேண்டியிருக்கிறது.

இவ்வாறே பிறதுறை அறிவும், தாள் சுவடிப் பதிப்பாசிரியருக்கு மிகவும் தேவையாகும்.

கள ஆய்வுப்பணி

ஓலைச்சுவடியை நூலாக்கம் செய்வோர் பெரிதும் கள ஆய்வுப்பணி மேற்கொள்வதில்லை. சான்றாக உ. வே. சா. சிலப்பதிகாரம் குறிப்பிடும் மதுரைக்குப் போகும் வழிகளைக்

கண்டறியாமலே சிலப்பதிகாரத்தைப் பதிப்பித்திருக்கிறார். பின்னர் கரந்தை சி. கோவிந்தராசன் அவ்வழியே சென்று கண்ணகி சிலையைக்கண்டுபிடித்தார். எனவே கள ஆய்வுப்பணி என்பது ஓலைச் சுவடிப் பதிப்பிற்கு மிக இன்றியமையாததாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

தாள் சுவடிப் பதிப்பிற்குக் களப்பணி மிகவும் தேவை. சான்றாக 'உலாந்தாக்காரர்கள் பழவேற்காட்டில் கரிமணலில் வந்திறங்கினார்கள்' எனும் சுவடிச் செய்தியைப் படித்தால், அங்கு கடற்கரையின் மணல் கருப்பாக இருக்கும்போலிருக்கிறது என்று எண்ணி கரிமணலுக்குப் பொருள் கொள்ளச் செய்தது. களப்பணி சென்று வந்தபின்னரே அங்குள்ள ஓர் இடத்திற்குக் கரிமணல் என்று பெயர் இருப்பது தெரியவந்தது. மேலும் ஓலையில் உள்ள செய்திகளைவிடவும் தாளில் உள்ள செய்திகளை நேரில் கண்டறிந்துகொள்ள ஒப்பிட்டஅளவில் தாள் சுவடிகளின் கால இடைவெளிக்குறைவும் அதற்குத் துணையாகின்றது.

ஒப்பீட்டாய்வு

ஓலைச்சுவடியின் செய்திகளை இன்றைய நிலையுடன் ஒப்பிட்டு நூலாக்கம் செய்வதில்லை சான்றாக, பரிபாடலைப் பதிப்பிக்கும் ஒருவர் இன்றைய அழகர்மலையுடன் ஒப்பிட்டு ஆராய்வதில்லை. ஆனால் தாள் சுவடியில் கூறப்படும் செய்திகள் இன்றைய நிலையுடன் ஒப்பிட்டறியப்படும். சான்றாக 1816 ஆம் ஆண்டு பழவேற்காட்டிலிருந்த மக்கள் தொகை, சாதி, தொழில்கள் ஆகிய சுவடியின் செய்திகளை இன்றைக்குப் பழவேற்காட்டில் உள்ள விவரங்களுடன் ஒப்பிட்டு அறிந்து அவற்றின் வளர்ச்சி, வீழ்ச்சி பற்றிய வரலாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஓலைச்சுவடிப் பதிப்பிற்கு அத்தகைய தேவைகள் ஏற்படுவதில்லை.

பின்னிணைப்பு

நூலின் பிற்பகுதியில் சுவடிப்பதிப்பின் பொதுவான கூறுகளாகிய அருஞ்சொல்லகராதி துணைநூற்பட்டியல் ஆகியவற்றுடன் பேச்சு மொழிச்சொற்கள் நிறைந்திருப்பதால் தாள் சுவடி நூலாக்கத்திற்கு முழுச் சொல்லடைவும் பயன்பெற்ற புள்ளிவிவரப் பட்டியலும், நாட்டுப் படங்களும் வரைபடங்களும் தேவையாகின்றன.

முடிவுரை

எழுதி வைக்கப் பயன்படுத்தப்பட்ட பொருள்களின் வரலாற்று வரிசையில் தாள் கடந்த மூன்று நூற்றாண்டுகளாகப் பெரும்பாலோர் பயன்படுத்தும் பொருளாக உள்ளது கடந்த எக்காலத்தை விடவும் இன்று கல்வியும் அறிவியலும் வளர்ச்சியடைந்துள்ள நிலையில் தாளும் அவ்வாறே மக்களின் பயன்பாட்டில் பொதுமைப்படுத்தப்பட்டுள்ளது. தாளில் வாழ்ந்து அச்சேறாத சுவடிகளைத் தேவை கருதி நூலாக்கம் செய்யும் பொழுது நேர் கொள்ள வேண்டிய நெறிமுறைகளும் தாள் சுவடிக்கேயுரிய தனி நெறிமுறைகளும் இக்கட்டுரையில் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

பின்குறிப்புகள்

1.ச. வையாபுரிப்பிள்ளை, இலக்கிய உதயம் முதற்பகுதி, தமிழ்ப்புத்தகாலயம் 1958, பக். 18,19
2.**New standard Encyclopeadia,Vol.** 10, **p.** 80
3.**Ibid, p.**78
4.**The Oxford English Dictionary vol, VI Reprint** 1961, **p.**145
5.**Bengal Asiatic Society Journal vol.** 66
6.தி. நா. சுப்பிரமணியம், தென்னிந்தியக்கோயிற் சாசனங்கள் பாகம்3, பகுதி2 1957, ப, 349
7.டாக்டர். இ. சுந்தரமூர்த்தி 'சுவடியியல்' களஞ்சியம்தொகுதி 1. இதழ்1 வளர் தமிழ்மன்ற வெளியீடு சென்னை ஏப். 1986, ப. 61
8.**Gregory James, 'European sources for Tamil Manuscripts' Journal of Tamil Studies, vol.**18,**I.I.T.S.,** 1980,**pp.**4-13
A. Krishnamurthy, "A Report on a scientific catalogue of the Tamil Manuscripts in Europe 1960 **(Prepared for the Govt. of Madras)**

செப்பேடுகளும் ஓலைச்சுவடிகளும்

செ. இராசு

பொதுப் பெயர்

செப்பேடு (செம்பு+ஏடு), ஏட்டுச் சுவடி (ஓலைச்சுவடி) ஏடு + சுவடி என்ற இரண்டு பெயர்களிலும் 'ஏடு' என்ற பொதுவான பெயர் வருவதைக் காணலாம். செப்பேடுகளும் ஓலைச் சுவடிகளும் தனித்தனி ஏடுகள் கொண்ட தொகுதிகளாக உள்ளன.

'பாடம் ஏறினும் ஏடது கைவிடேல்'
'ஏடாயிரங்கோடி எழுதாது'
'ஏடெடுத்தேன்'

போன்ற எடுத்துக்காட்டுகளில் ஏடு என்பது சுவடியையும் ஏனைய எழுதப் பயன்படும் பொருள்களையும் குறிக்கிறது. ஓலைச் சுவடிக் கட்டுக்கள் 'புத்தகக் கவளி' என்று குறிக்கப்பெறும்.

அளவு

கூறப்பெறுகின்ற செய்திகட்கு ஏற்றவாறு செப்பேடுகள் அளவில் சிறிய தாகவோ அல்லது பெரிதாகவோ அமைக்கப்படும்.

எழுதப்படும் பொருளுக்கு ஏற்றவாறு ஓலையை நறுக்கி ஓலைச் சுவடிகளும் சிறிதாகவோ பெரிதாகவோ அமைக்கப்படும்.

ஒரு செய்தியைக் கூறப் பல செப்பேடுகள் தேவைப்பட்டால் அவை ஒரே மாதிரியில்தான் அமைக்கப்படும். அவ்வாறே ஒரு நூலை முழுமையாக எழுதப் பயன்பெறும் ஓலைச் சுவடிகளும் ஒரே அளவில், அமைப்பில் தான் உருவாக்கப் பெறும்.

முதல் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டுப்பாடல் ஒன்று இவ்விதம் அமைந்த செப்பேடுகளைப் பற்றிக் குறிப்பிடும்போது 'ஒத்து அமைந்த செப்பேடு' என்றுகூறும்.

இவ்வாறு ஒத்து அமைத்தல் செப்பேடுகட்கு மட்டும் அல்ல ஓலைச் சுவடிகட்கும் பொதுவாகும்.

இவ்வாறு எல்லா ஓலைச் சுவடிகளும், செப்பேடுகளும் ஒரே அளவாக இல்லாமல் ஒவ்வொன்றும் ஒரு அளவில் இருப்பதால் இவை கட்டுக்கள் குலைந்து ஒன்றோடு ஒன்று கலந்துவிட்டால் அவைகளைப் பிரித்துத் தனித்தனி ஏடுகள் ஆக்குவது எளிமையாக அமைகிறது.

அமைப்பு

செப்பேடுகளை உருக்கி நீட்டித் தட்டியும், வெட்டியும் தேவையான அளவுள்ள செப்பேட்டை உருவாக்குவர். சதுரமாகவோ நீண்ட சதுரமாகவோ அவை அமைக்கப்படும். மேடுபள்ளம் இல்லாமல் சமமாக்கப்படும்.

பனை ஓலைகளை எழுதுவதற்குத் தக்கவாறு பாடம் செய்வர். பனை ஓலைகளை வெயிலில் உலர்த்தியும், நீரில் ஊறவைத்தும், வேகவைத்தும் பதப்படுத்துவர். பனியில் இட்டுப் பாடம் செய்வதும் உண்டு. இவ்வாறு பாடம் செய்யப்பட்ட ஓலைகளைச் சோழி அல்லது கூழாங்கற்கள் கொண்டு தேய்த்துப் பக்குவப்படுத்துவதும் உண்டு. செப்பேடுகளிலும், ஓலைச் சுவடிகளிலும் அளவுக்குத் தக்கவாறு ஒன்றோ இரண்டோ வட்ட வடிவமான துளைகள் இடுவது உண்டு. எழுதும்போது துளைகள் உள்ள இடத்தில் இடம்விட்டு எழுதுவது வழக்கம்.

எழுத்துமுறை

செப்பேடுகளுக்கும், ஓலைச்சுவடிகட்கும் பெரும்பாலும் ஏடுகளின் தொடக்கத்தில் எண் இடுவது வழக்கம். தனித்தனி ஏடுகட்குத்தொடர்எண் குறிப்பது வழக்கமே தவிரப் பக்கங்களுக்கு எண்ணிடுதல் பெரும்பாலும் வழக்கம் இல்லை.

செப்பேட்டில் எழுத்துக்களை வெட்டுமுன் பளிச் என்று தெரியும் ஒரு பொருளால் எழுத்துக்களை எழுதிய பின்னர் அதன்மீது வெட்டுவர். செப்பேட்டில் எழுத்துக்களை எழுதும் முறைக்கு வெட்டுதல், கொத்துதல் பொறித்தல் என்று கூறப்பெறும்.

ஓலைச் சுவடியில் இவ்வாறன்றி நேரடியாக எழுத்தாணி கொண்டு எழுதப்படுகிறது.

ஓலைச் சுவடியில் கற்றறிந்த புலவர்களோ நன்கு இலக்கிய, இலக்கணம் கற்றவர்களோ தாமே எழுதுவது வழக்கம். ஆனால் செப்பேடுகளில் படிப்பறிவின்றிக் கொத்துதல் தொழில் வல்ல தொழிலாளர்களோ பிறரோ வரைந்த எழுத்துக்கள் மீது கொத்துவர்

செப்பேட்டிலும் ஓலைச்சுவடிகளிலும் மெய் எழுத்துக்கள் பெரும்பாலும் புள்ளி பெறுவதில்லை. ஓலைச் சுவடியில் எழுத்துக்கள் இணைந்து கோர்வையாகவும் செப்பேடுகளில் தனித்தனியாகவும் காணப்பெறும்.

ஓலைச்சுவடி 'நீட்டோலை' என்றும் அதன் எழுத்து நெட்டெழுத்து என்றும் வழங்கப்பெறும்.

பெயரிடுதல்

செப்பேடுகள் அவை கிடைத்த இடத்தைக் கொண்டோ அவை இருக்கும் இடத்தைக் கொண்டோ பெயரிடப்படுகின்றன. ஆனால் ஓலைச் சுவடிகளோ எழுதியுள்ள பொருளால் மட்டுமே பெயர்பெறுகின்றன.

இடம் பெயர்தல்

செப்பேடுகளும், ஓலைச் சுவடிகளும் எடுத்துச் செல்லும் எளிமை காரணமாக ஓரிடத்திற்குரியவை வேறுபட்ட தொலை தூரமான இடங்களில் கூடக் கிடைக்கலாம்.

செப்பேடுகளோ அல்லது ஓலைச்சுவடிகளோ அவை கிடைக்கும் இடத்தை மட்டும் வைத்து அவ்விடத்திற்கே உரியன என்று கூறமுடியாது.

அழிவு

செப்பேடுகளைப படிககவும் பாதுகாக்கவுமின்றிப் பூமியில் புதைத்து வைத்தனர். ஓலைச் சுவடிகளையும் அவ்வாறே தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமல் பரண்மேல் இட்டனர்.

பதினெட்டாம் பெருக்கில் நீரில் ஓலைச்சுவடிகள் அழிந்தன. பல நெருப்புக்கும் இரையாயின. எஞ்சிய ஏடுகளோ பராமரிப்பு இன்றி இராமபாணப் பூச்சிகளால் அழிவுற்றன.

செப்பேடுகள் பல உருக்கப்பட்டுப் பாத்திரங்களாக மாறின. செம்பின் உபயோகத்துக்காகப் பல செப்பேடுகள்

அழிக்கப்பெற்றன. இயற்கையாக ஓலைச்சுவடிகள் எளிதில் அழிவதுபோலச் செப்பேடுகள் அழிவது இல்லை.

படிகள்

ஓலைச்சுவடிகட்கு மூல ஓலை மட்டுமின்றிப் பல படி ஓலைகள் இருந்தன. ஏடு பெயர்த்து எழுதுதல் என்பது பண்டைய வழக்கம்.

ஆனால் செப்பேடுகளைப் பொறுத்தவரை பெரும்பாலும் ஒரே படிதான் இருப்பது வழக்கம்.

உலோகம் அல்லாத எழுது பொருள்களில் ஓலையே முதலிடம் வகிக்கிறது.

பல உலோகங்களும் எழுதப் பயன்பட்டாலும் செம்பே மிகுதியும் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

செம்பும் ஓலையும்

பழங்காலத்தில் 'ஓலை' என்றாலே உத்தரவு, ஆணை என்று பொருள்பட்டது. முதலில் ஆணைகள் ஓலையில்தான் எழுதப்பட்டன. பின் கல்வெட்டில் தேவையானவை பொறிக்கப்பட்டன. ஓலையை (ஆணையை) 'சிலையிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளுக' என்ற தொடரைக் கல்வெட்டுக்களில் காணுகின்றோம். எனவே ஓலை முதல்படியாகவும், கல்வெட்டு இரண்டாவது படியாகவும் செப்பேடு மூன்றாவது படியாகவும் ஆகிறது.

ஆவுடையார் கோயில் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்ற சில செப்பேடுகளை நம் கல்வெட்டுத்துறை பெற்றுள்ளது.

அதுபோல் செப்பேடுகள் சில ஓலை நகல்களைப் பெற்றுள்ளன. ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில் குறுப்புநாட்டுப் பட்டயம், கத்தாங்கண்ணிப் பட்டயம், திருமுகன்பூண்டிச் சாசனம் என்ற மூன்று ஓலைப் பட்டயங்கள் உள்ளன. அவற்றின் செப்பேடுகள் முறையே கள்ளிப்பட்டி திரு க. கு. கோதண்டராமக் கவுண்டர், கத்தாங்கண்ணி இராசாக் கவுண்டர், திருப்பூர் விஜயபுரம் வெங்கடாசலக்கவுண்டர் ஆகியோரிடம் உள்ளன.

பண்டைய செப்பேடுகள் ஓலைச்சுவடிகளை மனதில் கொண்டு சுவடி அமைப்பிலேயே செய்யப்பட்டன. பிற்காலச் செப்பேடுகள் வடிவத்தில் மாறுபட்டன.

செப்பேட்டில் இலக்கியம்

தில்லையில் காலிங்கராயன் என்னும் தலைவனால் 11ஆம் நூற்றாண்டின் இறுதியில் மூவர் தேவாரம் செப்பேட்டில் பொறித்து வைக்கப்பெற்றது.

'முத்திறத்தார் ஈசன் முதல்திறத்தைப் பாடியவாறு
ஒத்தமைத்த செப்பேட்டினுள் எழுதி-இத்தலத்தில்
எல்லைக் கிரிவாய் இசைஎழுதி னான்கூத்தன்
தில்லைச்சிற் றம்பலத்தே சென்று'

என்பது அக்கல்வெட்டுப் பாடலாம்.

திருப்பதியில் தெலுங்கு, வடமொழி நூல்கள் பொறிக்கப்பட்ட செப்பேடுகள் உள்ளன. திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள் சிலவற்றில் குமரகுருபரர் இயற்றிய சகலகலாவல்லிமாலை எழுதப்பட்டுள்ளது.

இன்று செப்பேடு அளிக்கும் வழக்கம் மீண்டும் தொடங்கியுள்ளதைக் காணுகின்றோம்.

ஓலைப்பட்டயங்கள்

செப்பேடுகளில் எழுதப்பெறும் ஆவணங்கள் போன்றவை பல ஓலைகளில் எழுதப்பட்டுள்ளன. அவை கிழக்கிந்தியக் கம்பெனி, மராட்டியர், நவாபுகள் முத்திரையுடன் கிடைத்துள்ளன. அவற்றில் பல முதுகு நரம்பு ஆகிய ஈர்க்கு எடுபடாமல் இரட்டை ஓலைகளில் எழுதப்பட்டுள்ளன. விற்பனை, ஒத்திவைப்பு, ஒப்பந்தம், அடிமைமுறை, கொடுக்கல்-வாங்கல், கடன் பத்திரம் ஆகியவை அவற்றில் அடங்கும் பொருளாகும்.

செப்பேடுகட்குக் கொடுக்கும் மதிப்பையே இவ்வகை ஓலைகட்கும் கொடுக்கலாம்.

பழந்தமிழ்ப் பதிப்புகள்

இ. சுந்தரமூர்த்தி

இலக்கிய ஆராய்ச்சி இன்று பல்வேறு துறைகளிலும் பல்கிப் பெருகி வளம் பெற்று வருகின்றன. தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் புதிய போக்குகளை உண்டாக்கிய பெருமைக் குரியவர்கள் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த தமிழ் அறிஞர்களேயாவர். ஏட்டுச் சுவடிகளில் இருந்த இலக்கண இலக்கியப் பெருஞ்செல்வங்களை அனைவரும் அறியுமாறு செய்த இவர்கள் தமிழ்த்தொண்டு என்றும் போற்றற்குரியதாகும். கடந்த ஒரு நூற்றாண்டிற்குமேல் தமிழில் ஆராய்ச்சி வளர்ந்தோங்குவதற்கு அடிப்படையாக இருந்தவை முன்னையோரின் பதிப்பு முயற்சிகளேயாகும். ஆங்கிலேயர் வருகையினால் தோன்றிய அச்சு இயந்திர வசதிகளும், கல்வி மறுமலர்ச்சியும் பதிப்புத் துறையில் ஈடுபட வழிகோலின. களத்தூர் வேதகிரிமுதலியார் (1795–1852), ஆறுமுகநாவலர் (18-12-1822 – 5-12-1879), சி.வை. தாமோதரம்பிள்ளை (12-9-1832 – 1-1-1901), உ. வே. சாமிநாதையர் (19-2-1855 – 28-4-1942) முதலானோர் தமிழ்ப்பதிப்பு முன்னோடிகளாய் விளங்கித் தமிழிற்கு வளம் சேர்த்தனர்.

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டிற்கும் முன்னே தோன்றிய பழம் பதிப்புகள் இறு கிடைப்பதில்லை. போற்றிப் பாதுகாக்கப் படவேண்டிய அச்சில் வந்த அந்த அருஞ்செல்வங்களைச் சரியான முறையில் நாம் பாதுகாக்கத் தவறி விட்டோம். இனியேனும் அங்ஙனம் கிடைக்கும் அரும்பதிப்புகளைத் தக்க நிறுவனங்களிடம் தந்து பாதுகாக்குமாறு செய்வது தமிழர்தம் கடமையாகும். இக்கால அறிவியல் வசதிகளைப் பயன்படுத்தி அறிஞர் பலரின் ஆய்விற்கு அவை பயன்படுமாறு செய்தல் வேண்டும்.

பழம்பதிப்பு

பழந்தமிழ்ப் பதிப்புகளுள்-இலக்கிய நூல்களுள்-மிகப் பழமையான பதிப்பாக இன்று நமக்குக் கிடைப்பது 1812ல் வெளியிடப்பெற்ற திருக்குறள் பதிப்பாகும்.

> 'இலக்கணவிலக்கியவாராய்ச்சியுடைவர்களாலிகிதப் பிழையற வாராய்ந்து சுத்த பாடமாக்கப்பட்டது' என்னும் குறிப்புடனும் தொண்டை மண்டலம் சென்னைப்பட்டினத்தில் தஞ்சநகரம் மலையப்பபிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது

-மாசத தினச்சரிதை அச்சுக்கூடம் இ.ஆண்டு .... (1812 எனத் தமிழ் எண்ணில் தரப்பட்டுள்ளது) என்னும் குறிப்புடனும் தலைப்புப்பக்கம் திகழ்கின்றது. இந்நூலுடன் நாலடியார் மூலபாடமும், திருவள்ளுவமாலை மூலபாடமும் சேர்ந்து வெளியிடப் பெற்றுள்ளன.

மரவெழுத்தால் அச்சடிக்கப் பெற்றுள்ள இப்பதிப்பே திருக்குறள் பதிப்பு வரலாற்றில் முதல் நூலாகத் திகழ்கின்றது. 1712ஆம் ஆண்டு முதன் முதலாகத் தமிழகத்தில் தஞ்சையில், தரங்கம்பாடியில் அச்சுக்கூடம் ஏற்பட்டது. இதற்குச் சரியாக ஒருநூற்றாண்டிற்குப்பின் இப்பதிப்பு 1812இல் தோன்றியுள்ளது. இன்று ஏறத்தாழ 175 ஆண்டுகளுக்குப்பின் கிடைத்த இப்பதிப்பில் அரிய சில பதிப்புக் குறிப்புகள் காணப்படுகின்றன. இன்று மூலபாட ஆய்வியல் (Textual Criticisim) என்று கூறப்பெறும் பாட வேறுபாடுகள் பற்றிய கருத்துகளை அடியொற்றி எத்துணை அளவு முயன்று ஒரு நூலை உருவாக்கியுள்ளனர் என்பதனை இக்குறிப்புகள் காட்டுகின்றன.

மூலபாட ஆய்வியல்.

நெடிய கால இடைவெளிக்குப்பின் ஒரு நூலினைப் பதிப்பிக்கும்போது ஆசிரியரின் உண்மைப் பாடத்தைத் தெளிந்து பதிப்பிப்பது என்பது சிக்கலான செயலாகும். கிடைக்கின்ற பல்வேறு சுவடிகளையும் திரட்டி நுணுகி ஆராய்ந்து மூலபாடத்தைத் துணிதல் வேண்டும். நூலுக்குள்ளேயே கிடைக்கின்ற ஆதாரங்கள் (Internal evidences) நூலின் நடை, நூலில் கையாளப்படும் சொற்களின் தன்மை, வரலாற்றுக் குறிப்புகள் முதலாயின கொண்டு மூலபாடத்தைத் துணியலாம்

என்பர். இரண்டாவதாக நூலுக்கு வெளியில் கிடைக்கின்ற ஆதாரங்கள் (External evidences) நூலாசிரியருடைய பிற படைப்புகள், அவர் காலத்திய பிற படைப்புகளில் காணப்படும் அந்நூலைப்பற்றிய குறிப்புகள், மேற்கோள்கள் முதலாயினவும் மூலத்தைத் துணிதற்குப் பயன்படும்.[1]

1812 ஆம் ஆண்டில் தோன்றிய இத்திருக்குறள் பதிப்பில் நூலின் பதிப்புப்பணிகள் குறித்துச் சில சிந்தனைகளைப் பதிப்பாசிரியர் தருகின்றார்.

"கற்றுணர்ந்த தமிழாசிரியர்களருமையினியற்றிய இலக்கிண விலக்கியங்களாகிய அரிய நூல்களெல்லாம்-இந்நாட்டில் அச்சிற் பதிக்கும் பயிற்சியின்றிக் கையினாலெழுதிக் கொண்டு வருவதில்-எழுத்துக்கள் குறைந்தும் மிகுந்தும்-மாறியும்-சொற்கடிரிந்தும்- பொருள் வேறுபட்டும் பாடத்துக்குப் பாடம் ஒவ்வாது பிழைகள் மிகுதியுமுண்டாகின்றவால்-அவ்வாறு பிழைகளின்றிச் சுத்த பாடமாக நிலைக்கும்படி-அச்சிற் பதித்தலை வழங்குவிப்பதற்குத்தேசித்து நூலாசிரியர்களுள் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரருளிச் செய்த - அறம் பொருளின்ப மென்னும் முப்பாலையும் நுட்பமாக் விளங்கவுணர்த்துந் திருக்குறள் மூலபாடமும், முனிவர்களருளிச் செய்த நீதி நூலாகிய நாலடி மூலபாடமும் இப்போதச்சிற் பதிக்கப்பட்டன." சுவடிகளின் தொன்மையில் எழுத்துகளைப் புரிந்து எழுதுவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளை இக்குறிப்பு எடுத்துரைக்கின்றது.

பதிப்பு நெறிகள்

இந்நூலினை அச்சிற் பதிப்பதற்கு முன் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை அடுத்த பகுதி எடுத்துரைக்கின்றது.

"இவை அச்சிற் பதிக்குமுன் தென்னாட்டில் பரம்பரை ஆதீனங்களிலும் வித்துவ செனங்களிடத்திலுமுள்ள சுத்த பாடங்கள் பலவற்றிற்குமிணங்கப் பிழையற இலக்கணவிலக்கிய வாராய்ச்சியுடையவர்களாலாராய்ந்து சுத்த பாடமாக்கப்பட்டன"

என்னும் குறிப்பு, திருக்குறளின் அனைத்துச் சுவடிகளையும் தொகுத்துப் பார்த்த செய்தியை அறிவிக்கும். சுத்த பாடங்களை முடிவு செய்வதற்குத் தனி ஒருவரின் முயற்சி பெரிதும் பயன்தராது. எனவே அறிஞர் குழு கூடி முடிவெடுத்தமையையும், அவ்வாறு எடுத்த முடிவையும் பல்வேறு அறிஞர்களுக்கு அனுப்பிக்

1. அ.விநாயகமூர்த்தி, மூலபாட ஆய்வியல், பக். 78

கருத்துரை பெற்றதையும் முதல் பதிப்பின் வரலாறு நமக்கு காட்டுகின்றது.

> இஃதுண்மை பெற-திருப்பாசூர் முத்துசாமிபிள்ளை திருநெல்வேலிச் சீமை-அதிகாரி-ம-ராமசாமி நாயக்கர் முன்னிலையிலன்னாட்டிலிருந் தழைப்பித்த சுத்த பாடங்களுடனெழுதி வந்த வரலாறு. இந்தப் பொத்தகத்திலெழுதிய தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரருளிச் செய்த திருக்குறள் மூலபாடமும் நாலடியார் மூலபாடமும் திருவள்ளுவமாலையும் ஆக மூன்று சுவடியும் வெகு மூலபாடங்கள். உரை பாடங்களதற்குக் கருவியாக வேண்டும்-இலக்கணவிலக்கியங்களெல்லாம் வைத்துப் பரிசோதித்துப் பாடந்தீர்மானஞ் செய்து-ஒரெழுத்து -ஒர்சொல்-நூதனமாகக் கூட்டாமற் குறையாமலனேக மூல பாடங்களுரை பாடங்களுக் கிணங்கினதாகத் தீர்மானம் பண்ணிய சுத்தப்பாடம் பார்த்தெழுதிச் சரவை பார்த்த பாடமாகையாலும்-அந்தப்படி தீர்மானம் பண்ணி யெழுதினபாடமென்பதும் இவிடங்களிலிருக்குந் தமிழாராய்ச்சியுடைய மகாவித்துவ செனங்களாற் பார்க்குமவர்கள் கருத்திற்றோன்றப் படும்-ஆகையாலும் பாடங்களிலெவ்வளவேனுஞ் சந்தேகப்பட வேண்டுவதின்று- இப்படிக்கு திருநெல்வேலி அம்பல வாண கவிராயர்"

இவ்வரிய பதிப்புரையினால் மூலபாடத்தை நிர்ணயிப்பதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் நெறிமுறைகளும் புலனாகின்றன. (1) மூலபாடத்தை அறிதற்குப் பிற இலக்கியங்களையும் இலக்கணங்களையும் பயன்படுத்தி ஆராய்ந்தனர். (2) எழுத்தோ சொல்லோ கூட்டாமலும் குறையாமலும் சுத்த பாடத்தைக் கணித்தனர். (3) 'சரவை பார்த்த பாடம்' என்றும் (சரவை-எழுத்துப்பிழை) மகாவித்துவான்கள் இப்பாடங்கள் குறித்து எந்த அளவிலும் சந்தேகப்பட வேண்டுவதின்று எனவும் உறுதி மொழியும் அளித்தனர்.

இத்துணைக் குறிப்புகளைத் தந்த பின்னரும் இப்பாடங்கள் குறித்த முடிவை இன்னும் பல அறிஞர்கள் கூடி முடிவெடுத்தனராம் என்று கூறுவர். "இந்தப் பாடங்களை இவடம் வந்திருந்த திருவாவடுதுறை ஆதீன வித்துவான் அம்பலவாணத் தம்பிரான் சீர்காழி வடுகநாத பண்டாரம் இவர்களாலு மறுபடிக் கண்ணோட்டத்துடனாராயப்பட்டன" என்பார். எனவே பல்வேறு அறிஞர் குழாம் கூடி மூல பாடம் தெளிந்த முயற்சி இவற்றால் நன்கு புலனாகிறது. பழம்பதிப்பு ஒன்றினை அச்சு

நூலாக்க முயன்ற போது ஏற்படுகின்ற சிக்கல்களையும் அவற்றைத் தீர்ப்பதற்குரிய முழுமுயற்சிகளையும் இக் குறிப்புகள் நமக்கு நன்கு காட்டுகின்றன.

இங்ஙனம் பல்வேறு அறிஞர்களிடம் அனுப்பியும் ஆய்ந்தும் முடிவுகண்ட இப்பதிப்பின் மூலபாடங்களிலும் பிழை திருத்தம் கண்ட வரலாறு இன்னும் சுவையானதாகும். இந்நூல் அச்சானதிற்குப் பின்னரும் இந்நூலினைப் பார்த்து ஓலையில் படியெடுத்து வைத்துள்ளனர். அவற்றில் பாடபேதங்களை மீண்டும் ஆராய்ந்து குறித்துவைத்துள்ளனர்.

கல்கத்தாவில் உள்ள தேசிய நூலகத்தில் கிடைக்கும் திருக்குறள் ஓலைச் சுவடி ஒன்றின்மூலம் இவ்வரலாறு தெரியவருகின்றது. அவ்வோலைச் சுவடியில் காணும் குறிப்பு வருமாறு:

"இது பொத்தகம் கலியுகாப்தம் 4900 க்கு ஆங்கிரச தொண்டை மண்டலம் சென்னைப் பட்ட்ணத்தில் தஞ்சைநகரம் மலையப்பபிள்ளை குமாரன் ஞானப் பிறகாசனால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. மாசம தினச்சரிதையின் அச்சுக்கூடம், ஆண்டு 1812"

"திருநெல்வேலி அம்பலவாண கவிராயர் பிழை தீர்த்துச் சென்னைப் பட்டிணத்துக்கு அனுப்பிவிச்சு அவ்விடத்திலிருந்து திருவாவடுதுறை ஆதீன வித்துவான் அம்பலவாணத் தம்பிரான், சீர்காழி வடுகநாத பண்டாரம் அவர்கள் மறுபடிக் கண்ணோட்டத்துடன் ஆராயப்பட்டு அச்சிற் பதித்த காயிதப் பொத்தகத்தை ஆழ்வார் திருநகரியில், தேவபிரான் கவிராயர், ஆதிநாத பிள்ளை தலத்தேடுகள் வைத்துச் சோதித்து வேறேடு எழுதியிருப்பது. மறுபடி திருநெல்வேலியில் அம்பலவாண கவிராயரிடத்தில் தீர்மானமானது. ஆழ்வார் திருநகரியில் சோதித்தது. 999 தை மீ....... நம்முடைய ஏடு சுத்தமாய்த் திருத்தியிருக்கிறது".

என்னும் குறிப்பினால் அச்சேறிய திருக்குறளின் முதல்பதிப்பிலும் மூலபாடங்களைத் திருத்தி மீண்டும் பதிப்பாசிரியருக்கே அனுப்பித் தீர்மானம் செய்த பதிப்பு வரலாறு தெரிய வருகின்றது. பிழையான பாடங்கள் நூலில் வந்துவிடக்கூடாது எனும் உயரிய நோக்கமும் அவர்தம் பதிப்பு நெறியும் புலனாகும். இந்த ஓலைச் சுவடியில்

பிழை திருத்தங்கள் பற்றி விரிவான குறிப்புகள் இருப்பதோடு அவற்றைப் பின்வருமாறு பட்டியலிட்டும் தந்துள்ளனர்.

அதிகாரம் – குறள் – ஆழ்வார்திருநகரி ஏடு – அச்சடிபிழை

என்னும் நான்கு தலைப்புகளின் கீழும் இச்சுவடியில் அமைந்துள்ள குறிப்புகள் பாடபேத ஆராய்ச்சியாகவே விளங்குகின்றமை தெளிவாகும். திருக்குறளுக்குக் கிடைத்த முதல் அச்சுப்பதிப்பு நூலிலேயே பதிப்பு நெறிகள் குறித்த பல அரிய விவரங்கள் நமக்குக் கிடைப்பது பெரிதும் குறிப்பிடத்தக்கதாகும். பதிப்புப் பணியில் குழுமுயற்சிகளின் பயன்பாடும் இக்குறிப்புகளால் புலனாகும்.

பதிப்பு முன்னோடிகளில் ஒருவரான யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளை, அவர்கள் பதிப்பித்து வெளியிட்ட பல நூல்களும் பதிப்பு நெறியை நமக்கு அறிவுறுத்தும் அரிய நூல்களாகும். தம்முடைய இருபதாம் வயதிலேயே நீதிநெறி விளக்கம் நூலினை உரையுடன் (1852) வெளியிட்டனர். வீரசோழியம் (1881), இறையனார் களவியலுரை (1883), தணிகைப்புராணம் (1883), தொல்காப்பியம்-பொருளதிகாரம் (1885), கலித்தொகை (1887), இலக்கணவிளக்கம் (1889), சூளாமணி (1889), தொல்காப்பியம்-எழுத்து (1891), தொல்காப்பியம் -சொல்லதிகாரம் நச்சர் (1892) ஆகிய தமிழ்ப்பதிப்புகள் அவர் தமிழிற்கு வழங்கிய கொடைகள் எனலாம்.

இவற்றுள் ஒரு நூற்றாண்டிற்கும் முன்னர் வெளியிட்ட அவர்தம் வீரசோழியம் நூலின் பதிப்பு நெறிமுறைகளை ஆராய்வது பதிப்பியலில் ஆர்வம் கொண்டோர்க்குப் பெருவிருந்தாய் அமையும்.

வீரசோழியம் நூலிற்கு வழங்கிய அவருடைய நீண்ட பதிப்புரை பதிப்பாசிரியர் சி. வை. தா. அவர்களின் இலக்கிய ஆராய்ச்சிப் போக்கினைக் காட்டுவதாக அமைந்துள்ளது. தெய்வாசாரிய வணக்கம், சரஸ்வதி வணக்கம், தமிழாசிரிய வணக்கம், அவையடக்கம் எனச் செய்யுளில் அமைத்துப் பின்னர்த் தமிழின் பெருமைகளை ஆராய்ந்துரைக்கின்றார். அடுத்துத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் காணும் கருத்தமைதிகளை அடிப்படையாகக் கொண்டு அவர்தரும் காலவாராய்ச்சிக்

குறிப்புகள் (ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் எழுதியவை) பெரிதும் எண்ணத்தகுந்தன. தமிழிலக்கிய சரிதத்தைத் காலமுறைப்படி பாகுபாடு செய்து அபோதகாலம், அக்ஷரகாலம், இலக்கணகாலம், சமுதாயகாலம், அநாதரகாலம், சமணகாலம், இதிகாசகாலம், ஆதினகாலம் என எட்டுக் காலப்பிரிவுகளாய்த் தமிழலக்கிய வரலாற்றை வகுத்தானர்.

'தமிழ்நாட்டில் மொழியியல், வரலாறு, கல்லெழுத்தாய்வு, அகழ்வாய்வு முதலியன ஓங்கி வளராத காலத்தில் வாழ்ந்தபோது பிள்ளையவர்கள் காலவாராய்ச்சியை மேற்கொண்டது' அக்காலச் சூழலில் புதுமை நோக்குகளை ஆங்கிலக்கல்வி மூலம் பெற்றிருந்த காரணம் என்பர் கலாநிதி க. கைலாசபதி. மேலும் அவர் காலத்திலிருந்து புதிய கல்வி விழிப்புணர்ச்சி, ஈழத்தமிழகம் தமிழ்க்கலைகளில் பெற்றிருந்த முன் அனுபவம் (அகராதித்துறை...முதலாயின) போல்வன பதிப்பாசிரியர்க்கு இத்தகு ப்பார்வை வரக் காரணம் என்பார். பதிப்பு முயற்சிகளில் சி. வை. தா., உ. வே. சாமிநாதையர்க்கு வழிகாட்டியாகவும் சில வழிகளில் அவரினும் மேம்பட்டவராயும் விளங்குகின்றார் என்பார். 'தாமோதரம்பிள்ளை பதிப்புகளையும்,சாமிநாதையர் பதிப்புகளையும் ஒப்பு நோக்கி ஆராயும் போது காலவாராய்ச்சி, சரித்திரவுணர்வு, ஒப்பியல் நோக்கு திறனாயும் தன்மை, ஆய்வறிவு நேர்மை, முறையியல் நுட்பம் ஆகியன ஐயரினும் பார்க்கப் பிள்ளையிடத்து அதிகமாகக் காணப்படுதல் தெளிவு' என்பார் அறிஞர் க. கைலாசபதி.[2]

ஏற்பட்ட சிக்கல்கள் முதலாயவற்றைக் குறிக்கும்போது பதிப்பின் நெறிமுறைகள் புலனாகின்றன.

சுவடிகளில் உள்ள பல்வேறு பாடவேறுபாடுகளுக்கிடையே சுத்தமான மூலபாடம் காண்பதில் எத்துணை அளவு இடர்ப்பாடு நேரும் என்பதனை அறிஞர்கள் நன்கு உணர்வர்.

'கரலிகிதங்களால் ஏட்டுப் பிரதிகளிற் காலந்தோறும் புக்க அக்ஷர வழுவும் சொற்சிதைவும் வாக்கியப் பிறழ்வும் இத்துணையவென்று சொல்லற்பாலதன்று. இதிகாச சிரோரத்தினமாகிய இராமாயணத்தை எழுதி அரங்கேற்றிய கம்பர் சோழன் மேற்கொண்ட சில வெறுப்பினால் அவனூரைவிட்டு இருபது முப்பது வருஷஞ் சேரனிடம் போயிருந்து பின்பு சோழனைக் காண அபேட்சையுடையாராய்த் திரும்பிவரும் வழியில் ஒரு மடத்திலே சில வித்துவான்கள் சேர்ந்து இராமாயணப் பிரசங்கம் செய்து

2. ஈழத்து இலக்கிய முன்னோடிகள், பக். 24.

கொண்டிருந்தனர். அஃது தனது இராமாயணப் பிரசங்கமெனத் தெரியாதிருந்துங் கற்றாரைக் கற்றார் காமுறுதல் இயல்பாதலின் கம்பர் யாது பிரசங்கமாயினுமாகுக; கல்விப் பிரசங்கங் கண்டுங் கம்பன் புறம் பொழுகலாமாவென்று, தன்னை இன்னானென்றன்னோர்க்குத் தெரிவியாது யாரோ வழிப் பிரயாணக்காரன் போல உள்ளே சிலநேரம் போயிருந்து ஒன்றையொன்று பார்த்தெழுத எழுதப் பிரதிகள் தோறும் புக்க வழுக்களும் திரிபுகளும் அதிகப்பட்டிருந்தமையால் அஃது தனதி ராமாயணமென்று மட்டிடாமற்றன்வாக்குஞ் செய்யுட்களும் இடைக்கிடை யாரோ சொருகுகவிகள் சேர்த்திருப்பதாகச் சொன்னாராம். ஒருவர் காலத்திலே இவ்வளவாயின் ஆயிரத்தைஞ்ஞூறு வருஷத்துத் திரிவு எப்படியிருக்கலாமென்பதை அநுமானித்துக் கொள்க'

என்று ஒரு சுவையான கதை மூலம் ஏடுகளில் உள்ள பாடவேறுபாடுகள் எத்துணை அளவின என்பதைக் காட்டுவார்.

மாறுபாடான பாடங்களும் பழைமையும்

அனைத்துப் பகுதியிலிருந்து வரும் ஏடுகள் ஒவ்வொன்றிலும் பாடங்கள் வேறு வேறாக இருக்கும். 'ஒரு தேசத்தில் வழங்கிவரும் பிரதிகளை மாத்திரம் பார்த்தார்க்கு இம்மாறுபாட்டின் பெருக்கந் தோன்றாது. மதுரைப்பிரதி திருநெல்வேலிப் பிரதிக்கு வேறு. யாழ்ப்பாணப் பிரதி இவ்விருதேசப் பிரதிகட்கும் வேறு. தஞ்சாவூர்ப் பிரதி முதன் மூன்றிற்கும் வேறு. சென்னபட்டினப் பிரதிகள் இவையெல்லாவற்றிற்கும் வேறு. எழுத்ததிகாரத்தும் சொல்லதி காரத்தும் அத்துணைப் பெரும் வித்தியாசமில்லை. அதற்கு நியாயம் சொல்லிக்காட்ட வேண்டியதில்லை. அப்பால் மூன்றதிகாரங்களிலும் பிற்காலத்தோராற் செய்யுள் உரை உதாரணம் என்றிவ்வெல்லாம் தங்கள் தங்கள் மனம் போன வழியே மாற்றப்பட்டன. சில செய்யுளும் உரையும் ஒருங்கே தள்ளப்பட்டன. பழைய உதாரணங்களை நீக்கிப் புது உதாரணங்கள் பின்னூல்களிலிருந்தெடுத்துப் பதிலாகச் சேர்க்கப்பட்டன. தென்தேசப் பிரதிகளில் அலங்காரத்தின் பிற்பகுதி முழுவதும் யாப்பிற் சில பகுதியும் மூலமும் உரையும் ஒருங்கு பிறழ்ந்து செய்யுள் தொகையோடு மாறிப் போயின. இதனால் பிற்காலத்தாராற் சேர்க்கப்பட்ட உதாரணங்கள் இப்பதிப்பிலும் பலவிடத்துச் செறிந்திருக்குமென்று

அஞ்சுகிறோம். அதுகொண்டு நூலின் பழமையை மறுக்கற்க' என்று பாடங்கள் மாறிய நிலையையும், புதியன சேர்ந்த நிலையையும் ஆய்ந்து கூறுவார்.

ஏட்டுப் பிரதியில் இருந்த நிலையைப் பதிவு நிலைக்கு உருவாக்கும்போது ஏற்படும் இன்னல்கள் தாம் எத்துணை?

ஏட்டுப்பிரதி நிலை	பதிப்பு நிலை
பிவாசம்விருத்தியம்	விலாசம், பரிசர்ப்பம், விதூதம்,
விவாசம் தாவனபம்	சமம், நாபம், நமதூதி,
சயதூரகம் மரிசோதம்	பிரகமம், நிரோதம்,
பரியானம் பாவைச்	பரியுபாசனம், வச்சிரம்,
சிரம் செல்வம் வருண	புட்பம், உபநியாசம்,
சங்கரம்-	வருணசங்காரம் இவை
இவை பிரதிமுகத்திலங்கும்	பயிர்முகத்தில்
பதின்மூன்று	அங்கம் பதின்மூன்று

என இருவகையிலும் இருந்த முன்பின் நிலைகளை விளக்கிக்காட்டி 'ஏட்டுப் பிரதிகளோடு பட்ட பிரயாசைக்குப் பிரயாசையென்னுஞ் சொல் போதுமா?' எனக் கேட்பார்.

அனைத்துப் பிரதிகளோடு ஆராய்ந்து பதிப்பித்த அவர் ஏட்டுப்பிரதியின் ஆதாரமில்லாது எதனையும் யாம் மாற்றவில்லை என்பார். பழம்பிரதியே ஏனைய பிரதிகளோடு ஒப்புநோக்கி முடிவு செய்யத்தக்கது என்பார். வீரசோழியத்தில் இறுதியாகக் குறிப்பிடும்போது, "ஆயினுந் தற்காலத்தில் தமிழ் நாடுகளில் வழங்கும் பிரதிகள் அனைத்திலும் இப்பொழுது யாம் அச்சிட்டு வெளிப்படுத்தும் ரூபம் மேலானதென்று கொள்வதேயன்றி ஏட்டுப் பிரதியின் ஆதாரமில்லாது யாம் ஒரு மொழியும் மாற்றலேமாயினும், இதுதான் ஆசிரியர் எழுதிய சுத்தரூபம் என்று கொள்ளற்க. அனைத்து மாறுபாடும் திருத்தி ஆதிரூபம் காட்டுதல் இனி எத்துணை வல்லார்க்கும் அரிது. பிறநூற்துணிவிற்கு மாறுபட்டும் தற்கால வழக்கத்தை விரோதித்தும் சரியான அர்த்தம் புலப்படாமலும் சமுசயம் நிகழ்ந்த இடத்தும் எல்லாத் தேசத்துப் பிரதியும் ஒத்திருந்தனவற்றையும் யாம் சிறிதும் திருத்திப் பதிப்பித்திலேமாயினும்" என்பார்.

இதனால் ஏட்டில் காணலாகும் சிறந்த பாடங்களையே போற்றியமை புலனாகும். எனவேதான் ஏனைய பதிப்பாசிரியர்களோடு ஒப்பிடும்போது இவருடைய பதிப்பு நெறித்திறனைப் பின்வருமாறு பாராட்டுவர்:

"சி. வை. தாமோதரம்பிள்ளை மூலபாடத் திறனாய்வை முழுமையான ஆய்வுத்துறையாகக் கொண்டு செயற்பட்டார். அனுபவ அறிவுக்கு அனுசரணையாக மூலபாடத் திறனாய்வுக் கொள்கைகளைக் கைக்கொண்டார். தாம் பதிப்பித்த நூல்களுக்கு அவர் எழுதிய நீண்ட பதிப்புரைகளைப் படிப்போர்க்கு, பதிப்புக் கலையைப் பற்றி எத்துணை நுட்பமாகவும் விரிவாகவும் அவர் சிந்தித்துச் செயலாற்றினார் என்னும் உண்மை தெரியவரும். ஐயருக்கும் பிள்ளையவர்களுக்கு மிருந்த அணுகுமுறையிலிருந்த அடிப்படை வேறுபாடே இவ்வாறு வெளிப்பட்டதெனலாம். எத்தனையோ வழிகளில் இவ்வேறுபாடு புலப்படுவதாயிற்று. உதாரணமாக ஒருநூலைப் பதிப்பிக்கையில் அதற்கு முற்பட்ட பதிப்பு முயற்சிகளைக் குறிப்பிடுதல் வரலாற்றுணர்ச்சியின் பாற்படுவதாகும். பின் வரும் ஆய்வாளருக்குச் சில செய்திகள் வழங்கப்படுதல் இன்றியமையாதது. பின்வரும் பதிப்புகள் மேலும் திருத்த மடைய அச்செய்திகளும் தகவல்களும் உதவும்".

என்றுகூறி சி.வை.தா. அவர்கள் இங்ஙனம் முன்பதிப்பு வகை வரலாற்றை எடுத்துரைக்கும் பதிப்பு நெறியுடையவர் என்பதைச் சுட்டுவர்.[3]

இங்ஙனம் பழந்தமிழ்ப் பதிப்புகளின் முன்னுரைகளின் மூலம் பல அரிய பதிப்பு நெறிமுறைகளைக் காண முடிகின்றது. பதிப்பாசிரியரின் பதிப்பு அணுகுமுறை, பின்பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள், பதிப்பிக்கும்போது ஏற்படும் சிக்கல்கள், தீர்வுகள் முதலாயின பின்வரும் பதிப்பாளர்க்குக் கிடைக்கும் அரிய கருத்துகளாம். ஒரு நூற்றாண்டிற்கு முன்னர்த் தோன்றிய இவ்விரு நூல்கள் காட்டும் பதிப்புப் பட்டறிவு பின்னையோர் பணிக்கும் பயன்படத் தக்கன என்று கூறவும் வேண்டுமோ?

துணை நூல்கள்

1. அம்பலவாண கவிராயர், திருக்குறள் மூலபாடம் மாசத்தினச்சரிதை அச்சுக்கூடம், சென்னை 1812.

3. ஈழத்து இலக்கிய முன்னோடிகள், பக் 24-25.

2. மு. சண்முகம்பிள்ளை மற்றும் இ. சுந்தரமூர்த்தி கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள், சென்னைப் பல்கலைக்கழகம் 1975.

3. அ. விநாயக மூர்த்தி மூலபாட ஆய்வியல், மக்கள் பதிப்பகம், மதுரை, 1978.

4. ச. கைலாசபதி, ஈழத்து இலக்கிய முன்னோடிகள், மக்கள் பதிப்பகம், சென்னை, 1986.

5. தாமோதரம், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம், 1971.

6. சி.வை. தாமோதரம்பிள்ளை, வீரசோழியம் 1881.

1. அ.விநாயகமூர்த்தி, மூலபாட ஆய்வியல், பக். 78
2. ஈழத்து இலக்கிய முன்னோடிகள், பக். 24.
3. ஈழத்து இலக்கிய முன்னோடிகள், பக் 24-25.

மறைந்த நூல்களைப் பதிப்பித்தல்

இரா. இளங்குமரன்

"வெண்ணிலா விளையாட்டு" என்னும் பெயரால் 1975 இல் ஒரு நெடும்பாடல் இயற்றினேன். அதில் கடலுக்கு ஒரு பெயர் சூட்டினேன். அஃது 'ஏடு தின்னி' என்பது.

யா.வி. பதிப்பு

என் நெஞ்சத்தின் ஆழத்துள் 'கொடுங்கடல்' கொண்ட செய்தியும், 'வாரணங் கொண்ட தந்தோ' என்னும் இரங்கலும் படிந்துகிடந்தன. அவற்றுக்கு மூலத் தூண்டலாக அடியார்க்கு நல்லாருரை, யாப்பருங்கலவிருத்தியுரை, களவியற் காரிகையுரை, புறத்திரட்டு என்பன அமைந்தன. இவற்றையெல்லாம் உணர்வுடையார் ஒருங்கே கண்டு கொள்ளுமாறு மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் தொகுத்தளித்த 'மறைந்துபோன தமிழ் நூல்கள்' என்னும் நூல் பேரசைவு அசைத்தது. இந்நிலையில் 'யாப்பருங்கல விருத்தி' யைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காகப் பதிப்பிக்கும் பொறுப்பை யான் மேற்கொள்ள நேர்ந்தது. அது 1973 ஆம் ஆண்டு. அப்பதிப்பின் வழியாக ஏற்பட்ட - ஏற்பட்டு வருகின்ற - நலங்கள் எண்ணற்றன.

மேற்கோள் நூற்பாத் தொகுப்பு

96 நூற்பாக்களைக் கொண்ட யாப்பருங்கலத்திற்கு அதன் விருத்தி யுடையார். தொல்காப்பியம், அவிநயம், காக்கை பாடினியம், சிறுகாக்கை பாடினியம், பல்காயம், நற்றத்தம், சங்கயாப்பு, மயேச்சுரம் முதலிய இலக்கண நூல்களிலிருந்து 1034 நூற்பாக்களை மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார். அம்மேற்கோள் நூற்பாக்களின் அருமையும், பெருமையும் உணர்ந்து அவற்றை அடைவு செய்யவேண்டும் எனவுட் கொண்டேன். அப்பணி முடித்த பின்னர் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களிலும் சிலப்பதிகாரம் முதலிய இலக்கிய நூல்களிலும் உரையாசிரியர்களால் எடுத்தாளப் பெற்றுள்ள

மேற்கோள் நூற்பாக்களையும் தொகுத்தேன். ஆகச் சிதறிக் கிடந்த இலக்கண மேற்கோள் நூற்பாக்கள் மட்டும் ஈராயிரத்தைத் தாண்டியிருக்கக் கண்டு கழிபேருவகை யுற்றேன். அவற்றைப் பொருள் வகையால் அகர வரிசைப்படுத்தி "மேற்கோள் விளக்க நூற்பா அகர வரிசை" என்னும் பெயருடன் தனி நூலாக அமைத்துக்கொண்டேன்.

பின்னர்த் தெள்ளிதின் ஆசிரியர் பெயர் புலப்படும் நூற்பாக்களைத் தனித்தனி ஆசிரியர் பெயரால் அடைவு செய்து பார்க்கும் ஆர்வம் மீதூர்ந்தது. அவ்வகையில் அப்பொழுது காக்கை பாடினியத்தையும், அவிநயத்தையும் அடைவு செய்தேன். காக்கை பாடினிய அடைவும் உரையாக்கமுமே என்னுள் முந்து நின்றன.

காக்கை பாடினிய அடைவு

காக்கை பாடினியார் நூற்பாக்களை ஒழுங்குறுத்திப் பார்த்த அளவில் அவர் யாப்பிலக்கணம் மட்டுமே செய்தார் என்பது புலப்பட்டது. அவர் யாக்களை யாப்பிலக்கண முறைவைப்பாகிய எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா, இனம், ஒழிபு என்னும் முறையில் பகுத்துப் பார்வையிட்டேன். அந்நிலையில் யாப்பிலக்கணச் செய்திகள் எனப்படுவனவற்றுள் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலவற்றைத் தவிர அனைத்துப் பகுதி நூற்பாக்களும் அமைந்து கிடக்கக் கண்டு அளப்பரும் வியப்பில் ஆழ்ந்தேன். என் ஆய்வுப் பார்வையில் என்னையறியாத இன்பம் எனக்கே உளதாகிப் பூரித்து நூலாக்கப் பணியில் புகுந்தேன்.

விடுபாடு நிரப்புதல்

தொடைகளுள் சிலவற்றுக்கும், நேரிசை ஆசிரியப்பா, ஆசிரியத்தாழிசை, குறட்டாழிசை முதலியவற்றுக்கும் மட்டுமே காக்கை பாடினியார் நூற்பாக்கள் கிடைத்தில. அல்லது அவர் நூற்பாக்கள் கிடைத்தும் அவர் நூற்பாக்களெனத் திட்டவட்டமாகப் பெயர் அறிந்து கொள்ள வாய்க்கவில்லை. அதனால்

> "முன்னோர் மொழிபொருளே யன்றி அவர்மொழியும்
> பொன்னேபோல் போற்றுவம்"

என்னும் தொன்னெறிப்படி உரைமேற்கோளாக அமைத்துக் கோடல் சாலும் எனத் துணிந்தேன். அவ்வகையில் சிறுகாக்கை பாடினியார்க்கு முதன்மை இடம் தந்து நான்கு நூற்பாக்கள்

மேற்கொள்ளப்பட்டன. எஞ்சியவற்றுக்கு ஆசிரியர் தொல்காப்பியனார், அவிநயனார் முதலியோர் நூற்பாக்கள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நூற்பாக்கள் 13. அவற்றின் அடிகள் 17, அவை உரைமேற்கோள் நூற்பாக்கள் என்பதை அவ்வவ்விடத்துக் காட்டி ஆசிரியர் பெயரும் ஆங்காங்குத் தரப்பட்டன.

நூற்கொள்கை வரையறை

காக்கைபாடினியார் நூற்பாக்கள் தொல்காப்பிய இளம்பூரணருரை, பேராசிரியருரை, சேனாவரையருரை, நச்சினார்க்கினியருரை ஆகியவற்றிலும் நன்னூல் மயிலைநாதருரை, இறையனார் களவியலுரை, வீரசோழியவுரை ஆகியவற்றிலும் இடம் பெற்றுள. யாப்பருங்கலக்காரிகையுரை, யாப்பருங்கல விருத்தியுரை ஆகிய இரண்டனுள்ளும் மிகப் பல்வாக இடம் பெற்றுள. ஒரு நூற்பா காக்கை பாடினியார் பெயரால் இருக்கலாம். பெயரால் இருப்பவை எல்லாம், அவர் நூற்பாக்களெனக் கொள்ளமுடியாமையும் உண்டாயிற்று. அதனை நீக்குதற்குக் காக்கை பாடினியார் கொள்கைகளைத் தெளிவு செய்து கொள்ளுதல் இன்றியமையாததாயிற்று.

நேரசை - தனியசை

"வெண்சீர் இறுதியின் நேரசை பின்வரின்
வெண்சீர் வெண்டளை ஆகும் என்ப"

என்னும் நூற்பா டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையக் காரிகைப் பதிப்பிலும், பெரும்புலவர் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை பதிப்பிலும், காக்கை பாடினியார் நூற்பா எனக் காட்டப்பட்டுள்ளது. காக்கை பாடினியார் மதம் நேரசையைத் 'தனியசை' என்றும் நிரையசையை இணையசை' என்றும் கொள்வது. ஆகலின் நேரசை என்னும் ஆட்சியுடைய இந்நூற்பா, காக்கை பாடினியம் சார்ந்ததன்று என விலக்குதற்கு முடிந்தது. அம்முடிவு சரியானதே என்பதை மெய்ப்பிப்பதுபோல், கழகப் பதிப்பிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழக பதிப்பிலும் அந்நூற்பா இடம்பெறவில்லை அதனால் எடுத்த முடிவு உறுதியாயிற்று.

ஒருபொருளுக்கு இரு நூற்பா

இனியொரு புதுவகைச் சிக்கல், செந்தொடை என்பதற்கு இரண்டு நூற்பாக்கள் கிடைக்கின்றன. அவ்விரண்டும் காக்கை

பாடினியார் பெயரால் சில நூல்களிலும் வேறு பெயரால் சில நூல்களிலும் இடம் பெற்றுள. இவற்றைத் தெளிந்து ஒன்றைத் தேர்வது பொறுப்புடனும் பொறுமையுடனும் செய்யத்தக்கதாம்.

"அசையினும் சீரினும் இசையினும் எல்லாம்
இசையா தாவது செந்தொடைதானே"

என்பது காக்கை பாடினிய நூற்பாவெனக் கழகபபதிப்பு, உ.வே.சா நூல் நிலையப்பதிப்பு, அண்ணாமலைப் பல்கலைகழகப் பதிப்பு ஆகியவை காட்டுகின்றன. கையனார், பல்காயனார் என்னும் பாட வேறுபாடுகளையும் காட்டுகின்றது நூல் நிலையப்பதிப்பு. கையனார் நூற்பாவென மே.வீ.வே. பதிப்புக் காட்டுகின்றது. இவை இவ்வாறிருக்க யாப்பருங்கல விருத்தி இதனைப் பல்காயனார் நூற்பா என்று காட்டுவதுடன், இந்நூற்பா அமைந்துள்ள இடத்திலேயே,

"செம்பகை அல்லா மரபினதாம் தம்முள்
ஒன்றா நிலையது செந்தொடை யாகும்"

என்னும் நூற்பாவைக் காக்கை பாடினியார் பெயரால் காட்டுகின்றது. ஆதலால் முன்னது காக்கை பாடினியம் சார்ந்ததன்று என்று தள்ளவும், பின்னது காக்கை பாடினியம் சார்ந்ததென்று கொள்ளவும் அவ்வுரை உதவியதாம். அதுதானே இரண்டு நூற்பாக்களையும் காட்டி இருவர் பெயரையும் கூறுகின்றது.

இவ்வாறே 'இன்னிசை வெண்பா' வின் இலக்கணத்தைக் கூறும் நூற்பாக்கள் இரண்டு காக்கை பாடினியார் பெயரால் சுட்டப்பெறுவதை ஆய்ந்து "தனிச்சொல் தழுவலவாகி" என்னும் நூற்பாவே அவர் நூற்பாவெனக் கொள்ளப்பட்டது. அதற்குத் துணையாயமைந்ததும் யாப்பருங்கல விருத்தியேயாம்.

உரைமரபு

காக்கைபாடினியத்திற்கு இயன்ற வகையான் உரையெழுதுதல் வேண்டும் என்னும் எண்ணம் உண்டாயிற்று. பழைய நூலாகலின் பழமரபு போற்றுதல்வேண்டும் என்பதும் எழுந்தது. அதனால் அவ்வுரை இயங்குமாற்றைத்திட்டப்படுத்திக் கொண்டேன். அது வருமாறு:

"இந்நூற்பா என்ன கூறிற்றோ? எனின், "இன்னது கூறிற்று" என்று நூற்பா நுதல் பொருளும், பின்னர் நூற்பாவின்

பிண்டப் பொருளும் அதன்பின்னே ஆராய்ச்சியுரை குறிப்புரை விளக்கவுரை எடுத்துக் காட்டு ஆகியனவும் முறையே அமைக்கப்பட்டன.

'இவ்வாறு கூறியமையால் இது பெற்றாம் 'என்றும், இவ்வாறு கூறாக் கால் இவ்வாறாம்' 'என்றும், இவ்வாறு கூறினும் அமையுமாக இவ்வாறு கூறியது இது பெறுதற்கு என்றும், 'இதற்கும் இதற்கும் இவ்வேற்றுமை' என்றும் இவ்விலக்கணத்தை இவரிவர் இவ்விவ்வாறு கூறினார் என்றும், இவ்வாறு கூறவேண்டிய தென்னை? என்றும் பெயர் கூறுமாற்றானே இலக்கணமும் கூறினார்' என்றும், ' நூற்பாவிலேயே இவ்வில்க்கணம் அமைய வைத்தார் என்றும் இதனால் இதனைக் கூறாராயினர் என்றும் இந்நூற்பாவை இவ்வாறியைக்க வேண்டும் என்றும் இதனை இவ்வாறு கொண்டு கூட்ட வேண்டும்' என்றும் 'இதனை மேலே கூறினாம்' என்றும், ' இதனை முன்னே கூறுவாம்' என்றும் இது தொல்லாசிரியர் நெறியாம் என்றும் இஃதிவர் மதமாம்' என்றும் 'இதனால் தழுவி உரைத்தாம் என்றும் அவ்வுரை இயங்குவதாயிற்று.

எடுத்துக்காட்டு நிரப்புதல்

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்' முன்னை மரபு; ஆனால் இலக்கணம் கண்டதற்கு இலக்கியம் படைத்தலும் பின்னை மரபாக அமைந்துவிட்டமையயால் உரையாசிரியர்கள் பேரிடப்பட்டிருப்பர் என்னும் எண்ணம் எடுத்துக்காட்டு அமைக்குங்கால் தோன்றியது.

வல்லின மோனைக்குக் 'கயலேர் உண்கண்' என்னும்பாடல் யாப்பருங்கல விருத்தி வழியால் கிடைத்தது. ஆனால் மெல்லின இடையின மோனைகளுக்கு எடுத்துக்காட்டுக் கிட்டவில்லை வாளா விடவும் மனமில்லை. ஆகவின்

"ஞயம்பட உரைக்கும் நாவினர் என்றும்
நலிதுயர்க் காட்பட லின்றி
மாண்பயன் எய்தி வாழ்குவர் இனிதே"

என மெல்லின மோனைக்கும்

"வாழைக் கழகு வளமுற நீள்குலை
யாழுக் கழகிசை யாம்"

என இடையின மோனைக்கும் புதிது யாத்தமைக்கப் பெற்றன. விளக்கமும் எழுதியாகும் நிலையும் உண்டாயிற்று.

"வல்லின மோனைக்கு நான்கு எழுத்துகள் (க.ச.த.ப) அமைந்த பாட்டைக் காட்டினாராக, மெல்லினத்திற்கு மூன்று எழுத்துகளாலும் (ஞ.ந.ம) இடையினத்திற்கு இரண்டு எழுத்துகளாலும் (வா,யா) சான்று காட்டிய தென்னை எனின் மெல்லினத்துள் ஞ,ந,ம என்னும் மூன்றும் இடையினத்துள் ய, வ என்னும் இரண்டும் அல்லா எழுத்துக்கள் மொழி முதலாகாவாகலின் இவ்வாறு காட்டினாம் என்க. இனி 'ங' கரம் மொழிமுதல் வாராதோ எனின் 'ஙனம்' என்னும் ஓரிடத்தன்றி வாராதாகலின் விடுத்தாம்" என்பது அவ்விளக்கம். இவ்வாறே அளபெடைத் தொடைக்குச் சில எடுத்துக்காட்டுப் பாக்கள் யாக்க வேண்டியது நேர்ந்தது. அப்பொழுதுதான், பண்டை உரையாசிரியர்கள் பலரும் பாவன்மை மிக்கோராகவும் விளங்கியிருப்பர் என்பது புலப்பாடாயிற்று.

பழநூற் பயிற்சி நலம்

உறுப்பியல், செய்யுளியல், பொதுவியல் என மூவியல்களாகப் பகுத்துக் கொள்வதற்கும், அவற்றின் உட்பிரிவுகளை வகுத்துக் கொள்வதற்கும் நூற்பாக்களை முறையாய் அடைவுறுத்திக் கொள்வதற்கும், சிற்றுரை வரைதற்கும் பழநூற் பயிற்சியே மூலமாய் அமைந்தது என்று கூறுதல் என் கட்டாயக் கடமையாம்.

களவியற் காரிகை

யாப்பருங்கல விருத்தியைப் பதிப்பித்த பின் யான் பதிப்பித்த மற்றொரு நூல் களவியற்காரிகை. அது முதற்கண் பேராசிரியர் வையாபுரியாரால் பதிப்பிக்கப்பட்டது. அந்நூற் பெயர்தானும் அவராலே சூட்டப் பெற்றதே. அந்நூல் முதலும் ஈறும் இல்லா இறையெனவே காட்சியளித்தது. இடைஇடையே ஏற்பட்டிருந்த விடுபாடுகளையும் எண்ணி முடியா. ஓராற்றான் நூலுருவாக்கப்படுத்துதல் வேண்டும் என்னும் முனைப்பில் பயின்றேன்.

முதற்கண் அமைந்திருந்த சிதைவுப் பகுதிகளின் தொடர்களை நோக்க இறையனார் களவியலுரையே பளிச்சிட்டது. உரைவிளக்கம் வேண்டுமிடத்தும், உரை வேறுபாடு காணுமிடத்துமன்றி முந்துரையைத் தழுவியே உரையும் விளக்கமும் எடுத்துக் காட்டும் 'உரைமரபு' என்னுள் தோன்றியது.

ஆகவின் இறையனார் களவியல், தமிழ்நெறிவிளக்கப் பொருளியல் இவற்றின் துணையால் சிதைவை ஓராற்றான் ஒழுங்குறுத்த வாய்த்தது.

சிதைவகற்றல்

களவியற் காரிகையின் 11 ஆம் காரிகை உரை: "இச்சூ.. வெனின் பாலைக்குக் கரு வறிவித்தலைக் கருதிற்று.

வரலாறு: தெய்வம் பகவதியும் ஆதித்தனும்; பறை பூசற் பறையும் ஊரெறி பறையும்; செய்கை நிறைகோடலும் ....ம் ; யாழ் பாலை யாழ்;பண் பஞ்சரம்: தலைமகன் பேர் மீளி விடலை காளை; தலைமகள் .... ம் பாதிரிப்பூவும்; நீர் அறுநீர்க் கூவலும் அறுநீர்ச்சுனையும்; அந்நிலத்து மக்கட் பேர் . . . . கரு" (கக)

மேல்வரும் களவியல் உரையொடும் இதனை ஒப்பிட்டுப்பார்க்க

தொல்காப்பியனார் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர். வேண்டாமையின் தெய்வமும் வேண்டிற்றிலர்.

பிறர், பகவதியையும் ஆதித்தனையும் தெய்வம் என்று வேண்டுவர்
உணா - ஆறலைத் தனவும் ஊரெறிந்தனவும்.
மா - வலியழிந்த யானையும் புலியும் செந்நாயும்.
மரம் - இருப்பையும் ஓமையும்
புள் - கழுகும் பருந்தும் புறவும்
பறை - பூசற்பறையும் ஊரெறிபறையும் நிரைகோட் பறையும்
செய்தி - நிரை கோடலும், சாத்தெறிதலும், சூறையாடலும்
பண் - பஞ்சுரம், பிறவும் என்றதனால்
தலைமகன் பெயர் - மீளி; விடலை, காளை
பூ - மராம்பூவும், குராம்பூவும், பாதிரிப்பூவும்.
நீர் - அறுநீர்க்கூவலும், அறுநீர்சுனையும்
ஊர் - கொல்குறும்பு
மக்கள் பெயர் - எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர் எனப்படும்".

இவ்வொப்புமைப்பாடு களவியற் காரிகையின் முகப்பை அமைக்க உதவிற்று. இவ்வாறே எண்வகை மணச் செய்தியும் இறையனார் களவியற் செய்தியைக் கட்டளைக் கலித்துறையால் சொல்வதைக் கண்டு அமைத்துக் கொள்ளலாயிற்று.

களவியற் காரிகையின் இரண்டாம் பகுதித் தலைப்பு களவொழுக்கம் என்பது. முதற்பகுதித் தலைப்புத் தானம் இல்லை! என் செய்வது?

களவியற் காரிகையால் மிகுதியும் பாராட்டப் பெறும் தமிழ் நெறி விளக்கப் பொருளியவில் முதல் கரு உரிப்பொருள்களைக் கூறும் பகுதி அகப்பொருள் எனக்

குறிக்கப்பெற்றுள்ளமையால் அப்பகுதிக்கு அப்பெயரே சூட்டப்பட்டது.

பதிப்பு வரவுப்பயன்

இதன் முதற்பதிப்பு வெளிவந்த நாளில் வெளிவராத நூல்கள் பின்னே வெளிவந்தமையால் இரண்டாம் பதிப்பு செம்மையுறுதற்கு வாய்ப்பும் உண்டாயிற்று.

"காணாய் தோழிநம் மேனற் றிண்புனம்
பேணா மனைபோய்ப் புறங்கொடுத்தென
வல்வேற் றானை வெள்வரிச்
செவ்வாய்ப் பாசினங் கவர்ந்துகொண் டனவே"

இவ்வாறு முதற்பதிப்பில் இருந்து பாடல் தமிழ்நெறி விளக்கப் பொருளியல் சார்ந்தது. அந்நூல் வெளிவந்தமையால் அப்பாடல்,

" காணாய் தோழிநம் மேனற் றண்புனம்
பேணா மன்னர் பெயர்புறங் கொடுத்தென
வல்வேற் றானை வல்வலிற்
செவ்வாய்ப் பாசனங் கவர்ந்து கொண் டனவே"

எனத் திருத்தம் பெற்றது.

"முளையெயிறு நிரம்பா இளமைப் பருவத்தள்
அளியன் ஒருவன் தளையவிழ் கண்ணி
முலையும் வாராள் முதுக்குறைந் தனளே"

என முற்பதிப்பில் சிதைவுற்றுக் கிடந்த பொருளியற் பாடல்

"முளையெயிறு நிரம்பா இளமைப் பருவத்
தொளிதிகழ் ஒருவன் நீட்டிய
தலையவிழ் கண்ணி தாங்கினள் உவந்தே"

என இரண்டாம் பதிப்பில் செப்பம் அடைந்தது. எனினும் இளமைப்பருவத்தள் ஒளிதிகழ் ஒருவன்' எனப் பாடம் அமைதலே சிறக்கும்[1] என்பதை உணர்ந்தும், அப்பாடல் இன்மையால் அப்படியே வைக்கப்பட்டது. இவ்வாறே பிறநூல் ஒப்பீடு புதுப்பதிப்பு வரவு இவற்றால் சிதைவுகள் பிழைகள் ஒழுங்காக வாய்ப்புகள் உண்டாயின.

புனைந்து நிரப்புதல்

மேற்குறித்த வகைகளால் ஒழுங்காக்கும் வாய்ப்பில்லாத இடங்களும் களவியற் காரிகையில் உண்டு. கிளவித் தெளிவு என்பதொரு நூலின் மேற்கோள் பா ஒன்று. அந்நூல் வெண்பாவால் அமைந்தமை அழியக் கிடத்தலால் சிதைந்தது வெண்பா என முடிவெடுக்க வாய்த்தது. அவ்வெண்பா,

"—————————
ழிம்பரோ யாதோ விடம்வடிவு - கொம்பரோ
வண்ண மயிலோ கிளியோ மலைநாட
—————————

என இடையடி இரண்டால் மட்டும் நிற்கின்றது, இஃது இடம் வினாதல் துறைக்கு எடுத்துக் காட்டாக வருவது, உளங் கவன்றுரைத்த பாங்கன், "எவ்விடத்து? எத்தன்மைத்து? நின்னாற் காணப்பட்ட உரு? என்று தலைவனை வினாவுதல் என உரை கூறுகின்றது. இடம் வடிவு என்பவை இரண்டாம் அடி மூன்றாம் சீரில் இடம் பெற்றுள்ளன. இடமும் நிரம்ப வேண்டும் வடிவின் முடிவும் வேண்டும்.

(உம்பரோ நாகர் உலகோ இருங்கடல்கூ)
ழம்பரோ யாதோ விடம்வடிவு - கொம்பரோ
வண்ண மயிலோ கிளியோ மலைநாட
(எண்ணங் கவர்ந்த எழில்)

என நிறைவு செய்யப்பட்டது. முதற்பதிப்பில் இருந்த வகையை மு.ப. என அடிக்குறிப்பாகத் தரப்பட்டது. உண்மைப் பாடம் கிடைக்குமானால் இப்புனைவை விலக்கிக் கொள்ளலாம் அன்றோ ! இப்படியே செய்த நிறைவுகள் மிகப் பலவாம். அங்கெல்லாம் முதற்பதிப்புப் பாடம் தவறாமல் காட்டப்பட்டது.

வைப்புநிதி

களவியற் காரிகையின் அச்சீடு முடிந்தது. ஆராய்ச்சி முன்னுரையின் மெய்ப்புத் திருத்தவந்தது. அந்நிலையில் வீரசோழியத்தின் வழியே சிதைவு நீக்கும் சில நூற்பாக்கள் கிடைத்தன. அவற்றை விடுதல் கூடாதே. அதனால் "களவியற் காரிகையில் சிதைந்துள்ள 16,17, ஆம் மேற்கோள் நூற்பாக்களும் விடுபெற்ற பகுதியும் வீரசோழிய உரையில் பின்வருமாறு அறியக்கிடக்கின்றன என அம்முன்னுரையிலே அமைத்துக் கொள்ளப்பட்டது. அதற்குப் பின்னரும் சில விடுபாடுகள்

கிடைத்தன. அவற்றை அடுத்த பதிப்பில் உரிய இடத்தில் சேர்த்துக்கொள்ளலாமே வைப்பு நிதியம் இருப்பின் வாங்கிக் கொள்ளமுடியுமே!

பழநூற் பதிப்புப்பயன்

களவியற் காரிகைப் பதிப்பின் வழியே பாண்டிக் கோவை முதலிவற்றில் இணைத்துக் கொள்ள வேண்டிய பாடல்கள் உண்மை புலப்பட்டது. புறத்திரட்டுப் பதிப்பால் கீழ்க்கணக்கு நூல்களும் இடம் பெறவேண்டிய பாடல்கள் சில உண்மை புலனாயிற்று. செவ்விய பாடங்கள் பல அவற்றில் கிடைத்தலால் மேல்வரும் பதிப்புகளுக்கு அப்பாடங்களும் பயன்படும் என்றும் உறுதியும் உண்டாயிற்று. தகடூர் யாத்திரை 'களவித் தெளிவு', பொருளியல் என்பன நூல் வடிவுறும் வாய்ப்பும் நேரிட்டது.

யாப்பருங்கலப் பதிப்பில் சித்திரக் கவிகளைச்சித்திரத்தில் திட்டிப்பார்த்து அமைத்தலால் பல செப்பங்கள் கிடைத்தன. 'உழைக்க உழைக்கப் பயனில்லாமல் இல்லை' என்னும் தெளிவும் கிடைத்தன. அதே பொழுதில் பதிப்பு எத்துணை விழிப்பாயி ருப்பினும் மயக்குதல் உண்டு என்பதும் தெள்ளத் தெளிவாகப் புலப்பட்டது; புலப்பட்டும் வருகின்றது. அவற்றையெல்லாம் விரிப்பின் பெருகுமாகலின் ஒரெடுத்துக் காட்டுக் காட்டுவேன்.

விழிப்பின் இன்றியமையாமை

தமிழ்நாட்டு அரசின் பழஞ்சுவடிப் பதிப்பாக வெளிவந்த குறவஞ்சிகளுள் ஒன்று, சிக்கல் நவநீதேசுவர சுவாமி குறவஞ்சி. அதனைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டது. அதில்,

> "முத்துரேகைச் சகி வந்தாள்- மோகினிக் கனபா
> முத்து ரேகைச் சகி வந்தாள்"

என ஒரு தரு வருகின்றது. கனபா என்பது சரியான பாடம் எனக்கொண்டு அதற்குப் புகழ்பரவிய என்னும் குறிப்புரையும் வரைந்தேன், பின்னே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வழியே அறிஞர் மு.கோ.இராமன் அவர்கள் எழுதிய சுவடி ஆய்வு நூலால் அப்பாடத்தைச் சுட்டிக்காட்டி மோகினிக் கன்பா' என்பதே பாடம் என்று குறித்திருந்தனர். அது 'சுவடிப் பதிப்பில்' விழிப்புவேண்டும் என்பதை விளக்கிக் காட்டும் சான்றாகத் திகழ்கின்றது.

நிறைவுரை

தேனும் பாலும் ஊட்டி, ஊனும் உயிரும் கலந்த இன்ப அன்பால். தம் மகாரைப் போற்றும் தெய்வத் தாய்மார் பலர் சங்கச் சான்றோர் வரிசையில் இடம் பெற்றுத் திகழ்கின்றனர். அவர்கள் இலக்கியப் பயிரைப் பேணிவளர்த்தவர்கள். காக்கை பாடினியாரோ இலக்கணப் பயிரைப் பேணி வளர்த்த பெருமைக்குரியவர். அவர் தம் நூல் 'இப்போது இல்லை' என்றும், மறைந்து போனது' என்றும், 'வாரணம் கொண்ட தந்தோ' என்றும் முடிவு செய்யப் பெற்றது. அந்நிலை அகன்று 'காக்கை பாடினியத்தைத் தமிழுலகம் இழந்துவிடவில்லை' என்னும் ஒரு நிலை இந்நூலால் அமையுமாயின் அப்பேற்றை எளியேன் வழி அருளிய திருவருள் திறத்தை வாழ்த்தி வணங்கி 'வண்டமிழ்த் தொண்டு புரிதல் என்றலைக் கடனாம்' எனக் காக்கை பாடினிய ஆராய்ச்சி முன்னுரை நிறைவில் எழுதிய எழுத்தை நினைவுறுத்திக் கொள்கிறேன். மறைந்த நூல்களை வெளிக்கொணர்தலில் தனிப்பேரார்வலராகத் திகழ்ந்த சை.சி.கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையாபிள்ளை அவர்களை இவண் நினைவு கூர்ந்து அமைகின்றேன்.

சங்க இலக்கியப் பதிப்புகள்

ந. விசாலாட்சி

சங்க நூல்கள்

தமிழின் தனிப்பெருஞ்செல்வமாக விளங்குவது சங்க இலக்கியமாகும். தொன்மை வாய்ந்த இவ்விலக்கியங்கள் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே அச்சுருவம் பெற்றுத் தமிழ் ஆர்வலர்க்குப் பெருவிருந்தாய்க் கிடைத்தன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களின் பதிப்பு முயற்சிகள் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

முதற்பதிப்புகள்

கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையை முதன்முதலில் பதிப்பித்தவர் தமிழ்த்தந்தை எனப் பல்லோராலும் அழைக்கப்பெறும் இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை ஆவர். 1887 ஆம் ஆண்டில் முதற்பதிப்பாகக் கலித்தொகை, தமிழ் உலகிற்கு அறிமுகமானது. அவருடைய பதிப்புப் பணிக்குப்பின் தமிழ்த்தாத்தா என அழைக்கப்பெறும் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்களுடைய முதற்பதிப்பாகிய பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும் 1889 இல் வெளிவந்தது. இப்பதிப்பிற்குப்பின் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றினை 1894 இல் பதிப்பித்தார். 1903 இல் ஐங்குறுநூற்றினைப் பதிப்பித்தார். 1904 இல் பதிற்றுப்பத்தினை வெளியிட்டார். நற்றிணை பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் எழுதிய உரையுடன் சென்னை சைவ வித்தியாநுபாலன யந்திரசாலையில் 1915 இல் வெளியிடப்பெற்றது. இவருடைய பதிப்புப்பணியைப் பின் தொடர்ந்து சௌரிப் பெருமாள் அரங்கனார் குறுந்தொகையை அழகிய முறையில் பதிப்பித்து 1915 இல் வெளியிட்டார். 1918 இல் வெளியிட்ட பரிபாடலானது உ.வே. சாவின் முதற்பதிப்பாக வெளிவந்தது. ரா. இராகவையங்கார் (பதிப்பாசிரியர்) அவர்கள் அகநானூற்றினை முதற்பதிப்பாக 1920 இல் கம்பர்விலாசம் இராஜகோபாலய்யங்கார் மூலம் வெளியிட்டார்.

பத்துப்பாட்டின் பிறபதிப்புகள்

இதுகாறும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களுக்கு ஏராளமான பதிப்பு நூல்கள் தோன்றியுள்ளன. ஆய்வுப்பதிப்பு, மூலப்பதிப்பு, மலிவுப் பதிப்பு எனப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இனி ஒவ்வொரு பதிப்பாசிரியர்களுடைய நூல்களையும் தனித்தனியாகக் காணலாம். பொ.வே. சோமசுந்தரனார் அவர்கள் பத்துப்பாட்டினை இரு பகுதிகளாக வெளியிட்டுள்ளார். அவருடை. மறுபதிப்பு விவரம் வருமாறு: முதற்பதிப்பு 1956, 1962, 1966, 1968, 1971.

1961 ஆம் ஆண்டில் வை. மு. கோபால கிருஷ்ண மாசாரியாருடைய பத்துப்பாட்டுப் பதிப்பு வெளிவந்துள்ளது. மலிவுப்பதிப்பாக மர்ரே பதிப்பு 1957 இல் முதற்பதிப்பாகவும், 1981 இல் (என். சி. பி. எச் வெளியீடு) இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்துள்ளது.

திருமுருகாற்றுப்படை

பத்துப்பாட்டில் தனித்தனியாகவும் சில நூல்களை உரையாசிரியர்கள் வெளியிட்டுள்ளனர். திருமுருகாற்றுப் படையை வெளியிட்ட பல்வேறு உரையாசிரியர்களுடைய காலநிரல் வருமாறு:- 1902 இல் திருமுருகாற்றுப்படையினைத் திரு. சரவணப் பெருமாளையர் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டார். பின்னர் 1917 இல் முதற்பதிப்பாக வெளியிட்ட ஆறுமுக நாவலர் 1947 இல் 16 ஆம் பதிப்பாகவும் வெளியிட்டார். ‘திருமுருகாற்றுப்படை மூலமும் பரிமேலழகர் உரையும்’ என்ற தலைப்பில் 1924 இல் மகாதேவ செட்டியார் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டார். 1927 இல் ‘திருமுருகாற்றுப்படை சிற்றாராய்ச்சி’ என்ற பதிப்பு நூலினைத் திரு. எம். ஆறுமுகம்பிள்ளை அவர்கள் வெளியிட்டார். திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரையினை 1937 இல் பண்டிதர் சு. அருணம்பலம் அவர்கள் வெளியிட்டார். 1937 இல் ‘திருமுருகாற்றுப்படை மூலமும் பொருட்சுருக்கமும் பதவுரையும் குறிப்பும்’ என்ற தலைப்பில் தை.ஆ. கனகசபாபதி முதலியார் அவர்கள் பதிப்பித்தார். 1945 இல் வை.மு.கோ. பதிப்பும் வெளிவந்தது. ஏறத்தாழத் திருமுருகாற்றுப்படைக்கு மட்டும் பதினைந்து உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளனர்.

பொருநராற்றுப்படை

பொருநராற்றுப்படைக்கு இரு உரையாசிரியர் உரை எழுதியுள்ளனர். (மகாதேவ முதலியார், பொ.வே. சோமசுந்தரனார்)

சிறுபாணாற்றுப்படை

சிறுபாணாற்றுப்படைக்கு நான்கு உரையாசிரியர்கள் உரை எழுதிப் பதிப்பித்துள்ளனர். (வை.மு.கோ. வி. கந்தசாமி முதலியார், மு. பி. பாலசுப்பிரமணியன், பொ.வே. சோமசுந்தரனார்)

பெரும்பாணாற்றுப்படை

வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார், ரா. இராகவையங்கார், பொ.வே. சோமசுந்தரனார், சு. அருணம்பலம் முதலான உரையாசிரியப் பெருமக்களும் உரை எழுதிப் பதிப்பித்துள்ளனர்.

முல்லைப்பாட்டு

(1927) முல்லைப்பாட்டிற்கு மட்டும் உ.வே. சா அவர்கள் உரை எழுதியுள்ளார். 1903 இல் மறைமலையடிகள் அவர்களுடைய முதற்பதிப்பாக முல்லைப்பாட்டு வெளிவந்துள்ளது. தவிர, வை.மு. கோ. கனகசபாபதி முதலியார், க.ப. சந்தோஷம், பொ.வே. சோமசுந்தரனார் முதலானோர் எழுதிய உரைகளும் வெளிவந்துள்ளன.

மதுரைக் காஞ்சி

மதுரைக் காஞ்சிக்குப் பொ.வே. சோமசுந்தரனார் அவர்கள் எழுதிய உரை மட்டும் கழக வெளியீடாக வெளிவந்துள்ளது (முதற்பதிப்பு 1956).

நெடுநல்வாடை

நெடுநல்வாடைக்கு வை. மு. கோபாலகிருஷ்ண மாசாரியார் பதிப்பும் (1931) பொ. வே. சோமசுந்தரனார் அவர்கள் எழுதிய கழக வெளியீடும் வெளிவந்துள்ளன.

குறிஞ்சிப்பாட்டு

கழக வெளியீடான பொ.வே. சோமசுந்தரனார் உரை மட்டும் (1956) வந்துள்ளது.

பட்டினப்பாலை

பட்டினப்பாலைக்கு வை.மு. கோ (1933, 1938) உரையும், மறைமலையடிகள் எழுதிய கழக உரையும் (1956), ரா. இராகவையங்காரின் முதற்பதிப்பு 1951 இலும், சாமி சிதம்பரனாரின் முதற்பதிப்பு 1967 இலும், பொ.வே. சோமசுந்தரனார் உரை என இதுகாறும் ஐந்து உரையாசிரியர்களுடைய பதிப்புகள் வெளிவந்துள்ளன.

மலைபடுகடாம்

மலைபடுகடாத்திற்குச் சோமசுந்தரனார் உரை மட்டும் கழக வெளியீடாக வந்துள்ளது.

எட்டுத்தொகை நூல்களின் பிற பதிப்புகள் - நற்றிணை

பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரின் முதற்பதிப்புக்குப்பின் வெளிவந்த மறுபதிப்புகள் பற்றிய விவரம்.

முதற்பதிப்பு 1952 இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக (சென்னை) பின்னத்தூரார் வெளியிட்டார். அடுத்த பதிப்பினை 1956 இல் வெளியிட்டார். இவரே 'நற்றிணை நானூறு' என்ற பதிப்பு நூலினைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீட்டில் மூன்றாம் பதிப்பாக 1962 இல் வெளியிட்டார். இவருடைய பதிப்புக்குப்பின் 'நற்றிணை மூலம்' என்ற நூலினை எஸ். ராஜம் அவர்கள் (என். சி. பி. எச். வெளியீடு) மர்ரே பதிப்பாக 1957 இல் வெளியிட்டார். இப்பதிப்புக்குப்பின் இரண்டாம் பதிப்பாக 1981 இல் வெளிவந்தது. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் நற்றிணைப் பதிப்புகளை இரு பகுதிகளாக 1966 இல் அருணா பப்ளிகேஷன்ஸ் மூலம் சென்னையில் வெளியிட்டார். அடுத்து எளிய பதிப்புரையான புலியூர்க்கேசிகனின் 'நற்றிணை தெளிவுரை' (பாரிநிலையம், சென்னை) முதற்பதிப்பாக 1967 இல் வெளிவந்தது.

குறுந்தொகை

திரு. சௌரிப்பெருமாள் அரங்கனாரின் உரைக்குப்பின் எண்ணிலடங்கா உரையாசிரியர்களும் உரை எழுதியுள்ளனர். அடுத்து 1920 இல் கா.ரா. நமச்சிவாய முதலியார் பதிப்பு வெளிவந்தது. 1930 இல் முதற்பதிப்பாக இராமரத்தினம் ஐயர் பதிப்பும், 1933 இல் சோ. அருணாசல தேசிகரின் குறுந்தொகை மூலமும் வெளிவந்துள்ளன. உ.வே. சா அவர்கள். தமது முதிர்ந்த அனுபவத்தின் கனியாக 1937 இல் பதிப்பித்த குறுந்தொகைப் பதிப்பும் வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. மறுபதிப்பாக (ஆறாம் பதிப்பு) 1962 இல் வெளிவந்துள்ளது. பொ.வே. சோமசுந்தரனாரின் உரை, கழக வெளியீட்டில் முதற்பதிப்பாக 1955 இலும் அடுத்து 1965, 1972 இலும் வெளிவந்துள்ளது. 1957 இல் மர்ரே பதிப்பு என். சி. பி. எச் மூலம் வெளிவந்துள்ளது. 'குறுந்தொகைக் காட்சிகள் மூலமும் விளக்கமும்' என்ற நூலினை 1958 இல் சக்திதாசன்சுப்பிரமணியன் அவர்கள் வெளியிட்டுள்ளார். அதே ஆண்டில் (1958) மூன்றாம் பதிப்பாக ரா. இராகவையங்கார் அவர்கள் குறுந்தொகை விளக்கத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிட்டுள்ளார். இறுதியாக 1985 இல் மூன்று உரையாசிரியர்களுடைய உரைகளும் பல்கின. இப்பதிப்பு பற்றிய விவரத்தினையும், பதிப்பாசிரியர்களைப் பற்றியும் 'சங்க இலக்கியப் பட்டியல்' வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

ஐங்குறுநூறு

உ.வே. சாவின் முதற்பதிப்புக்குப்பின் இரண்டாம் பதிப்பாக 1920 இல் வெளிவந்தது. இவருடைய பதிப்புக்குப்பின் ஔவை.சு. துரைசாமிப் பிள்ளை அவர்களுடைய பதிப்பானது மூன்று தொகுதிகளாக 1957 இல் வெளிவந்தது. இம் மூன்று தொகுதிகளுக்கு முன் 1938 இல் ஐங்குறுநூற்றின் முதல் நூறு பாடல்கள் வெளிவந்துள்ளன. இறுதியில் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள் எல்லாவற்றையும் ஒருசேரத் தொகுத்து 1958 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிட்டுள்ளார். அடுத்து பொ.வே. சோமசுந்தரனாரின் கழக உரை 1961, 1966 ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ளது. மூலப்பதிப்புகளாக (என்.சி.பி.எச் வெளியீடு) 1957, 1981 இல் மர்ரே பதிப்பாக வெளிவந்துள்ளது. புலியூர்க்கேசிகனின் தெளிவுரையும் சில தொகுதிகளாக வெவ்வேறு ஆண்டுகளில் வெளிவந்துள்ளது.

பதிற்றுப்பத்து

உ.வே. சாவின் முதற்பதிப்புக்குப்பின் வந்த மறுபதிப்புகள் 1920, 1941, 1945, 1949, 1957 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளன. இவ்வுருடைய பதிப்பினை அடுத்து ஔவை.சு. துரைசாமிப்பிள்ளை அவர்களுடைய பதிப்புகள் 1950, 1955, 1958, 1963, 1968 இல் வெளிவந்துள்ளன. உரையின்றி மூலப் பதிப்பாக 1957, 1981 இல் மர்ரே பதிப்பகத்தார் என்.சி.பி.எச் வெளியீடாக வெளியிட்டுள்ளனர். பழைய உரை குறிப்புரையாக பதிற்றுப்பத்துக்கு யாழ்ப்பாணம் பண்டிதர் சு. அருணம்பலவனார் வகுத்த ஆராய்ச்சியுரையுடன் அமைந்த பதிப்பு 1960 இல் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பெற்றது. அடுத்து இவரே இரண்டாம் பாகமாக 1963 இல் வெளியிட்டுள்ளார். புலியூர்க்கேசிகனின் தெளிவுரையும் 1974 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

பரிபாடல்

டாக்டர் உ.வே. சாவின் மறுபதிப்பு 1935 இலும் வெளிவந்துள்ளது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக (1957, 1964, 1969) பொ.வே. சோமசுந்தரனார் உரை வெளிவந்துள்ளது. 1971 இல் புலியூர்க்கேசிகனின் தெளிவுரையைச் சென்னைப் பாரிநிலையத்தார் வெளியிட்டுள்ளனர். அடுத்து 'மர்ரே பதிப்பு' 1957, 1981 இல் வெளிவந்துள்ளது.

கலித்தொகை

எட்டுத்தொகை நூல் வரிசைகளுள் முதன்முதல் பதிக்கப் பெற்ற நூல் கலித்தொகையேயாகும். சி.வை. தமோதரனார் அவர்களுடைய பதிப்பில் நச்சினார்க்கினியர் உரையும் உள்ளது. இவருடைய பதிப்பினைக் தொடர்ந்து இ.வை. அனந்தராமையரவருடைய பதிப்பு (1925) மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளது. முதல் தொகுதியில் பாலைக்கலியும் குறிஞ்சிக்கலியும் (1925) இரண்டாம் தொகுதியில் மருதக்கலியும் முல்லைக்கலியும் (1925) என இரு தொகுதிகளாக வெளியிட்டார். நெய்தற்கலியை மட்டும் 1931 இல் தனியாகப் பதிப்பித்து வெளியிட்ட இவர் 1930 இல் மூலத்தையும் பதிப்பித்துள்ளார். இவருடைய பதிப்பினை முழுமையாகத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தார் 1984 இல் வெளியிட்டுள்ளனர். இவருடைய பதிப்பில் மூலமும் உரையும் காணப்படுகின்றன. மேலும் ஐயரவர்கள் பல்கிய மேற்கோள்களை அடிக்குறிப்பாகக்

காட்டியுள்ளார். இவ்வடிக்குறிப்புகள் புலவர்க்கு விருந்தாகவும், பயில்வோர்க்கும் ஆய்வறிஞர்க்கும் கைவிளக்காகவும் அமைந்துள்ளன. காழி சிவ. கண்ணுசாமி, தமிழ்மலை இளவழகனாரின் முதற்பதிப்பு 1938 இல் பாகனேரி காசி விசுவநாதன் செட்டியார் வெளியீடாக வெளிவந்துள்ளது. இவருடைய மறுபதிப்புகள் பின்வரும் ஆண்டுகளில் வெளிவந்துள்ளன. 1943, 1949, 1955, 1958, 1962, 1967. 1937 இல் கை.ஆ.கனகசபாபதி முதலியார் அவர்கள் பர்லைக்கலியினை வெளியிட்டுள்ளார். 1958 இல் 'கலித்தொகை மூலமும் விளக்கமும்' என்ற உரையினைத் திரு. சக்திதாசன் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். பின்னர் மலிவுப்பதிப்புகளும் வெளி வந்துள்ளன. சைவசித்தாந்தக் கழக வெளியீட்டில் பொ.வே. சோமசுந்தரனாரின் உரை 1969, 1970 இலும் வெளிவந்துள்ளது.

அகநானூறு

ரா. இராகவையங்கார் அவர்கள் அகநானூற்றினைப் பதிப்பிக்க வேண்டுமென்ற அவாவுடன், பழைய ஏடுகளைப் பரிசோதித்து மயிலாப்பூர்க் கம்பர் விலாசம், இராஜகோபாலய்யங்கார் மூலம் மூலத்தை மட்டும் பதிப்பித்து வெளியிட்டார். இவர் பின்னர் 1923, 1933 ஆம் 'ஆண்டுகளில் உரையுடன் மயிலைக் கம்பர் விலாசம் இராஜகோபாலய்யங்கார் மூலம் பதிப்பித்தார். அகநானூற்றின் ஒரு கூறாகிய களிற்றியானைநிரையை உரையுடன் 1926 இல் பதிப்பித்தார். இவருடைய பதிப்பிற்குப்பின் உரையாசிரியர்களாகிய ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம்பிள்ளை ஆகிய இருவரும் அகநானூற்றினை களிற்றியானை நிரை (1943), மணிமிடைபவளம், நித்திலக்கோவை (1944) எனும் ஒவ்வொன்றையும் தனித்தனியாகத் தமிழ் வெளியீட்டுக் கழகம் மூலம் பதிப்பித்துள்ளனர். கடைசியாகப் புலியூர்க் கேசிகனின் எளிய தெளிவுரையும் மூன்று தொகுதிகளாக வெவ்வேறு ஆண்டுகளில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அவற்றின் பதிப்பு விவரம் வருமாறு:

1. அகநானூறு - களிற்றியானைநிரை தெளிவுரை - 1960, 1963, 1971
2. அகநானூறு - மணிமிடைபவளம் தெளிவுரை - 1960, 1964, 1970
3. அகநானூறு - நித்திலக்கோவை - 1962, 1970
(இவை மூன்றும் சென்னைப் பாரி நிலையத்தாரின் வெளியீடுகளாகும்.)

புறநானூறு

உ.வே. சா அவர்களுடைய புறநானூற்றின் மறுபதிப்புகள் வருமாறு: 1923, 1935, 1950, 1956, 1963, 1971. புறநானூற்றினை உரையுடன் வழங்கிய இவர் 1936 இல் மூலம் மட்டும் வெளியிட்டுள்ளார். ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் புறநானூற்றினை இருபகுதிகளாக 1947 இல் பதிப்பித்துள்ளார். இவருடைய மறுபதிப்பு 1952 இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக நூலாக வெளிவந்துள்ளது. பொ.வே. சோமசுந்தரனாரின் கழக உரை 1955 இலும், புலியூர் கேசிகனின் எளிய உரை 1958, 1959 இலும், மர்ரே பதிப்பாக 1958, 1981 ஆண்டுகளிலும் வெளிவந்துள்ளது.

இதுகாறும் சங்க இலக்கியத்துக்கு எழுந்த பல்வேறு பதிப்புகளைப் பார்த்தோம். பதிப்பாசிரியர் அனைவருடைய பதிப்பு நெறிகளையும் தொகுத்து ஆராயும் போது பழம்பதிப்புகளின் கூறுகளை உணர முடியும். விரிவஞ்சியும், காலச் சுருக்கத்தைக் கருதியும் இங்கு ஒரு சில பதிப்பாசிரியர்களுடைய நெறிமுறைகள் ஆராயப் பெறுகின்றன. நற்றிணையின் பதிப்புகள் குறித்து ஆராய்ந்து வரும் த.கோ. ப அவர்கள் நற்றிணையில் அமைந்துள்ள பதிப்பு நெறிகளாகப் பின்வரும் 11 நெறிகளைக் குறிப்பிடுவர்.

1. தலைப்பு : பாட்டு எண், திணை - கூற்று.
2. மூலம் :
3. ஆசிரியர் பெயர் :
4. பழங்குறிப்பு : *———————* ஆசிரியர் பெயர்
5. பொருள்கோள்முறை :
6. மரபு தழுவிய பொழிப்புரை :
7. கருத்துரை :
8. அருஞ்சொற்பொருள் :
9. சிறப்புக்குறிப்பு : இறைச்சி, உள்ளுறை, பாடத் தேர்வுக் குறிப்புகள்.
10. மேற்கோளாட்சி :
11. ஒப்புமை :

நற்றிணை

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் (1915) அவர்கள் எட்டுத்தொகை நூல்களுள் குறுந்தொகை, நற்றிணை உரை, அகநானூறு போன்ற நூல்களை வெளிப்படுத்த வேண்டுமென்று பெருமுயற்சி எடுத்தார். ஆனால் நற்றிணை ஒன்றுதான் அவரால்

பதிப்பிக்க முடிந்தது. பதிப்பிக்கும் பொழுது பல தமிழறிஞர்களுடைய உதவியும் நாடினார். அவருக்குக் கிடைத்த ஏட்டுப் பிரதிகளில் 234 ஆவது பாடலும், 385 ஆவது பாடலின் பின்குறிப்பும் அவருக்குக் கிடைக்கவில்லை.

குறுந்தொகை

சௌரிப் பெருமாளரங்கன் (1915) குறுந்தொகையைப் பதிப்பிக்கும் பொழுது, தமக்குத் துணையாக அருந்தொகையுதவிய பெருஞ்செல்வர்கள் பற்றித் தம் நூலின் கண் 'உதவியுரைத்தல்' என்னும் தலைப்பின்கீழ் மிக விரிவாகக் கூறியுள்ளார். இந்நூலுள் பல மாறுபாடுகளும் செய்துள்ளார். அவற்றையெல்லாம் 'எஞ்சியவைகளும் பிறவும்' என்னும் தலைப்பின்கீழ்த் தெரிவித்துள்ளார். அவற்றுள் இடக்கர்ச் சொல்லாகிய குஃறொடரன் மொழி இந்நூலில் ஒன்பது இடங்களில் வருவதைக் குறிப்பிட்டு அவற்றை நீக்கி வேறு பாடங்களில் பதிப்பித்துள்ளார்.

முதற்பதிப்பாக விளங்கும் இவருடைய பதிப்பிலும் குறுந்தொகைப் பாடல்கள், இறையனார் அகப்பொருள் உரையிலும், தொல்காப்பியப் பொருளதிகார உரையிலும் எங்கெல்லாம் மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளன என்கின்ற விரிவான பட்டியலையும், பதிப்பாசிரியர் தொகுத்துத் தருவது பிற்கால ஆய்வாளருக்கும் பெரும்பயனாய் அமைகின்றது. டாக்டர் உ.வே. சா பதிப்புகளுக்கு முன்னரே சிறந்த பதிப்புக்குரிய சிறப்புகள் பலவற்றை இப்பதிப்பு பெற்று விளங்குவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

உ.வே. சா

பொதுவாக உ.வே. சா அவர்கள் விசேட உரையில் அரிய சொற்களுக்குப் பொருள்விளக்கம் தருதல், உரையாசிரியர் தரும் பொருள் விளக்கங்களை எடுத்துரைத்தல், பதவுரையில் விளக்கம் பெறாத செய்யுள் விகாரங்களை எடுத்துரைத்தல், உவமைகள், அடைகள், பிரதிபேதங்கள் முதலானவற்றை விசேட உரையில் எடுத்துரைத்துள்ளார். அவர் விசேட உரையில் கையாண்ட ஒரு சிலவற்றை மட்டும் இங்குக் காண்போம்.

சான்றாக 'கருவி மாமழை' (குறுந். 42) என்ற தொடரில் அமையும் 'கருவி' என்ற சொல்லிற்குத் 'தொகுதி' என்ற பொருள் பதவுரையில் தரப் பெற்றுள்ளது. இத்தொடரை விசேடவுரையில் குறிப்பிடும்போது (கருவிமாமழை) மின், இடி முதலாகிய

தொகுதியை உடைய பெரிய மழை என்று விளக்குகிறார். இது புறநானூற்று உரையை (159 : 19) ஒட்டி அமைந்தது.

கெட்டிடத்து- கெட்டஇடம் கெட்டிடமாயிற்று-: தொகுத்தல் விகாரம் (குறுந் வி.ரை) பக்: 97[1]

பாடபேதம்

'பலர்புகு வாயிலடைப்பக் கடவுநர்' குறுந் (118-3 அடி) அடையக் கடவுநர் (பி.பேதம்) எனப் பிரதி பேதமாக வருவதையும் விசேடவுரையில் சுட்டிக் காட்டியுள்ளார். வாயில் அடையக்கடவுநர் என்பது பாடமாயின் வாயிலின்கண் உள்ளாரை ஒருவர் விடாமல் முற்றவும் ஆராய்வாராய் "வருபவர்கள் உளீரோ" என்று கேட்பவும் தலைவர் வந்திலரென்று பொருள் கொள்க" என்று உரைத்துள்ளார். (பக். 240)[2]

உ.வே. சாவின் முதற் பதிப்பில் இடம் பெற்றுப் பிற்பதிப்பில் இடம் பெறாதவை:

குறுந் 129. மாக்கடல் நடுவன் 'எலுவசிறாஅர்' எனும்பாடல் முழுவதும் 'தலைவன் பாங்கற்குரைத்தது' கோப்பெருஞ்சோழன் பாடியது. (பக். 258)[3]

ஐங்குறுநூறு

உ.வே. சாவின் மறுபதிப்பு 1920 இல் வெளிவந்தது. முதற்பதிப்புக்கும் இரண்டாம் பதிப்பிற்கும் ஒரு சில வேறுபாடுகள்தான் காணப்படுகின்றன. பதிப்புப் பற்றிய செய்திகளை உ.வே. சா அவர்கள் நூலின் முகவுரையிலே அழகுற எடுத்துரைப்பதைக் காணலாம். பழைய கையெழுத்துப் பிரதிகளில் அறிந்த பிரதி பேதங்களும், அரும்பதவகராதியில் பழைய நூலாராய்ச்சிக்கு இன்றியமையாத சில குறிப்புகளும் இப்பதிப்பிற் சேர்க்கப் பெற்றுள்ளன. "சில சில இடத்து மூலம் மட்டும் தனியேயுள்ள பிரதிகளின் பாடம் வேறாகவும் இந்நூற் பழைய உரையாசிரியர் கொண்ட பாடம் வேறாகவும், மேற்கோளாக எடுத்துக் காட்டியிருக்கும் நச்சினார்க்கினியார் முதலியோர் கொண்ட பாடம் வேறாகவும், அவ்வப் பிரதிகளிற் காணப்பட்டன. அவற்றையெல்லாம் ஒருங்கே தொகுத்துப் பிரதிபேதமாக அவ்வப்

---

1. உ.வே. சாமிநாதையர், குறுந்தொகை, பக் 97.

2. ,, ,, பக். 240

3. ,, ,, பக். 258

பக்கங்களின் இறுதியிற் பதிப்பிக்கப்பட்டுள்ளன. பிரதிகளிலுள்ளவாறே பதிப்பித்தமையால், அவற்றுட் சில பாட பேதங்களுக்குப் பொருள்கள் புலப்படவில்லை"[4]

ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பாகிய இவருடைய பதிப்பில் ஒவ்வொரு திணைக்குரிய ஆசிரியர் வரலாறும், சிறப்பிடம் பெற்ற கருப்பொருள்களைப் பற்றிய உலகியல் விஞ்ஞானம், தத்துவம் முதலிய கூறுகளோடு விரவிய ஆராய்ச்சியும் ஆங்காங்கு இந்நூலின்கண் சேர்த்துள்ளார். மேலும் அவ்வப் பாடல்களின் கீழ் பழைய உரை, உள்ளுறை உவமம், பாடவேறுபாடு என முறையாக அமைத்துள்ளார். எடுத்தாண்ட மேற்கோள் செய்யுளின் விவரத்தைப் பற்றி அந்தந்தப் பக்கத்தின் கீழே குறித்துக் காட்டியுள்ளார். உ.வே. சா அவர்கள் சுட்டிக்காட்டிய பாட வேறுபாட்டினையே தம் நூலிலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மொத்தத்தில் உ.வே. சா பதிப்பிற்குப் பின் ஔவை.சு. துரைசாமிப்பிள்ளை அவர்களுடைய பதிப்பானது செம்மைப் பதிப்பாகவும், திருத்திய பதிப்பாகவும் காணப்படுகிறது. மேலும் சங்க இலக்கியத்தை ஆராய விழைவோருக்கு இவருடைய பதிப்பு ஒரு கைவிளக்காக அமையும். உ.வே. சா அவர்களுடைய பதிப்பில் 490 ஆம் பாடலில் விடுபட்ட இரண்டு மூன்று வரிகள் யாவும் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்களுடைய பதிப்பிலும், கழக வெளியீட்டிலும் முழுமை பெற்றுள்ளன.

கழக வெளியீடு :- பொ. வே. சோமசுந்தரனார்.

இவருடைய பதிப்பு முறையை நோக்கும் போது துறைகளுக்குச் சிறந்த விளக்கமும், பழைய உரையின் கீழ்த் தெளிவான சொற்பொருளும், இவற்றை விளக்கும் விரிந்த விளக்கவுரையும், இலக்கணக் குறிப்புகளும் காணலாம்.

---

4. ,, ஐங்குறுநூறு, பக். 5

பாடவேறுபாடு

பாடல் வரி	உ.வே. சா. பதிப்பு	கழகப்பதிப்பு
36:5	பயலை	பசலை
37:2	பயந்து	பசந்து
38:2	தன்சொ லுணர்ந்தோர்	தன் சொல் லுணர்ந்தோர்
70:5	பேஎ, யனையமியாஞ்சேய் பயந்தனமே. (பா.பே) பே எயனை யம்யாஞ்சே பயந்தனை சென்மே	பேஎயனையமியாஞ்சேய் பயந்தனமே. (பா.பே) பே எயனையம் யாஞ்சேய் பயந்தனைசென்மே
68:1	கணைக்காலாம்ப	கணைக்காலாம்பல்
83	வரைந்த அணுமைக் கண்ணே	வரைந்தணிமைக் கண்ணே.
85:3	ழுரநி (பா.பே) ஊரநின்	— — — — (பா.பே) ழுரநின்
90:2	மாண்குண	மாண்குணம்
93:1	நல்லேற்றினமேயல் நல்லேறினமேயல் (பா.பே)	நல்லேறின்மேயல்.
96:1	அணிநடையெருமை அணிநிறவெருமை	— — — — அணிநிறவெருமை
97:4	பொய்கைப்பூவினு	பொய்கைப் பூவினும்

எண்	நூற் பெயர்	பதிப்பாசிரியர்	வெளியீட்டகம்/பதிப்பகம்/அச்சகம்/பதிப்பு/ஆண்டு
	நற்றிணை		
1.	நற்றிணை உரையுடன்	பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர்	பின்னத்தூர். அ.நாராயணசாமி ஐயர்,I,1915.
2	நற்றிணை உரையுடன்	பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர்.	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, I, 1952,II,1956
3.	நற்றிணை நானூறு	பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, III, 1962
4.	நற்றிணை	பொ.வே.சோமசுந்தரனார் ஆய்வுரை	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுபதிப்பு,IV, 1967
5.	நற்றிணை (இருபகுதிகள்)	ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை	அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1966
6.	நற்றிணை மூலம்	எஸ்.ராஜம்	மர்ரே ஆண்டு கம்பெனி, சென்னை, I,1957; II 1981
7.	நற்றிணை தெளிவுரை	புலியூர்க்கேசிகன்	பாரி நிலையம்,சென்னை,I,1967
	குறுந்தொகை		
1.	குறுந்தொகை	சௌரிப் பெருமாளரங்கன்	வித்தியாரத்திநாகரம் பிரஸ்,I,1915
2.	குறுந்தொகை	கா.ரா.நமச்சிவாய முதலியார்	குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ்,I,1920

3.	குறுந்தொகை	இராமரத்தின ஐயர்	கலாநிலையம், புரசவாக்கம், I, 1930
4.	குறுந்தொகை மூலம்	சோ. அருணாசல தேசிகர்	சோ. அருணாசல தேசிகர், 1933
5.	குறுந்தொகை உரையுடன்	மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர்	டாக்டர் சாமிநாதையர், I; 1937, II; 1947, IV 1962
6.	குறுந்தொகை உரையுடன்	பொ. வே. சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, I, 1955, மறுபதிப்பு, 1965, 1972
7.	குறுந்தொகை மூலம்	எஸ்.ராஜம்	மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, I, 1957, II 1981
8.	குறுந்தொகை விளக்கம்	ரா. இராகவையங்கார்	அண்ணாமலைப்பல்கலைக் கழகம், III 1958
9.	குறுந்தொகை தெளிவுரை	புலியூர்க்கேசிகன்	பாரிநிலையம், சென்னை, I 1965
10.	எளிய சொற்களில் இனிய குறுந்தொகை	மு.ரா. பெருமாள் முதலியார்	பழனியப்பா பிரதர்ஸ், II, 1970
11.	குறுந்தொகை மூலமும் உரையும்	மு. சண்முகம்பிள்ளை	தமிழ்ப்பல்கலைக் கழகம், I 1985
12.	குறுந்தொகைப் பெருஞ் செல்வம்	சாமி சிதம்பரனார்	இலக்கியநிலையம், சௌராஷ்டிரா நகர், சென்னை, I 1985
13.	குறுந்தொகைக்காட்சிகள் மூலமும் விளக்கமும்	சக்திதாசன் சுப்பிரமணியன்	தமிழகம், சென்னை, I, 1958

ஐங்குறுநூறு

1.	ஐங்குறுநூறு	மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர்	டாக்டர் சாமிநாதையர், I, 1903, II, 1920, III, 1944
2.	ஐங்குறுநூறு முதலாவது நூறு	ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை	கா.கோவிந்தன், திருவத்திபுரம் 1938
3.	முதல் தொகுதி	ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை	அண்ணாமலைப்பல்கலைக் கழகம், சிதம்பரம் 1957
4.	இரண்டாம் தொகுதி	ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை	அண்ணாமலைப்பல்கலைக் கழகம், சிதம்பரம் 1957
5.	மூன்றாம் தொகுதி	ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை	அண்ணாமலைப்பல்கலைக் கழகம், சிதம்பரம் 1957
6.	நான்காம் தொகுதி	ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை	அண்ணாமலைப்பல்கலைக் கழகம், சிதம்பரம் 1958
7.	ஐங்குறுநூறு உரையுடன்	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1961 மறுபதிப்பு 1966
8.	ஐங்குறுநூறு	எஸ்.ராஜம்	மர்ரே அண்டு கம்பெனி, சென்னை I 1957 II 1981

பதிற்றுப்பத்து

1.	பதிற்றுப்பத்து பழைய உரையுடன்	மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர்	டாக்டர் சாமிநாதையர் I 1904
	பதிற்றுப்பத்து பழைய உரையுடன்	மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர்	டாக்டர் சாமிநாதையர் II 1920, III 1941 IV 1945 V 1949 VI 1957
2.	பதிற்றுப்பத்து மூலமும் விளக்க உரையும்	ஒளவை. சு.துரைசாமிப்பிள்ளை	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை I 1950 மறுபதிப்பு 1955 1958 1963 1968
3.	பதிற்றுப்பத்து மூலம்	எஸ்.ராஜம்	மர்ரே அண்டு கம்பெனி சென்னை I 1957 II 1981
4.	பதிற்றுப்பத்து ஆராய்ச்சி உரை	பண்டிதர் சு.அருளம்பலம்	யாழ்ப்பாணத்துக் காரைநகர் அ.சிவானந்தநாதன் வெளியீடு I 1960
5.	பதிற்றுப்பத்து ஆராய்ச்சி உரை இரண்டாம் பாகம்	பண்டிதர் சு.அருளம்பலம்	யாழ்ப்பாணத்துக் காரைநகர் அ.சிவானந்தநாதன் வெளியீடு 1963
6.	பதிற்றுப்பத்து	புலியூர்க்கேசிகன்	பாரிநிலையம், சென்னை I 1974

பரிபாடல்

1.	பரிபாடல் பரிமேலழகர் உரையுடன்	மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர்	டாக்டர் சாமிநாதையர் I 1918 மறுபதிப்பு 1935 IV 1956
2.	பரிபாடல் மூலமும் உரையும்	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை I 1957 மறுபதிப்பு 1964 1969
3.	பரிபாடல் மூலம்	எஸ்.ராஜம்	மர்ரே அண்டு கம்பெனி சென்னை I 1957 II 1981
4.	பரிபாடல் தெளிவுரை	புலியூர்க்கேசிகன்	பாரிநிலையம் சென்னை I 1971

கலித்தொகை

1.	கலித்தொகை (உரையுடன்)	ராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை	ராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை I 1887
2.	கலித்தொகை (இருதொகுதி)		
	1.பாலைக்கலி, குறிஞ்சிக்கலி	இ.வை. அனந்தராமையர்	இ.வை.அனந்தராமையர் I 1925
	மருதக்கலி, முல்லைக்கலி	இ.வை. அனந்தராமையர்	இ.வை.அனந்தராமையர் I 1925
3.	மருதக்கலி। நெய்தற்கலி	இ.வை. அனந்தராமையர்	இ.வை.அனந்தராமையர் 1931
4.	கலித்தொகை மூலம்	இ.வை. அனந்தராமையர்	இ.வை.அனந்தராமையர் I 1930
5.	கலித்தொகை உரையுடன்	காழி.சிவ.கண்ணுசாமி, தமிழ்மலை இளவழகனார்	காசி.விசுவநாதன் செட்டியார் பாகனேரி I 1938 மறுபதிப்பு 1943 III 1949 IV 1955 V 1958 VI 1962 VII 1967
6.	பாலைக்கலி	தை.ஆ.கனகசபாபதி முதலியார்	பன்னூற் கழகம், குயப்பேட்டை சென்னை 1937
7.	கலித்தொகை மூலமும் விளக்கமும்	சக்திதாசன் சுப்பிரமணியன்	ரமா பப்ளிகேஷன்ஸ், சென்னை 1958
	கலித்தொகை	டாக்டர் மா.இராசமாணிக்கனார்	வள்ளுவர் பண்ணை 1958

9.	கலித்தொகை மூலம்	எஸ்.ராஜம்	மர்ரே அண்டு கம்பெனி சென்னை I 1957 II 1981
10.	கலித்தொகை விளக்கவுரை	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை I 1969 II 1970
11.	கலித்தொகை தெளிவுரை	புலியூர்க்கேசிகன்	தேனருவிப் பதிப்பகம் சென்னை I 1958 II 1965
	கலித்தொகை தெளிவுரை	புலியூர்க்கேசிகன்	பாரிநிலையம் III 1971
12.	கலித்தொகை (முழுமையுடன்) மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	இ.வை. அனந்தராமையர்	தமிழ்ப்பல்கலைக் கழகம் தஞ்சாவூர் மறுபதிப்பு 1984

அகநானூறு

1.	அகநானூறு	சேதுஸமஸ்தானம் மகாவித்துவான் பாஷா கவிசேகரர் ரா.இராகவையங்கார்	கம்பர்விலாசம் இராஜகோபாலய்யங்கார் I 1920 II 1923 III 1933
2.	அகநானூறு - களிற்றி யானை நிரை	கம்பர்விலாசம் இராஜகோபாலய்யங்கார்	கம்பர்விலாசம் இராஜகோபாலய்யங்கார் 1926
3.	அகநானூறு - களிற்றி யானைநிரை	உரையாசிரியர்: ந.மு.வெங்கடசாமி நாட்டார் கரந்தைக் கவியரசு வேங்கடாசலம்பிள்ளை	தமிழ் வெளியீட்டுக்கழகம், I 1943

4.	அகநானூறு - மணிமிடை பவளம்	உரையாசிரியர்: ந.மு.வெங்கடசாமி நாட்டார் கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை	தமிழ் வெளியீட்டுக்கழகம், I 1944 மறுபதிப்பு 1959 V 1964
5.	அகநானூறு - நித்திலக் கோவை	உரையாசிரியர்: ந.மு.வெங்கடசாமி நாட்டார் கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை.	தமிழ் வெளியீட்டுக்கழகம், I 1944 V 1963
6.	அகநானூறு மூலம்	எஸ்.ராஜம்	மர்ரே அண்டு கம்பெனி சென்னை I 1958 II 1981
7.	அகநானூறு களிற்றியானை தெளிவுரை	புலியூர்க்கேசிகன்	பாரிநிலையம் சென்னை I 1960 II 1963 III 1971
8.	அகநானூறு-மணிமிடை பவளம்	புலியூர்க்கேசிகன்	பாரிநிலையம் சென்னை I 1960 II 1964 III 1970
9.	அகநானூறு-நித்திலக் கோவை	புலியூர்க்கேசிகன்	பாரிநிலையம் சென்னை I 1961 II 1970
10.	அகநானூறு உரையுடன்	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை I 1970
11.	அகநானூறு-களிற்றி யானை 1-50	பொ.வெ. சோம சுந்தரனர்ர்	கைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை I 1966
12.	அகநானூறு 121 - 300	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை I 1970

புறநானூறு

1.	புறநானூறு பழைய உரையுடன்	மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர்	டாக்டர் சாமிநாதையர் I 1894 II 1923 III 1935 IV 1950 V 1956
	புறநானூறு பழைய உரையுடன்	மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர்	டாக்டர் சாமிநாதையர் VI 1963 VII 1971
2.	புறநானூறு உரையுடன் (இருபகுதி) 1 - 200	ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் I 1947, மறுபதிப்பு 1952 1967
3.	புறநானூறு உரையுடன் (இருபகுதி) 201-400	ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை 1962
4.	புறநானூறு மூலம்	டாக்டர் உ.வே.சா.	டாக்டர் உ.வே.சாமிநாதையர் I 1936
5.	புறநானூறு	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை-1955
6.	புறநானூறு மூலம்	எஸ்.ராஜம்	மர்ரே அண்டு கம்பெனி I 1958 II 1981
7.	புறநானூறு-தெளிவுரை	புலியூர்க்கேசிகன்	கேசிகன் பதிப்பகம் சென்னை I 1958 மறுபதிப்பு 1950

பத்துப்பாட்டு (முழுவதும்)

1.	பத்துப்பாட்டு (முழுமையுடன்) நச்சினார்க்கினியர் உரையுடன்	டாக்டர் உ.வே.சாமிநாதையர்	டாக்டர் உ.வே.சா. I 1889 II 1918 III 1931 1958
2.	பத்துப்பாட்டு மூலம்	டாக்டர் உ.வே.சாமிநாதையர்	டாக்டர் உ.வே.சா. I 1931

3.	பத்துப்பாட்டு உரையுடன் (இருபகுதி)	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை I 1966 மறுபதிப்பு 1962 1966 1968 1971
4.	பத்துப்பாட்டு உரையுடன்	வை.மு.கோபாலகிருஷ்ணமா மாசாரியார்	வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார் கம்பெனி சென்னை-5. 1961
5.	பத்துப்பாட்டு மூலம்	எஸ்.ராஜம்	மர்ரே அண்டு கம்பெனி I 1957 II 1981
6.	Pathuppattu Ten Tamil Idylls	T.V. Chelliah	S.S.W.P.S. Madras (கழகம்) I 1946 II 1962

திருமுருகாற்றுப்படை

1.	திருமுருகாற்றுப்படை	சு.அருளம்பலவனார்	யாழ்ப்பாணம் 1937
2.	திருமுருகாற்றுப்படை	ஆறுமுகநாவலர்	விக்டோரியா அச்சுக்கூடம் 1917 மறுபதிப்பு 1947
3.	திருமுருகாற்றுப்படை மூலம்	அ.மகாதேவ செட்டியார்	ஸ்ரீசாது இரத்தினசற்குரு புஸ்தகசாலை சென்னை 1924
4.	திருமுருகாற்றுப்படை மூலமும் பொருட்சுருக்கமும் பதவுரையும் குறிப்பும்	தை.ஆ.கனகசபாபதி முதலியார்	கே.பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி சென்னை I 1937
5.	திருமுருகாற்றுப்படை	சரவணப்பெருமாளையர்	விக்டோரியா அச்சுக்கூடம் சென்னை 1902
6.	திருமுருகாற்றுப்படை	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை I 1955

7.	திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும்	எஸ்.வையாபுரிப்பிள்ளை	சைவசித்தாந்த மகாசமாஜம் சென்னை IV 1946
8.	திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியிரையுடன்	வை.மு.கோபாலகிருஷ்ணமாச சாரியார்	ஆனந்த பார்வதி அச்சகம் சென்னை 1951
9.	திருமுருகாற்றுப்படை உரைக்கொத்து	தொகுப்பு கே.எம்.வேங்கடராமையா	திருப்பனந்தாள் காசியடம் I 1959
10.	திருமுருகாற்றுப்படை சிற்றாராய்ச்சி	எம்.ஆறுமுகம்பிள்ளை	1927
11.	திருமுருகாற்றுப்படை (வழிகாட்டி)	கி.வா.ஜகந்நாதன்	அல்லயன்ஸ் கம்பெனி சென்னை 1947
12.	திருமுருகாற்றுப்படை	சுப்பராய முதலியார்	பாரதி விலாச அச்சுக்கூடம்,பரிதாபி
13.	திருமுருகாற்றுப்படை	மு.ரா.சாமி	மூவர் பதிப்பகம் காரைக்குடி 1966
14:	திருமுருகாற்றுப்படை மூலமும் தெளிவுரையும்	இரா.இராதாகிருஷ்ணன்	வள்ளலார் ஞானசபை, புதுக்கோட்டை I N.D
15.	உதயசூரியன்	புலியூர்க்கேசிகன்	மல்லிகைப்பதிப்பகம்,தியாகராயநகர்,சென்னை,I 1960
16.	திருமுருகாற்றுப்படை விளக்கம்	கி.வா.ஜகந்நாதன்	அமுத நிலையம்,சென்னை,1970

பொருநராற்றுப்படை

1.	பொருநராற்றுப்படை	மகாதேவ முதலியார்	லோகநாதன் & பிரதர்ஸ் I 1907

2.	பொருநராற்றுப்படை	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை I 1955

சிறுபாணாற்றுப்படை

1.	சிறுபாணாற்றுப்படை விளக்கம்	வி.கந்தசுவாமி முதலியார்	ஒற்றுமை ஆபீஸ், சென்னை 1947
2.	சிறுபாணாற்றுப்படை விளக்கம்	வை.மு.கோபாலகிருஷ்ண மாசாரியார்	வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார் 1932
3.	சிறுபாணாற்றுப்படை விளக்கம்	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை I 1955
4.	சிறுபாணாற்றுப்படை விளக்கம்	மு.பி.பாலசுப்பிரமணியன்	முத்துநிலையம், அய்யாபுரம், நெல்லை I 1964

பெரும்பாணாற்றுப்படை

1.	பெரும்பாணாற்றுப்படை	வை.மு.கோபாலகிருஷ்ணமாச சாரியார்	வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார்
2.	பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சி	ரா.இராகவையங்கார்	அண்ணாமலைப்பல்கலைக்கழகம் சிதம்பரம் I 1949
3.	பெரும்பாணாற்றுப்படை	அருளம்பலம்	யாழ்ப்பாணம் 1937
4.	பெரும்பாணாற்றுப்படை	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை I 1955

முல்லைப்பாட்டு

1.	முல்லைப்பாட்டு	மறைமலையடிகள்	மறைமலையடிகள் பல்லாவரம் I 1903 IV 1931
2.	முல்லைப்பாட்டு மூலமும் உரையும்	உ.வே.சா.	கேசரி அச்சுக்கூடம் I 1927
3.	முல்லைப்பாட்டு	வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார்	வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார் I 1929
4.	முல்லைப்பாட்டு நச்சினார்க்கினியர் உரையுடன்	க.ப.சந்தோஷம் நடராஜபிள்ளை	சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் சென்னை I 1930 மறுபதிப்பு 1947
5.	முல்லைப்பாட்டு	இளவழகனார்	இளவழகனார், வாலாஜாபேட்டை 1939
6.	முல்லைப்பாட்டு மூலமும் பொருட்சுருக்கமும்	தை.ஆ.கனகசபாபதி முதலியார்	தை.ஆ.கனகசபாபதி முதலியார் 1943
7.	முல்லைப்பாட்டு மதுரைக்காஞ்சி	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை I 1955

மதுரைக்காஞ்சி

1.	மதுரைக்காஞ்சி	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம் சென்னை I 1956

நெடுநல்வாடை

1.	நெடுநல்வாடை	வை.மு.கோபால கிருஷ்ணமாசாரியார்	வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார் 1931
2.	நெடுநல்வாடை	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் I 1956

குறிஞ்சிப்பாட்டு

1.	குறிஞ்சிப்பாட்டு	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் I 1956

பட்டினப்பாலை

1.	பட்டினப்பாலை ஆராய்ச்சி	மறைமலையடிகள்	சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் சென்னை I 1906 II 1919 மறுபதிப்பு - 1930 1956 1957
2.	பட்டினப்பாலை	வை.மு.கோபாலகிருஷ்ண மாசாரியார்	வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியர் I 1933 மறுபதிப்பு 1938
3.	பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும்	ரா.இராகவையங்கார்	அண்ணாமலை நகர் I 1951
4.	பட்டினப்பாலை	பொ.வே.சோமசுந்தரனார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை I 1930
5.	பட்டினப்பாலை	சாமிசிதம்பரனார்	இலக்கியநிலையம் சௌராஷ்டிரநகர் சென்னை I 1967

மலைபடுகடாம்

1.	மலைபடுகடாம்	பொ.வே.சோமசுந்தரனார்	வைசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை I 1956

ஆறுமுகநாவலர் பதிப்பு நெறிமுறைகள்

சி. இலட்சுமணன்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பதிப்பாசிரியர்களில் ஆறுமுக நாவலர் அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார். இவர் சைவ சமயப்பற்றுடையவராகவும், தமிழ் ஆர்வலராகவும் விளங்கியமைக்கு அவரது பதிப்புகள் சான்று பகருகின்றன. நாவலரவர்கள் பதிப்பாசிரியர் என்பதோடமையாமல் நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் விளங்கியமை குறிக்கத் தக்கது.

நாவலர் பதிப்பித்த நூல்கள்

ஆறுமுக நாவலரவர்கள் பரிசோதித்தும், புத்துரையாத்தும் புதிதாய் எழுதியும் பதிப்பித்த நூல்கள்[1] ஏறத்தாழ அறுபத்துமூன்று எனத் தெரியவருகிறது. அவற்றுள் நிகண்டு, இலக்கிய இலக்கண நூல்கள், திரட்டுகள், நீதி நூல்கள், போன்றவை அடங்கும். அப்பதிப்புகளைத் தொகுப்புப் பதிப்பு, சுருக்கப்பதிப்பு, குறிப்பெதிர் பதிப்பு என மூன்று வகைக்குள் அடக்கலாம். தொகுப்புப் பதிப்பாவது ஒருவருடைய அல்லது பலருடைய படைப்புகளிலிருந்து சில பகுதிகளைத் தொகுத்துத் தருவதாகும். அகத்தியர் அருளிய தேவாரத்திரட்டு, தாயுமானவ சுவாமிகள் திருப்பாடல் திரட்டு, நீதிநூல் திரட்டு என்பன தொகுப்புப் பதிப்புகளாகும். ஒரு நூலினது மூலத்தை மட்டும் அல்லது நூற்பொதி கருத்துகளைப் பக்க அளவால் சுருக்கி வெளியிடுதல் சுருக்கப் பதிப்பாகும். இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை, பால பாடம் போன்றவற்றைச் சுருக்கப் பதிப்பிற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

அருஞ்சொற்பொருள், இலக்கணக் குறிப்பு பாடவேறுபாடு போன்றவற்றை அடிக்குறிப்பாகத் தந்து நிற்பவை குறிப்பெதிர் பதிப்புகளாகும். சேது புராணம், கந்த புராணம், திருக்குறள்,

1. பதிப்பித்த நூல் விவரம் பின் இணைப்பில் காண்க

சூடாமணி போன்ற இவர்தம் பெரும்பான்மை நூல்கள் குறிப்பெதிர் பதிப்புகளேயாகும்.

பதிப்பு நெறிமுறைகள்

மேற்குறிப்பிட்ட பதிப்புகளில் காணப்படும் பதிப்பு நெறிமுறைகளைச் சுருக்கமாகக் கூற முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பதிப்பாசிரியர் நோக்கம்

எந்தவொரு பதிப்பாசிரியரும் தமக்கெனச் சில பதிப்பு நோக்கங்களைக் கொண்டிருப்பர். அத்தகு நோக்கங்கள் அவர்தம் பதிப்புகள் சிறப்புற ஏதுவாகும். பழம் பதிப்பாசிரியர்கள் தத்தமக்கெனப் பல பதிப்பு நோக்கங்களைக் கொண்டிருந்தனர். அந்த அடிப்படையில் நாவலரவர்களுடைய பதிப்பு நோக்கங்களை அவருடைய பதிப்புகளினின்று காணலாம்.

அ. ஓலைச்சுவடியிலுள்ள நூல்களை அச்சில் கொணரவேண்டும் என்பது அவரது நோக்கங்களுள் ஒன்றாகும்.

> "ஏட்டிலே உள்ள நூல்களை எல்லாரும் எளிதில் பெறும்படி அச்சிற் பதிப்பித்தல் வேண்டும் என்னும் ஆசையும் இவருக்கு உண்டாயிருந்தது."[2]

என்ற கூற்றிலிருந்து மேற்கருத்து நன்கு விளக்கம் பெறும்.

ஆ. அடி மாற்றம், சொற்களைத் திரித்தல் போன்ற எவ்வித மாற்றமுமின்றி நூலாசிரியர் கருத்தறிந்து மூல பாடத்தைத் தந்து திருத்தமான பதிப்பைச் செவ்விய வடிவமைப்புடன் கொணர்தல் அவரது அடுத்த நோக்கமாகும். இக் கருத்தைப் பின்வரும் கூற்று அரண் செய்யும்.

> "இராச கோபால பிள்ளை திருத்தி யச்சிற் பதிப்பித்த புத்தகத்தைப் பாராதீர். ஏனெனில் அவர் முதனூற் பகுத்தறியாதவராகையால் வில்லிபுத்தூ ராழ்வார் செய்த பாரதத்தைப் பெரியோர் வாக்கை அழிக்கப்படக் கூடாதென்று சிறிதும் அஞ்சாது சிவ பரமாயிருந்த பாடல்கள் அநேகத்தைத் தள்ளியும் சில அடிகளை மாற்றியும் சில சொற்களைத் திரித்தும் மனம் போனவாறே அச்சிற் பதிப்பித்தார். ஆதலால் அதனை நீக்கி வில்லிபுத்தூராழ்வார் பாடினபடியே

---

2. ஆறுமுக நாவலர் சரித்திரம் - பக்.23

ஆறுமுக நாவலர் அச்சிற் பதிப்பித்திருக்கும் புத்தகம் ஒன்று சம்பாதித்துப் பாரும். பாரும். உமது ஐயந் தீரும் தீரும்".[3]

இ. பிழையற்ற பதிப்பைக் கொணர்வதில் பெருங்கவனம் செலுத்தியுள்ளார். குறிப்பாக அச்சுப் பிழைகளைக் களைவதை நோக்கமாகக் கொண்டுள்ளார் என்பது அவர் தம் பதிப்புகளைப் பார்ப்பவர் நன்கறிவர்.

'இலக்கண வழு இல்லாமலும் இலக்கிய மரபு குன்றாமலும் மிகவும் எச்சரிக்கையுடனும், நிதானத்துடனும் அச்சிட முனைவாராம்'[4] என்னும் ம.சு.சம்பந்தன் அவர்களின் கூற்றும் ஈண்டு சுட்டிக்காட்டத் தக்கது.

நூல் அமைப்பு

எந்தவொரு நூல் பதிப்பிற்கும் நூலமைப்பு மிக முக்கியமானதாகும். நாவலர்தம் நூற்பதிப்பு தலைப்புப் பக்கம், உள்ளுறை, இணைப்பு, பக்க அமைப்பு, கட்டமைப்பு என்னும் நிலைகளில் நோக்கப் பெறுகின்றது.

தலைப்புப்பக்கத்தில் நூலின் தலைப்பு, நூலாசிரியர், பதிப்பிக்கத் தூண்டியவர், பதிப்பாசிரியர், வெளியீட்டாளர், அச்சகம், பதிப்பு பற்றிய விவரம், பதிப்பித்த காலம் (தமிழ் ஆண்டு, மாதம்) பதிப்புரிமை[5] போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன. நூலின் தலைப்பு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பினும் பெரும்பாலும் நீண்ட தொடராகவே உள்ளது.

இதற்குச் சான்றாக,

'பெரியபுராணம் என்று வழங்குகிற திருத்தொண்டர் புராணம்'
'தமிழ் வேதமாகிய திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்'

என்பனவற்றைக் காணலாம். இவற்றிலிருந்து நூலின் தலைப்பு தெளிவாகவும் விளக்கமாகவும் இருக்க வேண்டுமென்பதில் நாவலர் மிகவும் கவனம் செலுத்தியுள்ளார் என்பது தெரிகிறது. சில பதிப்புகளில் நூலாசிரியர் பெயர் உரையாசிரியர் பெயர், அவர்தம் சிறப்புணர்த்தும் அடைமொழிகளோடு கொடுக்கப்பெற்றுள்ளது.

---

3. ஆறுமுக நாவலர் பிரபந்தத்திரட்டு - பக். 134

4. அச்சும் பதிப்பும் பக்.241.

5. நாவலர் பதிப்புகள் அனைத்தும் பதிப்புரிமை பெற்றது.

'தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அருளிச்செய்தது'[6]
'வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையருரை'[7]

நூலைப் பதிப்பிக்கக் கட்டளையிட்டவர் அல்லது வேண்டுகோள் விடுத்தவர் பெயர் குறிப்பிடப் பெற்றுள்ளது.

'திருவாவடுதுறை ஆதீனத்துச்சுப்பிரமணிய சுவாமிகள் கட்டளைப்படி'[8] 'இராமநாதபுரம் சமஸ்தானம் ஸ்ரீ பொன்னுசாமித் தேவரவர்கள் வேண்டுகோளின்படி'[9]

இவற்றால் பதிப்பாசிரியரின் தலையாய கடமையாகிய நன்றியறிதல் திறன் வெளிப்படுகிறது எனலாம்.

பதிப்பாசிரியர் பெயரோடு பல்வேறு பிரதிகளை ஒப்புநோக்கிய நிலை, நூலில் செய்துள்ள முக்கிய மாற்றங்கள் என்பனவும் சுட்டப் பெற்றுள்ளன.

'ஆறுமுக நாவலரவர்களால் பல பிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்தபடி'[10]
'ஆறுமுகநாவலரவர்கள் திருத்தியும், விளக்கியுங் கூட்டியும் புதுக்கியது'[11]

இவை நூலின் தரத்தைச் சுட்டுவனவாக அமைந்துள்ளன.

வெளியீட்டாளர், நூல் அச்சாகிய அச்சகத்தின் பெயர் தலைப்புப் பக்கத்தின் கீழ்த் தரப்பெற்றுள்ளன.

'சிதம்பர சைவப் பிரகாச வித்தியாசாலைத் தருமபரி பாலகர்களால் வெளியிடப்பெற்றது'[12].
'சென்னப் பட்டணம் வித்தியாநுபாலன யந்திர சாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.[13]

நாவலர் பதிப்புகளில் பெரும்பான்மை நூல்கள் வித்தியாநுபாலன அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டனவாகத் தெரிகிறது.

---

6. திருக்குறள்.

7. தொல்காப்பியச் சொல்லதிகாரம்

8. இலக்கணக் கொத்து

9. திருக்குறள்.

10. தொல். சொல்லதிகாரம்

11. நன்னூற் காண்டிகையுரை

12. " 13. சேதுபுராணம்.

உள்ளுறை என்று நாம் இன்று வழங்குவது 'சூசி பத்திரம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

> பெரியபுராணப் பதிப்பில் புராணம் பக்கம் என்ற அமைப்பிலும் ஒவ்வொரு சருக்கத்தின் உட்தலைப்பு பக்கம் என்ற அமைப்பிலும் உள்ளுறை அமைக்கப் பெற்றுள்ளது.'[14]

முகவுரை, சிறப்புப் பாயிரம், நூலாசிரியர் வரலாறு, நூல் பற்றிய சிறப்புச் செய்திகள் போன்றவை நூலின் முன்னும், சூத்திர முதற்குறிப்பகராதி, பிழைதிருத்தம் போன்றவை நூலின் பின்னும் இணைப்பாகத் தரப்பெற்றுள்ளன[15]. பிழைதிருத்தம் என்பது, திருத்தம் என்ற அமைப்பில் தரப்பெற்றுள்ளது.

பக்க அமைப்பு பார்ப்பதற்கு அழகாகவும், தெளிவாகவும், படிப்பதற்கு ஏதுவாகவும் உள்ளன. தக்க இடைவெளியிடுதல், பத்தி பத்தியாகச் செய்திகளை அமைத்தல், சில வரிகளை உள்ளடக்கி அமைத்தல், நூற்பா போன்றவற்றைப் பக்கத்தின் மத்தியில் அமைத்தல் என்பன பக்க அமைப்பில் சிறப்பாகக் குறிக்கத் தக்கனவாம்.

தரமான காகிதத்தில் பல்வேறு வடிவங்களில்[16] பகுதித் தையலுடனும் (*Section Stitching*), சிறந்த கட்டுமானத்துடனும் நூலின் கட்டமைப்பு அமைந்துள்ளது.

அச்சுப்பணி

பதிப்புப் பணியில் அச்சுப்பணி 'சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. "நூலை எழுதுவது ஒருவகையான ஆற்றலேயாயினும் அதன் பிரதியை அச்சிற்குத் தருகின்ற வகையில் ஒழுங்குபடுத்துவது வேறொரு வகையான ஆற்றலாகும்"[17]. எந்தவொரு சிறந்த பதிப்பாக இருந்தாலும் அச்சுப்பணியைச் சரிவரக் கவனிக்கவில்லையாயின் நூலின் தரத்தையே அது குறைத்துவிடும். நாவலர்தம் பதிப்புகளில் அச்சுவேறுபாடு, அச்சுப்படி திருத்துதல் போன்றவற்றிற்குச் சிறப்பிடம் தந்துள்ளார். இயல்தலைப்பு, உள்தலைப்பு, நூற்பா, உரை, அடிக்குறிப்பு என இவை ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு புள்ளிகளில் அச்சுகளைத் தருவதில் கவனம் செலுத்தியுள்ளார்.

14. திருமணச் சருக்கம் - திருமணச் சிறப்பு

15. பெரியபுராணப்பதிப்பு

16. கிரவுன் 1/8, டெம்மி 1/8 போன்ற பல்வேறு வடிவம்

17. பதிப்புப் பார்வைகள் பக்.60

ஆறுமுக நாவலரவர்கள் பதிப்பித்த நூல்களில் அச்சுப்பிழைகள் இல்லை என்று எல்லோரும் பாராட்டுமளவுக்கு நூலைப் பதிப்பித்துள்ளார். இதிலிருந்து அச்சுப்படி திருத்துதலுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளித்துள்ளார் என்பது புலனாகும். நாவலரவர்கள் எதையும் பிழையில்லாமல் செய்யவேண்டும் என்ற எண்ணமுடையவர். இதற்குத் தமிழ்ப் புலமை என்னும் கட்டுரையில் நாவலரவர்கள் கூறும் கீழ்வரும் கூற்று தக்க சான்றாகும்.

"தமிழ் கற்கப் புகுஞ் சைவ சமயிகள் முன்னர்ப் பாலபாடங்களைப் படித்துக் கொண்டு இலக்கணச் சுருக்கத்தைக் கற்றறிந்து இயன்ற அளவு பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக"[18].

எவ்வளவு கூர்ந்து கவனித்தபின்னும் கண்ணுக்குத் தப்பிய அச்சுப் பிழைகளை நூலின் இறுதியில் பிழைதிருத்தம் என்ற பகுதியில் சுட்டிக் காட்டி அப்பிழைகளைக் களைந்து விடுவார். பிழை மலிந்த எந்த நூலையும் கற்றவர் உலகம் ஏற்றுக் கொள்ளாது என்பதை நன்கு அறிந்தவர். அச்சுப் பணிகளைத் திறம்படச் செய்திட அவர் சொந்தமாக நிறுவிய வித்தியாநுபாலன அச்சகம் பெரிதும் துணைநின்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒப்பு நோக்கல்

பல்வேறு சுவடிகளை ஒப்புநோக்கி வேறுபாடுகளைக் குறித்து முழுமையாக்கும் பணியானது பதிப்புப் பணியில் மிக முக்கியமானதொன்றாகும்.

பல ஏடுகளை ஒப்பிட்டு நோக்கி அவற்றின் வம்சாவளியை ஊகித்து ஒழுங்குபடுத்தி அவற்றில் மூலத்தோடு பெரிதும் ஒத்த ஓர் ஏட்டைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பித்தல் அல்லது பல ஏடுகளையும் ஒப்பிட்டுப் பிழைகளைந்து சரியான பாடத்தை நிறுவுதல் என்ற இடர்ப்பாடு மிகுந்த பணிநூலைப் பதிப்பித்தற்கு முன்னோடியாக அமையும் பணி[19]

என்பார் டாக்டர் காசி இராசன். நாவலரவர்கள் எந்தப் பதிப்புப் பணியை மேற்கொண்டாலும் பல்வேறு பிரதிகளை ஒப்புநோக்கிய பின்னரே அச்சிடுவார் என்பது ஈண்டு குறிக்கத்தக்கது.

பிரதிகளின் ஆதாரமில்லாமல் தாமாக ஒன்றையும் இவர் திருத்துவதில்லை என்பது முக்கியமானது'

---

18. பிரபந்தத்திரட்டு பக்.28

19. காப்பியப்பதிப்புகள். பக்.3.

இவர் பதிப்பித்த நூல்களில் தலைப்புப் பக்கத்தில் 'யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்களால் பல பிரதிருபங்களைக் கொண்டு பரிசோதித்து அச்சிற் பதிப்பிக்கப்பட்டது' என்னும் குறிப்பைக் காணலாம். ஆனால் எந்தெந்தப் பிரதிகளை ஒப்புநோக்கினார் என்று அவர் எவ்விடத்தும் தெரிவிக்கவில்லை.

பதிப்புரை

நாவலரவர்கள் மேற்கொண்ட எந்த நூற்பதிப்பிலும் பதிப்புரை தந்ததாகத் தெரியவில்லை. எனவே இவர்தம் பதிப்பு முறைகள், பதிப்புக்கொள்கை, முந்தைய பதிப்புகள் பற்றிய விவரம், பதிப்பில் செய்துள்ள மாற்றம் ஆகிய எதையும் இவர் கூற்றாக அறிய இயலவில்லை.

முகவுரை

பதிப்புப் பணியில் முகவுரை எழுதுவது இன்றியமையாதது எனலாம். இது, நூல் பற்றிய கருத்துகளை அறிமுக நிலையில் அறிந்துகொள்ள மிகவும் துணை செய்யும்.

> 'டாக்டர் உ.வே.சா.காலத்துப் பதிப்பாசிரியர் சிலர் முகவுரை எழுதுவதில்லை. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரை இவ்வகையில் குறிப்பிடலாம்'

என்பார் டாக்டர் இரா. காசிராசன். ஆயினும் பெரியபுராணம், கந்தபுராணம் போன்ற நூற்பதிப்புகளில் இவர் முகவுரை வரைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நூலின் முகவுரையில் நூலைப் பற்றிய செய்திகளைக் கூறுகிறார். பதிப்பு பற்றிய சில விவரங்களை ஈண்டுக்குறிப்பதுமுண்டு.

பெரியபுராணப்பதிப்பு முகவுரையில் சைவர் யார்? ஓதி உணர்தற்குரிய நூல்கள், பெரியபுராணத்தின் சிறப்பு போன்றவற்றைக் குறிப்பிடுகிறார். இறுதியாகச் சந்தி விகாரங்களின்றி அச்சிற் பதிப்பித்ததைப் பற்றி நாவலரவர்கள் கூறுவதைக் கீழே காணலாம்.

> "நிறைந்த கல்வியுடைய வித்வான்களும் குறைந்த கல்வியுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்தும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும் கல்வியில்லாத ஆடவர்களும் பெண்களும் பிறரைக் கொண்டு வாசிப்பித்து உணரும் பொருட்டும் ....
> பெரும்பான்மையும் இயற்சொற்களும் சிறுபான்மை
> ஆவசியமாகிய திரிசொற்களும் வடசொற்களும்
> பிரயோகிக்கப்படும் கத்திய ரூபமாகச் செய்து வாசிப்பவர்களுக்கு
> எளிதில் பொருள்விளங்கும்படி பெரும்பான்மையும் சந்தி
> விகாரங்களின்றி அச்சிற் பதிப்பித்தேன்"[20]

---

20. பெரியபுராணம் - முகவுரை

கந்தபுராண முகவுரையில் வசன நடையில் பதிப்பித்தது குறித்துக் கூறுவதையும் காணலாம்.

> "நம்முடைய சைவ சமய நூல்களை எல்லாருக்கும் எளிதின் உபயோகமாகும் பொருட்டு வெளிப்படையாகிய வசன நடையிற் செய்து அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்தின் அது பெரும்புண்ணியமாகும் என்று துணிந்து சில வருடத்துக்கு முன்னே பெரிய புராணத்தை அப்படியே செய்தேன். அது அநேகருக்குப் பெரும்பயன் விளைத்ததைக் கண்டறிந்தமையால் கந்தபுராணத்தையும் அப்படியே செய்தேன்"21

ஆகவே பதிப்புரையில் கூறவேண்டிய கருத்துகளை முகவுரையில் தருவதால் இவர் பதிப்புரை தராது விடுவித்திருக்கலாம்.

அடிக்குறிப்புகள்

நாவலரவர்கள் தம் பதிப்பில் தாம் கூறவிரும்பிய கருத்துகளை அடிக் குறிப்பாகத் தந்துள்ளார். திருக்குறள் பதிப்பில் 260 அடிக்குறிப்புகளும் ஏனையவற்றில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் அடிக்குறிப்புகளும் உள்ளன. அவற்றில் சிலவற்றைக் கீழே காணலாம்.

	(அடிக்குறிப்புகள்)
சூடாமணி நிகண்டு-	9
பெரியபுராணம்-	4
கந்தபுராணம்-	6
சேதுபுராணம்-	36
தொல்.சொல்.சேனா-	11
இலக்கணக்கொத்து-	3
தொல்முதற்சூத்திரவிருத்தி-	1

அடிக்குறிப்புகளைச் சுட்டுவதற்குக் கீழ்க்கண்ட குறியீடுகளையே பயன்படுத்தியுள்ளார்.

✱ ≠ ၆ + ● எ ≃ □

நாவலரவர்கள் காட்டும் அடிக்குறிப்புகள் பல்வேறு கோணங்களில் பகுப்பாய்வு செய்ய இடம் தந்து நிற்கின்றன. அருஞ்சொற்பொருள் தரல், விளக்கம் அளித்தல், இடப்பெயர்களைச் சுட்டல், பிற பிரதிகளில் இல்லாதவற்றைச் சுட்டல், பிறநூல் சுட்டல்,

---

21. கந்தபுராணம் முகவுரை

மேற்கோள் பாடல்களின் நூற்பெயர் சுட்டல், இலக்கணக்குறிப்பு தரல், வடமொழிக்கருத்துரைத்தல், சிறப்புப் பெயர் காட்டல், புராணக் கதைக் கூறுகளைக் காட்டல், மேற்கோள் தொடரை முழுமை செய்தல், பாடவேறுபாடு காட்டல் என்பன குறிப்படத்தக்கவை.

அ. அருஞ்சொற்பொருள் தரல்

அரிய சொற்களுக்கு அடிக்குறிப்பில் பொருள் தருவதைப் பதிப்பு நெறியாகக் கொண்டுள்ளார். மூலத்தை மட்டும் பதிப்பித்துள்ள நூல்களில் இத்தகைய அடிக்குறிப்புகள் அதிகமாகவும், உரையுடன் கூடிய பதிப்புகளில் அருகியும் காணப்படுகின்றன.

இலச்சினை - முத்திரை[22]
பரிவருத்தனம் - பண்டமாற்றம்[23]

ஆ. விளக்கம் அளித்தல்

சொற்களுக்குத் தொடர்நிலையில் உரை தந்து உரையில் பயின்ற சொற்களுக்கு விளக்கம் தருவதையும், சொற்களைப் பிரித்துப் பொருள் தந்து மேலும் விளக்கம் கொடுப்பதையும் நெறியாகவும் கொண்டுள்ளார். சான்றாக, 'ஓரிட மேவல்'[24] என்னும் சொல்லுக்கு இருவகையான சமவாயமுஞ் சையோகமுமாம் என உரைதந்து அதில் பயின்றுள்ள சமவாயம், சையோகம் என்னும் இரண்டு சொற்களுக்கும் முறையே ஒற்றுமை, கூட்டம் என்று விளக்கமளிக்கின்றார்.

இதே போன்று பஞ்சவடி[25] என்னும் சொல்லுக்கு மயிரினாலே அகலமாகச் செய்யப்பட்டு மார்பிலே பூணூலாகத் தரிக்கப்படும் வடமாம் எனப் பொருள் விளக்கம் தந்து மேற்படி சொல்லைப் பஞ்சம், வடி என இரண்டாகப் பிரித்து முறையே விரிவு, வடம் என்று விளக்கமளிக்கின்றார்.

இ. இடப்பெயர்களைச் சுட்டல்

இலக்கியங்களில் இடம்பெற்ற இடப்பெயர்கள் தற்பொழுது என்ன பெயரில் வழங்கி வருகின்றன என்பதையும் அடிக்குறிப்பில் சுட்டுகின்றார்.

---

22. பெரியபுராணம் பக்.132

23. சேது புராணம் பக்.11

24. இலக்கணக் கொத்து பக்.50

25. பெரிய புராணம் பக்.102

இலாடர் தம் விடயம் - இலாட தேசம்[26]
வாட்போக்கி - இரத்தினகிரி[27]
குடமுக்கு - கும்பகோணம்[28]

என்பன போன்று இடவியல் விளக்கமளிப்பதும் குறிப்படத் தக்கது.

ஈ. தொகை விளக்கம் தரல்

பழம் பதிப்பாசிரியர்கள் தொகை விளக்கம் அளிப்பதற்குச் சிறப்பிடம் தருவர். இவை பதிப்பாசிரியரின் பரந்துபட்ட அறிவைப் புலப்படுத்தும். இவ்வடிப்படையில் நாவலர் பெருமானும் தொகை விளக்கம் தரும் நெறியை அடிக்குறிப்பில் கையாண்டுள்ளார்.

சான்றாக, 'இராசதானிகள் ஐந்து[29] என்பதற்குச் சோழராஜாக்களுக்குரிய ராஜதானிகள் ஐந்தாவன காவிரிப்பூம்பட்டினம், கருவூர், திருவாரூர், உறையூர், திருச்சேய் நாலூர் என்பவைகளாம்' எனக் குறிப்பிடுகின்றார்.

ஆறுதிருமுகம்[30] என்பதற்கு ஐந்து முகத்தோடு அதோ முகமொன்று கூட்டி ஆறுமுகமாகக் கொள்க என விளக்கமளிக்கின்றார்.

உ. பிற பிரதிகளில் இல்லாதவற்றைச் சுட்டல்

பல்வேறு பிரதிகளை ஒப்புநோக்குகின்ற சூழலில் பிற பிரதிகளில் இல்லாத பாடல்களை இவை இவை இல்லையென்று அடிக்குறிப்பில் சுட்டும் நெறிமுறையைக் கொண்டுள்ளார்.

சாக்கியநாயனார் புராணத்தில் "இந்நியதி பரிவோடும், கல்லாலே யெறிந்துதவு........" எனத் தொடங்கும் செய்யுள்கள் சில பிரதிகளில் இல்லை[31] என்றும், திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் புராணத்தில் "திருச்சின்னம் பணிமாற........" எனத் தொடங்கும் செய்யுள் சில பிரதிகளில் இல்லை[32] என்றும் குறிப்பிடுவார்.

---

26. சேதுபுராணம் பக்.180

27 " 28 பெரிய புராணம் பக்.20

29. பெரிய புராணம் பக்.4

30. கந்த புராணம் பக்.41

31. பெரிய புராணம் பக்.48

32. பெரிய புராணம் பக்.365

ஊ. பிறநூல் மேற்கோள் காட்டல்

இவ்வமைப்பு கற்போர் மேலும் விளக்கம் பெறவும் கல்விக்குத் தூண்டு கோலாகவும் அமையும்.

மக்கட் சுட்டு: 'மக்கட் சுட்டென்பது அன்மொழித் தொகையன்றெனவும் இருபெயரொட்டாகுபெயரெனவும் சிவஞான முனிவர் கூறினார். தொல்காப்பியச் சூத்திர விருத்தியிற் காண்க'[33]

வெறு முயற்சி: 'நல்வினை தீவினை யிரண்டிலும் படா முயற்சி' இலக்கணக் கொத்து வினையியல் பதினேழாஞ் சூத்திரவுரையிற் காண்க'.

எ. 1) மேற்கோள் பாடல்களின் நூற்பெயர் முதலானவை சுட்டல்

மேற்கோள் பாடல்கள் இடம் பெற்ற நூல், அதிகாரம், பாடல் எண் முதலானவற்றை அடிக்குறிப்பில் தருகின்ற நெறிமுறையையும் இவர் கையாண்டுள்ளார்.

உறற்பால-தீண்டாவிடுதலரிது[34] என்ற மேற்கோள் பாடல் அடிக்கு அடிக்குறிப்பாக

நாலடியார் பழவினை என்றும், நீரிற் பலகான் மூழ்கல் [35] என்ற மேற்கோள் பாடல் அடிக்கு அடிக்குறிப்பாக வெண்பாமாலை வாகைப்படலம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எ. 2) மேற்கோள் தொடரை முழுமை செய்தல்

உரைகளில் எடுத்தாளப்படும் மேற்கோள் பாடல்களின் தொடருக்குரிய முழுமையான பாடலை அடிக்குறிப்பில் தருகின்ற நெறிமுறையை நாவலர் தம் பதிப்புகளில் கையாண்டுள்ளார். 'நீர்பலகால் மூழ்கல்' என்னும் மேற்கோள் தொடருக்குக் கீழ்க் காணும் பாடல் முழுமையும் தந்துள்ளமை தக்க சான்றாகும்.

'நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
சோர்சடை தாழச் சுடரோம்பி-யூரடையார்
கானகத்த கொண்டுகட வுள்விரும் தோம்பல்
வானகத் துய்க்கும் வழி'[36]

---

33. தொல். சொல்லதிகாரம் பக்.3

34. திருக்குறள் பக்.11

35 36. திருக்குறள் பக்.11

ஏ. இலக்கணக் குறிப்பு தரல்

உரையாசிரியர் மரபில் நின்று சில இடங்களில் இவர் இலக்கணக் குறிப்பு தருதலும் உண்டு.

உவர்த்து - குறிப்பு வினைமுற்று[37]
சேய்நாலூர் - சேய் ஞாலூர் எனப் போலியாயிற்று[38]

என்பன மேற்கருத்திற்குச் சான்றாகும்.

ஐ. வடமொழி கருத்துரைத்தல்

மூலநூல் அல்லது உரை நூல்களில் வரும் சொல்லுக்கு வடமொழிச் சொல் தருதல், வடமொழி இலக்கணக் கருத்துரைத்தல் போன்ற நெறிமுறைகளையும் கையாணடுள்ளார். இவை நாவலர் பெருமானின் வடமொழி இலக்கணப்புலமையைத் தெளிவாகக் காட்டுகின்றன. இவற்றிற்குப் பின்வருவன சான்றாகும்.

தன்வயத்தனாதல் - சுவதந்திரத்துவம்[39]
தூயவுடம்பினனாதல் - விசுத்த தேகம்[40]

அவாய் நிலை: ஒரு சொல் மற்றொரு சொல்லை வருவித்து முடிப்பதனை வடநூலார் அத்தியாகாரமென்பர்.[41]

உடம்பொடு புணர்த்தல்: உடம்பொடு புணர்த்தல் என்பது ஓர் உத்தி. இதனை வடநூலார் நிபாத மென்பார்.[42]

ஒ. சிறப்புப்பெயர் காட்டல்

இலக்கியங்களில் இடம்பெறும் சிறப்புப் பெயர்களை அடிக்குறிப்பில் தருவதுமுண்டு. அப்படித் தரும்பொழுது பெரும்பாலும் வடசொல் மிகுந்து அவற்றிற்குரிய விளக்கத்தைத் தருதலைக் காணலாம்.

தூல சென்னியன் - தூலசிரன்[43]

37.சேது புராணம் பக்.208

38. கந்த புராணம் பக்.83

39 ^ 40 திருக்குறள் பக்.5

41.திருக்குறள் பக்.7

42.திருக்குறள் பக்.11

43.சேதுபுராணம் பக்.42

ஊன் விருப்பினான் - ருத்திராஷன்[44]
வயிரதந்தன் - வச்சிர தமிஷ்டிரன்[45]

ஓ. புராணக் கதைக் கூறுகளைக் காட்டல்

சமயச் சார்புடைய புராணக் கதைக்கூறுகளையும் நாவலர்தம் பதிப்புகளில் காட்டுவதைக் காணலாம். இதனைப் பின்வரும் பகுதி காட்டும்.

'வானோர் தலைவன்

திரிமூர்த்தி பரன் சிவபிரானேயாக ஈண்டு விட்டுணுவைக்கூறியது என்னை யெனின் அநிருத்தன் முதலிய மூவர்க்கும் அதிபதி என்பதே இதன் கருத்தென்க. சிவனுக்கு உருத்திர விட்டுணு பிரமர் போல அவர்களுக்கும் அழித்தல், காத்தல், படைத்தல்களில் அதிகாரம் பெற்ற வியூரகர்கள் உண்டென்று வாயுசங்கிதை முதலியவற்றிற் கூறப்பட்டது. பிரமாவுக்கு விராட்டு, காலன், புருஷன் என்று மூவரும் விட்டுணுவுக்குச் சங்கரிடணன், பிர்த்தியும்நன், அநிருத்தன் என்னும் மூவரும் உருத்திரனுக்கு அரன், மிருடன், பவன் என்னும்மூவரும் வியூரகர்களென்றறிக'

கணிப்பொறி மூலம் ஓலைச்சுவடிகளைப் பற்றிய பல்லாயிரக்கணக்கான செய்திகளை எளிதில் தொகுக்க இயலும். உலகம் முழுவதும் கிடைக்கக்கூடிய ஓலைச்சுவடி உரைகளையும் அவை சார்ந்த நூல் அடைவுகளையும் பிற விவரங்களையும் கணிப்பொறி வழித் தொகுக்கலாம். பின்னர், பொருள் மற்றும் பாடத்தலைப்புக்களில் அவற்றை வகைப்படுத்த இயலும். ஆசிரியர், தலைப்பு, பொருள், உரையாசிரியர், முதலியனவற்றைக் கொண்டு செய்திகளைப் பகுத்தும் தேவைக்கேற்பத் தெரிவு செய்யவும் உரிய அட்டவணைகளை உருவாக்கலாம். இவ்வகையான கணிப்பொறி வழி அமைந்த ஓலைச்சுவடிச் செய்தியமைப்பு (International Catalogue of Tamil P.L.Mss) உலகம் முழுவதற்கும் பலரும் பயன்படுத்த ஏற்ற வகையில் செய்திகளைத் தந்துதவுகிறது.

1.3 ஓலைச்சுவடி உரைகளுக்குச் சொல்லடைவு மற்றும் பொருளடைவு தயாரித்தல்

குறிப்பாக மொழி பற்றிய ஆய்விலும் இலக்கிய ஆய்விலும் ஈடுபட்டுள்ள ஆய்வாளர்களுக்கு அதுகுறித்த சொல்லடைவு மற்றும் பொருளடைவுகள் பெரிதும் பயன்பட வல்லனவாகும். அதேபோன்று ஓலைச்சுவடிகளில் அமைந்துள்ள உரைகள் மற்றும் பாடல்களைக் கணிப்பொறிக்கு உள்ளீடாக்கி ஆய்வு செய்து சொல் மற்றும் பொருளடைவுகளை எளிதிலும் குறுகிய காலத்திலும் உருவாக்க இயலும். அவ்வாறு உருவாக்கப்படும் சொல் மற்றும் பொருள் அடைவுகள் அந்த ஓலைச்சுவடியிலுள்ள உரைகுறித்த மொழிநடை, சொற்புழக்கம், ஆசிரியப்பாங்கு, மொழிநடை, பயன்பட்ட காலம், உரையின் சமூகப்பின்னணி முதலியவற்றைத் தெளிவுற எடுத்து விளக்கும். இத்தகைய செய்திகள் ஒரு உரையின் ஆசிரியர் மற்றும் எழுதப்பட்ட காலம் முதலிய விவரங்களைக் கணித்துணர்வதற்குப் பயன்படுகின்றன. இவையன்றிச்சொல்

மற்றும் பொருள் அடைவுகள் மொழி ஆய்வாளர்களின் பல ஆய்வுகளுக்குப் பெரிதும் பயன்பாக அமைகின்றன.

1.4 ஓலைச்சுவடியின் ஆசிரியர் மற்றும் காலத்தைக் கணித்துணர்தல்

உலகிலுள்ள பல மொழிகளிலும் பல்லாயிரக்கணக்கான இலக்கியங்களும் அவைசார்ந்த பல நூல்களும் அரிய உரைகளும் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் பல நூல்கள் மற்றும் இலக்கியங் களுக்கு அவற்றின் காலம் மற்றும் ஆசிரியரின் பெயர் தெளிவாகத் தெரியாத நிலை உள்ளது. இத்தகைய சிக்கல்கள் இலக்கிய ஆய்வாளர்கள் மற்றும் வரலாற்று வல்லுநர்களுக் கிடையே தொடர்ந்த சர்ச்சைக்கும் ஆய்வுப்பொருளுக்கும் இடமாக அமைந்துள்ளன. கணிப்பொறியைக் கொண்டு வரையறுக்கப்பட்ட முறைமைகளையும் உள்ளீட்டுச் செய்திகளையும் பயன்படுத்தி இத்தகைய சிக்கல்களுக்கும் தீர்வு காணலாம். இதன் மூலம் ஆசிரியர் மற்றும் காலம் தெரியாத ஓலைச் சுவடிகளின் ஆசிரியரையும் காலத்தையும் கண்டறிதல் இயலும். இப்பணியானது முற்றிலும் அறிவியல் அடிப்படையிலும் கணிதக்கோட்பாட்டின் மூலம் பெறப்படும் புள்ளி விவரங்களையும் சார்ந்தமைகிறது.

ஓலைச்சுவடியாய்வில் சுவடிகளைப் பற்றிய பல விவரங்கள் தெளிவாகக் கிடைக்காமல் இருக்கலாம். கீழ்க்கண்ட பல சிக்கல்களுக்குக் கணிப்பொறி வழி விடை காணல் இயலும்.

1. ஓலைச்சுவடியின் ஆசிரியர் இன்னார் எனக் கண்டறிதல்.
2. ஓலைச்சுவடி எழுதப்பட்ட காலத்தைக் கணித்தல்.
3. ஓலைச்சுவடியின் ஆசிரியர் மற்றும் காலம் தெரியாத நிலையில் இரண்டையும் கணித்தல் .
4. ஒரே பணிக்குப் பல ஆசிரியர்கள் உரிமை கொண்டாடும் சிக்கல்கள்.
5. பல ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட பணி.
6. ஒன்று அல்லது ஒன்றுக்குமேற்பட்ட ஆசிரியர்களால் பல காலக்கட்டங்களில் எழுதப்பட்ட தொகுப்பை ஆய்ந்து ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஆசிரியர், அவ்வுரை எழுதப்பட்ட பின்னணி முதலியவற்றைக் கண்டறிதல்.
7. வெவ்வேறு பதிப்புக்கள் மற்றும் காலங்கள் பற்றிய கணிப்பு.

ஆசிரியர் மற்றும் ஓலைச்சுவடி எழுதப்பட்ட காலத்தை கணிப்பதில் கணிப்பொறியைப் பயன்படுத்துவதற்கான நெறிமுறைகள்:

1. பல்லாயிரம் வரிகள் கொண்ட ஓலைச்சுவடியிலுள்ள உரைகள் மற்றும் பாடல்களை இம்முறையின் மூலம் கணிப்பொறியைக் கொண்டு நுணுகி ஆய்ந்தறியலாம். இம்முறையில் சொற்களையும், சொற்றொடர்களையும் ஒப்பிட்டு நோக்குதல் குறிப்பிட்ட கருத்தாழம் மிக்க சொற்களை இனம் காணல், சொல் மற்றும்எழுத்துக்களின்புழக்கத்தைக் கணித்தல், மொழி நடையைக் கண்டு ஆய்தல் முதலியன அடங்கும். கணிப்பொறி இன்றி வழக்கமான ஆய்வின்வழி பல ஆயிரம் மடங்கு செய்திகளை மேற்கண்டவாறு ஆய்தல் முற்றிலும் இயலாத ஒன்றாகும்.

2. கணிப்பொறியைக் கொண்டு ஆசிரியர் பெயரோ, காலமோ தெரியாத ஓலைச்சுவடியின் உரை அல்லது பாடல்களுடன் சமகாலத்திய பிற பணிகள், யூகிக்கப்படும் ஆசிரியரின் பிற பணிகள் முதலியவற்றை ஒப்பிட்டு நோக்குதல்.

3. மொழிநடையில் ஒற்றுமை, வேறுபாடு, புள்ளியியல் கோட்பாட்டின் அடிப்படையில் கண்டறியப்பட்ட விவரங்கள், மொழியியல் சார்ந்த செய்திகள் இவற்றினைக் கொண்டு ஆசிரியர் இன்னார் என்பது பற்றியும் அல்லது ஓலைச் சுவடியின் காலம் இன்னது என்பது பற்றியும் தெளிவு பெறலாம்.

4. மேற்கண்ட புள்ளிவிவரங்கள் மட்டுமன்றித் தெளிவான சமன்பாடுகளையும் சூத்திரங்களையும் உருவாக்கி ஆசிரியரின் தனித்துவப்பாங்கு, திரும்பத் திரும்ப பயன்படுத்தப்படும் மொழிநடை முதலியவற்றைக் கொண்டும் பிறபணிகளிலிருந்து வேறுபடுத்தி நோக்கியும் ஆசிரியரின் பெயரைக் கண்டறியலாம்.

5. ஒரு குறிப்பிட்ட பணியானது ஆசிரியரால் பல காலங்களில் எழுதித் தொகுத்து வெளியிடப்பட்டதாக இருக்கலாம். இந்நிலையில் ஆசிரியருடைய அறிவு முதிர்ச்சிக்கேற்பவும், காலத்திற்கேற்பவும் மொழிநடை, தனித்துவப் பாங்கு, கருத்துச்செறிவு முதலிவற்றில் வேறுபாடு இருக்க வாய்ப்புண்டு. எனினும் உரைகள் முற்றிலும் கணிதக் கோட்பாட்டின் அடிப்படையில் கணிப் பொறியில் நுணுகி ஆய்வு

செய்யப் பெறுவதால் ஓரளவு ஒரே ஆசிரியர் எழுதிய வெவ்வேறு காலத்தைக் கண்டறிய இயலும்.

எடுத்துக்காட்டாகக் கூறின் மேலை நாடுகளின் பல இலக்கியங்களுக்கு ஆசிரியர் மற்றும் காலம் பற்றிய கணிப்புகள் கணிப்பொறிவழி மேற்கொள்ளப் பட்டுள்ளன. அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 77 கட்டுரைகளை மூன்று ஆசிரியர்கள் எழுதியதாகக் கருதப்படுகிறது. இதில் ஜான் ஜே என்பவர் ஐந்து கட்டுரைகளையும், அலெக்சாண்டர் கோல்டன் என்பவர் 43 கட்டுரைகளையும், ஜேம்ஸ் மாடிசன் என்பவர் 14 கட்டுரைகளையும், ஹேமில்டன் மற்றும் மாடிசன் சேர்ந்து 3 கட்டுரைகளையும் எழுதியுள்ளதாகத் தெளிவு பெறப்பட்டுள்ளது. ஆயினும் மீதமுள்ள 12 கட்டுரைகளை மாடிசன் அல்லது ஹேமில்டன் ஆகிய இருவரில் ஒருவர் மட்டுமே எழுதியிருக்க முடியும் என்ற கருத்து நிலவுகிறது. ஹேமில்டன் மறைவுக்குப்பின் மாடிசன் என்பவர் தான் மட்டுமே 12 கட்டுரைகளை எழுதியுள்ளதாக உரிமை கொண்டாடினார். ஹார்வார்டு பல்கலைக்கழகத்தின் பிரடரிக் மாஸ்ட்லர் என்பவரும் சிக்காகோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டேவிட் வாலஸ் என்பவரும் இச்சிக்கலைக் கணிப்பொறி வழி ஆய்ந்து மாடிசன் என்பவர் மீதமுள்ள 12 கட்டுரைகளின் ஆசிரியர் எனத் தெளிவு பெற்றுள்ளனர்.

அதேபோன்று பைபிளின் பழைய ஏற்பாட்டின் ஒரு பகுதியைப்பற்றிய ஆசிரியர் யார் எனக் கணிப்பொறி வழி கண்டறியப்பட்டுள்ளது. இசைய்யா என்ற நூலின் முதல் 12 பகுதிகள் இசைய்யாவால் எழுதப்பட்டது என்றும் மீதமுள்ள 54 பகுதிகள் இசைய்யாவுடன் சேர்ந்து பல ஆசிரியர்களால் எழுதப்பட்டது என்றும் ஹீப்ருவிலுள்ள இஸ்ரேல் தொழில் நுட்பக் கழகத்தைச் சேர்ந்த திரு.ரட்டே கணிப்பொறியின் மூலமாக ஆய்ந்து முடிவு கண்டுள்ளார். அங்ஙனமே பைபிளின் புதிய ஏற்பாட்டிற்கான ஆசிரியர்களைப்பற்றியும் பிளாட்டோவின் ஏழாவது கடிதம் மற்றும் ஹோமருடைய பணிகள் முதலியவற்றிற்கும் இம்முறை பயன்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

1.5 கணிப்பொறிவழி ஓலைச்சுவடிகளுக்கான அட்டவணை தயாரித்தல்

ஓலைச்சுவடிகள் தொகுக்கப்படும்பொழுது அவற்றைப் பயன்படுத்து வதற்கேற்பப் பாடம் (subject) மற்றும் பொருள் தலைப்புக்களில் பகுத்து வகைப்படுத்துதல் அவசியமாகிறது. இவையன்றி ஓலைச் சுவடிகளில் உள்ள செய்திகளைத் தேவைக்கேற்பவும் குறிப்பிட்ட துறையின் பயன்பாட்டிற் கேற்பவும் அவற்றை வகைப்படுத்தல் வேண்டும். எனவே ஓலைச்சுவடிகளுக்கான அட்டவணையை உருவாக்குதல் மிகவும் அவசியமாகிறது. பாடம் மற்றும் பொருள் தலைப்புக்களில் வகைப்படுத்துவதுடன் ஆசிரியர், தலைப்பு, உரையாசிரியர் முதலியவற்றின் அடிப்படையிலும் செய்திகளைத் தெரிவு செய்வதற்கேற்ப ஓலைச்சுவடிகளின் அட்டவணை தயாரிக்கப் படுதல்வேண்டும். இதில் ஓலைச்சுவடியின் நூலடைவுச் செய்திகளை அகர நிரலாக்கலும் தொகுத்து வகைப்படுத்தலும் அட்டவணை உருவாக்குவதன் பணிநிலைகளாகும். இவற்றை மானிட முயற்சியால் செய்யும்பொழுது அகர நிரலாக்கலிலும் வகைப்படுத்தலிலும் பிழைகள் நிகழ வாய்ப்புண்டு. இதுவன்றி இப்பணியைச் செய்து முடிப்பதற்கு நெடுங்காலம் தேவைப்படுகிறது. கணிப்பொறியைக் கொண்டு ஓலைச் சுவடிகளின் அட்டவணைக்குரிய செய்திகளை மின்காந்த நினைவகத்தில் பதிவாக்கி அட்டவணை உருவாக்கும் பணியினை எளிதில் முடிக்கலாம். கணிப்பொறி வழியமைந்த ஓலைச்சுவடிகளுக்கான அட்டவணையை உருவாக்கும்பொழுது செய்திகளைத் தொகுக்கும் முறை செய்திகளைப் பதிவு செய்து அமைக்கும் பாங்கு இவற்றில் தக்க அணுகுமுறையைப் பின்பற்றுதல் மிகவும் அவசியமாகும்.

கணிப்பொறி வழியாக ஓலைச்சுவடிகளுக்கு அட்டவணை தயாரிக்கும் பணிக்கு எடுத்துக்காட்டாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ள அனைத்துலகத் தமிழ் ஓலைச்சுவடிகளின் அட்டவணையைக் கூறலாம். கணிப்பு மையம், நூலகம் மற்றும் ஓலைச்சுவடித் துறைகளின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டதே சுமார் 21,973 தமிழ் ஓலைச்சுவடிகளுக்குரிய கணிப்பொறிவழி அமைந்த அனைத்துலக ஓலைச்சுவடி அட்டவணையாகும். 1985 இல் மைய அரசு கல்வி மற்றும் பண்பாட்டுத்துறையின் ரூபாய் இரண்டு இலட்சம் நிதியுதவியுடன் இத்திட்டம் செயற்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் உலகம் முழுவதுமுள்ள சுமார் 39 நிறுவனங்களிலிருந்து ஓலைச் சுவடிகள் பற்றிய நூலடைவுச் செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன. இதில் இங்கிலாந்து, ரஷ்யா, ஜெர்மனி, பிரான்சு, சுவீடன் முதலிய 12 மேலைநாடுகளின் நூலகங்களும் அடங்கும்.

1.5.1 கணிப்பொறி வழி அனைத்துலகத் தமிழ் ஓலைச்சுவடிகளுக்கான அட்டவணை தயாரிக்கும் திட்டம்

இத்திட்டத்தில் சுமார் 21,973 ஓலைச்சுவடிகளுக்குரிய பட்டியல்கள் ரோமன் வரிவடிவத்தில் கணிப்பொறிக்கு உள்ளீடு செய்யப்பட்டு மின்காந்த நினைவகத்தில் பதிவு செய்யப்பட்டு உள்ளன. இச்செய்திகள் அனைத்தும் கணிப்பொறி வழி உருவாக்கப்பட்டுள்ள வழியமைப்புகளைக் (*programs*) கொண்டு எளிதில் ஆய்வு செய்வதற்கும் எடுத்தாள்வதற்கும் ஏற்பப்பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் கீழ்க்கண்டவாறு ஓலைச் சுவடிகள் பற்றிய நூலடைவுச் செய்திகள் பதிப்பாகப் (*Records*) பதிவு செய்யப்பட்டுள்ளன:

Format of P.L. Record

ஆசிரியர் பெயர்	தலைப்பு	உரை யாசிரியர்	செய்யுள் அல்லது உரைநடை	Sub பொருள் எண் Code	மொத்த ஓலைகள்	முழுமை, or குறை	Acc No.	நூலக எண்
-40-	-40-	-30-	-5-	-5-	-5-	-5-	-25-	-5-

Characters

எடுத்துக்காட்டுப் பதிப்பு

ஆசிரியர்	: தலைமலைகண்ட தேவர்
தலைப்பு	: மருதூரந்தாதி மூலமும் உரையும்
உரையாசிரியர்	: ஆறுமுக நாவலர்
பாடல்/உரை	: பாடலும் உரையும்
பொருள் தலைப்பு எண்	: 359 (அந்தாதி)
மொத்த ஓலைகள்	: 80
முழுமை/முழுமை அடையாதது	: முழுமையடைந்தது
Acc No	: 142
நூலக எண்	: 27

ஒவ்வொரு பதிப்பிலும் ஓலைச்சுவடி பற்றிய தலைப்பு, ஆசிரியரின் பெயர், உரையாசிரியர் பெயர், பொருள் தலைப்பு, *Accession No,* ஓலைச்சுவடி கிடைக்கும் நூலக எண் முதலியன பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள ஓலைச் சுவடிகளின்' நூலடைவுச் செய்திகள் அனைத்தும் கணிப்பொறியால் ஆய்வு செய்யப்படுகிறது. இந்த ஆய்வில் ஒவ்வொரு பொருள் தலைப்பிலும் அமைந்துள்ள ஓலைச் சுவடிகளின் நூலடைவுச் செய்திகள் முழுவதும் பகுத்தறியப்பட்டுப் பின்னர் குறிப்பிட்ட பொருள் தலைப்பின்கீழ் அமைந்த பதிப்புகள் ஆசிரியர் பெயரின் அடிப்படையில் அகரநிரலாக்கம் செய்யப்படுகின்றன. அதேபோன்று மொத்தமுள்ள 21,973 பதிப்புகளும் ஆய்வு செய்யப்பட்டு சுமார் 365 வெவ்வேறு பொருள் தலைப்புகளில் பகுக்கப்படுகின்றன. அவை அகரநிரலாக்கம் செய்யப்பட்டுச் செய்திகள் பயன் படுத்துவதற்கேற்ற அட்டவணையாக மீண்டும் நினைவகத்தில் பதிவு செய்யப்படுகின்றன- இவ்வாறு பகுத்து ஆய்வு செய்யப்பட்டு அகரநிரலாக்கம் செய்யப்பட்ட அட்டவணைகளைப் பயன் படுத்துவதற்கேற்ப ஆசிரியர், தலைப்பு, உரையாசிரியர், பொருள் தலைப்பு முதலியன படித்துணரப்பட்டுத் தனித் தனியாக அகரவரிசைப்படி அட்டவணைப்படுத்தப்பட்டு உள்ளன. இந்த அட்டவணையைக் கொண்டு குறிப்பிட்ட தலைப்பில் ஒரு குறிப்பிட்ட ஓலைச்சுவடியைப்பற்றிய விவரங்களை அறிதல் இயலும். இவ்வாறு கணிப்பொறி வழித் தயாரிக்கப்பட்ட அனைத்துலகத் தமிழ் ஓலைச் சுவடிகளுக்கான அட்டவணைகள் ஐந்து பெரும் தொகுதிகளாகப் கணிப்பொறி மூலம் ரோமன் எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளன. இதனைக்| கணிப்பு ஸ்மயத்தில் உருவாக்கப்பட்டுள்ள வரி வடிவ மாற்ற அமைப்பினைக் கொண்டு தமிழில் அச்சாக்கிப் பெறுதற்கான முயற்சி தற்பொழுது முடியும் தருவாயில் உள்ளது.

1.5.2 கணிப்பொறி வழி ஓலைச்சுவடிகளுக்கு அட்டவணை தயாரித்தல் உள்ள நன்மைகள்

* இவ்வமைப்பில் ஓலைச்சுவடிகள் பற்றிய எண்ணிறந்த செய்திகள் எளிதாகவும் குறுகிய காலத்திலும் மின்காந்தப் பதிவின் மூலம் பாதுகாக்கப்படுகின்றன.

* இச்செய்திகள் மின்காந்தப் பதிவாக அமைவதால் வேண்டிய செய்தியை வேண்டிய நேரத்தில் பெறுவது மட்டுமின்றித் தேவைக்கேற்ப மாற்றம் செய்தல் எளிதாகிறது.

* ஓலைச்சுவடிகள் பற்றிய நூலடைவுச் செய்திகளைப் பதிவு செய்து குறுகிய காலத்திலும் குறைந்த பொருட் செலவிலும் கணிப்பொறி மூலம் எளிதாக அட்டவணை செய்தல் இயலும். இதுவே மானிட முயற்சியாயின் பெரும்பொருட்செலவையும் பல ஆண்டுக் காலத்தையும் எடுத்துக்கொள்ளும்.

* கணிப்பொறி வழி இந்த அட்டவணை அமைந்துள்ளதால் தேவையான பொழுது குறிப்பிட்ட பகுதியை மட்டும் அச்சாக்கிப் பெறுதல் இயலும்.

* கணிப்பொறியில் அனைத்து ஓலைச்சுவடிகளின் நூலடைவுச் செய்திகளும் அமைந்துள்ளதால் அதனை ஆய்வு செய்தற்கும் அரிய செய்திகளையும் பல புதிய உண்மைகளையும் கண்டறிவதற்கும் வாய்ப்பேற்படுகிறது.

* கணிப்பொறி வழி இப்பணி செய்யப்பெறுவதால் குறிப்பிட்ட பாடத் தலைப்புகளில் அமைந்த அரிய ஓலைச்சுவடிகளைக் கண்டறிந்து பாதுகாக்கவும் ஆவணப்படுத்தவும் இயலும்.

* கணிப்பொறி மூலம் ஓலைச்சுவடிகளைப் படப்பகுப்பாய்வு செய்யவும் **Computer Output Microfilm - com** முறையில் நுண்படமாக்கவும் இயலும்.

1.5.3 கணிப்பொறி வழி அனைத்துலகத் தமிழ் ஓலைச்சுவடி அட்டவணைத் திட்டத்திலிருந்து பெறப்பட்ட செய்திகள்

கணிப்பொறி மூலமாக அனைத்துலகத் தமிழ் ஓலைச்சுவடிகளுக்கு அட்டவணை தயாரிக்கப்பட்டன பொழுது நூலடைவுப்பகுப்பாய்வு (Bibliometric Analysis) செய்யப்பட்டது. அதன் மூலம் பல அரிய செய்திகள் கண்டறியப்பட்டன. இதில் மிகவும் அரிதாக உள்ள ஓலைச்சுவடிகள், பாதுகாக்கப்பட வேண்டிய நிலையிலுள்ள அருஞ்சுவடிகள், குறிப்பிட்ட துறை சார்ந்த அரிய ஓலைச்சுவடிகள், ஆசிரியர் மற்றும் தலைப்புப்பற்றிய விவரமில்லாத ஓலைச்சுவடிகள் உரைநடை

மற்றும் பாடல் இவற்றினடிப்படையில் அமைந்த ஓலைச்சுவடிகள் பணி முழுமைபெற்ற மற்றும் முழுமை பெறுத ஓலைச்சுவடிகள் முதலியன பற்றிய செய்திகள் கண்டறியப்பட்டுள்ளன. சுமார் 365 தலைப்புக்களில் அமைந்த 21,973 ஓலைச்சுவடிகளிலிருந்து கணிப்பொறி மூலமாகக் கண்டறியப்பட்ட பல அரிய செய்திகள் கீழ்க்கண்ட பட்டியலில் வழங்கப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடிகளின் நூலடைவுப் பகுப்பாய்வுச் செய்திகள்

ஆசிரியர் பெயர் தெரிந்த சுவடிகளின் எண்ணிக்கை	12,001
ஆசிரியர் பெயர் தெரியாத சுவடிகளின் எண்ணிக்கை	9,972
தலைப்புத் தெரிந்த சுவடிகளின் எண்ணிக்கை	21,513
தலைப்புத் தெரியாத சுவடிகளின் எண்ணிக்கை	460
உரையாசிரியர்களுடைய சுவடிகளின் எண்ணிக்கை	674
உரைவடிவில் அமைந்த சுவடிகள்	1,145
பாடல் வடிவில் அமைந்த சுவடிகள்	8,689
பாடல் மற்றும் உரை வடிவில் அமைந்த சுவடிகள்	1,389
பாடல் அல்லது உரை பற்றிய விவரம் தெரியாத சுவடிகள்	10,750
பணி முழுமை பெற்றுள்ள சுவடிகளின் எண்ணிக்கை	9,728
பணி முழுமை பெறாத சுவடிகளின் எண்ணிக்கை	5,665
மொத்த ஓலைச்சுவடிகளின் ஓலைகள்	8,71,049
ஓலைகளின் எண்ணிக்கை தெரியாத சுவடிகளின் எண்ணிக்கை	6,996
சுவடிகள் உள்ள மொத்த நிறுவனங்கள்	39
மொத்த பொருள் தலைப்புகள்	365
அதிகமான சுவடியையுடைய பாடத் தலைப்பு: சித்த மருத்துவம்	2,469

1.6 முடிவுரை

கணிப்பொறிகள் பல துறைகளிலும் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது போன்றே மொழியாய்விலும் பெரிதும் பயனுடைய கருவியாக விளங்குகிறது. ஓலைச்சுவடி பற்றிய ஆய்வில் கணிப்பொறியைப் பயன்படுத்தும் பல பணிநிலைகள் பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் கண்டோம். தொகுத்தல், பேணிப்பாதுகாத்தல், அவற்றிற்கான சொல் அடைவு மற்றும் பொருளடைவு தயாரித்தல், ஓலைச்சுவடிகளிலுள்ள உரையை ஆய்தல், ஓலைச்சுவடிகளின் காலம், ஆசிரியர் யார் என்ற விவரங்களைக் கணித்தல் முதலிய செய்திகள் கட்டுரையின் முன் பகுதியில் ஆய்ந்தறியப்பட்டன. கட்டுரையின் பின்பகுதி

கணிப்பொறி வழி உருவாக்கப்பட்ட அனைத்துலகத் தமிழ் ஓலைச்சுவடிகளுக்கான அட்டவணை தயாரிக்கும் திட்டம் சார்ந்த பல செய்திகளை எடுத்து இயம்பியது. இந்நிலையில் ஓலைச்சுவடிகளைப் பேணிப்பாதுகாத்தல் மட்டுமன்றி நுணுகி ஆய்வதற்கும் பல அரிய செய்திகளைக் குறுகிய காலத்தில் எளிதில் வெளிக் கொணருவதற்கும் மிகவும் பயனுள்ள கருவியாக அமைவது கணிப்பொறி என்பதில் ஐயமில்லை எனலாம்.

பல்கலைக்கழகப் பாடநூல்களும் பதிப்பு முறைகளும்

க.ப. அறவாணன்

தமிழில் அச்சு வரவு ஒரு பெரும் திருப்பு முனையாகும். ஒரு சில ஓலைச்சுவடிகளில் ஒடுங்கிக் கிடந்த தமிழ் இலக்கிய, இலக்கணக் கருத்துக் கருவூலங்கள் வெளியே வருவதற்கும், பலருடைய கைகளில் பெறுதற்கும் வழி செய்தது அச்சுக்கலை தான். ஓலைச்சுவடியில் இடம் பெற்று இருந்த இலக்கியங்களும், இலக்கணங்களும் சி. வை. தாமோதரம் பிள்ளை ஆகியோரால் தொடக்கத்தில் அச்சிடப் பெற்றன. ஆனால் அவை அனைத்தும் பதிப்புச் சீர்மையை முழுமையாகப் பெற்றிருக்கவில்லை. கிட்டதட்ட ஓலைச்சுவடியில் உள்ள வாறே அவை அச்சிடப் பெற்றன. ஆனால் காலப்போக்கில் உ. வே. சாமிநாத ஐயர், எசு. வையாபுரிப்பிள்ளை முதலிய அறிஞர்களால் பதிப்பிக்கப்பெற்ற ஓலைச்சுவடிகள் பதிப்புக்கலையின் சிறப்புக்கூறுகள் பலவற்றைப் பெற்று இருந்தன. மூலச் செய்யுள் பகுதி, உரைப்பகுதி, அடிக்குறிப்புப் பகுதி, தலைப்பு என வகைப்படுத்தப்பெற்று முறையான நிறுத்தக் குறியீடுகளும் இடப்பெற்று, பல்வேறு அளவு எழுத்துக்கள் (Various type of letters) கருத்திற்கு ஏற்ப வேறுவேறாக நல்கப் பெற்று, முறையாக்ப் பத்திப் பிரிக்கப் பெற்றுப் பதிப்பிக்கப்பெற்றன. ஓலைச்சுவடிகள் பிற்கால அறிஞர்களால் முறையாகப் பதிப்பிக்கப் பெற்றபோதுதான் பதிப்பு ஒரு கலையாக உருவம் கொண்டது. இந்தக் கலையின் செல்வாக்கு பின்வரும் அச்சு நூல்கள் அனைத்தின் மேலும் படிந்தது. இச்செல்வாக்கு இடம் பெற்ற துறைகளுள் பல்கலைக்கழகப் பாடநூல்களும் குறிப்படத்தக்கவை. பல்கலைக்கழகப் பாடநூல்கள், முன்னைய ஓலைச்சுவடிகள் பதிப்பிக்கலாற் பெற்றிருந்த பதிப்பியல் பயில் அறிவை எந்த அளவு பின்பற்றியுள்ளன என்பது ஆய்வுக்குரியது.

நம்பகமான (authentic) தரமான பதிப்புகளைத் தமிழ்மொழிக்கு அறிமுகப்படுத்திய முன்னோடிகளில் ஒருவராகத் தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத ஐயர் அவர்களை முதலாவதாகக் குறிப்பிடுதல் வேண்டும். தொடக்கக் காலங்களில் தமிழ்ப் பாடநூல்களாக மூல நூல்களையும் உரைநூல்களையும் அவற்றின் பகுதிகளையும் மேற்கொள்ளுதல் இடம்பெற்றது. அத்தகு சமயங்களில் மூலப்பதிப்புகளாக அமைத்த பாடநூல்களில் பதிப்புச் சீர்மையை நன்கு பார்க்க முடிந்தது. காலப்போக்கில் பல்கலைக் கழகப் பட்ட வகுப்பு அளவிலும் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு

அளவிலும் தனித்தனியாகப் பாடநூல்கள் உருவாகத் தொடங்கின. செய்யுள் நூல்கள் தனியாகவும், உரைநடை நூல்கள் தனியாகவும் பல்கலைக் கழகத்தாரால் உருவாக்கப்பெற்றன. 1987 - 88 ஆம் கல்வி ஆண்டில், சென்னை, மதுரை, கோவை பாரதியார், திருச்சி பாரதிதாசன் ஆகிய பல்கலைக் கழகங்களில் பாடங்களாக நடத்தப் பெறும் செய்யுள் நூல்களைத் திறனாய்வு முறையில் நோக்குதல் வேண்டும்.

மேற்கண்ட பதிப்புகள் பின்வரும் சீரின்மைகளை உடையனவாக அமைந்து உள்ளன.

1. செய்யுள்களுக்கு தொடர் எண் இருப்பது இல்லை.

1. 1.செய்யுள்களுக்கு தொடர் எண் இன்மையால் ஒரு செய்யுளை உடன் தேடிக் கண்டறிவது துன்பம் ஆகிறது. செய்யுள் முதல் குறிப்பு அமைப்பதும் இயலாதது ஆகிறது.

2.செய்யுள் முதற்குறிப்பு நூலின் இறுதியில் இணைப்பாக இடம் பெறுவது இல்லை.

2.1.தொடர் எண் இன்மையால், செய்யுள் முதற்குறிப்பும் ஆயத்தம் ஆகி இடம் பெறுவதில்லை. எனவே வாசகர் முதல் குறிப்பைப் பார்த்துச் செய்யுளைக் கண்டறிவது இயலாமல் போய்விடுகிறது. ஒரு செய்யுளைக் கண்டறிவது இயலாமல் போய்விடுகிறது. ஒரு செய்யுள் நூலில் தலைமையான உறுப்புகளில் ஒன்று முதல் குறிப்பு. அது இல்லாதது பதிப்பிற்கு ஊனக்குறைவை உண்டாக்குகிறது.

3.செய்யுளில் இடம் பெற்றுள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் அடிக்குறிப்பாகவோ, பின் இணைப்பாகவோ தரப்பெறுவதில்லை.

3.1.செய்யுளில் இடம் பெற்றுள்ள அருஞ்சொற்களுக்கு விளக்கம் தரப்படாமையால் மாணாக்கர் செய்யுள் விளங்காமல் துன்பமுறுகிறார். ஆசிரியர் சொல்லும் குறிப்பை நூல் முழுவதும் எழுதி நூலை அலங்கோலப்படுத்திவிடுகிறார். மறைமுகமாக உரைக்குறிப்பு நூலைக் காணத் தூண்டப்படுகிறார். மாணாக்கர் முடிவில் துணை நூலை (*Notes*) வாங்க வற்புறுத்தப்படுகிறார். துணை நூலை வாங்கிப் படித்துப் பொருள் விளங்கிக் கொள்ளும் மாணாக்கர் முடிவில் ஆசிரியர் வகுப்பில் பாடத்தின் பொருளை விளக்கும்போது துணைநூலைப்பார்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டு ஆசிரியர் விளக்கத்தைக் கேட்கத் தவறுகிறார். வகுப்பில் இருந்து கவனம் திசைத்திருப் பப்படுகிறது.

பக்கத்தில் உள்ளவர்களோடு பேசுகிறார் அல்லது வகுப்புக்கு மாறான வேறு செயல்களில் ஈடுபடுகிறார்.

4.பொருத்தமான தலைப்புகள் பொருத்தமான இடங்களில் அமைவது குறைவு.

4.1.பதிப்பாசிரியர், பாடத்திற்குரிய செய்யுளைக் கற்று அதன்கீழ் உள்ள பொருளை மனத்தகத்துத் தாங்கி அதற்கேற்பத் தலைப்புகளை நல்குவது இல்லை. அதனால் மாணாக்கர் இடர்ப்படுகிறார். தலைப்புகள் அலுவலக வாயிலில் இடம்பெற்று இருக்கும் துறைப்பெயர் தாங்கிய பெயர்ப்பலகை போன்றவையாகும். தலைப்புகள் இல்லாதபோதும், தவறாக இடம்பெறும் போதும் வாசகர் குழம்பிவிடுவது தவிர்க்க முடியாதது ஆகிறது.

5.பாடங்கள் சந்தி பிரிக்கப்பெற்று அச்சிடப் பெறுவது இல்லை அல்லது அடிக்குறிப்பில் சந்தி பிரிக்கும் முறையும் காட்டப்படுவது இல்லை.

5.1. பாடல்களைச் சந்தி பிரித்துப் பதிப்பிடுதல் வேண்டும் என்பது ஒரு முறை; சந்தி பிரித்தல் ஆகாது என்பது ஒருமுறை. தற்காலப் பள்ளி, கல்லூரி மாணாக்கர் தமிழ் அறிவை மனத்தகத்துக் கொள்ளும் பதிப்பாசிரியர் சந்தி பிரிந்து பதிப்பிப்பதானது மிகத் தேவை என்று எண்ண வேண்டியவராகிறார். எனவே, கூடியவரை சந்தி பிரித்துப் பதிப்பிப்பது மாணாக்கர் குறிப்பு நூல் நோக்கித் தாவுகிறதைத் தவிர்க்கும். சந்தி பிரித்துப் பதிப்பிப்பதைப் பதிப்பாசிரியர் விரும்பவில்லை எனில் அந்தந்தப் பகுதியில் அடிக்குறிப்பில் சந்தி பிரித்து நல்குதலே இன்றைய பார்வையில் நல்லது ஆகும்.

6.நூலைப் பற்றிய குறிப்பு, நூல் ஆசிரியரைப் பற்றிய குறிப்பும் இடம் பெற்று இருப்பினும் அவை போதுமானவையாக இருப்பது இல்லை.

6.1.செய்யுளை இயற்றிய நூலாசிரியர் நூல் ஆகியவற்றைப் பற்றிய சுருக்கமான, நம்பகமான தகவல்களை அகர வரிசையில் பாட நூலின் பின் இணைப்பாக நல்குதல் மிக மிகத் தேவையான ஒன்றாகும். அவற்றுடன் கூட சிலப்பதிகாரம், பெரிய புராணம், கம்பராமாயணம் முதலான காப்பிய நூல்களில் இருந்து தொடர் நிலைச் செய்யுளைப் பாடமாக அமைக்க நேரிடின் உரிய காப்பியக் கதையைப் பாடப்பகுதிக்கு ஏற்ப நல்குதல் வேண்டும். இவை வகுப்பை நடத்தும் ஆசிரியருக்குப்

பயனை நல்குவதுடன் மாணாக்கருக்கு மிகவும் பயனை நல்குவன ஆகும்.

7.மூல நூலில் இடம்பெற்று இருக்கும் எண் வரிசை கொடுக்கப்படுவது இல்லை.

7.1.உரிய பாடல் உரிய நூலில் இடம்பெற்று இருக்கும் வரிசை எண் பதிப்பின் பெயரோடு கொடுக்கப்படுதலே ஆசிரியருக்கும் மாணாக்கர்களுக்கும் மிகவும் பயன் தரக்கூடியது ஆகும். ஏனெனில், ஆசிரியர்கள் பாடம் நடத்துவதற்காக மூலப் பதிப்புகளையும், உரையையும் கட்டாயம் பயிலுதல் வேண்டும். ஆர்வம் உள்ள மாணாக்கர்களும், வசதி உள்ள மாணாக்கர்களும் பாடநூல் மட்டும் அன்றி மூலப் பதிப்பு நூலையும் பார்க்க விரும்பலாம். அத்தகு சமயங்களில் பாடநூல் பதிப்பின் எண் வரிசை கொடுக்கப்பட்டிருந்தால்தான் ஆசிரியரும் மாணாக்கரும் உரிய பதிப்பையும் உரிய உரையையும் படித்து உரிய விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளுதல் இயலும்.

8.மாணாக்கர்களுக்கு உதவும் வண்ணம் வினா அமைப்பு முறையோ பாடப் பகுப்பு முறையோ பாட நூல்களில் இடம்பெறுவது இல்லை.

8.1.மேற்கண்ட இரண்டும் இல்லாமையால் தேர்வுப் பார்வையில் விளக்கமுடியாமல் ஆசிரியர் துன்பமுறுவதும், மாணாக்கர் படிக்க முடியாமல் துன்பமுறுவதும் நேருகின்றன. பல சமயங்களில் இருவரும் குறிப்பு நூலை நாட வேண்டியவர்களாகிறார்கள். இவ்விரண்டையும் சேர்த்து வெளியிடுவதில் பல்கலைக்கழகத்திற்கு என்ன இரகசியம் இருக்க முடியும்? எனவே, மேற்கண்ட விவரங்களும் பாடநூல்களில் இடம் பெறுவது கட்டாயம் ஆகின்றது.

9.அச்சுப் பிழைகள் இடம்பெறுவதை மிகு கவனத்தோடு தவிர்ப்பது இல்லை.

9.1.பாடநூல்களில் அச்சுப் பிழை இடம் பெறுவது மிகக் கொடுமையான ஒன்று ஆகும். ஏனெனில் அது செய்யுளின் கருத்தையே மாற்றிவிடும். அன்றியும் பிழையின்றி எழுதுதல் வேண்டும் என்று மாணாக்கருக்குப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர் கையில் அச்சுப் பிழைகள் நிறைந்த பாடநூல் இருக்குமானால் மாணவர்களை எந்தமுகம் கொண்டு அவரால் பார்க்க இயலும்? எனவே பல்கலைக்கழகப் பாடநூல்களில் அச்சுப்பிழைகள் ஒன்று கூட இடம்பெறாமல் காத்துக் கொள்ளுதலே அனைவருக்கும் சிறப்பை நல்குவது ஆகும்.

10.படிப்பிற்கு அழகு தரும் எழுத்து வடிவங்களை தலைப்பிற்கு ஏற்பவும், பாடல் பகுதிக்கு ஏற்பவும், நூல் அல்லது நூலாசிரியர் பெயருக்கு ஏற்பவும், அடிக்குறிப்புகளுக்கு ஏற்பவும் அமைப்பது இல்லை.

10.1.பதிப்பு அழகு பெறுவதற்காகவும், பயிலும் வாசகருக்கு ஈடுபாடு உண்டாக்குவதற்காகவும் வேறு வேறு வடிவ எழுத்துகளில் பதிப்பை அமைத்தல் பதிப்பிற்கு மதிப்பைப் பெருக்குகிறது. இருபதாம் நூற்றாண்டில் வளர்ந்த அச்சு அறிவியல் நல்கிய வரப்பிரசாதம் ஆகும் இஃது. எனவே, ஒவ்வொன்றிற்கும் தக அச்சு வடிவ எழுத்துக்களின் அளவை மாற்றியும், இயல்பு எழுத்தை மாற்றி தடித்த எழுத்தை அமைப்பதும் சிறப்பு ஆகும்.

மேலே கண்ட பத்து சீரின்மைகளை மனத்தில் கொண்டு பல்கலைக்கழகப் பட்ட வகுப்புகள் தமிழ்ப் பாடங்கள் உருவாக்கப் பெற்றால் ஆசிரியருக்கும் மாணவருக்கும் மிகு பயன் உண்டு. பதிப்புகள் மட்டுமன்றி நூலில் இடம்பெறும் கருத்தும் மாணவருக்குப் பயன்தரும் வகையில் தமிழ் இலக்கியங்களில் இருந்து தொகுக்கப் பெற்றால் மாணவருக்கு மிகவும் நன்மை கிடைக்கும். கையால் எழுதப் பெறுவது தட்டச்சுப் பெறுவது, வெள்ளைத் தாளில் கருப்பு மையால் அச்சிடப் பெறுவது என்ற நோக்கில் பாடநூல்கள் அமையாமல் படிப்பு அறிவும், பொருள் அறிவும், பொறுப்புணர்வும், அமைய நூல்கள் பதிப்பிக்கப் பெறின் அனைவருக்கும் நன்மை விளையும்.

PUBLICATIONS OF HISTORICAL PALM-LEAF RECORDS

P. Cinnian

I. Indian palm-Leaf Records

The Palm-Leaf was the earliest material used for writing and painting before the introduction of papers. The palm-leaves were used mainly in South-East Asian Countries including India, Nepal, Burma, Thailand, Indonesia, Cambodia, and Sri Lanka. It remained as the most important writing support in these countries for centuries. It is impossible to say exactly when the Palm-leaf was first began to be introduced as the writing support. There are thousands of Palm-leaf records collected and preserved in the Museums and libraries in Asian and European Countries. The evidence shows that the earliest palm-leaf record was discovered in India which was a fragment of the text of an Indian drama of the Second Century A.D. It was discovered in Central Asia and there are no records available in India before the Second Century. The earliest writing, support was the palm-leaves but certainly they were completely destroyed owing to the tropical climate of the South and South-East Asian Countries. The visual representations seen in sculptures and paintings are the evidences to show that the palm-leaf was the important material used for writing records. It is interesting to note that both paper and palm-leaf were in use simultaneously for certain period, probably until paper became available in abundance. Palm-leaf was mainly used for religious writing and the preparation of horoscopes even today.

An analysis shows that there are many varieties of palm-trees from which the writing supports were collected. There were three important varieties viz-. the palmyra palm, fan palm and Coryapha taliera Roxh. The third variety are thick and not flexible. They are also prone to insect attack but they are dedicate and smooth. The fresh leaves, collected from the trees, are rough and coarse and so they had to be processed in a special manner to use, as the writing support. The 'Talipot' leaves are strong and do not damage easily. In India all the above three varieties were used for writing.

There were several methods used for processing the leaves which differed from area to area. In Tamilnadu the fresh leaves collected from the trees were dried in the shade and gingili oil was applied on the surface to make them smooth. A crude method practiced in Tamilnadu was that the leaves were hung for several days in a kitchen where the smoke was emitted. After a few days they were cleaned and used for writing. Sometimes after cleaning, the turmeric paste was applied over the surface of the leaves which gave strength to the yellow colour turned leaves.

II. Method of writing and painting

There were two different methods of writing on palm-leaves. The first was the incising with a pointed stylus and second was by writing with a pen or brush as is done on paper. The first method was the more common method of writing in India. The pointed stylus is held in the right hand at a fixed place on the leaf and the leaf, held in the left hand, was moved backwards or forwards to make the incision. The writer generally sat on the ground and placed the leaf on the right knee, using it as a desk. The incision thus made were not easily legible and so a paste, the charcoal powder mixed with mustard oil or gingili oil, is applied, when the excess was wiped off with a cloth the letters were clearly seen.

The illustration palm-leaf manuscripts were also prepared by using the pointed stylus. The illustrations were incised with a pointed

stylus in the same manner as for writing. The red or black colour was used to fill the illustrations. The method of written palm-leaf records was uniform in all the countries. Generally they were stored between two wooden panels that were made slightly longer than the size of the leaves used. These wooden panels were generally pointed or decorated with ivory and pearl inlay work. The holes were punched in the centre or at either end of it to keep the leaves together. A corn was passed through the holes and tied. The wooden panels protected the edges of the leaves from damage.

The preservation of the palm-leaf records was the important point to save them from destruction. Before use the collected records are to be preserved. Generally no scientific method was applied to preserve them and as a result thousands of valuable records were destroyed. Generally the records were wrapped in cloth to keep it free from dust. The records were destroyed due to various factors such as stains, discoloration, damage by insects, fungal effect, splitting and cleawage, fading of writing, and weakening of the leaf due to climatic condition. Although fresh palm-leaf is flexible it gradually lost its suppleness and became fragile and brittle in due course of time. After a certain period of time it becomes so weak that even slight bending will break the leaf into several pieces. Particularly the edges of the palm-leaf are affected so that they break easily whenever touched. The palm-leaf records in Museums and libraries should be wrapped in cloth during storage. In temples they are stored in cupboards or boxes. Whenever the manuscripts were required for public display a special rack was used. It is important to note that the manuscripts themselves were treated as objects of worship and as religious texts.

III. Preparations for publication of Historical Records

In general all written documents of the past have historical value. There are manuscripts available to reveal the history of the people or region. These records are to be identified and classified before determining their historical value. The records should be examined thoroughly and an examination report is to be prepared for

evaluation. Such reports should reveal a brief description of the object, the owner's name, the title of the documents, the place of accession and such other details. A pro-forma may be prepared for details and for easy understanding. The important details required are as follows:- (a) Nature of leaf used, (2) Technique of writing (c) Script used and (d) date of the document (e) nature of ink used (in painting and other illustrations) (f) the theme of the record and (g) Original or copy. The historical records available now, were written only during the British rule.

IV. Scientific Analysis

The important aspect of the palm-leaf records is that the details were written in the ordinary spoken form. Most of the records were copied and rewritten. So there were every possibility of committing errors while copying the documents. In such a condition scientific analysis is necessary to know the genuineness of the document as well as the truth it reveals. Before finalising a document for publication one has to establish the authenticity of the documents. All documents cannot be studied en-mass. Each and every document must be scrutinised throughly before accepting the informations from them. There are two methods for the above job. One is the 'External Criticism' and the other is 'Internal Criticism'. The 'External Criticism' is known as "Herustics" and the 'Internal Criticism' is known as "Hermenautics". Both these methods will be helpful to know whether the document is genuine or not and also whether the given facts are acceptable or not.

The 'External Criticism' is used to find out the authenticity of the document. There were instances in which the records were tampered with for material advantage, and other reasons such as pride or sympathy, rivalry, religious disputes, patriotic reason, for antipathy or even to provide link in a sequence of events. Paleography will be helpful to understand the above facts. Under this method the examiner should study the alphabets, style of writing, spelling used, ink and other material used, diction and style, and general information presented.

The main tasks are:- (a) Establishment of time and date of the documents, authorship, classifications and verifications, and accuracy of the authors. If the author of the document is not trustworthy the informations given cannot be believed. Another difficulty concerning the palm-leaf records is that the authorship cannot be established. Under such circumstances the examiner should concentrate on the language and style of writing. These facts will be helpful to make a judgement about the documents.

The Internal Critism is the second stage in which the process *of examination goes deeper into the subject. Infact* the external criticism leads to internal criticism. This method is applied mainly to find out the truth in the informations which is the main basis for historical writing. So a careful examination and mental alertness are necessary in this stage. There are three important steps in this method. The first is close and minute study of each idea, the second is critical examination of each idea or each statement and the third is analysis and evaluation. A close and minute study of the document is done to know the different ideas expressed in the document. The analysis of the content of the document is to know what the author really means by making the particular statement. This is called as 'Positive Interpretative Criticism'. Under the third stage the analysis of the condition under which the document was written is to verify whether the information given by the author confirms to what really happened. This is called 'Negative Interpretative Criticism'. The positive interpretation is helpful to know the real meaning of the author's statement and the negative interpretation is helpful to eliminate the errors of the statement. This method is helpful to eliminate the errors of the statement. This method is helpful to establish the value of a document, to give confidence in the minds of the publisher, to discover the truth of the events, to find out the errors and eliminate them and to proceed further in the historical publications. The following important steps are to be followed under the 'Internal Criticism':- (a) Study of general idea (b) isolation of ideas (c) Scrutiny of the language (d) close examinations of words (e) Period of the language (f) discover meaning of the age (g) testing every word and every phrase and find

out the meaning and (h) verify the information such as name of individuals, name of the institutions, usages and feelings, common objects, dress and habits and culture and behaviour. The important examinations are, determining the real meaning because it may differ from literal meaning of the word and reading 'in between the lines' to understand what really the author wanted to express. The examiner should go from step to step and after completing one statement or idea he should proceed to the next. Thus there should not be any hurry in this method. In history there is a general belief that what the author believed was true and what he wrote was also true. It is important to note here that with what the author believed might not be true.

V. Classification of Records

There are many Palm-leaf records of historical value. There are many yet to be collected. The present study analysed 119 records presently available for publication. They reveal political history, history of independent kings and Poligars, history of regions and also community. Some of the records reveal the genealogical accounts of the Vijayanagar rulers, Udayar Kings of Mysore, Nayak rulers in Tamil Country, Chera Kings and local Chieftains. Three important documents which reveal the history of Belur in Karnataka, Bommi nayakan Palayan and the history of Delhi Kings are very rare and worthy for immediate publication. These records will reveal many new facts on the subject which are hitherto unknown to humanity. The records which reveal the names of Kongu cities, and other geographical details of the regions also have historical value. Some of the interesting points found out in the classification are worth mentioning here. There are records to give details on 'Thondai Nadu', 'Kongu Nadu', 'Kangeya Nadu' which reveal both political and social history of the respective regions. The records which speak on the Temples, Maths, Palayams etc. are also very rare and important historical documents. The record on "Thasildar Seenaiyyangar Kummi" is a very rare document and another record on "Kattabomman Kummi" is popular among the people in Tamilnadu. This record require immediate attention both for preservation and for publication.

V. Conclusion

The list of some of the palm-leaf records available is presented here for study. It is not exhaustive. Many thousands of records are yet to be discovered and collected from Temples and private persons. It is said that the only copy available on "Arthasasthra" written by 'Koutilya' was collected from Kancheepuram. There are every possibilities for getting another copy of the above record in Tamilnadu. Both the collection of the records and publishing them cannot be done by one individual or an institution. It is advisable that the particular group may concentrate on the collection of the documents and another group undertake the publication work. It is because of the fact that the above are two different skills. One may be good in collection and another may be efficient in publication. The present study further reveals that the publication of the available records is very important because they are prone to destruction. The value of the palm-leaf records cannot be underestimated because they were preserved for generations and handed over to posterity. The important activity is preserving them. The modern scientific equipments may be used for the above purpose. The microfilming can be used for taking copies of the documents. The effective step taken in the right direction will enrich the historical knowledge and also give new dimentions for human history.

SELECT BIBLIOGRAPHY

1. Agarwal, O.P. — Problems of Preservation of Palm-leaf Manuscripts.
Committee for conservation, Ottawa.
1981-Palm-leaf manuscripts, Museum, 1975.

2. Balfour, Edward, — Encyclopaedia Ariatica,
Cosmo Publications, New Delhi, 1976.

3. Bedekar, V.H. — Stylistic Approach to Indian Miniatures
M.S.University, Baroda, 1979.

4. Bubler, J.G. — Indian Palaeography, Bombay Education
Society's Press, Byculla, Bombay.

5. Guy John, — Palm-leaf and paper Illuminated Manuscripts of India and South East Asia,
Nationallery, Victoria, Melbourne 1982.

6. Penderleith, — H.J. and Warnes, A.E.A., The Conservation of Antiquities and works of Arts,
OUP, London 1974.

7. Pees-Jones, — Stephen G., Library and Archival Materials
and Graphic Arts, University of London.

8. Russell, Joyce R.(Ed.,) — Preservation of Library
Materials, Special Libraries Association,
New York, 1980.

9. Thomson, Garry (Ed.,) — Recent Advances in Conservation,
Butter worths, London, 1963.

10. Journal of Indian Museums, National Museum, New Delhi

11. Conservation of Cultural Property in India, National New Delhi.

12. Journal of the Indian Society of Oriental Arts, Calcutta - 16.

13. Arts Oriantalis, Smithsonian Institution, Washington D.C.,

14. Marg, Marg Publications, Bombay.

15. Ancient India, Archaeological Survey of India, New Delhi.

SL.No.	Title of the Document	Prose/ Poetry	Number of Leaves
1.	Sethupathi Varalaru (History of Sethupathy)	Prose	2
2.	Thotta Devarayar Charithiram (History of Thotta Devarayar)	Prose	40
3.	Srirangapattinam Rajakkal Varalaru (History of Srirangapattinam Kings)	Prose	25
4.	Vishnu Varadhanarayana Vamsavali (Genealogy of Vishnu Vardhanarayan)	Prose	3
5.	Kaliyugavarasargal Peyar (Names of the Kaliyuga Kings)	Prose	8
6.	Mysore Raja Vamsavalzhi (Genealogy of Mysore King)	Prose	15
7.	Mum Mandala Pandaya Mannar Varalaru (History of Mum Mandala Pandaya King)	Prose	30
8.	Raja Santhathi Varalaru (History of the Raja Santhathi)	Prose	2
9.	Jainamarka Virothi Mannargal Varalaru (History of the Enemy Kings to Jainism)	Prose	4
10.	Kaliyuga Mannar Charithiram (History of the Kaliyuga King)	Prose	10
11.	Keralavurpathi (Chera Kings)	Prose	68
12.	Cholan Poorva Pattayam (Chola Kings)	Prose	219
13.	Madurai Pandiya Mannar Charithiram (History of the Madurai Pandya Kings)	Prose	10

Complete/ Incomplete	Sl.No.	Identification
Incomplete	3081	OML, Madras.
Incomplete	2753	OML, Madras.
Incomplete	2763	OML, Madras.
Complete	2785	OML, Madras.
Complete	2749	OML, Madras.
Complete	2754	OML, Madras.
Complete	2765	OML, Madras.
Complete	2972	OML, Madras.
Complete	2973	OML, Madras.
Complete	1435	OML, Madras.
Complete	392	OML, Madras.
Complete	2981	OML, Madras.
Complete	2739	OML, Madras.

14.	Nayakar Vamsa Vilakkam (Genealogy of Nayaks)		
15.	Hyder Sobanam(Nawab)	Poetry	13
16.	Kongu Desa Raja Charithiram (History of the Kongu Kings)	Prose	67
17.	Kongu Desa Raja Charithiram (History of the Kongu Kings)	Prose	101
18.	Bommi Nayakan Palaya Patinapur...	Prose	13
19.	Vanangamudi Thevamar Vamsavalzhi (Genealogy of V.T.)	Prose	16
20.	Karnataka Rajakkal Charithiram (History of the Karnataka Kings)	Prose	247
21.	Thirukkalukundra Kurukkal Mannarkalin...	Prose	12
22.	Delhi Rajakkal Charithiram (History of the Delhi Kings)	Prose	8
23.	Madurai Thala Varalaru (Madurai through the Ages)	Prose	33
24.	Madurai Thala Varalaru		
25.	Thirukkoil Thiruppani Malai	Poetry	
26.	Thiruchengodu Thiruppani Malai	Poetry	
27.	Chera Mannar Vamsavalzhi (Genealogy of a Chera King)	Prose	23
28.	Delhi Rajakkal Charithiram (History of the Delhi Kings)	Prose	19
29.	Aniyabarana Nallur Meenakshipattiyu...	Prose	
30.	Alwar Koil Cheithi Attavanai	Prose	15
31.	Thondai Nattu Chaithigal (News on Thondan Nadu)	Prose	
32.	Kadayam Thiruppani Malai	Poetry	
33.	Kottam Nattu Natham Thogaadi	Prose	

	31419	French Institute, Pondicherry.
Complete	2577	OML, Madras.
Complete	2726	OML, Madras.
Incomplete	2741	OML, Madras.
Complete	2750	OMl, Madras.
Complete	90996	Regional History.
Complete	2767	OML, Madras.
Complete	2772	OML, Madras.
Complete	2776	OML, Madras.
Complete	2051	
	152	Tamil Changam, Madurai.
	44597	Annamalai University, Chidambaram.
	88	Tamil College, Coimbatore.
Incomplete	9219(a)	Trandurm Library
Complete	2791	OML, Madras.
	8142	Trandrum Library.
Complete	9011	Trandrum Library.
	237	Tamil College, Coimbatore.
	11545(a)	Thiruvananthapuram Library
	1160	Thiruvananthapuram Library

34.	Palayakottai Pattakarar varalaru (History of Palayakottai Pattakarar)		
35.	Kongu Nattu Voorpeyargal		
36.	Thiruvalavayadaiyar Koil Varalaru (History of T.V.K.)		
37.	Karnataka Rasakkal Charithiram (History of the Karnatak)	Prose	159
38.	Elavar Varalaru Kurippu	Prose	5
39.	Sriranga Koilolugu	Prose	90
40.	Narasinga Rayar Vamsavalzhi Kurippu	Prose	29
41.	Nakkeerar Varalaru (History of Nakkeerar)	Prose	2
42.	Paramananadayogi Charithiram (History of Paramanandayogi)	Prose	34
43.	Narasarachiyam		
44.	Mysore Thodda Thevarayar Charithiram (History of Mysore Thodda Thevarayar)	Prose	16
45.	Thasildar Seenaiyyangar Kummi	Poetry	52
46.	Veeraboga Vasantharayar Pathirikai	Prose	44
47.	Katta bomman Kummi	Poetry	150
48.	Thirukkovalur Madam Gnaniyar Varalaru (History of Thirukkovalur Madam Gnaniar	Prose	10
49.	Veeraboga Vasantharayar Magathuvapp..		24
50.	Veeraboga Vasantharayar Pathirikai		16
51.	Veeraboga Vasantharayar Pathirikai		33
52.	Veeraboga Vasantharayar Pathirikai		22
53.	Veeraboga Vasantharayar Pathirikai		57
54.	Kaveendrar Shivaji Charithiram	Prose	180

	7	Kalaimaghal Kalvi Nilayam, Erode.
	18	Kalaimaghal Kalvi Nilayam, Erode.
	273	Kowmara Madalayam, Villupuram.
	22	Indian Office Library London.
	6	The Royal Asiatic Society, London.
	31	The Royal Asiatic Society, London.
Complete	2993	OML, Madras.
Complete	1408(b)	V.V.S.Library.
Complete	540	Saraswathimaghal Library.
	132	Tamil Sangam
Incomplete	R1490	OML, Madras.
Complete	R1881	OML, Madras.
Incomplete	R1963	OML, Madras.
Incomplete	R3459	OML, Madras.
Complete	302	
Complete	R3702	OML, Madras.
Complete	R4305	OMl, Madras.
Complete	R4314	OML, Madras.
Complete	R4336	OML, Madras.
Incomplete	R4738	OML, Madras.
Incomplete	214	Saraswathi Maghal Library.

55.	Shivaji Charithiram (History of Shivaji)	Prose	
56.	Sivaganagai Samasthana Valzhakupatriya Varalaru (History of Sivagangai Samasthana Valzhakupatriya)	Prose	
57.	Thirupathur Palayappattu Vengalayya Nayakar Aranmanai (Palace of T.P.V.Nayaka)		
58.	Thirupathur Palayappattu Vengalayya Nayakar Aranmanai	Prose	
59.	Sundaraperumal Koil Sila Sasanam	Prose	4
60.	Tharasurameeswaran Koil Silasasanam	Pross	13
61.	Patteeswaran Koil Silasasanam	Prose	4
62.	Thirukkathi Muttram Eeswaran Koil Silasasanam	Prose	12
63.	Gopinathaperumal Silasasanam	Prose	18
64.	Keelai Palayarai Eeswaran Koil Silasasanam	Prose	1
65.	Thanjavur Jilla Silasasanangal	Prose	60
66.	Thirukkattupalli Eeswaran Koil Silasasanam	Prose	60
67.	Thiruppayanam Thiruchottruthurai Silasasanam	Prose	9
68.	Thiruvedikudi Eeswaran Koil Silasasanam	Prose	9
69.	Chalukkai Koil Silasasanam	Prose	20
70.	Thirukarugavur Eeswaran Koil Silasasanam	Prose	31
71.	Thirukandiyur Eeswaran Koil Silasasanam	Prose	43
72.	Thiruvaiyattru Panjanatheeswarar Koil Silasasanam	Prose	24

	215	Saraswathi Maghal Library, Thanjavur.
	1447	Saraswathi Maghal Library. Thanjavur.
	1448	Saraswathi Maghal Library, Thanjavur.
	1449	Saraswathi Maghal Library, Thanjavur.
Complete	2727	OML, Madras.
Complete	2728	OML, Madras.
Complete	2729	OML, Madras.
Complete	2730	OML, Madras.
Complete	2731	OML, Madras.
Complete	2732	OML, Madras.
Complete	2733	OML, Madras.
Complete	2734	OML, Madras.
Complete	2735	OML, Madras.
Complete	2736	OML, Madras.
Complete	2737	OML, Madras.
Complete	2742	OML, Madras.
Complete	2744	OML, Madras.
Complete	2475	OML, Madras.

73.	Elamaiyanar Kovil Silasasanam	Prose	2
74.	Anantheeswaran Koil Silasasanam	Prose	2
75.	Thiruvannamalai Devesthana Silasasanam	Prose	23
76.	Valugur Thevasthana Silasasanam	Prose	3
77.	Pagularanya Madavilaga Eeswaran Koil Silasasanam	Prose	4
78.	Viridachalam Viluppuram Taluka Silasasanam	Prose	50
79.	Singapurinatha Swami Koil Silasasanam	Prose	8
80.	Thirukkalukundra Silasasanangal	Prose	9
81.	Thirupati Silasasanam	Prose	12
82.	Devarayar Maharayar Sasanam	Prose	8
83.	Penukonda Silasasanam	Prose	1
84.	Kadalur Harihararasapuram Sasanam	Prose	5
85.	Chennaraya Swami Silasasanam	Prose	5
86.	Virupaktsh Swami Koil Sasanam	Prose	2
87.	Harihararayan Kala Sasanam	Prose	1
88.	Muthu Veerappan Pattayam	Prose	6
89.	Punthurainattan KoduthaMelolai	Prose	2
90.	Venkatapathy Thana Sasanam	Prose	

Complete	2756	OML, Madras.
Complete	2757	OML, Madras.
Complete	2760	OML, Madras.
Complete	2761	OML, Madras.
Complete	2762	OML, Madras.
Complete	2767	OML, Madras.
Complete	2770	OML, Madras.
Complete	2771	OML, Madras.
Complete	2774	OML, Madras.
Complete	2779	OML, Madras.
Complete	2780	OML, Madras.
Complete	2781	OML, Madras.
Complete	2782	OML, Madras.
Complete	2783	OML, Madras.
Complete	2784	OML, Madras.
Incomplete	2048	U.V.S. Library, Madras.
Complete	2050	U.V.S. Library, Madras. French Institute, Pondicherry.

91.	Virinjipura Sasanam		
92.	Veera Vasantha rayar Pattirigai	Poetry	
93.	Virinjipuram Sasanam		
94.	Sri Perumputhur Adikesava Perumal Sasanam	Prose	1
95.	Bellur Koil Sila Sasanam	Prose	2
96.	Veerananthar Singarayan Kala Sasanagal	Prose	12
97.	Thirunatharayanapura Devesthana Yettuch...	Prose	2
98.	Thirunatharayanapura Devesthana Silasasanam	Prose	2
99.	Thirunatharayanapura Devasthana thamirapattayam (Copper Plate)	Prose	5
100.	Arachalur Devasthana Eattu Sasanam	Prose	2
101.	Veeraboga Vasantha rayar Pathirigai	Prose	[illegible]
102.	Veeraboga Vasantha rayar Pathirigai	Prose	
103.	Veeraboga Vasantha rayar Pathirigai	Prose	
104.	Veeraboga Vasantha rayar Pathirigai	Prose	
105.	Mugundanallur Pattayam	Prose	
106.	Erumbuli Kumaran Pattayam	Poetry	
107.	Veeravasantharayar Pathirigai		
108.	Kangeyanattu Pattayam		
109.	Mugunthanallur Pattayam		
